மொழியியல

தொகுதி 9 ஜூலை-டிசம்பர் எண் 1 & 2

பதிப்பாசிரியர்கள்

டாக்டர் ச. அகத்தியலிங்கம்

டாக்டர் க. முருகையன்

திரு. வி. பெருமாள்

திரு. எல். இராமமூர்த்தி

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் க...

காலா...

T
13396

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம்
பதிவு எண் 2 (1977)
அண்ணாமலைநகர்

செயற்குழு

தலைவர்:	டாக்டர் செ.வை. சண்முகம் (அண்ணாமலைநகர்)
துணைத் தலைவர்	டாக்டர் கி. ரங்கன் (தஞ்சாவூர்)
செயலாளர்:	டாக்டர் ச. அகத்தியலிங்கம் (அண்ணாமலைநகர்)
பொருளாளர்:	டாக்டர் ந. குமாரசாமி ராஜா (அண்ணாமலைநகர்)
உறுப்பினர்கள்:	டாக்டர் கே. திலகவதி (மலேசியா)
	டாக்டர் என். இராமசாமி (மைசூர்)
	டாக்டர் டேனியல் தேவசங்கீதம் (திருப்பதி)
	டாக்டர் எம். ஆர். பூபதி (பாண்டிச்சேரி)
	டாக்டர் ச. இராதாகிருட்டிணன் (அண்ணாமலைநகர்)

031AGIAT

மொழியியல்
னைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தின்
காலாண்டு இதழ்

கட்டணம்

	உள்நாடு	வெளிநாடு
கட்டணம்	ரூ 300-00	US $ 75-00
கட்டணம் (நிறுவனங்களுக்கு)	ரூ 450-00	US $ 112-00
டுக் கட்டணம்	ரூ 30-00	US $ 7-50
டுக் கட்டணம் (நிறுவனங்களுக்கு)	ரூ 45-00	US $ 10-50
டுக் கட்டணம் (மாணவர்களுக்கு)	ரூ 15-00	

மொழியியல் 4. 1 & 2 (1985)

சொல்லும் பொருளும்

தங்க. மணியன்
மைசூர் பல்கலைக்கழகம்

மொழி என்றால் என்ன?

ஒரு மொழியின் அடிப்படைக் கூறு ஒலிகளாகும். ஒலிகள் மொழியின் அடிப்படைக் கூறுகளாயினும், அவைகள் மொழியாகக் கருதப்படுவதில்லை. அதற்கு காரணம் ஒலிகளுக்குப் பொருண்மை எதுவும் இல்லை என்பதுதான். பின், எப்பொழுது இவ்வொலிக்கூறுகள் மொழியின் தன்மையைப் பெறுகின்றன? ஒலிகள் இணைந்து சொல்லாகி, அச்சொற்களும் வரன்முறையாக அமைந்து பொருண்மையை உணர்த்தும்போது மட்டுமே மொழியின் தன்மையைப் பெறுகின்றன. இவ்வாறு உருவான மொழி, மாந்தர் இனத்தின் செய்தித் தொடர்புச் சாதனமாகப் பன்படுகின்றது.

சொல் என்றால் என்ன?

மொழியின் இன்றியமையாக் கூறு சொல்லாகும். சொற்களே உலகிலுள்ள பொருள்களையும் மனித எண்ணங்களையும் விளக்க உதவுகின்றன. இதுவரை "சொல்" என்றால் என்ன என்பதை விளக்கப் பலர் முயன்றனர்; பல்வேறு விளக்கங்களையும் தந்தனர். ஆனால் அவ்விளக்கங்கள் எல்லாம் கருத்து முதலியவை அடிப்படையாகக் கொண்டே அமைந்தன. கீழ்க்காணும் பொருள் முதலியல் விளக்கம் பெரும்பாலானவர்கள் ஏற்றுக்கொண்டது. அதாவது, சொல் என்பது கருத்தையோ கொள்கையையோ பொருண்மையையோ உணர்த்துவதற்காக மாந்தர்இன ஒலிகளால் வரன்முறையாக அமைந்த ஒன்றாகும். இச்சொல் அம்மொழியினைப் பேசுகின்ற மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதும் வரலாற்றுத் தொடர்புடையதுமாகும்.

சொல்லும் பொருண்மையும்

ஒவ்வொரு சொல்லும் தனக்குரிய பொருண்மையைத் தாங்கி நிற்கின்றது. பொருண்மையைத் தராத-குறிக்காத சொல் எதுவும் கிடையாது. அப்படியிருந்தால் அது சொல்லாகவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இதனை உணர்ந்த காரணத்தால்தான் தொல்காப்பியர் 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே'[1] எனக் கூறிப்போந்தார். இது சொல்லுக்குப் பொருண்மை இன்றியமையாதது என்பதை உணர்த்துகின்றது.

பொருண்மை என்றால் என்ன?

மேற்கண்டவாறு நாம் சொல்லுக்கும், பொருண்மைக்கும் உரிய தொடர்பை விளக்கியவுடன் பொருண்மை என்றால் என்ன என்ற வினா எழுவது இயல்பு. பொருண்மை என்பது சொல்லினின்று தனியே பிரிக்கமுடியாததாகும். ஏனெனில் அப்பொருண்மைதான் பொருளின் இயல்பைப் பிரதிபலிப்பது. பொருளியல் தன்மை வாய்ந்ததாகக் கருதப் படுகின்ற எண்ணங்கள் மொழியிலேயே தெளிவாக வெளிப்படுகின்றன. ஆகவே பொருண்மையைச் சரியாகப் புரிந்து கொள்வது என்பது பொருள்

முதலியலின் அடிப்படை நம்பிக்கையோடு தொடர்புடையது. பொருள் முதலியலின் அடிப்படை நம்பிக்கை "பொருள்கள் நம்மிலிருந்து புறத்தே, நம்மிடமிருந்து தனித்து இருக்கின்றன. நமது புலனறிவு என்பது புறவுலகின் தோற்றங்களே"[2] என்பதாகும்.

இரு அணுகு முறை

பொருண்மையை அறிய இரு அணுகுமுறை உள்ளன. ஒன்று சொல்லின் பொருண்மை புறவயப்பொருளினின்று அல்லது புறவுலகிலிருந்து தனித்திருப்பது என்பது; மற்றொன்று, நமது தன்னுணர்வில் உண்டாகின்ற புறவயப்பொருள்களின் பிரதிபலிப்பு என்பது. முதல் அணுகு முறை கருத்து முதலியலை அடிப்படையாகக் கொண்டது. ஏனெனில் அது சொல்லின் பொருளியல் சாரத்தை இழக்கச்செய்கிறது.

சொல்லை மனிதனின் மனத்தில் எழுகின்ற பொருளின் பிரதிபலிப்பிலிருந்து வேறுபட்ட - தனித்தியங்குகின்ற தூய குறியீடு என்று நோக்கக்கூடாது. அது மனித மனத்தில் எழுகின்ற பொருளின் பிரதிபலிப்போடு பிரிக்க முடியாதவாறு பிணைக்கப்பட்டுள்ளது.

அறிவியல் அணுகுமுறை

புறவுலகப் பொருள்களால் உண்டாகின்ற தன் உணர்வின் பிரதிபலிப்போடு இணையும்போது மட்டுமே ஒலிக்கூட்டங்கள் சொல்லாகின்றன என்பதை மொழி 'கருத்துப்பரிமாற்றக் கருவி' என்னும் அறிவியல் அணுகுமுறை உணர்த்துகின்றது. சொல்லின் பொருண்மை என்பது, புறவுலகப் பொருள்களின் தன்மைகளை விளக்கும் ஒலிக்கூட்டங்களால் ஆனது என்பதாகும். எனவே சொல் என்பது புறவுலகப் பொருளின் சாரமாகும்.

ஆனால் புறவுலகில் பொருளை எவ்வாறு உணர்கின்றோம்? முதலில் புலனின் அறிதிறன் மூலம்-புலன் உணர்வு மூலம். ஏனென்றால் "புலனுணர்வு என்பது புறவுலகையும் தன்னுணர்வையும்

இணைக்கும் நேரடிப்பாலமாகும், நேரடி இணைப்பாகும். தன்னுணர்வில் உண்டாகின்ற புறக்கிளர்ச்சிச் சக்தியின் மாற்று வடிவமே புலனுணர்வு''[3] என்பது. அவ்வாறெனின் புலனுணர்வு, தன்னுணர்வு என்றால் என்ன என்ற வினா எழும். ''புலனுணர்வு சிந்தனை, தன்னுணர்வு ஆகியன குறிப்பிட்ட வகையில் அமைகின்ற புறப்பொருளினுடைய உயர்வகைப் படைப்புகளாகும்''[4].

''புறவுலகை அறிதல்'' என்பது பொருளால் நிகழும் புலன் பிரதிபலிப்பால் உண்டாகின்ற அருவநிலையை ஓரளவு ஏற்றுக் கொண்டுள்ளது. இதனால்தான் லெனின், மனிதன் சிக்கலான அறிதிறனைக்கொண்டு விளங்குகின்றான் எனக் குறிப்பிடுகின்றார். ''அவ்வறிதிறன் புலன் உணர்விலிருந்து நுண்சிந்தனைக்கும், நுண்சிந்தனையிலிருந்து செயல்முறைக்கும் செல்கின்றது. இம்முறையே உண்மையை அறிவதற்கும் பருப்பொருளின் தன்மையை அறிவதற்குமான இயங்கியல் முறையாகும்''[5].

மேலும் அவர் அறிதலைப் பற்றிக் கூறும்போது ''அறிதல் என்பது பருப்பொருளை வெளிப்படையான, முடிவில்லாத எண்ணக்கூறுகளால் வடிவு செய்வதேயாகும். மனித சிந்தனையில் நிகழும் இயற்கையின் பிரதிபலிப்பை வாழ்வற்றது, தூலமானது, இயக்கமில்லாதது, முரண்பாடற்றது எனப் புரிந்து கொள்ளக்கூடாது. அது முடிவில்லா இயக்கத்தையும் முரண்பாடுகளையும், அவற்றின் தீர்வுகளையும் உள்ளடக்கியது என்று உணர்ந்து கொள்ளவேண்டும்.''[6] என்று கூறுகின்றார். புறவுலகை அறிய மனிதன் பொருளின் பல்வேறு தன்மைகளை அறிய நாட்டம் கொள்கின்றான். பொருளின் அப்பல்வேறு தன்மைகள் அப்பொருளின் பயன்பாட்டிலிருந்து வரையறுக்கப்படுகின்றன.

இயங்கியல் உண்மை

இயங்கியல் தத்துவம் இத்துடன் நின்றுவிடாமல் மேலும் உட்சென்று ஆழமாக ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்று வலியுறுத்துகின்றது. முதலில் பொருளைப் பற்றிய உண்மையான அறிவினைப் பெறவேண்டும். அதாவது பொருளைப் பற்றி நன்றாகத் தெரிந்துகொள்ளவேண்டும். அதற்காக அதனுடைய

தன்மைகள், அது மற்ற பொருள்களோடு கொண்டுள்ள தொடர்புகள், பயன்பாடுகள் முதலியவற்றைப் பற்றி ஆராய வேண்டும். இவ்வாறு பல்வேறு கோணங்களில் பொருள்களைப் பற்றி அறிவதன்மூலம் அவற்றின் எல்லா தன்மைகளையும் அறிந்துவிடமுடியும் என்று நாம் நம்பவில்லை. ஆனால் பொருளைப் பற்றி இவ்வாறு அறிந்துகொள்ளுகின்ற முன்னறிவு, தவறு செய்யாதவாறு காத்துநிற்கும்.

இரண்டாவதாக, இயங்கியல் தத்துவம் பொருள்கள் வளருவது, மாறுவது, இயங்குவது என்பதையும் வலியுறுத்தி அதனடிப்படையில் ஆராயத்தூண்டுகின்றது. உடனே இவ்வாய்வுமுறை குறிப்பிட்டவற்றிற்கு மட்டுமே பொருந்தும் என்று எண்ணக்கூடாது. உலகியல் பொருள்கள் எல்லாவற்றிற்குமே பொருந்தும். இவ்வாறு பொருள்களை வளருவது, மாறுவது, இயங்குவது என்ற நோக்குடன் ஆராய்வோமானால் பொருளுடைய உண்மையான தன்மை, பயன்பாடு, அது புறவுலகுடன் கொண்டுள்ள தொடர்பு ஆகியவற்றைப் பற்றி அறிந்துகொள்ள முடியும்.

புறவுலகைப் பற்றிய அறிவைப் பெறுவதால் சொற்பொருண்மையாக மொழியில் வெளிப்படுகின்ற சிக்கலானதும் அருவமானதுமான கருத்துக்களை மனம் நன்றாக அறிந்துகொள்ளுகின்றது. ஒவ்வொரு சொல்லிலும் உருவமானதும் அருவமானதுமான கருத்துக்கள் இணைந்து இருக்கின்றன. இவைகளுக்கிடையே உள்ள தொடர்பினை லெனின், எளிமையான சாதாரணமான - பொதுவான உதாரணம் மூலம் விளக்குகின்றார்.

" ஜான் ஒரு மனிதன்"
" பிடோ ஒரு நாய்"

போன்றவை அவர் தரும் உதாரணங்களில் சில. இங்கு நாம் முன்பே இயங்கியலைப் பெற்றிருக்கின்றோம். என்ன இயங்கியல் இங்கு வெளிப்படுகின்றது என வினவலாம். தனிமையும் பொதுமையும் தொடர்புடையன என்னும் இயங்கியல் தத்துவமே

இங்கு வெளிப்படுகின்றது. அதாவது 'மனிதன்' 'நாய்' என்பன குறிப்பானவை. மனிதன், நாய் இரண்டும் விலங்கினத்தைச் சேர்ந்தவை என்னும் பொழுது "விலங்கு" என்பது பொதுவான தாகின்றது. இவை இரண்டுமே உயிர்வகையைச் சார்ந்தது என்னும் பொழுது "உயிர்" என்பது அனைத்தும் தழுவிய தாகின்றது. இவ்வகையில் 'குறிப்பானது' என்பது 'அனைத்தும் தழுவிய நிலைமை' யின் ஓர் அளவை அல்லது மாத்திரையே யாகும். மேற்கூறிய அனைத்தும் குறுகியதும், விரிந்ததுமாகிய பொதுவாக்கியத்தின் பல்வேறு வரம்புகளுக்குரிய மாத்திரை அளவுகளேயாகும் என்பது புலனாகின்றது. இதனையே லெனின் "தனிமையே பொதுமை; எதிர்நிலைகள் ஒரே மாதிரியானை; தனிமை பொதுமையோடு வாழ்கிறது; பொதுமை, தனிமை யிலும் தனிமை மூலமாகவும் வாழ்கின்றது. ஒவ்வொரு பொது மையும் தனிமை; ஒவ்வொரு பொதுமையும் எல்லா தனிமை களையும் தழுவி நிற்கின்றது. ஆகவே, தனிமையெல்லாம் பொதுமைக்குள் அடங்குகின்றது. ஒவ்வொரு தனிமையும் மற்ற தனிமையுடன் (பொருள், நிகழ்வு, இயக்கம்) இணைப்புண்டு ஆயிரக்கணக்கான மாற்றங்களை அடைகின்றது."[1] என்று தனிமைக்கும் பொதுமைக்கும் உள்ள தொடர்பினை வலியுறுத் திச் சொல்கின்றார். இவ்வாறு தனிமையும் பொதுமையும் சூழலால் கட்டுண்டு மாற்றமடையும்பொழுது மொழியும் மாற்றம் அடைகின்றது; மாற்றமடைவது இயல்பே.

மொழிவரலாற்றை நோக்கும் பொழுது, சொல்லின்பொருண் மை மாற்றமடைந்து வந்துள்ளது தெரிய வருகின்றது. இதனால் சொல்லின் பொருண்மை வளர்ச்சி, எளிமையான நிலையிலிருந்து சிக்கலான நிலைக்குச் சென்றுள்ளது. இவ்வாறு நாம் கூறு வதால் சொல்லின் பொருண்மை மட்டுமே மாற்றமடைந்துள்ளது என்று பொருளல்ல; அந்தச் சொல் வெளிப்படுத்திநிற்கும் மாந்தர் இன வாழ்வும் மாறி வந்துள்ளது என்று பொருள். இம் மொழிப்பொருண்மை மாற்றம் மாந்தர் இன சிந்தனை வளர்ச்சி யால் ஏற்பட்டதாகும்.

சொற்பொருண்மை விரிவாக்கம்

சொற்பொருண்மை பற்றிய ஆய்வு மிகவும் சிக்கலானது. ஏனெனில் ஒன்றிற்கு மேற்பட்ட பொருண்மையைத் தருகின்ற சொற்கள் மொழியில் ஏராளமாகக் காணக்கிடக்கின்றன. இது மொழியின் இயற்கையாகும். மாந்தன் புறவுலகை அறியும் போது, ஒரு பொருளைக் குறிக்கப் பயன்படுத்திய அதே சொல்லை, அப்பொருளின் சிறப்பியல்புகளை விளக்கவும் பயன் படுத்துகின்றான். அதாவது, பழைய சொல்லையே புதுமுறையில் பயன்படுத்துகின்றான். புறவுலக வளர்ச்சியால் உண்டாகின்ற பொருளுக்கோ, நிகழ்ச்சிக்கோ பெயரிடுகின்ற தேவை ஏற்படு மானால், அதனோடு தொடர்புடைய பழைய சொல்லையே புதுப்பொருண்மைக்கும் பயன்படுத்துகின்றான். இதனால் சொல் லின் பொருண்மை விரிவடைகின்றது. அதாவது, பழைய பொருண்மையோடு புதுப் பொருண்மையையும் உணர்த்த உதவுகின்றது.

(உம்.) தலைவர்

இச்சொல் பழைய பொருண்மையோடு head, leader, chairman, president போன்ற பொருண்மைகளைத் தருகின்ற சொல்லாகவும் பயன்படுகின்றது. இப்பொருண்மைகள் எல்லாம் ஒன்றற் கொன்று தொடர்புடையதாகவும், விளக்கம் அளிப்பதாகவும் உள்ளன. இவ்வாறே கீழ்க்காணும் சொற்களும் பழைய பொருண் மையோடு கொடுக்கப்பட்டுள்ள. புதுப்பொருண்மைகளிலும் பயன்படுத்தப்படுவதை உணரலாம்.

நிறுவனம்	:	**Company, Corporation, Establishment, Institution, Institute**
தொகுதி	:	**Constituency**
துணை	:	**Deputy, Vice, Assistant**
நிதி	:	**finance, fund**
தீர்மானம்	:	**Resolution**
அணி	:	**team**

முன்னர்க் கண்ட சொற்கள் பொருண்மை விரிவு அடைந்தது ஒருமுறை. அதாவது பழைய பொருண்மையோடு புதுப்

பொருண்மைகளிலும் ஒரே சொல் பயன்பட்டது. கீழ்க்காணும் சொற்பொருண்மை மாற்றம் சிறிது வேறுபட்டது. ஒரு காலத்தில் ஒரு பொருளை உணர்த்தப் பயன்பட்ட சொல் இடையில் வழக்காறற்றிருந்து தற்காலத்தில் முற்றிலும் புதிய பொருளை உணர்த்தப் பயன்படுகின்றது. அதாவது புதுப் பொருளை உணர்த்தப் பயன்படும் சொல், அதுகுறித்த உண்மை யான பொருளோடு உள்ள தொடர்பை இழக்கின்றது. இதனால் அச்சொல் புதுச்சொல்லாகப் பயன்படுகின்றது. ஆனால் புதுச் சொல் குறித்த பழைய பொருண்மைக்கும் புதிய பொருண் மைக்கும் தொடர்புண்டு.

(உ.ம்) வானொலி

இச்சொல் முற்காலத்தில் விண்ணில் எழும் ஒலியைக் குறிக்கப் பயன்பட்டது. ஆனால் ரேடியோ கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் ரேடியோவின் ஒலியைக் குறிக்கப் பயன்படுகின்றது. இச் சொல்லால் முன்னர் உணர்த்தப்பட்ட பொருளும் இக்காலத்தில் உணர்த்தப்படும் பொருளும் வெவ்வேறானவை. ஆனால் இரண்டும் உணர்த்தும் பொருண்மையில் தொடர்புண்டு. அதாவது விண்ணில் எழும் ஒலியையே இச்சொல் அப்பொழுதும் இப்பொழுதும் குறிப்பதாக உள்ளது. இவ்வாறே கீழ்க்கண்ட சொற்களும் பயன்பாட்டில் வழங்கப்படுவதைக் காணலாம்.

வாரியம்: உ.பொ: மேற்பார்வை இடம்
த.பொ: கழகம்

மானியம்: உ.பொ: வாடகை இன்றியோ குறைந்த வாடக்கைக்கோ வழங்கப்படும் நிலம்.
த. பொ: விருது அல்லது பரிசு

விருது: உ. பொ: பட்டம், கொடி, வெற்றிச்சின்னம், வமிசாவளி, நோன்பு
த. பொ: பரிசு

பொருள் வளர்ச்சியில், மூலப்பொருள்களிலிருந்து பல்வேறு புதிய பொருண்மைகள் தோன்றும். அவை மூலச் சொல்லி லிருந்து நிறுவப்படும் சொற்களால் ஆவன. இங்கு மூலப்

பொருள் புதுப்பொருண்மையைத் தருகின்ற மையமாகக் கருதப்படும்.

'கண்' என்ற சொல் பார்வை உறுப்பைக் குறிப்பது. இச் சொல்லினடிப்படையில் 'கண்காட்சி' 'கண்பார்வை' போன்ற ஆக்கப்பொருண்மைகள் தோன்றின. மேலும், கண்போன்ற வேறுபொருள்களுக்கும் பெயரிட அச்சொல் பயன்பட்டது. அவ்வாறு உருவாக்கப்பட்ட சொற்கள்தான் 'ஊசிக்கண்' 'தேங்காய்க்கண்' போன்றவை.

மேலே கூறப்பட்டவை அனைத்தும் பொருண்மை மாறு பாட்டின் ஒரு போக்கினை மட்டுமே காட்டுகின்றன. பொருண்மை விரிவு என்பது பருப்பொருள் தன்மையிலிருந்து, அருவ நிலைக்கு மாறுவதையும், குறிப்பிட்டவற்றிலிருந்து பொது மைக்கு மாறுவதையும் உள்ளடக்கியதாகும்.

இப்பொருண்மை விரிவுக்குக் காரணங்கள் பல. அவை அணிமை (contiguity) வடிவம், தகுதி, வண்ணம் இவற்றில் ஒற்றுமை, செயல் ஒற்றுமை ஆகியவையாகும். சிலநேரங்களில் பொருண்மை விரிவு மொழியல்லாக் காரணங்களாலோ கடன் வாங்கல் முறையாலோ நிகழ்கின்றது.

இங்கு ஒரு வினா எழுகின்றது. அதாவது, மக்கள் தங்களுக்குள் தொடர்பு கொள்ளும்போது ஒரு பொருண்மை யைத் தருகின்ற பல்வேறு சொற்களைப் பயன்படுத்திக் குழப்பிக் கொள்ளாமல், பொருண்மைக்கேற்ற பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்துகின்றனரே அது எவ்வாறு நிகழ் கின்றது என்று வினவலாம். இதற்குச் சூழலே காரணம். அதாவது சொற்களுக்குரிய உண்மையான பொருண்மையைச் சூழலே வெளிப்படுத்துகின்றது. எவ்வாறெனின் சூழல்தான் சொல் எப்பொருண்மையில் கையாளப்பட்டுள்ளது என்பதை அறிவிக்கின்றது. அதாவது சொல்லின் உண்மையான பொருண் மையிலா அல்லது குறிப்புப் பொருண்மையிலா என்பதைப் புலப்படுத்துகின்றது. இவ்வாறு சொற்கள் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் பொருண்மையை உணர்த்துவதைத் தொல் காப்பியர்

"தெரிபுவேறு நிலையலும் குறிப்பின் தோன்றலும்
இருபாற் றென்ப பொருண்மை நிலையே"[8]

என்ற நூற்பா மூலம் தெளிவாக உணர்த்துகின்றார். சொற்கள் வெளிப்படையாகப் பயன்படுத்தப்படும் பொழுது உண்மையான பொருண்மையைத் தருகின்றன; குறிப்பாகப் பயன்படுத்தப் படும்பொழுது சூழற்பொருண்மையைத் தந்து நிற்கின்றன.

பொருண்மை சிறப்புறல்

காலவளர்ச்சியால் சொற்பொருண்மை விரிதலைப் போல குறுகுதலும் உண்டு. இதனால் விரிந்த, பரந்த பொருண்மையில் பயன்படுத்தப்பட்ட சொற்கள் சிறப்புப்பொருண்மையை உணர்த்துவதாயின. இச்சிறப்புப் பொருண்மை பரந்து விரிந்த பல்பொருண்மையில் பயன்படுத்தப்பட்ட சொல், பயன்பாட்டில் குறுகி, சிறப்புப் பொருண்மையை மட்டும் உணர்த்துவது.

(உ.ம்) அபிநயம்

இச்சொல், மேடைகளில் நடிக்கப்படுகின்ற நாடகம், நடனம் போன்றவைகளின் மெய்ப்பாட்டினை உணர்த்திற்று. ஆனால் இன்று நடனத்தில் இடம்பெறும் மெய்ப்பாட்டினை மட்டுமே இச்சொல் உணர்த்துவதை உணரலாம். இவ்வாறே கீழ்க்கண்ட சொற்களும் பயன்பாட்டில் குறுகிச் சிறப்புப் பொருண்மையை மட்டுமே உணர்த்துவதை உணரலாம்.

அகதி: உ.பொ: நீக்கப்பட்டவன், நண்பர்களற்றவன்
த.பொ: ஒரு நாட்டிலிருந்து வெளியேற்றப் பட்டவன்

ஊழல்: உ.பொ: குப்பை, வண்டல், சுத்தமல்லாதது, கழிவுப்பொருள், அழுகல்பொருள்
த.பொ: லஞ்சம் (அ) கையூட்டு

பொருண்மை குறுகுதல்

பெயர்ச்சொல்லை விடுத்து அடையை மட்டும் பயன்படுத்தலாலும் நிகழ்கின்றது. அதாவது, இம்முறை பெயரை உணர்த்துகின்ற கூட்டுச்சொல்லில் பெயர்ச்சொல்லை விடுத்து அடையை மட்டுமே பயன்படுத்துதல்.

பெரியார் ஈ. வே. ரா → பெரியார்
அறிஞர் அண்ணா → அறிஞர்
நாவலர் நெடுஞ்செழியன் → நாவலர்
கலைஞர் கருணாநிதி → கலைஞர்
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் → புரட்சித்தலைவர்

பொருண்மை சிறப்புறல் முறையினால் பொருண்மையை உணர்த்தும் ஒரு சொல் கிடைக்கின்றது. ஒரு சொல் பல பொருண்மைகளைக் கொண்டு விளங்கினால் அது குழப்பத்தை உண்டாக்குகின்றது. எவ்வாறெனில் ஒரு சொல் பல பொருண் மைகளில் பயன்படுமானால், நாம் அச்சொல்லை ஒரு குறிப் பிட்ட பொருண்மையில் பயன்படுத்த, அதனைப் படிப்பார் வேறொரு தவறான பொருண்மையை அதற்குரியதாக்கி, அச் சொல்லின் பொருண்மையைத் தவறாகப் புரிந்துகொள் கின்றனர். ஒரே ஒரு பொருண்மையை மட்டும் உணர்த்தும் சொற்கள் அறிவியல் துறையிலும் தொழில்நுட்பத் துறையிலும் பயன்படுத்தப்படுகின்றன. அதற்குக் காரணம் பொருளைக் குழப்பமின்றித் தெளிவாக அறிந்து கொள்வதற்கு அங்கு முதன்மை கொடுக்கப்படுவதுதான்.

தொடர்பிலா பல்பொருண்மை சொற்கள் (Homonyms)

தொல்காப்பியர் திரிசொல்லானது இருவகைத்து

என்றும் அவை

"ஒரு பொருள் குறித்த வேறு சொல்லாகியும்
வேறு பொருள் குறித்த ஒரு சொல்லாகியும்"[9]

வரும் தன்மைய என்றும் கூறுவார். இவ்விரு வகையினைத்தான் மொழியியலார் 'சிநாநிம்' ஹோமோநிம்' என்று கூறுவர்.

வேறுபட்ட பல்பொருண்மை சொற்களின் பிரச்சினை தொடர்புடை பல்பொருண்மை சொற்களோடு **(Polysemy)**

தொடர்புடையது. இச்சொல் கிரேக்கச் சொற்களான ஹோமோஸ் (Homos), அனிமா (Onima) என்ற இரண்டு சொற்களின் இணைவாகும். இதன் பொருண்மை ஒரே பெயரைப் பெற்றவை என்பதாகும். 'ஹோமோநிம்' என்பது ஒலியால் ஒத்துப் பொருண்மையால் வேறுபடுவது.

'பாலிசெமி' என்பது, ஒருசொல் தொடர்புடைய பல பொருண்மைத்தாகும். கதிர்கள் எவ்வாறு ஓரிடத்திலிருந்து பல்வேறு திசைநோக்கி செல்கின்றதோ, அதனைப்போல சொல்லின் பல்வேறு பொருண்மைகளும் சொல்லின் தலையாய பொருண்மையிலிருந்து பிறப்பனவாகும். மேலும் இது சொற்கள் பல்வேறு சூழல்களில் பயன்படுத்தப் படும்பொழுது உண்டாகின்ற பொருண்மை மாற்றத்தின் விளைவாகும்.

'ஹோமோநிம்' என்பது சொல்லின் பல்வேறு பொருண்மையாகும். இப்பொருண்மைகள் ஒவ்வொன்றும் வேறுவேறானவை தொர்டர்பில்லாதவை. பல பொருண்மைகளை உணர்த்துகின்ற அச்சொற்களிடையே ஒலி அல்லது எழுத்து ஒற்றுமையைத் தவிர வேறு எந்தவிதமான தெடர்பும் இல்லை. ஆகவே,'பாலிசெமி' என்பது பொருண்மைகள் தொடர்புடையன என்றும் அப்பல் பொருண்மைகள் ஒரே மூலத்திலிருந்து பெறப்படுகின்றன என்றும் அறியலாம். 'ஹோமோநிம்' என்பது தொடர்பில்லாப் பல்பொருண்மைகளைக் குறிப்பது என்றும் அறியலாம். இத்தகைய சொற்கள் மூன்று வகைத்தாகும்.

1. பொருண்மை வேறுபட்டு ஒரே இலக்கண வகையைச் சேர்ந்த சொற்கள் 'சொல் ஹோமோநிம்' **(Lexical Homonyms)** எனப்படும். உதாரணமாக 'ஆறு' என்ற சொல் ஆறு என்ற எண்ணையும் நதியையும் குறிப்பதாகும். ஈண்டு, இச்சொல் இரண்டு வேறுபட்ட பொருண்மைகளையும் குறிக்கும் பொழுது பெயர்ச்சொல் என்ற இலக்கண வகையைச் சார்ந்ததாகவே இருப்பதை உணரலாம்.

2. இரண்டாவது வகை சொல் பொருண்மையில் மட்டும் வேறுபடாது இலக்கண வகையிலும் வேறுபடுவது. உதாரணமாக 'குடி' என்ற சொல் பெயராகவும் வினையாகவும் பயன்

பட்டு முறையே மக்கள், குடி (drink) போன்ற பொருண்மை களைத் தருகின்றன. இதனைப் போலவே ‘அடி’ ‘நடு’ ‘ஓடு’ போன்ற சொற்களும் பொருண்மையாலும் இலக்கண வகை யாலும் வேறுபட்டு நிற்பதைக் காணலாம்.

3. இவ்விரு வகையினைத் தவிர வேறொரு வகை பல் பொருண்மை சொற்களும் உண்டு. அவை வேறுவேறான இலக்கண வகையைச் சார்ந்து வேறு வேறு இலக்கணப் பொருண்மையைத் தருவன.

தொடர்பிலா பல்பொருண்மை சொற்கள் கீழ்க்கண்ட காரணங்களால் உருவாகின்றன

1. கடன் வாங்கல்

2. ஒருசொல் பல்பொருண்மை சொற்களில் காணப் படும் இடைவெளி

3. மொழிச் சுருக்கம் முதலியவையாகும்.

ஒரு பொருண்மை பன்மொழி

பொருண்மையோடு நெருங்கிய தொடர்புடைய எந்த ஒரு சொல்லின் சிறப்பியல்பிற்கும் காரணம் ஒருபொருண்மை பன் மொழிக் கூட்டங்கள் நிறைய இருப்பதுதான். ‘சினாநிம்ஸ்’ என்ற சொல் பல சொல் ஒரு பொருண்மையை குறிப்பது. இது ‘சின்’ ‘அனிமா’ என்ற இரு கிரேக்கச் சொற்களின் கூட்டமாகும். ஒலியாலும் எழுத்தாலும் வேறுபட்ட இரண்டுக்கு மேற்பட்ட சொற்கள் ஏறத்தாழ ஒத்த பொருண்மையைக் கொடுப்பதற்கு ‘ஒரு பொருண்மை பன்மொழி’ என்று பெயர். ஒரு பொருண்மை பன்மொழி, மொழியின் தனித்தன்மையையும் செறிவையும் விளக்குகின்றது. சொற்களஞ்சியத்தையும் வளமாக்குகின்றது. ஒரு பொருண்மை பன்மொழி, வேறொரு மொழியின் மூலம் வருகின்ற அயல் மொழிச் சொற்களின் தாக்கத்தால் உண்டாவ தோடு பல்வேறு வகையான பொருண்மைப் பெயர்ச்சியாலும் உண்டாகின்றது.

ஒரு பொருண்மை பன்மொழி பற்றிய ஆய்வு சொற் களஞ்சியத்தை வளமாக்குவதுடன் ஆய்நரை மொழியில் வல்லுந ராக்கவும் உதவுகின்றது. ஒருபொருள் பன்மொழி மொழியைப் பொருண்மை பொதிந்ததாகவும் தெளிவுடையதாக்கவும் பயன் படுகின்றது.

ஒருபொருண்மை பன்மொழிச் சொற்களில், ஒரே பொருண் மையில் பயன்படுகின்ற சொற்களைக் காணலாம். ஆனால், இது குறிப்பிட்ட மொழியமைப்பில் வரையறுக்கப்பட்ட சூழலில் மட்டுமே பொருந்தி வரும், உதாரணமாக, 'அறிவேன்' 'தெரியும்' ஆகிய இரண்டும் ஒரு பொருண்மையைத் தருகின்ற சொற்கள். ஆனால் 'அறிவேன்' என்பது எழுவாய் - பயனிலை உறவுத் தொடரிலும், 'தெரியும்' என்பது செயப்படுபொருள் – பயனிலை உறவுத் தொடரிலும் பயன்படுவதை அறியலாம்.

ஒரு பொருண்மை பன்மொழி பல்வகைத்து. ஒரு பொருண்மை பன்மொழி என்பது இரண்டு சொற்களை மட்டும் கொண்டு விளங்காது, பல சொற்களையும் கொண்டு விளங்கும். அப்பல் சொற்களில் ஒரு சொல் பொதுவாகப் பெரும்பான்மை யாகப் பயன்படுவதால் பொருண்மையடிப்படையில் ஆளுமை மிகுந்ததாகக் காணப்படும். உதாரணமாக, மத்திய அரசு, மய்ய அரசு, நடுவ்ணரசு, டில்லி சர்க்கார், டில்லி அரசு ஆகிய பலசொற்களில் பெரும்பான்மையாகப் பயன்பாட்டில் உள்ள காரணத்தால் 'மத்திய அரசு' என்பது ஆளுமை மிகுந்ததாகக் காணப்படுகின்றது. இதனைப் போலவே ஜனாதிபதி, குடியரசுத்தலைவர், ராஷ்டிரபதி ஆகிய சொற்களில் 'ஜனாதி பதியும்' லோக்சபை, பார்லிமென்ட், மக்களவை, பாராளு மன்றம் ஆகிய சொற்களில் 'பாராளுமன்றமும்' ஆளுமை மிகுந்த சொற்களாகும்.

ஒரு பொருண்மை பன்மொழிச் சொற்களை அவைகளின் தன்மையினடிப்படையில் கீழ்க்கண்ட நான்கு வகையாகப் பிரிக் கலாம்.

1. **முற்றுமை ஒருபொருண்மை பன்மொழி (Absolute Synonyms):** முற்றுமை ஒருபொருட் பன்மொழி என்பது அருகிய வழக்கினது. இவ்வகைச் சொற்களின் பொருண்மை முழுமையும் ஒரே மாதிரியானதாகும். எப்பொழுதும் ஒன்றின் இடத்தில் மற்றொன்றை இட்டு நிரப்பலாம்.

(உ.ம்) பற்றி/குறித்து

இவை இரண்டும் இடைச்சொற்களாகும். ஒரே பொருண்மையில் பயன்படுத்தப்படுவன. ஒன்றினிடத்தில் மற்றொன்றை இட்டு நிரப்பினும் பொருள் மாறாது.

2. **கருத்துக் குறியீட்டு ஒருபொருள் பன்மொழி (Ideographic or Relative Synonyms):** கருத்துக் குறியீட்டு ஒரு பொருண்மை பன்மொழி என்பது பல்வேறு வகையான சாயற்பொருளையும், திண்மையையும் உடைய சொற்களாகும். ஆனால் அச்சொற்கள் உண்மையில் வேறுவேறானதாகும். அருந்து, குடி, பருகு, உறிஞ்சு முதலான சொற்கள் 'குடித்தல்' என்ற பொருண்மையில் பயன்படுகின்றன. ஆனால் இச்சொற்கள் பொருண்மையின் பல்வேறுவகையான சாயலையும் திண்மையினையும் உடையன. அதாவது இச்சொற்கள் குடித்தலின் பல்வேறு முறையினையும் தன்மையினையும் விளக்குவனவாகும்.

3. **நடையில் பயின்றுவரும் ஒரு பொருண்மை பன்மொழி (Stylistic Synonyms):** இவ்வகைச் சொற்கள் ஒரு பொருண்மையினை மட்டுமே உணர்த்துவன. ஆனால் அவை வெவ்வேறு நடையில் பயின்றுவரும். முன்னரே பார்த்தவாறு 'அறிவேன்' 'தெரியும்' ஆகிய இரு சொற்களும் ஒரே பொருண்மையினைத் தருவன. ஆனால் இவை இரண்டும் வெவ்வேறு மொழி நடையில் பயின்றுவரும்.

சோறு, சாதம் ஆகிய இருசொற்களும் ஒரே பொருண்மையினைத் தரும் சொற்களாகும். ஆனால் சோறு என்பது சமுதாயத்தில் தாழ்நிலையில் உள்ளவர்கள் பேச்சிலும், சாதம் என்பது உயர்நிலையில் உள்ளவர்கள் பேச்சிலும் இடம் பெறு

கின்றன. இவ்வாறே சமுதாயத்தில் தண்ணீர், ஜலம் போன்ற சொற்களும் முறையே தாழ்நிலையில் உள்ளவர்களாலும் உயர் நிலையில் உள்ளவர்களாலும் பயன்படுத்தப்படுகின்றன.

4. **தொடரில் பயின்றுவரும் ஒரு பொருண்மை பன்மொழி (Phraseological Synonyms):** முற்றிலும் வேறுபட்ட இரண்டு சொற்கள் சில சொற்களோடு இணைந்து தொடராக வரும்போது ஒரே பொருண்மையினை உணர்த்துகின்றன. சான்றாக ஆங்கிலத்தில் **'language'** 'என்பதும்' **'tongue'** என்பதும் **English language, English tongue** என்று வரும்போது 'மொழி' என்ற ஒரே பொருண்மையினையே தந்துநிற்கின்றன. தமிழில் முடி, மயிர் போன்ற சொற்கள் நரைமுடி, நரை மயிர் எனவரும் போது ஒரே பொருண்மையில் பயன்படுத்தப் படுகின்றன.

ஒருபொருண்மை பன்மொழி சொற்கள் கீழ்க்கண்ட பல் வேறு காரணங்களால் உருவாகின்றன.

(அ) பொதுப்பொருண்மையின் பல்வேறு தன்மைகளையும் விளக்க வேறுவேறு சொற்களையும் விளக்க பயன்படுத்துவதால்

(ஆ) கிளைமொழியிலிருந்து கடன் வாங்குவதால்

(இ) ஒருமொழி வாயிலாக மற்றொரு மொழிக்குச் சொற் கள் சென்று சேருவதால்

(ஈ) மொழியைச் சுருக்கிப் பயன்படுத்துவதால்

5. **பொருண்மை பெயர்ச்சி அல்லது பொருண்மை மாற்றம் (Transference):** இருநிகழ்ச்சிகளுக்கு இடையிலோ இரு பொரு ளுக்கு இடையிலோ பொதுமை காணப்படும். இவற்றுள் காலப் போக்கில் ஒருசொல் மட்டுமே நின்று நிலைத்து வாழும் பொருள் களுக்கு இடையே காணப்படும் பொதுமை—செயல்பாடு, பொதுத் தொடர்பு, உறவு - ஆகியலற்றின் அடிப்படையில் அமைந் திருக்கலாம்.

ஒற்றுமையின் அடிப்படையில் காணப்படும் பொருண்மை மாற்றம் உருவகம் எனப்படும். உருவகம் எல்லா அணிகளுக்கும் பொதுவானது. பொருண்மை மாற்றம் வண்ணம், அசைவு போன்றவைகளின் ஒற்றுமையால் உண்டாவது.

உருவகப் பொருண்மை பெயர்ச்சி கீழ்க்கண்டவாறு அமைகின்றது.

குண ஒற்றுமை: சிங்கம் 'வீரன்'
நரி 'தந்திரம் மிக்கவன்'

உரு ஒற்றுமை: ஒட்டகம் 'உயரமானவன்'
குரங்கு 'அசிங்கமானவன்'

இடஒற்றுமை: கோபுரஉச்சி 'உயர்ந்த நிலை'

ஒலிஒற்றுமை: குரைக்கின்றான் 'நாய்க்குரைத்தலைப் போன்றது'
கத்துகிறான் 'கழுதைகத்தலைப் போன்றது'

அசைவு ஒற்றுமை: தூண், உலக்கை, குண்டுக்கல்லு, மண்ணாங்கட்டி, 'அசைவின்றி இருக்கும் மனிதன்'

புலி: 'தாண்டுதலில் திறமையானவன்'

செயல் ஒற்றுமை: நெருப்பு 'மற்றவரை அழித்தல்'
பச்சோந்தி 'அடிக்கடி தன்னிலையை மாற்றிக் கொள்ளும் மனிதன்

மேற்கண்ட ஆய்வின்மூலம் மூன்று வகையான பொருள் மாற்றத்தினைக் கண்டோம். அறிஞர்களின் சொல் பற்றிய ஆய்வு மேலும் பல்வகையான பொருண்மை மாற்றத்தினை வெளிக்கொணரலாம் என்பது திண்ணம்.

அடிக்குறிப்பு

1. தொல்காப்பியர், "தொல்காப்பியம் - மூலம்", கழக வெளியீடு,1967, நூற்பா எண்-640.

2. V.I.Lenin, "Collected Works" Moscow, 1962, Vol. 14, P. 103-104

3. ,, ,, 1962, Vol. 14. P.51

4. ,, ,, ,, ,, P.55.

5. ,, ,, ,,1963, Vol. 38, P. 171.

6. ,, ,, ,, P. 195.

7. ,, ,, ,, P. 361 - 362

8. தொல்காப்பியர், 'தொல்காப்பியம் -மூலம், கழக வெளியீடு,1967, நூ. எண். 642

9. தொல்காப்பியர், "தொல்காப்பியம் - மூலம்", கழக வெளியீடு, 1967, நூ. எண். 642

துணை நூல்கள்

Annamalai, E. 1966 "Tamil Theory of Meaning" (mimeo) *Seminar on Grammatical Theories in Tamil*, Annamalai University, Annamalai Nagar.

Berezin, E.M.1976 "Words and Their Meaning" *Lectures on Linguistics*, Visalandhra Publishing House, Chandram buildings, Vijayawada.

Ramasamy, K. "Tholkoppiyar's Treatment of Semantics" *Studies in Early Dravidian Grammars*, Annamalai University, Annamalai Nagar.

தமிழ்த் தொடரனில் உள்வினைகள்

இரா. கோதண்டராமன்
அனைத்துலக திராவிட மொழியியல் கழகம்,
திருவனந்தபுரம்

பகுதி – 1

தமிழில் உள்வினை என நாம் குறிப்பிடுவது **copula** என ஆங்கிலத்தில் குறிக்கப் பெறும் வினையையாகும். சொற்களின் அமைப்பு, தொடரனியல் அமைப்பு ஆகியவை பற்றிய ஆய்வுகளில் உள்வினையின் பங்கு வியக்கத்தக்க அளவுக்கு அமைந்துள்ள போதிலும் இதுபற்றிய ஆய்வு இன்னும் முனைப்பாக மேற்கொள்ளப்படவில்லை. கோதண்டராமனில் (கட்டுரைகள்: **பகுதிப் பொருள் விகுதிகள், மன்னர் கையதை கூர்வாள், அறிந்த முகங்களில் அறியாத முகங்கள், பயனிலை:** அகமும் புறமும் முதலானவை) உள்வினை பற்றிய சிந்தனைகள் தோற்றுவாய் நிலையில் காணப்படுகின்றன. திராவிட மொழியியலைப் பொறுத்தவரையில் மிக விரிவாக மேற்கொள்ளப்படவேண்டிய

ஆய்வுகளில் உள்வினை பற்றிய ஆய்வும் ஒன்றாகும். இந்தக் கட்டுரை இந்த வகையில் மேற்கொள்ளப்பட்ட ஒரு சிறு முயற்சியாகும்.

உள்வினை(copula verb) என்பது இருப்புப் பொருண்மையைக் குறிக்கும் ஓர் வினையாகும். **உள்ளது, உள்ளன, உள்ள** முதலான வினைத்திரிபுகளில் பகுதியாக அமைந்த **உள்** என்னும் வினையைக் கருத்தில்கொண்டு **உள்வினை** என்னும் கலைச் சொல் படைக்கப்பெற்றுள்ளது. உள்வினையானது **செவ்வினை (Lexical Verb)** அன்று. அது ஓர் சவலை வினை (**Nonlexical verb**) யாகக் கொள்ளத் தக்கதாகும். இவ்வினையின் பண்புகள் பற்றி கோதண்டராமனில் (கட்டுரைகள்: **மள்ளர் கையதை கூர்வாள், அறிந்த முகங்களில் அறியாத முகங்கள், பயனிலை: அகமும் புறமும்**) சற்று விரிவாகப் பேசப்பட்டுள்ளது. சவலை வினையாகிய உள் வினையின் திரிபுகள் ஏனைய செவ்வினைகளைப் போல் சொல்லியல் ஆய்வு (**Morphological Analysis**) க்கு உட்பட்டவையல்ல. பின்வரும் எடுத்துக்காட்டுக்களை இவ்வகையில் கருத்தில் கொள்ளலாம்.

(1) மாதவி ஓர் நடிகை ஆவாள்

(2) நடிகை யாகிய மாதவி

(3) மாதவி வருவாள் { ஆனால் / ஆயின் } கோவலனும் வருவான்

இந்த மூன்று எடுத்துக் காட்டுகளிலும் நிகழும் **ஆவாள், ஆகிய, ஆனால் / ஆயின்** ஆகிய மூன்றும் உள்வினைகளாகும். இவ்வினைகளைப் பகுதி, விகுதி என்று பிரித்து ஆராய முடியாது. இவை பின் வரும் கிளவியாக்க விதிகள் (**Lexicalization Rules**) மூலம் வருவிக்கத் தக்கனவாகும்.

(4) (அ) ஆகு+[+இருப்பு, - ஆண்பால்] > ஆவாள் /-..

(ஆ) ஆகு+[இருப்பு, +நிபந்தனை] > { ஆனால் / ஆயின் }

(இ) ஆகு + [+இருப்பு] > ஆகிய/ — பெயர்

மேலே *(4)* - இல் குறிக்கப்பெற்றுள்ள விதிகளின் உட்கிடை **(Input)**-யில் நிகழும் **ஆகு** என்னும் வடிவம் பொருள்கோட்கிளவி **(Semantic Absorber)** - யாய் அமைந்த ஓர் வெற்றுருப்பாகும். இதனை **ஆகு** என்னும் உள்வினையுடன் குழப்பிக் கொள்ளக் கூடாது. கிளவியாக்க விதிகள் மூலம் பெறப்படும் பல்வேறு வகையான வடிவங்கள் உள்வினைக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்பதை உணர்த்தவே, **ஆகு** என்னும் ஓர் கற்பித வடிவம் உட்கிடையில் குறிக்கப் பெறுகிறது. இதுபற்றி, கோதண்டராமனில் (கட்டுரை: **மள்ளர் கையதை கூர்வாள்**) விரிவாகப் பேசப்பட்டுள்ளது.

உள்வினை பற்றிய ஒரு சிறு குறிப்பே மேலே நாம் தந்துள்ளது. தொடரனியல் ஆய்வில் இந்த உள்வினையின் பங்கு எத்தகையது என்பதுபற்றி இனி சற்று முனைப்பாகச் சிந்திக்கலாம்.

உள்வினையின் திரிபுகளும், வடிவங்களும் பலவாகும். எல்லாவற்றையும் இந்த ஆய்வில் குறிப்பிடுவதற்கு வாய்ப்பில்லை. ஒரு சிலவற்றை மட்டுமே நாம் இங்கு சிந்திக்க முடியும். இந்த வகையில் பின்வரும் எடுத்துக்காட்டுக்களைக் கருத்தில் கொள்ளலாம்.

(5) (அ) வள்ளியை மணந்த முருகன்
(ஆ) வள்ளியை மணந்தவனாகிய முருகன்

(6) (அ) முருகன் மணந்த வள்ளி
(ஆ) முருகன் மணந்தவளாகிய வள்ளி

எடுத்துக்காட்டுக்கள் (5), *(6)*—இல் இணைகளாக அமைந்த பெயரெச்சத் தொடர்கள் ஒரே பொருண்மையினவாகும். தமிழில் இதுவரை நிகழ்ந்துள்ள பெயரெச்சத் தொடர்கள் பற்றிய ஆய்வில் மேலே (அ) பிரிவில் குறிக்கப்பெற்றுள்ள அமைப்புக்கள் மட்டுமே சிந்திக்கப் பெற்றுள்ளன. (ஆ)பிரிவில் நிகழும் அமைப்புக்களைப் பற்றிய சிந்தனையோ, நினைவோ நமக்கு இல்லாமல் போய்விட்டது. இதன் விளைவு பெயரெச்சத் தொடர்களை நாம் செம்மையாகப் புரிந்துகொள்ள முடியாமல்

போனதுதான் மிச்சம். எனவே உள்வினைகள் பற்றிய இந்தக் கட்டுரையில் பெயரெச்ச தொடர்கள் பற்றியும் நாம் சிந்திக்க முற்படுவது உள்வினைகளை நன்கு அறிந்துகொள்ளத் துணை புரியும்.

மேலே (5), (6) — இல் அமைந்த எடுத்துக் காட்டுக்களைக் கூர்ந்து நோக்கினால் பல உண்மைகள் புலனாகும். இவற்றுள் ஒன்று: (அ) பிரிவில் நிகழும் **மணந்த** என்பதில் உள்ள பெயரெச்ச விகுதியாகிய அகரக் கிளவியும், (ஆ)பிரிவில் நிகழும் **மணந்தவனாகிய/மணந்தவளாகிய** என்பதில் நிகழும் **ஆகிய** என்னும் பெயரெச்ச வினையும் சிதறிய வழக்கின **(Complementary Distribution)** வாய் அமைந்துள்ள தன்மையாகும். இதன்மூலம் இரண்டு உண்மைகள் பெறப்படுகின்றன. **ஒன்று:** ஆகிய என்பது ஓர் உள் வினைப் பெயரெச்சமாதலால், அதனுடன் சிதறிய வழக்கில் அமைந்த **மணந்த** என்பதில் நிகழும் பெயரெச்ச விகுதியாகிய அகரக்கிளவியும் உள்வினைத் தன்மையாகின்றது. இந்த உண்மையானது பெயரெச்ச விகுதியாகிய அகரக் கிளவியையும், உள் வினைப் பெயரெச்சமாகிய **ஆகிய** என்பதனையும் பின்வரும் கிளவியாக்க விதியின் மூலம் பெறவேண்டிய சூழ்நிலையை உருவாக்கிவிடுகின்றது.

(7) ஆகு + [+ இருப்பு] > { அ / ஆகிய } /

[மணந்து / { மணந்தவன் / மணந்தவள் }] — பெயர்

இரண்டு: (5),(6)—இல் (அ) பிரிவில் நிகழும் **மணந்த** என்பதில் அமைந்த **மணந்து** என்ற வினையமைப்பும், (ஆ) பிரிவில் நிகழும் **மணந்தவன்/மணந்தவள்** என்ற வினையமைப்பும், சிதறிய வழக்கினவாய் அமைவதால், **செய்கின்ற** வாய்பாட்டு வினைகளில் அமைந்த **செய்து, செய்கின்று** வாய்பாட்டு வினைகள் முற்று வினைகளாகக் கொள்வதற்கான ஓர் வாய்ப்பு ஏற்படுகின்றது. இக்கட்டுரையின் வளர்ச்சிப் போக்கில் இந்த உண்மை விளக்கமுறும்.

மேலே (7)-இல் அமைந்த விதியின் மூலம் (5), (6)-இல் அமைந்த தொடர்களின் முந்தைய அமைப்பு பின்வருமாறு இருக்கும்:

(8) (அ) வள்ளியை மணந்த் # அ முருகன்
(ஆ) வள்ளியை மணந்தவன் # ஆகிய முருகன்

(9) (அ) முருகன் மணந்த # அ வள்ளி
(ஆ) முருகன் மணந்தவள் # ஆகிய வள்ளி

இந்த அமைப்புக்களில் (ஆ) பிரிவில் உள்ள ஆகிய என்னும் பெயரெச்சத்தைப் போலவே (அ) பிரிவில் அமைந்த அகரக் கிளவியும் விட்டிசை (**Pause**)– யை அடுத்து நிகழ்கின்றது. இந்த விட்டிசை இங்கே சொல்லின் எல்லை (**Word Boundary**)– யாக அமைந்துள்ளது. அகரக் கிளவி விட்டிசையை அடுத்து நிகழ்வ தில்லையாதலால் அதனை விகுதிநிலைக்கு மாற்றியமைக்க வேண்டும். இப்பணியினை விகுதியாக்க விதி (**Cliticization Rule**) செய்து முடிக்கின்றது. விகுதியாக்க விதி என்பது ஓர் விகார விதி (**Transformational Rule**) – யாகும். இவ்விதியானது இரண்டு பணிகளைச் செய்கின்றது. ஒன்று: ஓர் உள்வினையை விகுதியாக மாற்றியமைக்கின்றது. இரண்டு: விட்டிசையைத் தவிர்க்கின்றது. விகுதியாக்க விதி செயல்படும் போதே விட்டி சையும் தவிர்க்கப்பட்டுவிடுகின்றது. விகுதியாக்க விதியானது (8), (9) - ல் (ஆ) பிரிவில் உள்ள அமைப்புக்களில் செயல்படு வதில்லை. இதனின்றும் விகுதிகள் எனப்படுபவை விகுதி யாக்க விகாரத்தின் மூலம் அமையும் என்பதுடன், வரலாற்று நிலையில் விகுதிகள் தனிநிலை உருபன்களாக நிகழ்ந்திருக்க வேண்டும் என்ற உண்மையும் பெறப்படுகின்றது. இந்த வகையில் விகுதியாக்க விதியானது வரலாற்று அமைப் பினையும், வண்ணனை அமைப்பினையும் இணைக்கும் ஓர் கருவியெனக் கருதத்தக்கதாகும்.

பெயரெச்சத் தொடர்கள் பற்றிய முந்தைய ஆய்வுகளில் (5), (6) இவற்றில் (அ) பிரிவில் அமைந்த தொடர்கள் மட்டுமே கருத்தில் கொள்ளப் பெற்றன என்று முன்னர்க் குறிக்கப்

பெற்றது. இந்த ஆய்வுகள் மேற்படி பிரிவில் அமைந்த இரண்டு பெயரெச்சத் தொடர்களையும், அதாவது: **வள்ளியை மணந்த முருகன், முருகன் மணந்த வள்ளி** என்ற இரண்டினையும் பின் வரும் ஒரே வாக்கியத்துடன் தொடர்பு படுத்தும் போக்கினைக் கொண்டவையாகும்.

(10) முருகன் வள்ளியை மணந்தான்.

ஒரே வாக்கியத்தினின்றும் ஒன்றுக்கு மேற்பட்ட தலைமைப் பெயர்கள் அமைந்த பெயரெச்சத் தொடர்புகளைப் பெற்றுத் தரும் ஆய்வினை ஓர் முழுமையான ஆய்வாகக் கருத முடியாது. இதற்கு இரண்டு காரணங்களைக் கூறலாம். **ஒன்று:** பின்வரும் பெயரெச்சத் தொடர், (12) - இல் உள்ள வாக்கியத்துடன் தொடர்புடையதாக முந்தைய ஆய்வுகள் கருதுகின்றன.

(11) முருகன் பார்த்த பெண்

(12) முருகன் ஒரு பெண்ணைப் பார்த்தான்

வாக்கியம் (12) - இல் உள்ள செயப்படுபொருளாகிய பெயர்த் தொடரில் நிகழும் ஒரு என்னும் கிளவி (11) -ல் அமைந்துள்ள பெயரெச்சத் தொடரில் தவிர்க்கப் பட்டுள்ளது. இதற்கான காரணத்தை முந்தைய ஆய்வுகள் விளக்க முற்படவில்லை. **இரண்டு:** ஒரு வாக்கியத்திலிருந்து ஒன்றுக்கு மேற்பட்ட தலைமைப் பெயர்கள் அமைந்த பெயரெச்சத் தொடர்களை வருவிக்கும்போது, தலைமைப் பெயர்களைத் தேர்ந்தெடுக்கும் போக்கு முந்தைய ஆய்வுகளில் தான்தோன்றித்தனமாக (Arbitrary) உள்ளது. ஒரு வாக்கியத்தினின்றும் ஒரு குறிப்பிட்ட பெயரெச்சத் தொடருக்குமேல் வருவிக்கும் போக்கினைக் கட்டுப் படுத்தும் நெறி, முந்தைய ஆய்வுகளில் கருத்தில் கொள்ளப்பட வில்லை. இரண்டாவது காரணம் ஓர் அடிப்படைக் கருத்தினை வலியுறுத்துவதாகும். எடுத்துக்காட்டாக (11) - இல் அமைந்த பெயரெச்சத் தொடரானது, (12) - இல் உள்ள வாக்கியத்துடன் தொடர்புடையதானால், இந்தத் தொடர்பு பாட்டனுக்கும் பேரனுக்கும் உள்ள தொடர்பைப் போன்றதாகும். இங்கே

பேரன் நிலையில் நாம் குறிப்பிடுவது பெயரெச்சத் தொடரை யாகும். முதல் தலைமுறைக்கும், மூன்றாம் தலைமுறைக்கும் இடையிலான இந்தத் தொடர்பினைத் தகப்பனுக்கும் மகனுக்கும் உள்ள தொடர்பாக மாற்றியமைத்தாலன்றி, மேலே நாம் எழுப்பிய இரண்டு சிக்கல்களையும் விடுவிக்க முடியாது.

ஒரு பெயரெச்சத் தொடரில் ஒன்றுக்கு மேற்பட்ட தலைமைப் பெயர் நிகழ்வதற்கு எப்படி வாய்ப்பில்லையோ, அப்படியே அத் தொடர் சார்ந்து நிற்கும் வாக்கியமும் ஒன்றுக்கு மேற்படாத பெயரெச்சத் தொடரை வருவிப்பதற்கு மட்டுமே வாய்ப்பளிப்ப தாக அமைய வேண்டும். இந்த வாய்ப்பினை (10), (12)-இல் அமைந்த வாக்கியங்கள் ஏற்படுத்திக் கொடுக்கத் தவறிவிடுகின் றன. ஆகவே, பெயரெச்சத் தொடர்களின் நேரடித் தொடர் புள்ள வாக்கியங்களாக இத்தகையவற்றைக் கொள்வதற்கில்லை. இந்தச் சிக்கலைத் தீர்க்கும் வகையில் (5),(6)-இல் (ஆ) பிரிவில் நிகழும் பெயரெச்சத் தொடர்கள் அமைந்துள்ளன. இத்தொடர் களில் தலைமைப் பெயர்களான **முருகன்,வள்ளி** இரண்டும் ஆகிய என்னும் உள்வினைப் பெயரெச்சத்துடன் எழுவாய் பயனிலை என்ற இலக்கண உறவில் அமைந்துள்ளன. இதன்மூலம் மேற்படி பிரிவில் அமைந்த பெயரெச்சத் தொடர்கள் பின்வரும் வாக்கி யங்களுடன் தொடர்புடையனவாகின்றன.

(13) முருகன் வள்ளியை மணந்தவன் ஆவான்

(14) வள்ளி முருகன் மணந்தவள் ஆவாள்

இந்த வாக்கியங்கள் (5), (6)-இல் (ஆ) பிரிவில் அமைந்த பெய ரெச்சத் தொடர்களுடன் நேரடித் தொடர்பு கொண்டவையா கும். இங்கே தலைமுறை தலைமைப் பெயர் அமைந்த பெயரெச் சத் தொடர்களை வருவிப்பதற்குத் துணை புரிவதில்லை. இதன் மூலம் (5),(6)-இல் (அ) பிரிவில் அமைந்த பெயரெச்சத் தொடர் கள் கீழே குறிப்பிட்டுள்ள இரண்டு வகையான வாக்கியங்களு டன் நேரடித் தொடர்புடையனவாதல் தெள்ளிதின் விளங்கும்.

(15) முருகன் வள்ளியை மணந்தவன்

(16) வள்ளி முருகன் மணந்தவள்

இதன்மூலம் மேலே 5),(6)-இல் அமைந்த பெயரெச்சத் தொடர்கள் (10)-இல் குறிக்கப் பெற்றுள்ள வாக்கியத்துடன் தொடர்புடையன அல்ல என்பதும், அவை இரண்டு வகையான வாக்கிய அமைப்புக்களுடன் தொடர்புடையன என்பதும் பெறப்படுகின்றது. இந்த உண்மையானது பெயரெச்சத் தொடர்களை (10)-இல் குறிக்கப் பெற்றுள்ளது போன்ற வாக்கியங்களின்றும் வருவிக்க முடியாது என்பதைத் திட்டவட்டமாக வலியுறுத்துவதைக் காணலாம்.

இனி உள்வினைகளுக்கு வருவோம். மேலே (5),(6)-இல் (ஆ) பிரிவில் நிகழும் **ஆகிய** என்னும் வடிவமும், (அ) பிரிவில் அமைந்த **மணந்த** என்பதில் நிகழும் அகரக் கிளவியும் உள்வினைக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்று முன்பு கண்டோம். இவற்றுள் **ஆகிய** என்னும் பெயரெச்சத்துக்கு நிகரான உள்வினைப் பயனிலைகளாக **ஆவான், ஆவாள்** அமைவதை (13),(14)-இல் அமைந்த வாக்கிய அமைப்புக்களில் காணலாம். இவ்வாறே, **மணந்த** என்பதில் நிகழும் அகரக் கிளவிக்கு நிகரான பயனிலை வடிவங்களாக 15),(16)-இல் உள்ள **மணந்தவன், மணந்தவள்** என்பவற்றில் நிகழும் **-அவன், -அவள்** என்னும் வடிவங்கள் அமைகின்றன. அகரக் கிளவியாகிய உள்வினை எங்ஙனம் விகுதியாக்க விதியின் மூலம் விகுதியாக மாற்றப்படுகின்றதோ, அங்ஙனமே, (15),(16) இல் நிகழும் **- அவன், - அவள்** என்ற உள்வினைகளும் விகுதியாக்க விதியின் மூலம் விகுதிகளாக மாற்றப்படுகின்றன. இவ்விதி செயல்படுவதற்கு முன்னதாக, **ஆவான், ஆவாள்** உள்வினைகளும் **-அவன், -அவள்** உள்வினைகளும் பின்வரும் கிளவியாக்க விதிகளின் மூலம் வருவிக்கப்படுகின்றன.

(17) (அ) ஆகு + [+ இருப்பு, + ஆண்பால்] >

[ஆவான் / அவன்] / [மணந்தவன் / மணந்த்] — .

(ஆ) ஆகு + [+ இருப்பு], ஆண்பால்] >

[ஆவாள் / அவள்] / [மணந்தவள் / மணந்த்] — .

இக்கிளவியாக்க விதிகளைத் தொடர்ந்து அமையும் அமைப்புக்கள் பின்வருமாறு இருக்கும்.

(18) (அ) முருகன் வள்ளியை மணந்தவன் # ஆவான்
(ஆ) முருகன் வள்ளியை மணந்த் # அவன்

(19) (அ) வள்ளி முருகன் மணந்தவள் # ஆவாள்
(ஆ) வள்ளி முருகன் மணந்த் # அவள்

மேலே (ஆ) பிரிவில் நிகழும் **மணந்த் # அவன் / அவள்** என்ற அமைப்பு விகுதியாக்க விகாரத்துக்கு உட்பட்டு விட்டிசையை இழக்கின்றது. இவ்விகாரம் (அ) பிரிவில் அமைந்த அமைப்புக்களின்மீது செயல்படுவதில்லை.

இந்த ஆய்வில் இதுவரை நாம் நான்கு வகையான உள்வினைகளைச் சந்தித்துள்ளோம். அவை: **ஆவான் / ஆவாள்;** இவற்றுக்கு நிகரான பெயரெச்ச வடிவமாகிய **ஆகிய; – அவன் / அவள்;** இவற்றுக்கு நிகரான பெயரெச்ச உள்வினையாகிய அகரக் கிளவி. தற்செயலாக **மணந்தவன் / மணந்தவள், மணந்து** என்ற இரண்டு வகையான வினைப்பயனிலைகளையும் இந்த ஆய்வில் காண்கிறோம். இவற்றுள் **மணந்தவன், மணந்தவள்** என்பவை **ஆவான், ஆவாள், ஆகிய** என்ற உள்வினைகள் முன் நிகழும் சிறப்பு வினைப் பயனிலைகளாகவும் (Personal Predicate Verbals) **மணந்து** என்பது **அவன், அவள், அ** ஆகிய உள்வினைகள் முன் நிகழும் பொது வினைப் பயனிலைகளாகவும் (Impersonal Predicate Verbals) கொள்ளத் தக்கவையாகும். தமிழ்ப் பயனிலைகள் பற்றிய ஆய்வில் இதுவரை பொதுவினைப் பயனிலைகள் பற்றிய செய்திகள் உள்வினை நிகழ்ச்சிகளின் அடிப்படையில் சிந்திக்கப்படவில்லை. உள்வினைகளை மையமாகக் கொண்டு அமைந்த இந்த ஆய்வில் பொதுவினைப் பயனிலைகள் தமிழில் நிகழுமாற்றினைத் தெளிவாக அறிய முடிகின்றது. இது பற்றி மேலும் பின்னர்ப் பேசப்படும்.

மேலே குறிப்பிட்ட செய்திகளின் அடிப்படையில் பெயரெச்சத் தொடர்களுடன் தொடர்புள்ள வாக்கியங்களின் தன்மை அறியப்பட்டது. இத்தகைய வாக்கியங்கள் (13) முதல்

(16) வரை குறிக்கப்பெற்றுள்ளவை போன்றவையாகும். இதனைக் கருத்தில் கொண்டு, (11) - இல் அமைந்துள்ள **முருகன் பார்த்த பெண்** என்ற பெயரெச்சத் தொடர் பின்வரும் வாக்கியத்துடன் நேரடித் தொடர்புடையதாகக் கொள்ளப்படுகின்றது.

(20) பெண் முருகன் பார்த்தவள்

பெயரெச்சத் தொடர்கள் பற்றிய நமது சிந்தனை ஓர் அடிப்படைக் கருத்தினை வலியுறுத்துவதாக அமைகின்றது. பெயரெச்சத்தொடரில் அமையும் தலைமைப் பெயர்கள் நேரடித் தொடர்புள்ள வாக்கியங்களில் எழுவாயாக மட்டுமே நிகழத் தக்கதாகி உள்வினைப் பயனிலைகளைக் கொள்கின்றது. இதன் மூலம், பெயரெச்சத் தொடர்களுடன் நேரடித் தொடர்புடைய வாக்கியங்களிலிருந்து ஒன்றுக்கு மேற்பட்ட பெயரெச்சத் தொடரை வருவிக்க முடியாது என்பதும், அவ்வாறு வருவிக்கப் பெற்ற பெயரெச்சத் தொடரில் அமைந்த தலைமைப் பெயர், வாக்கியங்களில் உள்வினைப் பயனிலைக்குரிய எழுவாயாக மட்டுமே நிகழவல்லது என்பதும் பெறப்படுகின்றன. இந்த உண்மையினை (13) முதல் (16) வரை அமைந்துள்ள வாக்கியங்கள், மற்றும் (20) - இல் உள்ள வாக்கியம் இவற்றின் மூலம் நன்கு அறியலாம். இந்த வாக்கியங்களில் எழுவாயாக நிகழும் உறுப்பைத் தவிர வேறு எந்த உறுப்பினையும் பெயரெச்சத் தொடரில் தலைமைப் பெயராகக் கொண்டுவர முடியாது. இத்தகைய வரைமுறையை முந்தைய ஆய்வுகள் நமக்கு அளிக்கவில்லை. இந்த வரையறைதான் வாக்கியம் (12)-இல் செயப்படு பொருள் பெயர்த் தொடரில் நிகழும் ஒரு என்னும் பெயரடையானது (11)-இல் அமைந்த பெயரெச்சத் தொடரின் தலைமைப் பெயரில் ஏன் நிகழவில்லை என்பதைத் தெளிவுபடுத்தும். ஏனெனில் **முருகன் பார்த்த பெண்** (11) என்னும் பெயரெச்சத் தொடர் நேரடியாகத் தொடர்புகொள்ளும் வாக்கியம் **பெண் முருகன் பார்த்தவள்** என்பதாகத்தான் இருக்க முடியுமே தவிர, **முருகன் ஒரு பெண்ணைப் பார்த்தான்** என்பதாக இருக்க முடியாது. பெயரெச்சத் தொடர்களுடன் நெருங்கிய தொடர்புடைய நேரடி வாக்கியங்களை **அண்மை வாக்கியங்கள்** என்று

குறிப்பிடலாம். இந்த வகையில் **பெண் முருகன் பார்த்தவள்** என்பது ஓர் அண்மை வாக்கியமாகும். **முருகன் ஒரு பெண்ணைப் பார்த்தான்** என்ற வாக்கியம் **முருகன் பார்த்த பெண்** என்ற பெயரெச்சத் தொடருடன் நேரடித் தொடர்புடையதல்ல. இத்தகைய வாக்கியங்களைச் **சேய்மை வாக்கியங்கள்** என்று குறிப்பிடலாம். பெயரெச்சத் தொடர்கள் அண்மை வாக்கியங் களினின்றும் வருவிக்கப்படுவனவாகும். இவ்வாறே அண்மை வாக்கியங்கள் சேய்மை வாக்கியங்களினின்றும் வருவிக்கப்படு பவையாகும். நேரடியாகச் சேய்மை வாக்கியங்களைப் பெய ரெச்சத் தொடர்களுடன் தொடர்புபடுத்துவதை இந்த ஆய்வு அடியோடு மறுத்துவிடுகின்றது. சேய்மை வாக்கியங்கள் அண்மை வாக்கியங்களாக மாற்றப்பட்டாலன்றி, பெயரெச்சத் தொடர்களை வருவிக்க இயலாது.

சேய்மை வாக்கியத்தில் நிகழும் எந்த ஒரு பெயர்நிலைக் கிளவியும் பெயரெச்சத் தொடரில் தலைமைப் பெயராக இடம் பெறவேண்டுமானால், அது முதலில் அண்மை வாக்கியத்தில் எழுவாய் நிலைக்கு உயர்த்தப்படவேண்டும். எடுத்துக் காட் டாகப் பின்வரும் இரண்டு வாக்கியங்களைக் கருத்தில் கொள் ளவும்.

(21) முருகன் ஒரு பெண்ணைப் பார்த்தான் (சேய்மை வாக்கியம்)

(22) பெண் முருகன் பார்த்தவள் (அண்மை வாக்கியம்)

மேலே சேய்மை வாக்கியத்தில் செயப்படுபொருளாக நிகழும் **ஒரு பெண்** என்னும் பெயர்த்தொடர் அண்மை வாக்கியத்தில் எழுவாய் நிலைக்கு உயர்த்தப்பட்டு **அவள்** என்னும் உள்வினைப் பயனிலையைத் தனக்குரியதாகக் கொள்கின்றது. இவ்வாறு உயர்த்தப்படும்போது, உயர்த்தப்படும் பெயர்த்தொடரில் **ஒரு/ ஓர்** என்னும் பெயரடை இருக்குமாயின் அது அண்மை வாக்கி யத்தில் தவிர்க்கப்பட்டுவிடுகின்றது. ஏனெனில் அண்மை வாக்கி யத்தில் எது பெயரெச்சத்தொடரில் தலைமைப் பெயராக வர முடியும் என்ற செய்தி வரையறை செய்யப்பட்டு விடுகின்றது.

ஆகவே அண்மை வாக்கியங்களில் எழுவாயாக நிகழும் பெயர்த் தொடரில் **ஒரு/ஓர்** என்ற பெயரடையின் நிகழ்ச்சிக்கு வாய்ப் பில்லாமல் போய்விடுகின்றது.

அண்மை வாக்கியங்கள், சேய்மை வாக்கியங்களினின்றும் வருவிக்கற்பாலன என்று மேலே குறிப்பிட்டோம். பிந்தியவற்றி னின்றும் முந்தியவற்றை வருவிக்குமாற்றினைப் பற்றிச் சிந்திப் பதற்கு முன் உள்வினைகள் பற்றிய மேலும் சில செய்திகளை இங்கு அறிந்து கொள்வது அவசியமாகின்றது. அண்மை வாக் கியத்தில் உள்வினைகள் விகுதிகளாக மாற்றம் செய்யப்பட்டு எழுவாயுடன் இசைந்து சிறப்பு வினைப் பயனிலைகளாக நிகழ் கின்றன. இத்தகைய உள்வினைகள் சேய்மை வாக்கியங்களிலும் குறிக்கத்தக்கவையாகின்றன. அண்மை வாக்கியங்கள் சேய்மை வாக்கியங்களினின்றும் வருவிக்கற்பாலனவாதலால், பிந்தியவற் றிலும் உள்வினைகள் சுட்டப்பட வேண்டியது தவிர்க்க முடியாததாகின்றது. அண்மை வாக்கியங்களில் உள்வினைகள் விகுதிநிலையில் செயல்படுவதால், சேய்மை வாக்கியங்களிலும் இவ்வினைகள் விகுதி நிலையிலேயே சுட்டப்பெறும். தவிரவும் அண்மை வாக்கியங்களில் விகுதிநிலையில் அமைந்த உள்வினை கள் **செய்து செய்கின்று செய்பு**[1] ஆகிய வாய்பாட்டுப் பொது வினைகளை (Impersonal Verbs) அடுத்து நிகழ்வதால், சேய்மை வாக்கியங்களிலும் விகுதிநிலையில் அமைந்த உள்வினைகளை மேற்படி வாய்பாட்டுப் பொதுவினைகளையடுத்துச் சுட்டப் பெறுவது தவிர்க்க முடியாததாகின்றது. இந்த உண்மைகளைக் கருத்தில்கொண்டு **முருகன் ஒரு பெண்ணைப் பார்த்தான்** என்ற சேய்மை வாக்கியத்தில் **பார்த்தான்** என்பதில் **பார்த்து** என்பதை யடுத்து நிகழும் **ஆன்** என்னும் ஆண்பால் விகுதி உள்வினை யாகக் கொள்ளப் பெறும். ஆக, பொதுவினைகளையடுத்து நிகழும் உள்வினைகள் மூன்றுவகையினவாகும். அவை, பெய ரெஞ்சு கிளவியில் நிகழும் அகரக்கிளவி, அண்மை வாக்கியங் களில் நிகழும் **அவன், அவள், அவர், அவர்கள், அவை, அது** ஆகிய சிறப்பு உள்வினைகள் (Personal Copula Verbals), சேய்மை வாக்கியங்களில் வினைப் பயனிலைகளில் நிகழும் பல்வேறு

வகையான முற்று விகுதிகளாகிய சிறப்பு உள்வினைகள் என்பன வாகும். இம்மூன்றும் மூன்று வகையான தொடரனியல் சூழலில் நிகழ்வனவாகும்.

உள்வினைகள் பயனிலைத் தொடரில் பெயர்த்தொடரை யடுத்து நிகழ்வனவாகும். இந்த உண்மையைப் பின்வரும் எடுத்துக் காட்டில் காணலாம்.

(23) மாதவி ஓர் நடிகை ஆவாள்

(24) மாதவி ஓர் நடிகையும் பாடகியும் ஆவாள்

இந்த எடுத்துக்காட்டுகளைக் கருத்தில் கொண்டு உள்வினை களின் நிகழ்ச்சியைப் பொதுமைப் படுத்திப் பின்வருமாறு வரையறுக்கலாம்.

(25) **உள்வினைகள் பெயர்த் தொடர்களையடுத்து நிகழ் வனவாகும்.**

இந்த வரையறையானது, உள்வினைகளை மேற்கொள்ளும் செவ்வினைகளாகிய **செய்து, செய்கின்று, செய்பு** வாய் பாட்டுப் பொதுவினைகளைப் பெயர்த்தொடர் உறுப்பின வாகக் கொள்ளும். இதன் விளைவு, பெயர்ப் பயனிலைகளும் வினைப் பயனிலைகளும் ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட தொடர னியல் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு விடுகின்றன. இந்த வகையில் வினைப் பயனிலைகள் பெயர்ப் பயனிலைகளின் ஓர் உட்பிரிவாய் அமைகின்றன. உள்வினையும், அதனைச் சார்ந்து நிற்கும் பெயர் நிலைக் கிளவியும் சேர்ந்து உள்வினைத் தொடர் **(Copula phrase)** அமைகின்றது. இத்தகைய உள்வினைத் தொடர்கள் பயனிலைத் தொடர்களின் ஆதிக்கத்தின்கீழ் நிகழ்வனவாகும். உள்வினைத் தொடரில் பெயர் நிலைக் கிளவியாக அமையும் உறுப்பு ஒரு வாக்கியமாகக் கூட இருக்கலாம். இது இக்கட்டுரையின் வளர்ச்சிப் போக்கில் புலனாகும்.

உள்வினைத் தொடரின் அமைப்பைக் கருத்தில் கொண்டு, செய்மை வாக்கியங்களினின்றும் அண்மை வாக்கியங்கள்

வருவிக்கப்படும் முறைபினைப் பற்றி இனி சிந்திக்கலாம். இந்த ஆய்வுக்குப் பின்வரும் சேய்மை வாக்கியத்தினைக் கருத்தில் கொள்ளலாம்.

(26) முருகன் வள்ளியை மணந்தான்

இவ்வாக்கியத்தின் புதைநிலை அமைப்பு பின்வருமாறு இருக்கும்.

(27) [முருகன் [வள்ளியை [மணந்] ஆகு]]

இந்த அமைப்பில் நிகழும் ஆகு என்னும் பொருள்கோட்கிளவி இருப்பு விகாரமும் (Copula Transformation), இயைபு விகாரமும் (Agreement Transformation) செயல்பட்ட பிறகு, பின்வரும் கிளவியாக்க விதியின்மூலம் ஓர் உள்வினையைத் தோற்றுவிக்கும்.

(28) ஆகு + [+ இருப்பு, + ஆண்பால்] > ஆன்/–.

இவ்வாறு வருவிக்கப் பெற்ற உள்வினையானது பின்னர் விகுதி யாக்க விகாரத்தின் மூலம் விகுதியாக மாற்றப்பட்டு, (26) - இல் உள்ள அமைப்பாகின்றது.

மேலே (27) - இல் உள்ள அமைப்பு (26) - இல் உள்ள சேய்மை வாக்கியத்தை வருவிப்பதுடன், பினவரும் அண்மை வாக்கியங்களின் தாயகமாகவும் அமைகின்றது.

(29) (அ) வள்ளி முருகன் மணந்தவள்
(ஆ) வள்ளி முருகன் மணந்தவள் ஆவாள்

(30) (அ) முருகன் வள்ளியை மணந்தவன்
(ஆ) முருகன் வள்ளியை மணந்தவன் ஆவான்

இந்த அண்மை வாக்கியங்கள் (27)–இல் குறிக்கப் பெற்றுள்ள அமைப்பினின்றும் வருவிக்கத் தக்கனவாகும். முதலில் (29)–இல் உள்ள அண்மை வாக்கியங்கள் எவ்வாறு வருவிக்கப்படுகின்றன என்பதைக் காணலாம்.

அண்மை வாக்கியங்களாக (29)-இல் குறிக்கப்பெற்றுள்ள இரண்டுவகை வாக்கியங்களையும் வருவிக்கும் வகையில், (27)- இல் உள்ள அமைப்பு முதலில் செயப்படுபொருளாகிய **வள்ளி**

[stamp]

என்னும் பெயர் நிலைக் கிளவி எழுவாயாக உயர்த்தப் பெற்று பின்வருமாறு மாற்றம் பெறுகிறது.

(31) வள்ளி [[[[முருகன் மணந்த]] ஆகு]]
1 2 3 4 4 3 2 1

இந்த அமைப்பில் [முருகன் மணந்த்] என்ற பகுதி உள்வினைத் தொடரின் பெயர்நிலைக் கிளவியாகும். இப்பகுதி ஒரு வாக்கிய மாக அமைந்து பெயர்நிலைக் கிளவியாகச் செயல்படுகின்றது. அடைப்புக்குறிகளின் கீழ் உள்ள 1,2,3,4 என்ற எண்கள் முறையே **பயனிலைத் தொடர், உள்வினைத் தொடர், பெயர்த் தொடர், வாக்கியம்** ஆகியவற்றை உணர்த்துவனவாகும். இருப்பு விகாரம், இயைபு விகாரம், கிளவியாக்கம், விகுதியாக்கம் ஆகியவை நிகழ்ந்த பிறகு **மணந்த்+ஆகு** என்ற பகுதி **மணந்தவள்** என்று வடிவம் பெற்று **வள்ளி முருகன் மணந்தவள்** என்ற அண்மை வாக்கியம் உருவாகின்றது.

இரண்டாவதாக, 29(ஆ) பிரிவில் உள்ள அண்மை வாக்கி யத்தை வருவிப்பதற்கு, (31)-இல் உள்ள அமைப்பில் காணப் படும் **ஆகு** என்னும் பொருள் கோட்கிளவி பிரதியாக்கம் **(Copying)** செய்யப்படுகின்றது. இதன் விளைவாகப் பின்வரும் அமைப்பு உருவாகின்றது.

(32) வள்ளி [[[[முருகன் மணந்த் ஆகு]] ஆகு]]
1 2 3 4 4 3 2 1

அடைப்புக்குறிகளின் கீழ் உள்ள எண்கள் முந்தைய செய்தி களையே உணர்த்துகின்றன. இயைபு **விகாரம்** இருமுறை செயல்படுகின்றது. முதலில் நிகழும் பொருள்கோட் கிளவியாகிய **ஆகு** இயைபு விகாரம், கிளவியாக்க விதி, விகுதியாக்க விகாரம் ஆகியவை நிகழ்ந்த பிறகு **அவள்** என்ற வடிவம் பெற்று **மணந்த்** என்பதுடன் போய்ச் சேர்கின்றது. இரண்டாவதாக உள்ள **ஆகு** இருப்பு மற்றும் இயையு விகாரங்கட்கு உட்பட்டு கிளவி யாக்க விதியின்மூலம் **ஆவாள்** என்று வடிவம் பெறுகின்றது. இந்த ஆய்வில் ஒரு குறிப்பிடத்தக்க செய்தி உண்டு. முதலில் நிகழும் **ஆகு, அவள்** என்று வடிவம் பெற்றாலும் அது உள்

வினையாகக் கொள்ளப்படமாட்டாது. ஓர் இயைபு விகுதி யாகவே அது கருதப் பெறும். காரணம், அதன் பொருண்மை யமைப்பில் உள்வினைக்குரிய இருப்புப் பொருண்மையின் நிகழ்ச்சி குறிக்கப்படவில்லை. இவ்வாறு மேற்படி பொருண்மை குறிக்கப்பெறாமல் போவதற்குக் காரணம், இரண்டாவதாக நிகழும் ஆகு, அப்பொருண்மையை உணர்த்துவதேயாகும். ஒரு முற்றுவாக்கிய (Simple Sentence அமைப்பில் இரண்டு உள்வினைகளின் நிகழ்ச்சிக்கு வாய்ப்பில்லை. **வள்ளி முருகன் மணந்தவள்** என்ற வாக்கியத்தில் **மணந்தவள்** என்ற வினை யமைப்பில் நிகழும் அவள் என்னும் வடிவம் உள்வினையாக நிகழ, அதே வடிவம் **வள்ளி முருகன் மணந்தவள்** ஆவாள் என்ற வாக்கியத்தில் உள்வினையாகக் கொள்ளப் பெறும் தகுதியை இழந்து விடுகின்றது. இதன்மூலம், உள்வினையானது குறிப் பிட்ட தொடரனியற் சூழலில் தனது பொருண்மையை இழந்து, இலக்கணப் பொருண்மையை மட்டுமே உணர்த்தவும் வல்லது என்ற உண்மை புலனாகின்றது. இவ்வாறு அமைவது உள் வினையின் பண்புகளுள் ஒன்றாகும்.

இனி, (30)-இல் உள்ள அண்மை வாக்கியங்கள் எங்ஙனம் (27) இலிருந்து வருவிக்கப்படுகின்றன என்பதைச் சிந்திக்கலாம். இத்தகைய அண்மை வாக்கியங்களில் எழுவாயாக எந்த ஒரு பெயர் நிலைக் கிளவியும் ஏற்றம் பெறும் வாய்ப்பில்லை. ஏனெனில் சேய்மை வாக்கியத்தில் எழுவாயாக உள்ள உறுப்பே, அண்மை வாக்கியத்திலும் எழுவாயாக உள்ளது. ஆனால் இரண்டிலும் பயனிலைத் தொடர்கள் ஒரே வடிவினவாக இல்லை. எனவே, (30,-இல் அமைந்த பயனிலைத் தொடர் களைப் பெறுவதற்கு, (26)-இல் உள்ள **முருகன் வள்ளியை மணந் தான் என்ற** சேய்மை வாக்கியம் பின்வருமாறு மாற்றியமைக்கப் பட வேண்டியதாகின்றது.

(33) வள்ளியை மணந்தவன் முருகன்

இத்தகைய வாக்கியங்கள் தொடரனியற் பரப்பில் கவை வாக் கியங்கள் (Cleft sentences) எனக் குறிக்கப் பெறும். சேய்மை வாக்கியமாகிய (26)-இல் **முருகன்** என்னும் பெயர்நிலைக்கிளவி

எழுவாயாக இருந்தபோதிலும், 33)-இல் **வள்ளியை மணந்தவன்** என்ற பயனிலைத் தொடரே எழுவாயாகச் செயல்படுவதுபோல் தோன்றுகிறது. இதனை அரண் செய்வதுபோல் உள்ளன பின்வரும் வாக்கிய அமைப்புகள்.

(34) (அ) வள்ளியை மணந்தவன் முருகன் ஆவான்.
(ஆ) வள்ளியை மணந்தது முருகன் ஆகும்.

இந்த இரண்டு வாக்கிய அமைப்புக்களிலும் **ஆவான், ஆகும்** ஆகிய உள்வினைகள் முறையே **வள்ளியை மணந்தவன், வள்ளியை மணந்தது** ஆகிய பெயர்த்தொடர்களுடன் இசைந்த சிறப்பு வினைப் பயனிலைகளாகச் செயல்படுவதைக் காணலாம். சேய்மை வாக்கியத்தில் உள்ள பயனிலைத் தொடர் முழுதும் எழுவாய் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ள உண்மையைக் குறிப்பனவாக அமைந்துள்ளன (34)-இல் உள்ள வாக்கிய அமைப்புக்கள். இதனைக் கருத்தில் கொண்டு, (33)-இல் **வள்ளியை மணந்தவன்** என்ற பெயர்த்தொடர் எழுவாயாகவும், **முருகன்** என்னும் உறுப்பு பயனிலையாகவும் செயல்படுவதாகத் துணியலாம். ஆனால் எழுவாய் நிலையை இழந்து (33), (34)-ல் பயனிலையாக நிகழும் **முருகன்** என்னும் பெயர்நிலைக் கிளவியானது தன் பழைய நிலையை விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. இந்த நிலையில் (33), (34)-இல் உள்ள வாக்கிய அமைப்புக்களும் எழுவாய் ஏற்றத்துக்கு (Subject Raising) உள்ளாகின்றன. இதன் விளைவாக, பயனிலையாகச் செயல்படும் **முருகன்**, எழுவாய் நிலைபெற்று (30)-இல் உள்ள வாக்கிய அமைப்புக்கள் தோற்றம் கொள்கின்றன. இந்த மாற்றங்களைப் பின்வருமாறு தொகுத்துக் காட்டலாம்.

(35) முருகன் வள்ளியை மணந்தான் ⇒ (36)

(36) வள்ளியை மணந்தவன் முருகன் ⇒ (37)

(37) முருகன் வள்ளியை மணந்தவன் (= (30) (அ))

இந்த மாற்றங்களை (27)-இல் குறிக்கப் பெற்றுள்ள அமைப்பினை அடிப்படையாகக் கொண்டு ஆராயலாம். முதலில்

இருப்பு மற்றும் இயைபு விகாரங்களும், தொடர்ந்து பயனிலைத் தொடர் எழுவாயாக ஏற்றம் பெறும் விகாரமும், (27)-இன் மீது செயல்பட்டு, பின்வரும் அமைப்பு தோற்றம் கொள்கிறது.

(38) [[வள்ளியை மணந்த்] ஆகு+ [+ இருப்பு, + ஆண்பால்]] முருகன்

இதனைத் தொடர்ந்து கிளவியாக்க விதி செயல்பட்டு ஆகு+ **[+இருப்பு, +ஆண்பால்]** என்னும் பகுதி **முருகன்** பயனிலையின் முன்னர் **அவன்** என்னும் உள்வினை தோற்றம் கொள்கின்றது. இந்த உள்வினை பின்னர் விகுதியாக்க விகாரத்துக்கு உட்படுகின்றது. **அவன்** என்னும் உள்வினைத் தோற்றத்துக்கு, பெயர்ப்பயனிலைச் சூழல் இன்றியமையாதது என்பதை நினைவில் கொள்ளவேண்டும். இந்தப் பயனிலை உறுப்பு முன்னர் எழுவாயாக நிகழ்ந்த ஒன்று என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். உள்வினையைத் தோற்றுவிக்கும் கிளவியாக்க விதியினை, பயனிலைத் தொடர் எழுவாயாக ஏற்றம் பெற்ற பிறகும், (38)-இல் உள்ள பெயர்ப் பயனிலை எழுவாயாக ஏற்றம் பெறுவதற்கு முன்பும் செயல்படுத்திவிட வேண்டும். இல்லையெனில், **அவன்** என்னும் உள்வினை தோன்றுவதற்கான தொடரனியற் சூழல் கிடைக்காமற் போய்விடும். மேலே (38)-இல் உள்ள அமைப்பு உடனடியாகத் தோற்றுவிப்பது (36)-இல் உள்ள வாக்கிய அமைப்பினையாகும். இங்ஙனம் பெறப்பட்ட **வள்ளியை மணந்தவன் முருகன்** என்ற அமைப்பானது, எழுவாய் ஏற்றம் பெற்று (37)-இல் உள்ள **முருகன் வள்ளியை மணந்தவன்** என்ற அமைப்பினைத் தோற்றுவிக்கிறது. ஆக, **வள்ளியை மணந்த முருகன்** என்ற பெயரெச்சத் தொடரை வருவிக்க (35), (36)-இல் உள்ள இரண்டு வகையான சேய்மைத் தொடர்களைச் சந்தித்தாக வேண்டியுள்ளது.

முருகன் வள்ளியை மணந்தவன் ஆவான் ((30) (ஆ)) என்ற வாக்கிய அமைப்பின் வருவிப்பு முறை கிட்டத்தட்ட மேலே குறிப்பிட்டது போன்றதாயினும் (27) - இல் உள்ள அமைப்பில் நிகழும் **ஆகு** என்னும் பொருட்கோட்கிளவி முதலில் பிரதியாக்கம் செய்யப்படுகிறது. இதனைத் தொடர்ந்து பயனிலைத்

தொடர் எழுவாயாக ஏற்றம் பெறுகிறது. பயனிலைத் தொடர் எழுவாய் நிலைக்கு உயர்த்தப்படும்போது, ஏற்கெனவே எழுவாயாக உள்ள உறுப்பு பயனிலை நிலைக்குத் தள்ளப்படுகின்றது. இதன் விளைவாகப் பின்வரும் அமைப்பு கிடைக்கின்றது.

(39) [[வள்ளியை மணந்த் ஆகு + [+ ஆண்பால்]] முருகன் ஆகு]

எழுவாய் ஏற்ற விகாரம் (முதல் கட்டம்) இரண்டு பொருள் கோட்கிளவிகளுள் முதலாவதை (39) - இல் காட்டியுள்ளது போல் பயனிலைத் தொடருடன் கொண்டு சென்றுவிடுகின்றது. (39) - இல் உள்ள அமைப்பு பின்வரும் அமைப்பினைத் தோற்றுவிக்கத் துணை புரிகின்றது.

(40) [வள்ளியை மணந்தவன்] முருகன் ஆகு

இந்த அமைப்பில் **வள்ளியை மணந்தவன்** என்ற தொடர் எழுவாய் ஆகலின் இருப்பு மற்றும் இயைபு விகாரங்கள் செயல்பட்டு பின்வரும் அமைப்பு தோற்றம் கொள்ள வகை ஏற்படுகின்றது.

(41) [வள்ளியை மணந்தவன்] முருகன் ஆவான்

இந்த அமைப்பில் பயனிலையாக நிகழும் **முருகன்** எழுவாய் ஏற்றம் பெறுகையில 30 (ஆ) பிரிவில் உள்ள **முருகன் வள்ளியை மணந்தவன் ஆவான்** என்ற வாக்கிய அமைப்பு தோற்றம் கொள்கின்றது. இந்த வாக்கியத்தினை (40) - இல் உள்ள அமைப்பினின்றும் நேரடியாகவும் வருவிக்கலாம். எழுவாய் ஏற்றத்தினை (40) - இல் உள்ள அமைப்பின்மீது செயல்படுத்தி **முருகன் [[வள்ளியை மணந்தவன்] ஆகு]** என்ற அமைப்பினை வருவித்துக் கொண்டு, பின்னர் **ஆகு** என்னும் பொருட்கோட்கிளவியை இருப்பு மற்றும் இயைபு விகாரங்களைச் செயல்படுத்தி, கிளவியாக்க விதியின் மூலம் **ஆவான்** என மாற்றுவதன்மூலம் (41) - இல் உள்ள அமைப்பினைப் பெறலாம். இந்த மாற்று வழி மேலானதாகத் தோன்றுகின்றது. ஏனெனில் **முருகன்** என்னும் எழுவாய் உறுப்பு **ஆவான்** என்னும் உள்வினைப் பயனிலையுடன் நேர்முகமாக இசைந்து நிற்கிறது.

பெயரெச்சத் தொடர்கள் பற்றிய ஆய்வில் அண்மை வாக்கியங்கள், சேய்மை வாக்கியங்கள் என்று இருவகை வாக்கியங்களை மேலே குறிப்பிட்டோம். முந்தைய ஆய்வுகளில் பெயரெச்சத் தொடர்கள் சேய்மை வாக்கியங்களுடன் தொடர்பு படுத்தப்படும் போக்கே நிலவுவது சுட்டப்பெற்று, அநதப் போக்கு ஏற்புடையதல்லவென்றும், சேய்மை வாக்கியங்களி னின்றும் வருவிக்கப் பெற்ற அண்மை வாக்கியங்களே பெய ரெச்சத்தொடர்களுடன் நேரடித் தொடர்புடையவை என்றும் மேலே நாம் வலியுறுத்தினோம். இந்த உண்மைகளைக் கருந்தில் கொண்டு (5) - இல் உள்ள பெயரெச்சத் தொடர்களை வரு விப்பது பற்றி இனி சிந்திக்கலாம். இப்பெயரெச்சத் தொடர் களும், இவற்றுடன் தொடர்புள்ள அண்மை வாக்கியங்களும் ஆய்வுக்காக வேண்டி மீண்டும் கீழே நினைவு கூரப்படுகின்றன.

(43) (அ) வள்ளியை மணந்த முருகன்
(ஆ) வள்ளியை மணந்தவனாகிய முருகன்

(44) (அ) முருகன் வள்ளியை மணந்தவன் (......⇒ 43 (அ))
(ஆ) முருகன் வள்ளியை மணந்தவன் ஆவான் (......⇒ 43 (ஆ))

அண்மை வாக்கியங்களாக (44) - இல் குறிக்கப்பெற் றுள்ளவை எவ்வாறு சேய்மை வாக்கியங்களினின்றும் வருவிக்கப் படுகின்றன என்பதுபற்றி முன்பே நாம் சிந்தித்துள்ளபடியால், நேரடியாக (43)-இல் குறிக்கப்பெற்றுள்ள பெயரெச்சத் தொடர் களின் ஆய்வை, கீழே (45) - இல் குறிக்கப்பெற்றுள்ள அமைப் பினின்றும் வருவிப்பதைப் பற்றி இனி சிந்திக்கலாம்.

(45)



இந்த அமைப்பில் **வா(க்கியம்)** என்ற கணுவின்கீழ் குறிக்கப் பெற்றுள்ள வாக்கியம் அண்மை வாக்கியம் என்பதும், இவ் வாக்கியத்தில் நிகழும் எழுவாய் உறுப்பு மட்டுமே தலைமைப் பெயராக நிகழவல்லது என்பதும் மீண்டும் இங்கு நினைவு படுத்தப்படுகின்றது.

முதலில் *43 (அ)* - வில் குறிக்கப் பெற்றுள்ள **வள்ளியை மணந்த முருகன்** என்ற பெயரெச்சத்தொடர் *(45)* - இலிருந்து எங்ஙனம் வருவிக்கப்படுகின்றது என்பதைக் காணலாம். இந்த வருவிப்பில் பின்வரும் விதிகள் செயல்படுகின்றன.

(46) (அ) சம பெயர் நீக்க விகாரம். (இது அண்மை வாக்கியத்திலுள்ள எழுவாயை நீக்குகின்றது)

(ஆ) இருப்பு விகாரம் (இது உள்வினைப் பொருண்மையை ஆகு என்னும் பொருள்கோட்கிளவியுடன் சேர்க்கின்றது)

(இ) கிளவியாக்கம் (இது **ஆகு+ [+இருப்பு]** என்பதனைத் தலைமைப் பெயரின்முன் அகரக் கிளவியாக மாற்றுகின்றது)

(ஈ) விகுதியாக்க விகாரம் (**இது மணந்த்#அ** என்ற அமைப்பினை **மணந்த** என்று மாற்றுகின்றது)

தமிழில் கீழே குறிக்கப் பெற்றுள்ளவற்றில் (அ) பிரிவில் உள்ள பெயரெச்சத் தொடரைப் போலவே (ஆ) பிரிவில் உள்ளதும் ஏற்புடையதாகும்.

47) (அ) [வள்ளியை மணந்த முருகன்] அங்கே நிற்கிறான்

(ஆ) [முருகன், வள்ளியை மணந்தவன்] அங்கே நிற்கிறான்

47(அ)-வில் தலைமைப் பெயரின் முன் நிகழும் **வள்ளியை மணந்த** என்னும் பெயரெச்சத் தொடர், 47(ஆ)-வில் தலைமைப்

பெயரை அடுத்து நிகழ்கின்றது. தலைமைப் பெயரை நீங்கி கீழே குறிப்பிட்டுள்ளது போல் பயனிலைத் தொடரை யடுத்தும் பெயரெச்சத் தொடர் நிகழவல்லது.

47 (இ) முருகன், அங்கே நிற்கிறான், வள்ளியை மணந்தவன்.

இந்த எடுத்துக்காட்டுக்களுள் (ஆ), (இ இரு பிரிவிலும் நிகழும் அமைப்புக்களைப் பழந்தமிழிலும் காணலாம். இந்த வகையில் பின்வரும் எடுத்துக் காட்டுக்கள் கருதற்பாலன வாகும்.

(48) மூவன் பரிசில் நீட்டித்தானை (= பரிசில் நீட்டித்த மூவனை) பெருந்தலைச் சாத்தனார் பாடியது (புறம் 209. துறைக் குறிப்பு)

(49) தலைமகன் வினைமுற்றினான் (= வினைமுற்றிய தலைமகன்) தேர்ப்பாகற்குச் சொல்லினவும்... (இறையனார் களவியல, நூற்பா 59. நக்கீரர் உரை)

(50) ... நின் தந்தை, தாய் வாழியர் நிற்பயந்தசினோரே (புறம் 137)

நிற்பயந்த நின் தந்தைதாய் வாழியர் என்ற அமைப்பின் பொருண்மையுடன் பொருந்துவதாகும் (50,-இல் உள்ள அமைப்பு[2].

பெயரெச்சத் தொடர் தமிழில் தலைமைப் பெயரின் முன் நிகழ்தலே பெருவழக்கு. தலைமைப் பெயரை அடுத்தும் பயனிலைத் தொடரையடுத்தும் அது நிகழ்கையில், அதன்கண் உள்ள உள்வினை சிறப்பு உள்வினை (Personal Copula) யாக அமைகின்றது. (47) (ஆ), (இ) இரண்டிலும் நிகழும் **வள்ளியை மணந்தவன்** என்ற பகுதியானது, (45)-இலிருந்து பின்வரும் விதிகள் செயல்படுவதன் மூலம் கிடைக்கின்றன.

(51) (அ) இருப்பு மற்றும் இயைபு விகாரங்கள். (இவ் விகாரங்கள். மூலம் **ஆகு** • [+ **இருப்பு**, + **ஆண்பால்**] என்ற அமைப்பு உருவாகின்றது.)

(ஆ) சம பெயர் நீக்க விகாரம். (இயைபு விகாரம் நிகழ்ந்த பிறகே இது நிகழ வேண்டும்).

(இ) பெயரெச்சத் தொடர் அண்மைப் பெயர்ச்சி விகாரம். (இந்த விகாரம் **முருகன் வள்ளியை மணந் # ஆகு+ [+ இருப்பு, + ஆண்பால்** என்ற அமைப்பினைத் தோற்று விக்கின்றது.)

(ஈ) கிளவியாக்க விதி. (இந்த விதி **ஆகு + [இருப்பு, +ஆண்பால்]** என்பதனை **அவன்** என்னும் உள்வினையாக மாற்றும்).

(உ) விகுதியாக்க விகாரம். (இந்த விகாரம் **மணந் # அவன்** என்ற அமைப்பினை **மணந் தவன்** என்ற மாற்றியமைக்கும்).

இவ்விதிகள் அனைத்தும் (47) (ஆ)-வில் உள்ள **முருகன் வள்ளியை மணந்தவன்** என்ற பெயர்த்தொடரைத் தோற்றுவிப் பனவாகும். இதே விதிகள்தாம் (47) (இ) பிரிவில் உள்ள சிதையுண்டு கிடக்கும் பெயர்த்தொடரையும் வருவிக்கின்றன. ஒரு வேறுபாடு: (51) (இ)-யில் உள்ள விகார விதியைப் **பெயரெச்சத் தொடர் சேய்மைப் பெயர்ச்சி விகாரம்** என்ற மாற்றிக் கொள்ளவேண்டும். இந்த சேய்மைப் பெயர்ச்சி விகாரம் பெய ரெச்சத் தொடரைப் பயனிலைத் தொடரையடுத்து நிகழுமாறு செய்கின்றது.

(44) (ஆ)-வில் நிகழும் **வள்ளியை மணந்தவனாகிய முருகன்** என்ற அமைப்பினை வருவிக்க (45)-இன் மீது பின்வரும் விதிகள் செயல்படுத்தப்படும்.

(52) (அ) பொருள்கோட்கிளவி பிரதியாக்கம். (இந்த விகாரம் **ஆகு** என்னும் உறுப்பினை பிரதி செய்கின்றது).

(ஆ) இயைபு விகாரம், (இந்த விகாரம் முதல் பிரதி யாகிய **ஆகு** என்னும் பொருள்கோட்கிளவி யுடன் இயைபுப் பொருண்மையைக் கொண்டு சேர்க்கின்றது.

(இ) சம பெயர் நீக்க விகாரம்.

(ஈ) இருப்பு விகாரம். (இந்த விதி இருப்புப் பொருண்மையை இரண்டாவது பிரதியாகிய ஆகு என்பதனுடன் கொண்டு சேர்க்கின்றது).

(உ) கிளவியாக்கம். (இவ்விதி பின்வரும் அமைப்புக் களின் மீது செயல்படுகின்றது.

(1) ஆகு + [+ஆண்பால்] > அவன் / மணந்த் # —

(2) ஆகு + [+இருப்பு] > ஆகிய / மணந்த் # அவன் — முருகன்.

(ஊ) விகுதியாக்கம். (இந்த விதி **மணந்த் # அவன்** என்ற அமைப்பை **மணந்தவன்** என மாற்று கின்றது).

முன்னதாக நாம் குறிப்பிட்ட (5)/(43)-இல் நிகழும் பெயரெச்சத் தொடர்கள் பற்றிய ஆய்வு, (6) மற்றும் (11)-நிகழும் பெய ரெச்சத் தொடர்களுக்கும் பொருந்தும்.

ஒரு மாற்றுவழி: தமிழில் பெயரெச்சத் தொடர்களை வருவிக்க பொதுவாக (45)-இல் குறிக்கப்பெற்றுள்ளதுபோன்ற அமைப் பினைக் கருத்தில் கொள்வது மரபாக இருந்து வருகின்றது. அண்மை வாக்கியங்கள் பற்றிய சிந்தனையின் அடிப்படையில், இந்த மரபினைவிட்டு விலகி வேறொரு நெறியினைப் பின்பற்ற லாம் என்று தோன்றுகின்றது. அண்மைவாக்கியங்கள் பெய ரெச்சத் தொடர்களாக மாறறப்படும்போது, மேற்படி வாக்கியங் களில் எழுவாயாக நிகழும் உறுப்பு ஒன்று மட்டுமே பெயரெச்சத் தொடர்களில் தலைமைப் பெயராக அமையும் வாய்ப்பினைப் பெறுகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு (45) - இல் உள்ள அமைப்பினைப் பினவருமாறு மாற்றி அமைக்கலாம்.

(53)



பெயரெச்சத் தொடர்களைச் செய்மை வாக்கியங்களிலிருந்து வருவிக்கும்போது பிந்தியவற்றில் நிகழும் எந்தப் பெயர்நிலைக் கிளவி முந்தியவற்றில் தலைமைப் பெயராக அமையும் என்பதை அறிய வாய்ப்பில்லை. இந்த நிலையைத் தவிர்க்க (45) - இல் உள்ளது போன்ற அமைப்பு தேவைப்படுகின்றது. இத்தகைய அமைப்பில் தலைமைப் பெயர் வெளிப்படையாகக் குறிக்கப்படுவதன்மூலம், செய்மை வாக்கியத்தில் உள்ள எந்தப் பெயர்நிலைக் கிளவி பெயரெச்சத் தொடரில் தலைமைப் பெயராக நிகழ்கிறது என்பது தெளிவுபடுத்தப்படுகின்றது. இந்தச் சிக்கல் (53) - இல் இல்லை. ஏனெனில் இந்த அமைப்பில் குறிக்கப்பெற்றுள்ள வாக்கியம் அண்மை வாக்கியம். ஆகவே எழுவாயாக நிகழும் பெயர்நிலைக்கிளவி ஒன்று மட்டுமே பெயரெச்சத் தொடரில் தலைமைப் பெயராக நிகழும். இந்த நிகழ்ச்சி (53) - இல் உள்ளது போன்ற அமைப்பில் கண்டிப்பாக நிகழவேண்டுமாதலின், சம பெயர் நீக்க விகாரத்துக்கு இங்கே இடமில்லை. எழுவாயாக நிகழும் பெயர் நிலைக் கிளவி பயனிலைத் தொடரையடுத்து நகர்த்தப்பெற்று, பின்னர் பெயர்த்தொடர்க் கணுவின் ஓர்உறுப்பாக உயர்த்தப்படும். இந்த மாற்றங்களைப் பின்வரும் வரைபடங்கள் தெளிவுபடுத்தும்.

(54) (அ) பெ.தொ ⇒ 54 (ஆ) பெ.தொ ⇒ 54 (இ) பெ.தொ.



மு முருகன்; வ: வள்ளியை; ம: மணந்த் # ஆகு; எ. தொ: எச்சத்தொடர்

54 (இ) - யில் வா என்ற கணு எழுவாய் உறுப்பை இழந்து ஒற்றைக் கிளையாக நிற்பதால் மேற்படி கணு அகற்றபபட்டு விடும். விதிகளின் எண்ணிக்கை என்று பார்த்தால், (45) - இல் உள்ள அமைப்பை விட, (54) - இல் உள்ள அமைப்பு கூடுதலாக

ஓர் விதியை வேண்டுகிறது. முந்தியதில் உள்ள சமபெயர் நீக்க விகாரம் பிந்தியதில் இல்லை. அதற்கு மாறாக, பிந்தியதில் எழுவாய்ப் பெயர்ச்சி விகாரம் நடைபெறுகின்றது. (45)-ல் எழுவாய் உறுப்பினை பெயர்த்தொடர்க் கணுவின் நேரடி ஆதிக்கத்தில் கொண்டுவர வாய்ப்பில்லை. (54)-இல் பயனிலைத் தொடரையடுத்து நகர்த்தப்பெற்ற எழுவாயாகிய பெயர் நிலைக் கிளவியைப் பெயர்த்தொடர்க் கணுவின் கீழ்க் கொண்டு வர வேண்டும். இந்த ஒருவிதிதான் (54)-இல் கூடுதலாக அமையும் விதி. (45)-இல் செயல்படும் மற்ற எல்லா விதிகளும் (54)-இலும் செயல்படும். பெயரெச்சத் தொடர்களை (54)-இல் உள்ளது போன்ற அமைப்பிலிருந்து வருவிப்பதுபற்றிய நமது மாற்றுத் திட்டத்தின் நிறைகுறைகளை நாம் இங்கே சிந்திக்க முயற்சி மேற்கொள்ளவில்லை. இதன் விளைவு எப்படி இருந்தாலும், உள்வினைகள் பற்றிய நமது சிந்தனையில் பாதிப்பு ஏதும் நேரப் போவதில்லை.

அடிக் குறிப்புக்கள்

1. **செய்பு** என்னும் வாய்பாட்டுப் பொது வினையானது **செய்பவன் / செய்வான், உண்பவன் / உண்பான், படிப்பவன் / படிப்பான்** ஆகியவற்றில் நிகழும் **செய்பு / செய்வு, உண்பு, படிப்பு** ஆகியவற்றை உணர்த்துவதாகும்.

2. பெயரெச்சத் தொடர் தலைமைப் பெயரின் முன் நிகழ்கையில், மேற்படி தொடரில் நிகழும் பெயரெச்ச விகுதியாகிய உள்வினை பொது உள்வினையாக (**Impersonal Copula**) இருப்பதையே நாம் வழக்கில் காண்கிறோம். ஆனால் சில உரையாசிரியர்கள் தமிழிலும், காப்பியத் தமிழிலும் ஒரோ வழி இந்த உள்வினைப் பெயரெச்சமானது தலைமைப் பெயரின் முன் சிறப்பு உள்வினை(**Personal Copula**)-யாக நிகழும் போக்கினையும் காணமுடிகின்றது. இந்த வகையில் பின்வரும் எடுத்துக் காட்டுக்கள் கருத்தில் கொள்ளத் தக்கனவாகும்.

(1) இக்கனவிய குழையை உடையாள் இப்பொழிற்கண் உறைவாள் (= உறையும்/உறைகின்ற) ஒரு தெய்வ மகளோ (திருக்குறள் 1081. பரிமேலழகர் உரை)

(2) அப்பொழில் வாழ்வாய் (= வாழும்/வாழ்கின்ற) நீயும் அத்தன்மையை அன்றே (இறையனார் களவியல் நூற்பா 2, நக்கீரர் உரை)

(3) உலக்கையால் உதிர்ந்தன (= உதிர்ந்த) தெங்கின் ஒண்பழம் நிலத்தவை சொரிதலின் வெரீஇய அஞ்ஞை (சீவகசிந்தாமணி, 92)

இந்த எடுத்துக் காட்டுக்களில் நிகழும் பெயரெச்சத் தொடர்களை வருவிக்கையில் சமபெயர் நீக்க விகாரம் நிகழ்வதற்கு முன் இருப்பு விகாரத்துடன் இயைபு விகாரமும் நிகழ்ந்துவிட வேண்டும். இல்லையெனில் **உறைவாள் (= உறையும்/உறைகின்ற), வாழ்வாய் (= வாழும்/வாழ்கின்ற)**, உதிர்ந்தன **(உதிர்ந்த)** ஆகியவற்றில் நிகழும், **-ஆள், -ஆய், -அன** ஆகிய சிறப்பு உள்வினைகளைப் புற அமைப்பில் பெற வாய்ப்பில்லாமல் போய்விடும்.

(கட்டுரை தொடரும்)

மொழியியல் 9. 1 & 2 (1985)

திராவிட மொழிகளில் நிகண்டுகள்

மா. சற்குணம்
ஸ்ரீ சி.பா.சு.தமிழ்க் கல்லூரி, மயிலம்

இந்தியாவில் பேசப்படும் மொழிகளில் திராவிட மொழிகள் என்னும் மொழிக் குடும்பம் தொன்மையும் நன்னீர்மையும் மிக்க இரண்டாவது மிகப் பெரிய மொழிக் குடும்பமாகும். திராவிட மொழிகள் இருபத்துமூன்றுக்கு மேற்பட்டுள்ளன. இவற்றுள் இலக்கிய இலக்கண வளமுடையன சிலவேயாம். ஒரு மொழியின் சிறப்பை அதன்கண் தோன்றியுள்ள திட்டமிடப்பட்ட அகராதிகளைக் கொண்டுமறியலாம். திராவிட மொழிகளில் ஒரு சிலவே அகராதித் துறையில் தொன்மையான நூல்களான நிகண்டுகளைப் பெற்றுள்ளன. அவற்றைக் குறித்து மதிப்பிட முற்படுவதே இக்கட்டுரை வரைவதன் நோக்கம்.

திராவிட மொழிகளை ஆய்வாளர்கள் மூன்று பெரும் பிரிவாகப் பகுத்துள்ளனர். தென் திராவிடம், நடுத்திராவிடம், வடதிராவிடம் என்பனவே அவை. தென்திராவீட மொழிகளில்

தமிழ், கன்னடம் ஆகியவையும், நடுத்திராவிட மொழிகளில் தெலுங்கும் மட்டுமே மொழி நிகண்டுகளைப் பெற்றுள்ளன. வடதிராவிட மொழிகளில் எதுவும் பண்பட்ட மொழி அல்ல. ஆதலால், அவற்றுள் குறிப்பிடத்தக்க நூல்கள் ஏதும் தோன்ற வில்லை.

மூல திராவிடத்தின் தன்மைகளை மிகுதியும் பெற்றுள்ள மொழி தமிழேயாகும். நந்தமிழ் மொழியில் தொன்மையான காலத்திலேயே அகராதிப் பணி தொடங்கி விட்டது. தொல் காப்பியம் உரியியலை நோக்குங்கால் சுமார் 2000 ஆண்டுகட்கு முன்பேயே அகராதித் துறையில் நாம் அடி எடுத்து வைத்து உள்ளோம் என்பதை அறிந்து பெருமைப் படலாம். அகராதித் துறையின் கூறுகளை அதன்கண் நாம் காண்கிறோம்.

நிகண்டுகள் என்பன மொழியில் உள்ள சொற்களுக்குப் பொருள் கூறும் வகையில் எழுதப்பட்ட செய்யுள் வடிவிலான நூல்களாகும். தமிழில் இத்தகைய நிகண்டுகள் கி.பி. 9- ஆம் நூற்றாண்டு முதலாகவே கிடைத்துள்ளன.

சேந்தன் திவாகரம் என்பதே தமிழில் கிடைத்த முதல் நிகண்டாகும். திவாகர முனிவர் என்பவரால் செய்யப் பெற்ற இந்நூல் சுமார் 9500 - க்கு மேற்பட்ட சொற்களுக்கு பொருள் கூறுகிறது. ஒரு பொருள் குறிக்கும் பல பெயர்ச் சொற்கள், பல பொருள் குறிக்கும் ஒரு பெயர்ச் சொற்கள், மற்றும் பல் பொருள் கூட்டத்து ஒரு பெயர்ச் சொற்கள் என்ற மூன்று வகையில் சொற்கள் பொருண்மை சுட்டப்பெற்றுள்ளன. திவாகரத்தை அடுத்து பிங்கலந்தை என்ற நிகண்டு தோன்றியது. நூலின் அமைப்பில் முன் நூலுக்கு இது மாற்றம் பெற்றுள்ளது. சொற்களின் எண்ணிக்கையில் மிகுதியினை இதன்கண் காண லாம். இவற்றை அடுத்து உரிச்சொல் நிகண்டு, கயாதர நிகண்டு, சூடாமணி நிகண்டு முதலியன பின் வந்த நூற்றாண்டுகளில் தோன்றின. இவற்றுள் யாப்புக்களும், நூலின் உட்பிரிவுகளும், வேறுபட்டிருப்பினும் எளிமையை நோக்கி அகராதிக்கலை மெல்ல நடை பயின்றுள்ளமையைக் காணலாம்.

கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் புலியூர்ச் சிதம்பர ரேவண சித்தர் என்பவர் அகராதி நிகண்டு என்ற நூலினைச் செய்தார். தமிழில் முதன் முதலில் அகர நிரலில் சொற்களை அமைத்துப் பொருள் கூறிய அகராதி இதுவேயாகும். இதன் சொற்கள் முதலெழுத்து அளவில் மட்டுமே அகர நிரற்படுத்தப்பட்டுள்ளன. இதன் பின்பு தோன்றிய பொதிகை நிகண்டில் முதல் இரண்டெழுத்தளவில் சொற்கள் அகர வரிசைப் படுத்தப்பட்டு பொருள் கூறப் பெற்றுள்ளன. இவ்வாறு சிறிது சிறிதாக அகராதிக்கலை வளர்ந்து வந்த அக்காலத்திலேயே சொற்களின் எண்ணிக்கையிலும் அவற்றுக்குரிய பொருள்களிலும் நிறைய வளர்ச்சி இருந்தது என்பதை நன்கு அறியலாம்.

ஒரு சொல்லுக்குரிய பல பொருள்களைச் சுட்டிய தனி இயல் பிற்காலத்தில் தனி நிகண்டு நூலாகத் தோன்றியமையும், குறிப்பாக பதினோராம் தொகுதி பற்பல பதிப்புக்களைக் கண்டமையும் கண்கூடு. அரும்பொருள் விளக்க நிகண்டு, நாநார்த்த தீபிகை வேதவிரியார் சூடாமணி, சிந்தாமணி நிகண்டு, விரிவு நிகண்டு ஆகியன இவ்வகையில் குறிப்பிடத் தக்கவை.

இதைப் போன்ற நிகண்டுகளின் முதல் வகையில் ஒரு பொருள் குறிக்கும் பல பெயர்த் தொகுதிகளின் வளர்ச்சியாக நாமதீப நிகண்டு, 12000 சொற்களுக்குப் பொருள் தருவதாகத் தோன்றியமையும், தொகைப் பெயர்களைக் குறிக்கும் நிகண்டுகளாக பொருட் தொகை நிகண்டு, விரிவு நிகண்டு போன்றவை தோன்றியமையும் குறிப்பிடத் தக்கதாகும். கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் தமிழகம் போந்த பெஸ்கி பாதிரியார் சதுரகராதி செய்ததை ஆய்வுலகம் நன்கு அறியும். மேலை நாட்டார் வருகை புரிந்த இக்காலம் முதல் சொற்களின் எல்லா எழுத்துக்களையும் நோக்கி அவற்றை அகர வரிசையில் அமைத்து அவற்றுக்குரிய பொருள்களையும் தனித்தனியே சுட்டுவதாகிய அகராதி முறை தோற்றம் பெற்று விட்டது எனலாம். அதுவரை ஒரு மொழி அகராதிகள், 'நிகண்டு' என்ற பெயரோடு தோன்றிய நிலைக்கு மாறாக ஐரோப்பியரின் வருகை இரு மொழி அகராதிகள் (Bilingual Dictionaries) நிறைய தோன்றுவதற்கு வழி வகுத்தது.

அறிவியல் அடிப்படையிலான பிற்கால அகராதிகளுக்கு இது வரை சுட்டப் பெற்ற நிகண்டுகளின் வளர்ச்சியே பாதை வகுத்தது என்பதே உண்மையாகும். சுமார் 50-க்கும் மேற்பட்ட தமிழ் நிகண்டுகள் மொழி, மருத்துவம், கணியம் (Astrology) போன்ற பல துறைகளிலும் தமிழின் சொல்லகராதிகளாகத் தோன்றி மொழி வளத்தைக் காத்துள்ளது.

கன்னடம்:- தென் திராவிட மொழிகளில் பழமையான மற்றோர் மொழி கன்னடமாகும். தெலுங்கோடு ஒப்பிடுகையில் கன்னட மொழியில் மிகப் பழங்காலத்திலேயே நிகண்டுகள் எழத் தொடங்கி விட்டன எனலாம். புகழ் வாய்ந்த கன்னடக் கவிஞர் ரன்ன என்பவரை (கி.பி. 990) இத்துறையின் முன்னோடி என்பர். அவருடைய படைப்பாகிய 'ரன்னகண்ட' என்பதே கன்னட மொழியின் தொன்மையான அகராதியாகும். அது நன்கு புகழ் வாய்ந்ததான கண்டயாப்பில் பழங் கன்னடத்திற்கு ஏற்ற வகையில் செய்யப் பெற்றது. ஆனால் போகூழின் காரணமாய் அந்நூல் இதுவரை முழுமையாக கிடைக்கப் பெறவில்லை. பெரும்பாலான அதன் பகுதிகள் இழப்புக்குள்ளாயின. கிடைக்கப் பெற்ற பகுதியிலும் அகராதிக்குரிய பொருள்கள் ஒரு முறைப்படியான அமைப்பில் நிரல்பட உள்ளதாகத் தெரியவில்லை.

பழங் கன்னடத்தில் தோன்றிய பெரும்பாலான கம்பு (உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்) காவியங்கள் மிகுதியாக வடமொழிச் சொற்களைக் கொண்டு உள்ளன. அதனால் வட சொற்களுக்குக் கன்னடத்தில் பொருள் உரைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அத்தேவை முதன் முதலாக 2-ஆம் நாகவர்மர் என்பவரால் கி. பி. 1145-ல் செய்யப் பெற்ற அபிதான வஸ்து கோசம் (Abidhāna Vastu Kōsa) என்ற நூலாலும், ஹலாயுதரின் அபிதான ரத்தினமாலை (Abidhāna ratna māla) என்பதற்கு ஆக்கிய கன்னட உரையாலும் நிறைவேறியது.

அடுத்து ஒரு மொழி அகராதி ஒன்று சுமார் கி. பி. 1260-ல் கேசிராஜன் என்பவரால் செய்யப் பெற்ற சப்தமணி தர்ப்பனா என்ற நூலின் சில பிரிவுகளில் அமைந்திருப்பதைக் காணலாம்

சப்தமணிதர்ப்பனா என்பது சிறந்ததோர் இலக்கண நூலாகப் போற்றப்படுகிறது. அதன் பத்தாவது பகுதி சுமார் 233 அரிய சொற்களுக்குப் பொருள் தருவதாக அமைந்துள்ளது.

இதையடுத்து சுமார் கி. பி. 1400-ல் கர்நாடக சப்தசாரம் என்ற அகராதி உரைநடையில் தொகுத்தளிக்கப் பெற்றது. இதன்கண் 1416 சொற்களுக்குப் பொருள் தரப்பட்டுள்ளன. மங்கராஜன் என்பவரால் கி. பி. 1398-ல் அபிநவாபிதானம் என்ற மிகச் சிறப்பு வாய்ந்த நூல் ஒன்று சமஸ்கிருதச் சொற்களுக்குக் கன்னடத்தில் பொருள் தருவதாகச் செய்யப் பெற்றது. இந்நிகண்டு வார்த்தக சட்பதி என்ற யாப்பில் ஆக்கப் பெற்றுள்ளது.

கி. பி. 1400-ல் கந்தயாப்பு என்ற செய்யுள் நடையில் கப்பிகர கைபிடி (Kabbigara Kaipidi) என்று மற்றுமோர் அகராதி எழுந்தது. வீர சைவக் கவியான சதுராசிய பொம்மராஜர் என்பவரால் கி. பி. 1450-இல் சதுராகிய நிகண்டு என்ற நூல் செய்யப் பெற்றது. இது 64 கந்தயாப்புச் செய்யுட்களால் அமைந்தது.

கப்பிகர கைபிடி என்ற பெயரிலேயே இரண்டாவதாக ஓர் நிகண்டு கி. பி. 1530-இல் லிங்கமந்திரி என்ற வீரசைவக் கவிஞரால் செய்யப் பெற்றது. இது வார்த்தகசட்பதி என்ற யாப்பில் அமைந்த நூலாகும்.

சுமார் கி. பி. 1560 வாக்கில் வீரகடதோண்டதார்யர் என்பவரால் கர்நாடக சப்தமஞ்சரி என்ற பெயரில் புதுக் கன்னட நிகண்டு (Halakannada Lexicon) ஒன்று தொகுக்கப் பெற்றது. இதில் வடமொழிச் சொற்களுக்கான பொருளும் திரிந்த கன்னடச் சொற்களுக்குச் சரியான சொற்களின் வடிவங்களும் முறையாகக் கொடுக்கப் பட்டுள்ளன. கி. பி, 1600 அளவில் வார்த்தக சட்பதி யாப்பில் அமைந்த இன்னொரு செய்யுள் அகராதி கர்நாடக சஞ்ஜீவன (ம்) என்ற பெயரில் சிருங்கார கவி என்பவரால் தொகுத்தளிக்கப்பெற்றது.

ஆங்கில அகராதிகளைப் போல கன்னட அகராதிகளைச் செய்வது 19-ஆம் நூற்றாண்டில்தான் துவங்கியது. சொற்கள் முழுமையும் அகர நிரல்படுத்தப்பட்டு பொருள் தரும் அகராதிகள் ரீவ்ஸ், சிட்டல் போன்றோரால் தொடங்கப்பட்டது. பின்னரே வரலாற்று அடிப்படையில் கன்னட அகராதி ஒன்று வெளியிட வேண்டுமென்ற வியத்தகு பணியை கன்னட சாகித்ய பரிஷத் மேற் கொண்டது. இத்தகு தற்கால அகராதிகட்கு வழி காட்டிய பெருமை இதற்கு முன் குறிப்பிடப் பெற்ற கன்னட மொழியின் நிகண்டுகட்கே உரியதாகும்.

தெலுங்கு:– வடமொழி நிகண்டுகளைப் போலவே தெலுங்கு நிகண்டு களிலும்

தேவ	— Divine beings
மானவ	— Human beings
திர்யக்	— Non - human beings
நாநார்த்த	— Homonoyms

ஆகிய நான்கு பிரிவுகள் உள்ளன. வடமொழியில் அகர நிரல் முயற்சி மேற்கொண்ட பின்னர் தெலுங்கிலும் பிற்கால அகராதிகள் அகர நிரலில் ஆக்கப் பெற்றன.

தெலுங்கு மொழியின்கண் கோசங்கள் (Kōśas) என்ற வகையில் எழுந்த நூல்களில் எட்டு நூல்களை முக்கியமாகக் குறிப்பிடுவர், முதன் முதலாக எழுந்தது கி.பி. 1600-இல் பைடிபாடி லட்சுமண கவி என்பவரால் எழுதப் பட்ட ஆந்திர நாம சங்கிரகம் (Andra nāma Sangrahamu) என்பதாகும். இதையடுத்து கி.பி. 1650-இல் இரு நூல்கள் தோன்றின. வெங்கடேச நிகண்டு என்பது 100 சீசபதியங்களைக் (Sīsapadyas) கொண்டதாக எழுந்தது. கவி சௌடப்ப சீசமுலு என்ற நூல் இராயல சீமையின் வழக்காற்று வடிவங்களைக் கொண்டதாக 32 பாடல்களால் இயற்றப்பட்டது. 1740-இல் சாம்ப நிகண்டு (Sāma nighantuvu) என்ற நூலும் 1780-இல் ஆந்திர பாஷா நவமு (Andra bāsha navamu) என்ற நூலும் வெளியாகியது.

பிந்தியதை இயற்றியவர் வெங்கடகவி என்பவர். இந்நூல் மூன்று காண்டங்களையுடையது. மேலும் இந்நூல் தெலுங்குச் சொற்களுக்கு இணையாக வடமொழிச் சொற்களைத் தருகிறது. மேலும் இது 'ஆந்திரமரமு' என்று அவர்களால் போற்றப் பெறுகிறது.

கந்த பதியங்களில் (சர்வாந்திரசார சங்கிரஹமு' (**Sarvandra sāra Sangrahamu**) என்ற நூல் **1860**-இல் தொகுத்தளிக்கப் பெற்றது. பல்வேறு விருத்தப் பாக்களில் ஆந்திர பிரபாகரமு (**Andra Prabhakaramu**) என்ற பெயரில் ஒரு அகராதி **1880**-இல் வெளியிடப்பட்டுள்ளது. ஆந்திர பதநிதானமு (**Andra pada nidānamu**) என்ற பெயரில் **1900**-இல் வெளி வந்த நூலே அது வரை வெளிவந்தவற்றுள் மிகப் பெரிய அகராதியாகும்.

இந்தியாவை ஆங்கிலேயர் ஆளத் தொடங்கிய பிறகு அவர்கள், இம்மரபு வழிச் செய்யுள் வடிவிலமைந்த நிகண்டு களைப் பயன் படுத்துவது அரிது என்றறிந்த பின் அகர நிரலில் அமைந்த அகராதிகளை அனைவரும் பயன் கொள்ளுமாறு ஆக்கினர். அவர்களால் தொகுத்தளிக்கப் பெற்ற அகராதிகள் பல நிகண்டு என்ற பெயரோடு அமைந்துள்ளன. அவற்றுள் குறிப்பிடத் தக்கன ஜெண்டு நிகண்டு (**Jenṭu Nighaṇṭu**) **1770**. வில்லியம் பிரௌன் நிகண்டு (**Willliam Brown Nighaṇṭu**) **1818**. காம்பெல் நிகண்டு (**Campbell Nighaṇṭu**) மோரிஸ் நிகண்டு (**Morrys Nighaṇṭu**) இவற்றுள் வில்லியம் பிரௌன் நிகண்டு பல சிறப்புக் கூறுகளைப் பெற்றுள்ளது. பேச்சு வழக்குச் சொற்களும், இலக்கியச் சொற்களோடு இதில் இடம் பெற்றுள்ளன. வேர்ச் சொல்குறிப்புகளும், புலவர்களின் சொல்லாட்சி மேற்கோள்களும் காட்டப்பட்டுள்ளன. கடன் வாங்கிய சொற்கள் பிரித்துச்சுட்டப் பெற்றுள்ளன. இதில்தான் முதன் முதலாகப் பழமொழிகளும் வழக்கு நடைத் தொடர்களும் கொடுக்கப்பட்டுள்ளன. ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களை ஆங்கிலத்தில் தருவதுடன் இலக்கிய ஆட்சிக்கும் பேச்சு வழக்குக்கும் எடுத்துக்காட்டுகள் உள.

மலையாளம்:– தென் திராவிட மொழிகளில் தமிழோடு மிக நெருங்கிய தொடர்புற்றிருந்தது மலையாள மொழியாகும். இலக்கிய வளத்தில் ஆயிரம் ஆண்டு கட்கு மேற்பட்ட தொன்மைச் சிறப்பு இம்மொழியின்கண் அமைந்திருந்தாலும் இதனிடத்து கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதி வரை எந்த ஒரு அகராதியும் தோன்றவில்லை. மணிப்பிரவாள காலத்தில் மலையாளம் தனித்து வளர்ச்சியுறத் தொடங்கிய போது இது வடமொழிச் சொற்களோடு கலந்து தமிழினின்றும் பிரிந்து ஒரு தனி மொழியாக உருவாகியது. அச்சூழலில் வட மொழிச் சொற்களுக்கு வேண்டுமானால் அமர கோசம் முதலிய சமஸ்கிருத நிகண்டுகள் பொருள் தருவனவாய் அமைந்தது. ஆனால் அதற்கேயுரிய சொற்களுக்கும் வட மொழி தவிர பிற மொழிகளிலிருந்து வந்து கலந்த சொற்களுக்குமான பொருள் களையறிய எந்தப் பார்வை நூல்களும் இல்லை. அக்காலத்தில் மக்கள் அன்றாடப் பேச்சு வழக்கினாலும் கல்விப் பயிற்சியினாலும் போதுமான சொல்லாட்சியறிவைப் பெற்றிருந்தனர். எனவே நிகண்டுகள் அல்லது அகராதிகளின் தேவையை அவர்கள் உணரவில்லை.

வெளிநாட்டினர், குறிப்பாக கிறித்துவர்கள் இந் நாட்டிற்கு வருகை தந்த பின்னர் அவர்கள் மதப் பிரச்சாரத்திற்காக மொழியைப் பயின்ற பின்னர் பொருள் விளங்காச் சொற்களின் பொருளை அனைவரும் அறியுமாறு அகராதிகளை ஆக்குவதில் ஆர்வம் காட்டினர். இவ்வகையில் கி.பி 1846 இல் பெய்லி என்ற பாதிரியாரால் பதிக்கப் பெற்ற மலையாள ஆங்கில அகராதியே (Dictionary of High and colloquial Malayalam and English) முதன் முதலாக நம் நோக்கத்தைத் திருப்புவதாக அமைகிறது. அப்போதிருந்த திருவிதாங்கூர் ஸ்ரீ சுவாதித்திருநாள் மகாராஜா அவர்கள் பெய்லி பாதிரிக்குத் தேவையான உற்சாகத்தை அளித்தார்கள். பெய்லி, மலையாள மொழியின் மிகுதியான செற்களையும் பெரும்பாலான அமரகோசச் சொற்களையும் தொகுத்து அவ்வகராதியை உண்டாக்கியிருப்பினும் அது அன்றைய பயன்பாட்டிற்குப் போதுமானதாக அமையவில்லை.

மலையாளத்தில் இரண்டாவதாக எழுந்தது ஒரு மொழி அகராதியாகும் Monolingual Dictionaries). கி.பி. 1865 இல் கோலின்ஸ் என்பர் பதிப்பித்த அவ்வகராதி மலையாள மொழிச் சொற்களை மிகுதியாகப் பெற்றிருந்தது. ஆனால் டாக்டர் குண்டர்ட் அவர்கள் கி.பி. 1872 இல் தொகுத்து வெளியிட்ட மலையாள ஆங்கில அகராதியே அறிவியல் அடிப்படையில் திட்டமிடப்பட்டது எனலாம். சுமார் 1,50,000 சொற்கள் உள்ள அம்மொழியில் சுமார் 30,000 சொற்களுக்கு மட்டுமே பொருள் தந்த அவ்வகராதியும் இன்றைய தேவைக்கு நிறைவானதாக அமையவில்லை. அதன் பின்பு ஸ்ரீ கண்டேஸ்வரம் பத்மநாபப் பிள்ளை 1928-இல் தொகுத்து வெளியிட்ட சப்த தாராவலி என்ற ஒரு மொழி அகராதி 80,000 சொற்களுடன் கூடியதாகும். இத்துறையில் பணியாற்றியவர்களில் ஆர். நாராயண பணிக்கர், டி. ராமலிங்கம் பிள்ளை, ஜி. மாதவன்பிள்ளை ஆகியோர் குறிப்பிடத் தக்கவராவர். இவர்கட்குப் பின் இன்றைய இந்திய மொழிகளிலேயே மிகச் சிறந்த அகராதி (Lexicon) யாக மலையாள அகராதியைக் கேரளப் பல்கலைக் கழகம் திட்டமிட்டு உருவாக்கியுள்ளது. மேற்கண்ட செய்திகளை உற்று நோக்குகையில் மலையாள மொழியில் தமிழைப் போல நிகண்டுகள் (Metrical Lexicons) என்பனவாக எவையும் தோன்றவில்லை என்பது எளிதில் புலனாகும். ஆனால் நிகண்டு என்ற சொல்லைப் பெயரளவில் தாங்கி அகராதிகள் சில மலையாளத்தில் தோன்றின. ஆயினும் அவை இக்கால அகராதி முறையில் அமைந்தவையேயாகும். யாப்பு வடிவிலான நிகண்டுகள் எழவில்லை என்பதே உண்மை.

இத்திராவிட மொழிகளின் நிகண்டுகளை நோக்குகையில் சில செய்திகளை எளிதில் நாம் அறிய முடிகிறது. அவை வருமாறு.

1. தமிழ் கன்னடம் ஆகிய இரு மொழிகளிலும் சுமார் கி.பி. 9, 10 ம் நூற்றாண்டுகளிலேயே அகராதிக் கலை தனித்து வளரத் தொடங்கி விட்டது.

2. மலையாளம் தவிர்ந்த ஏனைய மூன்று மொழிகளிலும் சொல்லகராதிகள் நிகண்டுகளாகவே (Metrical Lexicons) தோன்றியுள்ளன.
3. அகர நிரல் முயற்சி மேலை நாட்டவர் வருகைக்கு முன்பே திராவிட மொழிகளில் தோன்றிவிட்டது.
4. திராவிட மொழி நிகண்டுகள் எழுது பொருள் வசதி குன்றியிருந்த அக்காலத்தில் மனப்பாடம் செய்வதற்கு ஏற்றாற்போல் பல்வகை யாப்புக்களில் எழுந்துள்ளன.
5. பெரும்பாலான நிகண்டுகள் ஒரு மொழி அகராதிகளாகவே (Monolingual Dictionaries) தோன்றின. ஆயினும் அவற்றுள் சமஸ்கிருதம் முதலிய பிறமொழிச் சொற்களும் இடம் பெற்றுள்ளன.
6. பிற்காலத்தில் தோன்றிய அகராதிகள் சிலவற்றுக்கும் திராவிட மொழிகளில் நிகண்டு என்ற பெயர் நூற் பெயரில் சேர்க்கப் பெற்றுள்ளதைக் காண்கிறோம்.

இதை தவிர மேலும் நிகண்டுகளில் இடம் பெற்றுள்ள சொல் மற்றும் பொருள் நிலைகளின் பல்வேறு உண்மைகளையும் கண்டறிய ஆழமான மொழியியல் நோக்கோடு தனித்து ஆய்வு மேற் கொள்ளப்பட வேண்டுவது அவசியம்.

துணை நூல்கள்

சண்முகம் பிள்ளை. மு. 1959 **நிகண்டு, கலைக்களஞ்சியம் தொகுதி 6**, சென்னை, தமிழ் வளர்ச்சிக் கழகம்.

Anantha Narayana H.S. 1981, "Dravidian Lexicography," *Souvenir of XI All India Conference of Dravidian Languages*, Usmania University, Hyderabad.

Suranand Kunjan Pillai M.A. 1979, "on the Malayalam Lexicon", *IX All India Conference of Dravidian Language Souvenir*, University of Calicut.

மொழியியல், 9. 1&2 (1985)

எவை பதினெண்கீழ்க்கணக்கு நூற்கள்?*

ஏ. ஆதித்தன்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

சங்க இலக்கியங்களான பதினெண்மேற்கணக்கு என்னும் பதினெட்டு நூற்களைப் போன்றுச் சிற்றடிகளைக் கொண்ட பதினெட்டு நூற்கள் தொகுக்கப்பெற்று, பதினெண்கீழ்க் கணக்கு என்னும் பெயரினைப் பெற்றுள்ளன. இத்தொகுதியில் இப்போது பத்தொன்பது இலக்கியங்கள் காணக்கிடைக் கின்றன. இவற்றுள் எவை பதினெண்கீழ்க்கணக்கினைச் சார்ந் தவை என்பதனைக் கண்டறிதலே இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாகும்.

பதினெண்கீழ்க்கணக்கு நூற்கள் எவை என்பது பற்றிய ஆய்வு 1885 - ஆம் ஆண்டு முதல் நடைபெற்றுவந்துள்ளது. சி.வை. தாமோதரம்பிள்ளை (1887, கலித்தொகை பதிப்புரை

---

* 1981 - ஆம் ஆண்டு மதுரை காமராசர் பல்கலைக்கழக வியாழவட்டக் கருத்தரங்கில் படிக்கப்பெற்ற கட்டுரை.

பக். 17) 'இன்சொல்' என்னும் ஒரு நூலைப் பதினெண்கீழ்க் கணக்கினுள் ஒன்றாகக் கருதித் திருக்குறளை இத்தொகுதியி னின்றும் நீக்கியுள்ளார். இவர் 'முப்பால்' என்பது 'திரிகடுகம்' என்பதனைக் குறிப்பதாகச் சுட்டுவர். எனினும் 'இன்சொல்' என்னும் நூல் இன்றளவும் கிடைக்கப்பெறாமையின் இவர் கருத்து ஏற்புடையதன்று.

கோ. சீனிவாச இராகவாச்சாரியார் (1889, இலக்கண விளக்கப் பதிப்புரை, பக். 6) ஐந்திணையில் நான்கு நூற்கள் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் இன்னமும் ஒரு நூல் காணக் கிடைத்திலது எனவும் குறிப்பிடுகின்றார். பெரும்பான்மையான கருத்து வேறுபாடுகளுக்கு அடிப்படையாக அமைந்து காணப் படுவது கீழ்க்காணும் செய்யுளாகும்.

''நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியுடன் ஏலாதி யென்பனவும்
கைந்நிலையு மாங்கீழ்க் கணக்கு''.

ரா. இராகவையங்கார் (1903), உ.வே. சுவாமிநாத ஐயர் (1903) ஆகியோர் 'கைந்நிலை' என்பதனைப் பதினெண்கீழ்க் கணக்கின் ஒன்றாக நிறுவியுள்ளனர். முத்து வேங்கட சுப்ர பாரதி தாம் இயற்றிய பிரபந்த தீபிகை என்னும் நூலில் 'இன்னிலை' நீங்கலான ஏனைய பதினெட்டு நூற்களையும் பதினெண்கீழ்க்கணக்கு என்று குறித்துள்ளார்.

கைந்நிலை என்னும் நூல் வை. அனந்தராமையர் என்பவ ரால் 1931 - இல் வெளியிடப்பட்டுள்ளது. அதன் பின்னர் 'இன் னிலை சொல் காஞ்சியோடு' என்னும் பாடபேதத்தின் அடிப் படையில் 'இன்னிலை' என்னும் நூலின் தேட்டம் ஆரம்ப மாகியது.

த.மு. சொர்ணம் பிள்ளை இன்னிலையின் ஏட்டுப் பிரதி யினைக் கண்டெடுத்து வ.உ. சிதம்பரம் பிள்ளையிடம் கொடுக்க, அவர் அதற்கு உரை எழுதினார். இன்னிலை என்னும் நூல் 1915 - இல் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

இன்னிலையினைப் பிற பதினெண்கீழ்க்கணக்கு இலக்கியங் களோடு ஒப்பிட்டு இது பதினெண்கீழ்க்கணக்கினைச் சார்ந்தது அன்று என வையாபுரிப்பிள்ளை (1954) நிறுவியுள்ளார். இதன் பின்னர், பதினெண்கீழ்க்கணக்குத் தொகுதியில் இன்னிலையா அன்றிக் கைந்நிலையா என்னும் சிக்கல் தோன்றலாயிற்று. தமிழ் இலக்கிய வரலாறு கண்ட அறிஞர் பெருமக்களிடையேயும் பதினெண்கீழ்க்கணக்கு நூற்களைக் குறிப்பதில் வேறுபாடு காணலாயிற்று.

செல்வக்கேசவ முதலியார் (1915) தமது பழமொழி ஆசாரக் கோவை பதிப்புக்களில் இன்னிலையினைப் பதினெண்கீழ்க் கணக்கில் ஒன்றெனக் குறிப்பிடுகின்றார்.

'கீழ்க்கணக்கு' என்னும் சொற்றொடர் மிகவும் பிற்காலத்த தாகக் கருதப்படுகின்றது. இலக்கண உரையாசிரியர்கள் கீழ்க் கணக்கு நூற்களை 'அம்மை' என்ற வனப்பிற்குச் சான்று காட்டியுள்ளனர்.

> "சின்மென் மொழியாற் றாய பனுவலின்
> அம்மைதானே அடிநிபிர்பின்றே'
>
> (தொல். செய். 235).

பன்னிருபாட்டியல் கீழ்க்கணக்கின் இலக்கணத்தினை,

> "அடிநிபிர்பில்லாச் செய்யுட் தொகுதி
> அறம் பொருள் இன்பமடுக்கி அவ்வத்
> திறம்பட வருவது கீழ்க்கணக்காகும்"
>
> (பன்.பாட். 348)

எனக் குறிப்பிடுகின்றது. ஈண்டுக் கீழ்க்கணக்கின் யாப்பமை தியும், பொருளமைதியும் சுட்டப்பெறுதலை அறியலாம்.

பதினென்கீழ்க்கணக்குத் தொகுதியில் காணப்பெறும் நாலடியார், நான்மணிக் கடிகை, இனியவை நாற்பது, இன்னா நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது, ஐந்திணை ஐம்பது, திணை மொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, ஐந்திணை எழுபது, கைந்நிலை, திருக்குறள், திரிகடுகம்,

ஆசாரக் கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம். இன்னிலை, முதுமொழிக் காஞ்சி, ஏலாதி என்னும் பத்தொன்பது இலக்கியங்களும் யாப்பு நிலையில் வெண்பா வகையினைச் சார்ந்தவை.

பொருள் நிலையிலும் பதினெண்கீழ்க்கணக்கு நூற்களுள் சீர்மை இல்லை. இத்தொகுதியில் நீதி பற்றிப் பதினொன்றும், திணையொழுக்கம் பற்றி ஆறும், காலம் பற்றி ஒன்றும், இடம் பற்றி ஒன்றும் காணப்படுகின்றன.

எனவே, இலக்கண நூல் கூறும் கீழ்க்கணக்கு நூற்களின் பண்புகளாகிய யாப்பு, பொருள் ஆகிய இரண்டு நிலைகளிலும் இப்பத்தொன்பது இலக்கியங்களில் எவை பதினெண்கீழ்க் கணக்கினைச் சார்ந்தவை என்பதனை வரையறை செய்யமுடியாத நிலையினைத் தெரிந்து கொள்ளலாம். ஆதலின் மொழி அடிப்படையில் பதினெண்கீழ்க்கணக்கினைக் கண்டுகொள்ளும் ஆய்வு இவண் மேற்கொள்ளப்படுகின்றது. இப்பத்தொன்பது இலக்கியங்களுள் மொழியமைப்பில் சீர்மையுடைய பதினெட்டனைப் பதினெண்கீழ்க்கணக்கின்பாற்பட்டவைகளாகக் கருதப் படுகின்றது.

இக்கட்டுரையின் முதற் பகுதி திருக்குறளுக்கும் ஏனைய பதினெண்கீழ்க்கணக்கு இலக்கியங்களுக்குமிடையே காணப் பெறும் வேறுபாட்டினையும், இரண்டாவது பகுதி இன்னிலைக்கும், திருக்குறள் நீங்கிய ஏனைய பதினேழு இலக்கியங்களுக்குமிடையே காணப்பெறும் ஒற்றுமையினையும், மூன்றாவது பகுதி திருக்குறளுக்கும் சங்க இலக்கியங்களுக்குமிடையே காணப்பெறும் ஒற்றுமையினையும் விவரிக்கின்றன.

I

*ஒலியன் நிலையில், ஆய்த ஒலி குறளில் பெருகியும் ஏனைய இலக்கியங்களில் அருகியும் காணப்படுகின்றது. வகர ஈற்றுச் சொற்கள் (தவ்:*1114*, தெவ்: *639*) திருக்குறளில் மட்டுமே இடம் பெற, ஏனைய கீழ்க்கணக்கு நூற்களில் காணப்பெறவில்லை.

* விரிவஞ்சி இக்கட்டுரையில் தொடரியல், பொருண்மை இயல் பகுதிகள் சேர்க்கப்பெறவில்லை.

இன்னமும் '-ங்ங்-' மெய்ம்மயக்கம் குறளில் மட்டுமே காணப்படு கின்றது. 'த்ர்', 'த்த்ர்' போன்ற தமிழுக்கு ஏற்புடையனவல் லாத மயக்கங்கள் குறள் நீங்கிய கீழ்க்கணக்கு நூற்களில் மட்டுமே காணப்படுகின்றன.

சொல்லியல் நிலையில், பதிலிப் பெயர்களைப் பொறுத்த மட்டில் 'யா' என்னும் வினாப் பெயர் குறளில் மட்டுமே இடம் பெற்றுள்ளது. 'எவன்' என்னும் வினாப்பெயர் குறளில் விரவுப் பெயராகச் செயல்பட, ஏனைய நூற்களில் இது ஆண்பால் வினாப் பெயராகவும் (எவன், நாலடியார். 324) செயல்படு கின்றது. 'ஆது' என்னும் யகர முதல் இழப்புற்ற வினாப் பெயர் திரிகடுகத்தில் (ஆது, திரிகடுகம். 49) இடம்பெற் றுள்ளது.

'யான்' என்னும் தன்மை ஒருமை இடப்பெயர் குறளில் பயின்றுவர, ஏனைய நூற்களில் ஒரேவிடத்துதான் காணப் பெறுகின்றது. குறளில் முன்னிலை இடப்பெயர்களின் வேற்றுமை ஏற்கும் வடிவங்களாக 'நின்', 'நும்' என்பன செயல்பட, பிற நூற்களில் 'உன்', 'உம்' என்பன செயல்படுகின்றன. 'உவ்' என்னும் பலவின்பால் இடப்பெயர் குறளில் மட்டுமே காணப் பெறுகின்றது. 'தான்', 'தாம்', 'தன்', 'தம்' என்பன தற்சுட்டுப் பெயர்களாகச் செயலாற்றுதல் குறள் தவிர்ந்த பிற நூற்களில் பெரிதும் காணப்படுகின்றது.

தொழிற்பெயர்களில் முதனிலைத் தொழிற்பெயர்களின் ஆட்சி குறளில் பெருகியும், ஏனைய நூற்களில் அருகியும் காணப் படுகின்றது. வினையெச்சம் (மாய்ந்து ஆங்கு, நாலடியார். 51; தீர்ந்தால் போல் ஏலாதி. 258), வினையாலணையும்பெயரின் (செல்வது, நான்மணிக்கடிகை. 1) அமைப்பினைக் கொண்ட தொழிற்பெயர் வடிவங்கள் குறளில் காணப்பெறவில்லை.

மையீற்றுத் தொழிற்பெயர்கள் குறளில் பயின்றுவர, பிற நூல்களில் மூன்று இடங்களில் மட்டுமே காணப்படுகின்றன 'ஒருத்தர்' (சிறுபஞ்சமூலம். 76), 'ஒருத்தன்' (சிறுபஞ்சமூலம். 187) போன்ற ஆக்கப் பெயர்கள் பிற கீழ்க்கணக்கு நூற்களில்

மட்டுமே காணப்படுகின்றன. 'நர்' ஈற்று வினையாலணையும் பெயர்கள் திருக்குறளில் மட்டுமே காணப்படுகின்றது. 'கள்' விகுதி பெற்ற உயர்திணைப் பெயர்கள் குறளில் இரண்டு காணப்பெற, ஏனைய நூற்களில் பெருகிக் காணப்படுகின்றன.

வேற்றுமையினைப் பொறுத்தமட்டில் 'ஆன்' உருபு குறளில் (அறத்தான் வருவதே. 39) கருவிப்பொருள் மட்டுமின்றி உடனிகழ்ச்சிப் பொருண்மையிலும் செயல்படுகின்றது. ஆனால், பிற இலக்கியங்களில் 'ஆன்' உருபு கருவிப்பொருளில் மட்டுமே செயலாற்றுகின்றது. நான்காம் வேற்றுமைச் சொல்லுருபுகளாக 'பொருட்டு', 'மாட்டு', 'வேண்டி' என்பன குறளில் செயல்படுகின்றன. ஆனால் பிற கீழ்க்கணக்கு நூற்களில் இவற்றின் ஆட்சியினைக் காணமுடியவில்லை.

ஐந்தாம் வேற்றுமை குறளில் பெரிதும் ஒப்புப் பொருள் வேற்றுமையாகச் செயல்பட, பிற இலக்கியங்களில் இது நீங்கல் பொருள் வேற்றுமையாக அமைந்துள்ளது.ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபுகளாக 'அவயின்', 'உழி' என்பன குறளில் செயல்படுகின்றன. ஆனால், இவற்றின் ஆட்சியினைப் பிற இலக்கியங்களில் காணமுடியவில்லை.

குறளில் மகர ஈற்றுப் யெர்கள் சில வேற்றுமை உருபேற்குங்கால் அத்துச் சாரியையினை (நலக்கு, 149; வையக்கு, 701.) ஏற்று வரவில்லை. இத்தகு பான்மையினைப் பிற இலக்கியங்களில் காணமுடியவில்லை. தொகைச் சொற்களின் ஆட்சி குறளில் பெருகிக் காணப்பெற, பிற நூற்களில் அருகிக் காணப்படுகின்றது.

வினைச்சொற்களைப் பொறுத்தமட்டில் தன்மை ஒருமை விகுதியாகிய 'அல்' குறளில் பெருகியும் பிற இலக்கியங்களில் அருகியும், 'அன்' விகுதி குறளில் அருகியும் பிற இலக்கியங்களில் பெருகியும் காணப்படுகின்றன.

தன்மை விகுதிகளான 'கு', 'அம்' ஆகியன குறளில் மட்டுமே காணப்படுகின்றன. தன்மைப் பன்மை விகுதி 'ஓம்'

பிற கீழ்க்கணக்கு இலக்கியங்களில் மட்டுமே காணப்படுகின்றது. முன்னிலைப் பன்மை விகுதியாகிய 'இர்' குறளில்தான் இடம் பெற்றுள்ளது.

முன்னிலை வினாக்கள் குறளில் விரவுவினைகளாகச் செயல்பட, பிற இலக்கியங்களில் உயர்திணை வினைகளாக மட்டும் செயல்படுகின்றன. படர்க்கை ஆண்பால் விகுதி 'அன்' குறளில் பெருகியும் பிற கீழ்க்கணக்கு நூற்களில் அருகியும் காணப்படுகின்றன.

வியங்கோள் வினைகள் குறளில் மூவிடத்திலும் அமைய, பிற இலக்கியங்களில் படர்க்கையில் மட்டுமே அமைந்துள்ளன. பெயர், பெயரடிகளிலிருந்து வினைச்சொற்கள் அமையும் பான்மை (சேந்தன, ஐந்திணை ஐம்பது. 47) குறள் தவிர்ந்த இலக்கியங்களில்தான் காணப்படுகின்றன.

தன்மைப்பன்மை வினைகளில் உளப்படுத்தும் நிலை, உளப்படுத்தா நிலை குறளில் முறையாக அமையாதிருக்க, ஏனைய நூற்களில் இவ்வேறுபாடு தெளிவாக அமைந்துள்ளது.

செய்பு, செய்யா, செயற்கு, செயின் வாய்பாட்டு வினை எச்சங்கள் குறளில் பெருகியும் ஏனைய இலக்கியங்களில் அருகியும் காணப்படுகின்றன. செயில், செய்தால் அமைப்பு வினையெச்சங்கள், ஆனும், ஏனும் ஈற்று வினையெச்சங்கள் ஆகியன குறளில் அருகியும் பிற இலக்கியங்களில் பெருகியும் காணப்படுகின்றன.

'செய்யா' வாய்பாட்டு வினையெச்சம் குறளில் உடன்பாடு, எதிர்மறை ஆகிய இருவகைப்பொருண்மையில் செயலாற்ற, பிற இலக்கியங்களில் எதிர்மறைப் பொருண்மையில் மட்டுமே செயல்படுகின்றது.

குறளில் 'செய்த', 'செய்யும்' என்னும் இருவகையான பெயரெச்ச வாய்பாடுகள் காணப்பெற, ஏனைய இலக்கியங்களில் 'செய்யும்', 'செய்த', 'செய்கின்ற' என்னும் மூவகை அமைப்புக்கள் காணக்கிடைக்கின்றன. எதிர்மறையில் 'செய்யாத' வாய்

பாட்டுப் பெயரெச்சங்கள் குறளில் அருகியும் பிற கீழ்க்கணக்கு நூற்களில் பெருகியும் காணப்படுகின்றன. இதேபோன்று 'செய்யா' வடிவம் குறளில் பெருகியும் பிறவற்றில் அருகியும் காணப்பெறுகின்றது.

இறப்பு, இறப்பல் காலம் என்ற இருவகை நிலை குறளில் காணப்பெற, பிற இலக்கியங்களில் இறப்பு, எதிர்வு, நிகழ்வு என்ற மூவகை நிலை காணப்பெறுகின்றது.

துணைவினைகளில் 'விடு' என்பதன் ஆட்சி குறளில் பெருகியும், பிறவற்றில் அருகியும், 'படு' என்பதன் ஆட்சி குறளில் அருகியும், பிற இலக்கியங்களில் பெருகியும் காணப் படுகின்றன.

பெயரடை அடிகளே பெயரடைகளாகச் செயல்படும் பான்மை குறளிலும், இவற்றோடு பெயரடை அடிகளுடன் ஆக்க உருபுகள் இணைந்த வடிவங்கள் பெயரடைகளாகச் செயல் படும் பான்மை பிற கீழ்க்கணக்கு நூற்களிலும் காணப் படுகின்றது.

முறைமை வினையடைகளில் 'சால', 'தவ' 'நனி' போன்ற வடிவங்கள் சில குறளில் மட்டுமே காணப்படுகின்றன. பிற இலக்கியங்களில் குறளில் காணப்பெறாத ஆக்க வினையடைகள் (நன்றாக) காணக் கிடைக்கின்றன.

செயப்பாட்டு வினைவடிவங்கள் குறளில் 'படு' என்னும் துணைவினையினை முதல் வினையோடு இணைப்பதன் வாயி லாகப் பெறப்படுகின்றன. ஆனால் பிற இலக்கியங்களில் இத் தகு பான்மை காணப்பெறவில்லை,

வடமொழிச் சொற்கள் குறளில் அருகிக் காணப்பெற, பிற நூற்களில் பெருகிக் காணப்பெறுகின்றன.

திருக்குறளில் காணப்பெறா மொழிக் கூறுகள் ஏனைய நூற்கள் அனைத்திலும் இடம்பெறாவிட்டாலும் (சிலவற்றில் மட்டும் இடம்பெற்றிருப்பவை) திருக்குறளில் காணப்பெறும்

மொழிக்கூறுகள் பல ஏனைய பதினேழு நூற்களிலும் காணப் பெறவில்லை. இந்த நிலையில் திருக்குறள் பிற பதினெண் கீழ்க்கணக்கு நூற்களினின்றும் மொழியமைப்பில் வேறுபட்டு நிற்றலைத் தெரிந்து கொள்ளலாம்.

II

இப்பகுதி திருக்குறள் தவிர்ந்த பதினெண்கீழ்க்கணக்கு நூற்களுக்கும் இன்னிலைக்குமிடையே மொழியமைப்பில் காணப் பெறும் சீர்மையினை விவரிக்கின்றது.

ஒலியன் நிலையில் இன்னிலையில் பதினெண்கீழ்க்கணக்கினைப் போன்று சகர ஒலியன் ஐ, ஔ என்னும் உயிர்களோடு இணைந்து மொழிமுதலில் வரப்பெறவில்லை. ஓரிரு வேறுபாடுகளைத் தவிர, இன்னிலை ஒலியன்நிலையில் பதினென் கீழ்க்கணக்கு நூற்களோடு முழுமையாக ஒத்துக் காணப்படுகின்றது.

இன்னிலையில் 'யார்', 'எவன்', 'என்' என்னும் வடிவங்கள் வினாப்பெயர்களாகவும் 'நாம்' என்பது தன்மைப் பெயராகவும் செயல்படுகின்றன. 'எல்லாம்' என்னும் வடிவம் இன்னிலையில் பிற இலக்கியங்களைப் போன்று படர்க்கையில் மட்டுமே செயல்படுகின்றது. 'தான்', 'தன்', 'தாம்', 'தம்' என்னும் வடிவங்கள் கீழ்க்கணக்கு நூற்களைப் போன்று இன்னிலையில் தற்சுட்டுப் பெயர்களாகச்செயல்படுகின்றன. இன்னிலையில் 'அன்', 'ஆன்', 'ஓன்', 'அள்', 'இ', 'அர்' 'ஆர்', 'ஓர்', 'து', 'அ', 'ஐ' என்பன பெயர்விகுதி களாகச் செயல்படுகின்றன.

தொழிற்பெயர்களைப் பொறுத்தமட்டில் முதனிலைத் தொழிற்பெயர் அருகியும் விகுதி பெற்ற தொழிற்பெயர்கள் பெருகியும் காணப்படுகின்றன. பிற கீழ்க்கணக்கு நூற்களைப் போன்று வினையெச்சம் (**தோன்று அன்ன**, *11:5*), வினையாலணையும் பெயர் (**நோவது**, *13:4*) அமைப்பினைக் கொண்ட தொழிற்பெயர்கள் இன்னிலையில் காணப்பெறுகின்றன.

'நர்' விகுதி வினையாலணையும் பெயர்களின் ஆட்சி இன்னிலையில் சிறிதும் இல்லை. பிற இலக்கியங்களில் காணப் பெறுவது போன்று உயர்திணைப் பெயர்கள் இன்னிலையில் 'கள்' விகுதியினை ஏற்றுவருகின்றன.

இன்னிலையில் 'ஆல்', 'ஆன்' இரண்டும் கருவிப் பொருளிலும் 'ஒடு' 'ஓடு' என்பன உடனிகழ்ச்சிப் பொருளிலும் உருபுகளாகச் செயல்படுகின்றன. ஐந்தாம் வேற்றுமை இன்னிலையில் ஒப்புப்பொருண்மையிலும் (பொன்னின் அணிமலர், 25.2) நீங்கல் பொருண்மையிலும் செயல்படுகின்றது. தொகைச் சொற்களின் வருகை இன்னிலையில் மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது.

'ஓம்' என்பது தன்மைப் பன்மை விகுதியாகவும் (ஏம்போம், 18:1), 'ஆய்' முன்னிலை ஒருமை விகுதியாகவும், 'அர்', 'ஆர்' 'ப' (என்ப, 11:1) என்பன படர்க்கைப் பலர்பால் விகுதியாகவும் இன்னிலையில் செயலாற்றுகின்றன. 'மின்' ஈற்று வினைகள் (தேர்மின், 1:2) ஈண்டு ஏவல்வினைகளாகச் செயல்படுகின்றன.

வியங்கோள் வினைகள் இன்னிலையில் முன்னிலை, படர்க்கை ஆகிய ஈரிடத்தும் அமைந்துள்ளன. 'செய்யும்' வாய்பாட்டு வினைகள் அஃறிணை ஒருமை, பன்மை எழுவாய்களுக்குப் பயனிலைகளாக அமைந்துள்ளன.

இன்னிலையில் 'செய்து', 'செயின்', 'செயற்கு', 'செய்', 'செய்யாது', 'செயில்' வாய்பாட்டு வினையெச்சங்கள் காணப்படுகின்றன. 'செய்யா' வாய்பாட்டு வினையெச்சங்கள் காணப் பெறவில்லை. 'செயின்' வாய்பாட்டு வினையெச்சங்களை விட 'செயில்' வாய்பாட்டு வினையெச்சங்களே இன்னிலையில் பெரிதும் காணப்படுகின்றன.

'சென்றக்கால்' (12:2) என்னும் கூட்டு வினையெச்ச அமைப்பு நிபந்தனைப் பொருண்மையில் இன்னிலையில் செயல்படுகின்றது.

பெயரெச்சங்களைப் பொருத்தமட்டில் 'செய்யும்', 'செய்த' என்னும் இருவகை அமைப்புக்களே இன்னிலையில் காணப்படு கின்றன. ஈண்டு ஆக்கப்பெயரடைகளின் வருகை அருகியும், அடிச்சொற்களமைப்பிலுள்ள பெயரடைகள் பெருகியும் காணப் படுகின்றன.

ஈண்டுக் குறிப்பிடப்பெற்ற மொழிக்கூறுகளில் இன்னிலை திருக்குறள் தவிர்ந்த பதினெண்கீழ்க்கணக்கு நூற்களோடு முழு மையாக ஒத்துக் காணப்படுகின்றது.

III

இப்பகுதி சங்க இலக்கியங்களுக்கும் (குறிப்பாகப் பரிபாடல், கலித்தொகை) திருக்குறளுக்குமிடையே காணப்பெறும் ஒற்று மைப் பண்பினை விவரிக்கின்றது. திருக்குறள், சங்க இலக்கியங் களுக்கிடையே காணப்பெறும் ஒப்புமைக்கூறுகள் இவண் தொகுத்துரைக்கப்படுகின்றன.

1. ஆய்த ஒலியின் வருகை.
2. 'ஆன்' உருபு கருவிப்பொருளிலும், உடனிகழ்ச்சிப் பொருளிலும் செயல்படுதல்.
3. உகர அடியாகப் பிறந்த பதிலிப்பெயர்களின் ஆட்சி.
4. 'யா' என்னும் வினாப்பெயர், 'யான்' என்னும் தன்மை ஒருமைப் பெயர் ஆகியவற்றின் வருகை.
5. 'நின்', 'நும்' என்பன முன்னிலை இடப்பெயர்களின் வேற்றுமை ஏற்கும் வடிவங்களாகச் செயல்படுதல்.
6. 'தான்', 'தாம்' என்பன படர்க்கை இடப்பெயர்க ளாகச் செயல்படுதல்.
7. முதனிலைத் தொழிற்பெயர்கள் பயின்றுவரும் பான்மை.
8. 'மை' ஈற்றுத் தொழிற்பெயர்களின் பெருகிய ஆட்சி.
9. 'நர்' ஈற்று வினையாலணையும் பெயர்களின் வருகை.

10. 'ஆன்' உருபு கருவிப்பொருளிலும் உடனிகழ்ச்சிப் பொருளிலும் செயல்படுதல்.

11. 'மாட்டு', 'வேண்டி', 'பொருட்டு' என்பன நான்காம் வேற்றுமைச் சொல்லுருபுகளாகச் செயல்படுதல்.

12. ஐந்தாம் வேற்றுமை ஒப்புப்பொருள் வேற்றுமையாகவும் செயல்படுதல்.

13. 'உழி', 'வயின்' போன்ற வடிவங்கள் ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபுகளாகச் செயல்படுதல்.

14. மகர ஈற்றுப் பெயர்கள் சில வேற்றுமை உருபேற்குங்கால் அத்துச் சாரியையினை ஏற்காமை.

15. தொகைச் சொற்களின் பெருகிய ஆட்சி.

16. தன்மை ஒருமை விகுதிகளாகிய 'அல்', 'கு', பன்மை விகுதியாகிய 'அம்' ஆகியவற்றின் வருகை.

17. முன்னிலை ஒருமை விகுதி 'இர்', படர்க்கை விகுதிகள் 'அன்', 'ப' போன்றவற்றின் வருகை.

18. முன்னிலை வினைகள் விரவுவினைகளாகச் செயல்படும் பான்மை.

19. உளப்படுத்தும், உளப்படுத்தா நிலையில் தெளிவின்மை.

20. 'செய்யிய' வாய்பாட்டு வினையெச்சங்களின் வருகை.

21. 'செய்யா' வாய்பாட்டு வினையெச்சங்கள் உடன்பாடு, எதிர்மறை ஆகிய பொருண்மைகளில் செயல்படுதல்.

22. 'செய்த', 'செய்யும்' என்னும் இருவகைப் பெயரெச்ச அமைப்புக்களின் வருகை.

23. 'செய்யா' வாய்பாட்டுப் பெயரெச்சங்களின் பயின்று வரும் பான்மை.

24. இறப்பு, இறப்பல் காலம் என்ற இருவகைப் பாகுபாடு.

25. பெயரடை அடிகளே பெரிதும் பெயரடைகளாகச் செயல்படும் பான்மை.

மேற்கூறப்பெற்ற செய்திகளினின்றும் சில முடிபுகளுக்கு வருதல் இயலும். திருக்குறள் ஏனைய பதினெண்கீழ்க்கணக்கு இலக்கியங்களிலிருந்து மொழியமைப்பில் முற்றிலும் மாறுபட்டிருக்கின்றது. இதன் மொழியமைப்பு சங்க இலக்கியங்களில் காலத்தால் பிந்தியனவாகக் கருதப்பெறும் பரிபாடல், கலித்தொகை ஆகியவற்றின் மொழியமைப்போடு ஒத்திருக்கின்றது.

இன்னிலையின் மொழியமைப்பு திருக்குறள் தவிர்ந்த பிற பதினெண்கீழ்க்கணக்கு நூற்களின் மொழியமைப்போடு பெரிதும் ஒத்துக் காணப்படுகின்றது.

ஆதலின் பதினெண்கீழ்க்கணக்கு என்னும் தொகுப்பிலிருந்து திருக்குறளை நீக்கிவிட்டு இன்னிலையினைச் சேர்த்துக் கொள்வதே ஏற்புடையதாக அமைகின்றது. யாப்பு, பொருள் ஆகிய இரண்டு நிலைகளில் பத்தொன்பது இலக்கியங்களும் ஒத்துக் காணப்படினும் மொழியமைப்பில் திருக்குறள் நீங்கலாக உள்ள பதினெட்டிற்கிடையேதான் ஒப்புமை காணப்படுகின்றது. இன்னமும் திருக்குறளின் மொழியமைப்பு சங்க இலக்கியங்களோடு ஒத்துக் காணப்படுவதால் குறளைச் சங்க காலத்தினைச் சார்ந்ததாகக் கருதலாம். கால அடிப்படையிலும் குறள் பிற பதினெண்கீழ்க்கணக்கு இலக்கியங்களினின்றும் வேறுபட்டமைந்துள்ளது.

துணைநூல்கள்

ஆதித்தன், ஏ., 1983 "கைந்நிலையா? இன்னிலையா?". **பல்லவ நாதம்**, துணர் 4:5.

வையாபுரிப்பிள்ளை எஸ்., 1954 **இலக்கிய மணிமாலை**, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.

Athithan, A., 1979, *The Grammar of Tholkappiyam and the Language of Patinenkilkkanakku*, Unpublished Dissert ation, Madurai Kamaraj University, Madurai.

Meenakshisundaran, T.P. 1957, *A. History of Tamil Lieterature*, Annamalai University, Annamalainagar.

Ramachandra Dikshitar, V.R., 1930, *Studies in Tamil Liter-ature aud History*, University of Madras.

Sivaraja Pillai, K.N. 1932, *The Chronology of Early Tamils*, University of Madras, Madras.

Vaiyapuri Pillai, S., 1946, *History of Tamil Language and Literature*, New Century Book House, Madras.

Zvelebil, K., 1963, *Lectures on Historical Grammar of Tamil*, University of Madras, Madras.

உயர்நிலைப்பள்ளி / கல்லூரியில் இலக்கணம் கற்பித்தல்

கோ. சுப்பையா
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

மொழிக்கு அணி செய்யும் இலக்கணம் பொருள் வளத்தையும் அளிக்கிறது. இலக்கணமின்றி, ஒரு மொழியைக் கற்றுக் கொள்வதோ அல்லது கற்பிப்பதோ மொழிக்கல்வியில் இயலாத ஒன்றாகும். ஒரு மொழியின் இலக்கண அமைப்பு விதிகளைக் கற்றுக் கொள்வதோடு, அவற்றை நடைமுறையில் கையாள்வதற்குரிய விதிமுறைகளையும் கற்றலொழிய/கற்பித்தலொழிய மொழிக்கல்வி முழுமை பெறாது.

இக்கட்டுரை பள்ளி/கல்லூரிக் கல்வியில், மொழிக்கல்வியில் இலக்கணம் வகிக்கும் இன்றியமையாத பங்கினையும், இலக்கணம் கற்பித்தல் பற்றிய வழிமுறையினையும் ஆராய முற்படுகின்றது.

இலக்கணம் கற்பிப்பதற்கு முன் இலக்கணத்தைப் பற்றிய பொது அறிவு – பொது அறிவு என்பது இலக்கணப்பொது

நோக்கங்கள், இலக்கண பல்வேறு வகைகள், இலக்கண கோட்பாடுகள் ஆகியவற்றைப் பற்றி கொண்டுள்ள தெளிவான அறிவாகும்-கற்பிக்கும் மொழியினது இலக்கண அமைப்பு, அதன் பயன்பாடு ஆகியவற்றைப் பற்றித் தெளிவாக அறிந்து கொள்ளல் மிக இன்றியமையாததாகும.

இலக்கணம் என்று கூறுவதற்கு "மொழியைத் தெளிவாகவும், திறனாகவும்-திறன் என்பது ஒலிப்பில் உரிய முறைகளோடு-கற்றுக் கொள்வது/கற்பிப்பது மட்டுமல்ல; மொழியில் காணும் சொற்களின் அமைப்பு, பொருண்மைப் பண்பு; தொடரன்களின் அமைப்பு, மற்றும் இவற்றினிடையே காணும் தொடர்பினையும் தெளிவாகப் பயனாக்கத்தோடு கற்பிப்பது" என்பதாகும். இதைக் கருத்தில் கொண்டு, பள்ளி/கல்லூரிகளிலும் இலக்கணம் கற்பிக்க இயலும் முறையினைக் காணலாம்.

இலக்கணம் கற்பிப்பதை இரு வகைகளாகப் பகுத்துணரலாம். இலக்கணம் கற்பித்தலின் இரு வகைகளாவன: பொது இலக்கணம் கற்பித்தல் ஒரு வகையாகும்; மற்றொன்று பாட இலக்கணம் கற்பித்தல். இதில் இரண்டாவது வகை பாடநூலிலுள்ள பாடங்களின் அமைப்புத் தன்மையைக் கொண்டு மேலும் இரு பிரிவுகளாகப் பகுத்துணரலாம். ஒரு பிரிவு பாடநூலிலுள்ள செய்யுட்களின் இலக்கணம் கற்பித்தலாகும். இன்னொன்று உரைநடைப்பாடங்களிலுள்ள மொழி அமைப்பு இலக்கணம் கற்பித்தலாகும். இதனைக் கீழ்க்காணும் வரைபடத்தின் மூலம் காட்டலாம்.

இலக்கணம் கற்பித்தல்

- பொது இலக்கணம் கற்பித்தல் (பாடநூலின் தொடர்பில்லாதது)
- பாட இலக்கணம் கற்பித்தல் (பாடநூல் தொடர்புடையது)
  - செய்யுள் பகுதி இலக்கணம் கற்பித்தல்
  - உரைநடைப் பகுதி கற்பித்தல்

பொது இலக்கணம் கற்பித்தல்:—

எந்நூலினை - பாடநூல் - அடிப்படையாகக் கொள்ளாமல் மொழியினை இலக்கணம் கற்பித்தல் என்பது பொது இலக்கணம் கற்பித்தல் என்று கூறலாம். இங்கு மொழியில் பொதுவாகக் காணப்படும் இலக்கணக் கூறுகளைப் பற்றி ஆய்வு நோக்கத்திற்கோ அல்லது வேறெந்த நோக்கத்திற்கோ கற்பிப்பதுதான். மொழியின் பொதுவான அமைப்புத் தன்மைகளைக் கற்றுக் கொள்ள/கற்பிக்க இயலும். பொது இலக்கணம் கற்பித்தலின் பொதுவான நோக்கங்களைப் பின்வருமாறு பகுத்துணரலாம்.

அ) ஒலியியலில்:

1. ஒலிகளின் ஒலிப்புத்தன்மைகளை அறிதல்.
2. எழுத்துகளை அறிதல்
3. ஒலிகளுக்கும் எழுத்துகளுக்கும் இடையே காணும் தொடர்பை அறிதல்.
4. ஒலிகள் மற்றும் எழுத்துகளின் தொகைகளை அறிதல்
5. உயிரெழுத்துக்கள் அறிதல்
6. உயிரெழுத்து வகைகளை அறிதல்
7. மெய்யெழுத்துக்கள் அறிதல்
8. மெய்யெழுத்து வகைகளை அறிதல்
9. சொல்லில் எழுத்துகளின் ஒலிப்புமுறை அறிதல்
10. சொல்லில் எழுத்துக்கும் ஒலிக்கும் உள்ள தொடர்பு கண்டுணரல்.

ஆ) புணரியலில்:

1. ஒலிகள் ஒன்றொன்று இணையும்போது ஏற்படும் ஒலி மாற்றங்களை அறிதல்

2. எழுத்துகள் ஒன்றொன்று இணையும்போது ஏற்கும் எழுத்து மாற்றங்களை அறிதல்

3. இனவொலிகளைக் 'கண்டறிதல்

4. இனவெழுத்துகளைக் கண்டறிதல்

இ) சொல்லியலில்:

1. சொல்லின் இலக்கண வகைகளைக் கண்டறிதல்

2. சொல்லில் எழுத்துகளின் வரிவடிவத்தில் ஏற்படும் மாற்றத்தையும், ஒலிப்பு முறையையும் அறிதல்

3, சொல்லின் (பொதுவான) பொருண்மையை அறிதல்

ஈ) தொடரனியலில்:

1. தொடரனின் அமைப்பை அறிதல்

2. தொடரனின் இலக்கண வகைகளைக் கண்டறிதல்

3. தொடரனின் பொருண்மையைக் கண்டறிதல்

மேலே கூறிய நோக்கங்கள் பெரும்பாலும் மொழியை ஆய்வு செய்பவருக்கும் அல்லது மொழியை முதன்மொழியாக (தாய்மொழியாக) தொடக்கநிலைப்பள்ளியில் கற்பவருக்கும் ஏற்றதாக அமைகிறது என்பதில் எவ்விதமான ஐயப்பாடும் இல்லை. ஆனால் தொடக்கநிலைப்பள்ளிக் கல்வியிலிருந்து தொடர்கின்ற உயர்நிலைப்பள்ளிக்கல்வி/ கல்லூரிக்கல்வியில் கற்பவருக்குச் சிறப்புடையதாக அமையாது. எனவே உயர்நிலைப் பள்ளிக் கல்வியில் / கல்லூரிக்கல்வியில் இலக்கணம் கற்பித்தலை வேறு முறையில் அணுக வேண்டிய சூழல் உள்ளது. இதையே முன் பகுதியில் பாட இலக்கணம் கற்பித்தல் என்று வகைப் படுத்திக் கூறியுள்ளோம்.

பாட இலக்கணம் கற்பித்தல்:—

பாட இலக்கணம் என்பது பாட நூலில் காணும் இலக்கண வகைகளையும் / இலக்கணக் கூறுகளையும் குறிப்பதாகும், இவ்

விலக்கணத்தைக் கற்பிக்க முற்படும் முன், பாடநூலினை-பாட நூலின் அமைப்பைப்பற்றி அறிந்து கொள்ளல் இன்றியமை யாததாகும்.

பாடநூல் பொதுவாக செய்யுள்களையும் உரைநடைகளை யும் கொண்டிருக்கின்றது. செய்யுளின் அமைப்பிற்கும் உரைநடை அமைப்பிற்கும் வேறுபாடு உள்ளது. செய்யுளில் காணும் இலக்கண வகைகளும், இலக்கணக் கூறுகளும் உரைநடையில் இருக்கும் என்று கூற இயலாது. இவ்விரு பாட அமைப்பிற்கும் வேறு வேறு விதமான இலக்கண விளக்கங்கள் பெறப்படு வதைக் கண்டுணரலாம். மேலும் ஒரு செய்யுளிற்கும் இன்னொரு செய்யுளிற்கும் இடையே பொதுவான தன்மை காணப்படுவ தில்லை. இதைப்போல் இலக்கண விளக்கங்களும் வேறுபடு கின்றன.

செய்யுளில் காணும் தொடரமைப்பிற்கும் சொற்களுக்கும் இலக்கண விளக்கங்களைக் கற்பிப்பதற்கான நோக்கங்களைக் கீழ்க்காணுமாறு பகுத்துணரலாம்.

செய்யுளின் தொடரனில்:

அ) தொடரன் அமைப்புத்தன்மை அறிதல்

ஆ) மாறுபட்ட தொடரன் அமைப்பிற்கும் இயல்பான தொடரன் அமைப்பிற்கும் தொடர்பு கண்டறிதல்

இ) தொடரனில் பொருண்மை ஆழத்தையும் பொருண்மை யாக்கத்தையும் கண்டறிதல்

ஈ) தொடரனில் சொற்களின் தொடர்பைக் காணல்

உ) சொற்களின் இலக்கணப் பொருண்மை அறிதல்

ஊ) சொற்களின் இலக்கண அமைப்பையும் தொடரனில் காணும் இலக்கண அமைப்பையும் அறிதல்

உரைநடையில் காணும் சொற்கள் / தொடரன்கள் அமைப்பிற்கு இலக்கண விளக்கங்களைக் கீழ்வரும் நோக்கங்களின் உதவியால் கற்பிக்க இயலலாம்.

உரைநடையில்:

அ) சொற்களின் அமைப்பையும், அவற்றின் பொருண்மையையும் கண்டறிதல்.

ஆ) சொற்களின் இலக்கணப்பொருள் (functional usage) காணல்.

இ) சொற்கள் தொடரனில் ஏற்கும் / கொள்ளும் தொடர்பினைக் கண்டறிதல்

ஈ) தொடரன்களுக்கிடையேயுள்ள தொடர்பைக்கண்டறிதல்

உ) ஒரே பொருள் கொண்ட இருவேறு அமைப்புள்ள தொடரன்களைத் தொகுத்து அறிதல்

ஊ) ஒரே பொருள் கொண்ட இருவேறு அமைப்புடைய தொடரன்களினிடையே காணும் இலக்கண வகைகளின் பண்பினை அறிந்துகொள்ளல்

எ) இத்தகைய தொடரன்களிடையே காணும் இலக்கண அமைப்பைக் காணல்

ஏ) உரைநடையில் தொடரனின் பயனாக்கத் தன்மையை அறிதல்

ஐ) நடையியல் (stylistics) இலக்கணத்தில் கொள்ளும் பங்கைஅறிதல்

ஒ) மொழியில் இலக்கணத்தின் பயனை அறிந்துகொள்ளல்

ஓ) செய்யுளில் காணும் இலக்கண அமைப்பிற்கும் உரை நடையில் காணும் இலக்கண அமைப்பிற்கும் இடையே யுள்ள தொடர்பை அறிதல்

ஔ) மொழியின் பல்வேறுபட்ட பயன்களையும் அவற்றின் இலக்கண அமைப்பையும் கண்டறிதல்

மேலே சொல்லப்பட்ட நோக்கங்களை மனதில் கொண்டு, இலக்கணம் கற்பித்தலை மூன்று நிலைகளில் கொண்டுணரலாம். இதைக் கீழ்வருமாறு கூறலாம்.

முதல்நிலை: – மொழியின் பொது இலக்கண அமைப்பைப் பற்றிகூறல்

இரண்டாம் நிலை: – பாட இலக்கண அமைப்பைப் பற்றி கூறல்

மூன்றாம் நிலை: – மொழியின் பயனாக்கத்தையும், நடையியலையும் பற்றி கூறல்

இம்மூன்று நிலைகளையும் பள்ளிக் கல்வியில் - குறிப்பாக தொடக்கப்பள்ளியிலும் உயர்நிலைப் பள்ளியிலும் பொது இலக்கணம் கூறல் மற்றும் பாட இலக்கணம் கூறல் ஆகிய இரண்டு நிலைகளையும் ஏற்றுக் கொள்ளலாம்.

உயர்நிலைப் பள்ளியின் இறுதியாண்டு கல்வியும் கல்லூரிக் கல்வியும் மூன்றாம் நிலையை ஏற்றுக் கொள்ளலாம். இவ்விரு கல்வியிலும் பாட இலக்கண அமைப்பு கூறல் இடம்பெறும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

தெளிவாகவும் முறையாகவும் இலக்கணம் கற்பித்தல், இலக்கணம் என்பது மொழியையும் இலக்கியத்தையும் இணைக்கும் சங்கிலித்தொடர் என்பதை உணரலாம்.

இலக்கணம்

⇅ ⇅

மொழி ⇄ இலக்கியம்

மொழி என்பது இலக்கியம் இலக்கணம் இரண்டினை விட்டு தனித்து இயங்க வல்லது அல்ல. இதேபோல் இலக்கணம் என்பதை மொழி, இலக்கியம் என்ற இரண்டிலிருந்து பிரித்து கூற இயலாது என்ற உண்மை தெளிவாக விளங்கப்பெறும். இவ்வுண்மையை எடுத்தியம்புவதுதான் பாடநூல் என்பதை உணரலாம்.

மொழியியல், 9. 1&2 (1985)

நெசவுத் தொழிற் சொற்கள்: மொழியியல் ஆய்வு

ஆ. கார்த்திகேயன்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்.

0. முன்னுரை

நெசவுத் தொழிலில் பயன்படுத்தப்படுகின்ற தொழிற் சொற்களை (occupational Vocabularies) ஆய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும். இக்கட்டுரை ஐந்துப் பகுதி களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. முதல்ப் பிரிவு பேச்சு வழக்கில் பெரிதும் பயின்று வருகின்ற இத்தொழிற் சொற்கள் இவற்றின் இலக்கிய வழக்குச் சொற்களிலிருந்து என்னென்ன ஒலிமாற்றங்கள் அடைந்திருக்கின்றன என்பதை விவரிக்கின்றது. அடுத்தபடியாக தொழிற் சொற்களின் அமைப்புப் பாகுபாடு செய்யப் பட்டிருக்கின்றது. இதில் மேலும் இச்சொற்களின் ஆக்கம் குறித்தும் சில கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. மூன்றா வதாக கலைச் சொற்களுக்கிடையில் காணப்படும் பொருண்மை யுறவுகள் சில விளக்கப்பட்டுள்ளன. நான்காவதாக நெசவாளர்

கள் தங்கள் தொழிலின் மேல்கொண்டுள்ள நம்பிக்கைகளும் அவர்கள் பயன்படுத்தும் பழமொழிகளும் தரப்பட்டுள்ளன. இறுதியாகச் சொல்லட்டவணைத் தரப்பட்டுள்ளன. சொற்களை அகரவரிசையில் நிலைப்படுத்தி முடிந்தவரையில் விளக்க முறையில் பொருள் தரப்பட்டுள்ளது.

இக்கட்டுரையில் பயன்படுத்தப் பட்டிருக்கின்ற கலைச் சொற்கள் தென்னாற்காடு மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம, கண்டாச்சிபுரம் என்ற ஊரில் சேகரிக்கப்பட்டன. இவ்வூரில் ஏறக்குறைய 1500 குடும்பங்கள் நெசவுத் தொழிலில் ஈடு பட்டுள்ளன இவற்றில் பெரும்பாலானோர் நெசவுத் தொழில் ஒன்றையே முழுக்க முழுக்க நம்பியிருக்கின்றனர். சிலர் நெசவுத் தொழிலுடன் உழவுத் தொழிலும் செய்கின்றனர். சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் முதலியார் வகுப்பைச் சார்ந்தவர்கள் மட்டுமே இத் தொழிலைச் செய்து வந்தனர். ஆனால் பருவ மழை தவறுவதால், வேலைவாய்ப்பு இன்மையால் கவுண்டர் அரிசன வகுப்பைச் சார்ந்தவர்களும் இத் தொழிலைக் கற்று இதில் ஈடுபட்டு வருகின்றனர்.

1. ஒலி மாற்றங்கள்

தமிழ் மொழியில் இருவேறு வழக்கு நிலை (Diglossia) இருக்கக் காண்கிறோம். பேச்சு வழக்கு, இலக்கிய வழக்கு ஆகிய இவ்விரண்டு நிலைகளுக்கும் உள்ள வேறுபாடுகளை முன்னரே அறிஞர் பலர் ஆய்ந்திருக்கின்றனர் முன்னுரையில் குறிப்பிட்டது போல நெசவுத் தொழிற் சொற்கள் மக்கள் அன்றாட வாழ்க்கையில் பெரிதும் பயின்று வருகின்ற சொற்களாகும். எனவே இத்தகைய சொற்களும் ஒலிமாற்றங்களுக்கு உள்ளாகி இருக்கின்றன. அவற்றில் சில ஒலிமாற்றங்களை இனிகாண்போம்.

இலக்கிய வழக்கில் மொழிமுதல் லகரம் வருவதில்லை. ஆனால் கலைச் சொற்களில் லகரத்தை மொழிமுதலாகக் கொண்டு 'லடி' என்ற சொல் இருக்கின்றது. அடுத்தபடியாக

$$\begin{bmatrix} i \\ u \end{bmatrix} \rightarrow \begin{bmatrix} e \\ o \end{bmatrix} / \text{- (c) a/ai}$$

என்பது இலக்கிய வழக்கிலிருந்து பேச்சு வழக்கில் ஏற்படும் ஒரு ஒலிமாற்ற விதியாகும். இந்த விதி கூறும் மாற்றங்களையும் சில சொற்களில் காணமுடிகின்றது.

விசைமுள் → வெசமுள்ளு
மிதிகட்டை → மெதிகட்டெ > மெறிகட்டை
இழை → எழெ
சுழட்டி → சொழட்டி
சுரை → சொரெ

மேலும் 'பெட்டிப்பலகை' என்ற சொல் 'பொட்டிப் பலகெ' என்றும் பிள்ளையார்க்கட்டை' என்ற சொல் 'புள்ளார்க் கட்டெ' என்றும் 'பிணையல்' என்ற சொல் 'பொணையல்' என்று மாறி வழங்கக் காணலாம்.

மொழி இடையில் –ற்ற்- வந்தால் பேச்சு வழக்கில் -த்த்- ஆக மாறும். எடுத்துக்காட்டாக, 'காற்று' என்பது 'காத்து' என்று மாறும். இந்த மாற்றத்தை 'தெற்றல்' என்ற சொல் 'தெத்தலு' என்று குறிப்பிடுவதிலிருந்து தெரிந்து கொள்ள முடிகின்றது. அடுத்து கூட்டுச் சொற்களில் முதற்சொல்லின் இறுதி எழுத்தோ அல்லது இரண்டாவது சொல்லின் முதல் எழுத்தோ இழந்து விடுகின்ற நிலையையும் சில சொற்களில் காணமுடிகின்றது.

கால்குழி → காகுழி
மேல் மரம் → மேமரம்
முன் தண்டு → முன்னண்டு

'கயிறு' என்ற சொல் 'கவுறு' என்று வழக்கிலிருப்பதையும் காணமுடிகின்றது.

இலக்கிய வழக்கில் மொழி இறுதியில் வரும் ஐகாரம் பேச்சு வழக்கில் 'எ' வாக மாறும். இந்த ஒலி மாற்றத்தைச் சில சொற்களில் காணமுடிகின்றது.

உருளை → உருளெ
கட்டை → கட்டெ
பண்ணை → பண்ணெ
ஊடுதை → ஊடுதெ
ஆலை → ஆலெ

வேறு சில மாற்றங்களுக்கு எடுத்துக்காட்டுகள் கீழேத் தரப்பட்டுள்ளன.

கல் → கல்லு
முள் → முள்ளு
மரம் → மர̃
சட்டம் → சட்ட̃

இத்தகைய மாற்றங்கள் தவிர 'சமுடு' என்பதை 'ஜமுடு' (ஜமுலு) என்றும், 'சோடத்தாலை' என்பதை 'ஜோடத்தலெ' என்றும் ஒருவர் கூறினார். ஆனால் இத்தகைய ஒலி மாற்றம் மிகக் குறைந்தவர்களிடையே மட்டுமே காணப்படுகின்றது. பாண்டிச்சேரிப் பகுதிகளில் இந்த உச்சரிப்பு பெருவழக்கில் இருப்பதாகத் தெரிய வருகின்றது.

2. சொற்கள் அமைப்பு

சொற்களின் அமைப்பையொட்டி அவற்றை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். 1. தனிச்சொற்கள், 2. கூட்டுச் சொற்கள். இவற்றைப் பெயர், வினை என்ற அடிப்படையில் மேலும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அதாவது, தனி வினைச் சொற்களென்றும், கூட்டுவினைச் சொற்களென்றும், தனிப்பெயர் சொற்களென்றும், கூட்டுப்பெயர்ச் சொற்களென்றும் நான்கு வகைப்படுத்தலாம். அமைப்புக்களும் அவற்றிற்குச் சில எடுத்துக்காட்டுகளும் கீழேகொடுக்கப்பட்டுள்ளன.

அ) பெயர்
எ.கா. தறி
தெற்றல்

பில்லூரு
மடி
லடி
பீஸ்

ஆ) பெயர் + பெயர்

எ.கா. கைக்குண்டு
மோப்புக்கழி
மாராப்புக் கயிறு
பட மரம்
சேட்டுமுள்
தத்தி கயிறு

இ) பெயர் + பெயர் + பெயர்

எ.கா. சீர்க்கயிறுகுச்சி
படமரத்துக்கால்
தறி அடிமனை
மிதிக்கட்டைக்கம்பி.

ஈ) பெயர் + பெயர் + பெயர் + பெயர்

எ.கா. பந்தக்கால் குறுக்குச் சட்டம்.

உ) வினை + பெயர்

எ.கா. மிதிக்கட்டை
ஆடுஞ்சட்டம்
பாசக்கம்பி

ஊ) பெயர் + வினை + பெயர்

எ.கா. தறிதாங்குகயிறு.

இத்தகையச் சொற்களின் அமைப்பை நுணுகி ஆராயும் போது சொல்லாக்க முறைகள் பற்றிய சில பொதுமைகள் தெரிய வருகின்றன. ஒரு சாதனத்தைக் குறிக்க அதனோடு தொடர்புடைய சாதனத்தின் பெயரையும் இணைத்துப் பெயராக்கப்படுகின்றது. எடுத்துக்காட்டாக 'சீர்' என்ற பெயரை எடுத்துக் கொள்வோம். இச்சொல்லைப் பயன்படுத்தி பல சொற்கள் உருவாக்கப்படுகின்றன.

எ.கா. சீர்
சீர்க்கயிறு
சீர்க்கயிறுக்குச்சி
சீருருளை
சீர்மேல்மரம்.

இதைப் போலவே 'உருளை' என்ற சொல்லுடன் இணைத்துக் கீழ்க்காணும் சொற்கள் உருவாக்கப்படுகின்றன.

சீருருளை
கையுருளை
தறியுருளை
உருளைக்கயிறு
உருளைக்கால்

அடுத்தபடியாக ஒருசாதனம் இருக்கின்ற இடத்தை வைத்து அதற்குப் பெயர் கொள்ளப்படுகின்றது. எடுத்துக்காட்டாக,

அடிமனை அடிப்பலகை	(அடியில் இருக்கும் பலகை)
முன் தண்டு	(முன்னால் இருக்கும் தண்டு)
மேல் மரம்	(மேலே இருக்கும் மரம்)
குறுக்குச் சட்டம்	(குறுக்காக இருக்கும் சட்டம்)
எதிர் குறி	(எதிரில் இருக்கும் குறி)

ஆனால் மேலே இருக்கின்ற எல்லா மரங்களையும் 'மேல்மரம்' என்று குறிப்பிடுவதில்லை. குறுக்காகச் செல்கின்ற எல்லாச் சட்டங்களையும் குறுக்குச் சட்டம் என்று குறிப்பிடுவதில்லை. ஏதேனும் ஒன்றை மட்டுமே இவ்வாறு பெயர்களிட்டு அழைக்கின்றனர். தமிழிலக்கணத்தில் சொல்லப்படும் 'காரண இடுகுறிப்பெயர்கள்' போல இருக்கின்றன என்பது குறிப்பிடத் தக்கது. மேலும் சில சாதனங்கள் அவை செய்யும் அல்லது அவற்றால் செய்யப்படும் வினை அடிப்படையில் பெயராக்கப் படுகின்றன. எடுத்துக்காட்டாக, 'பாசக்கம்பி' (பாய்ச்சுகின்ற கம்பி (?)), 'ஆடுஞ்சட்டம்' (ஆடுகின்ற சட்டம்), 'மிதிபலகை' (மிதிக்கின்ற பலகை). மேலேக் குறிப்பிட்ட சொல்லாக்க முறைகள் யாவும் இன்னும் ஆராய வேண்டியப் பகுதிகளாகும்.

வினைச் சொற்கள்

வினைச் சொற்களும் தனிவினைச் சொற்கள், கூட்டுவினைச் சொற்கள் என்று பகுக்கப்படுவதை முன்னரேக் குறிப்பிட்டோம். தனிவினைகளாக 'நெய்தல்' 'தெறித்தல்' போன்ற சில சொற்கள் இருக்க கூட்டு வினைகளாகவே பெரும்பாலானச் சொற்கள் இருக்கக் காண்கிறோம் கூட்டு வினைகளிலும் பெயர் + வினை என்ற அமைப்பிலே எல்லாச் சொற்களும் உள்ளன.

எ.கா.

புணிக்கட்டுதல்
அல்லிப் பிடிதல்
பெந்துப் போடுதல்
பெந்துப் பொறுக்குதல்
அண்டைக் கட்டுதல்
மோப்புப் போடுதல்

'அண்டைக் கட்டுதல்' என்ற சொல்லை உழவுத் தொழிலில் பயன்படுத்தப்படும் 'அண்டைக்கழித்தல்' என்ற சொல்லோடு ஒப்பிட்டு நோக்கலாம். அண்டை 'விளிம்பு' என்ற சொல்லைப் பயன் படுத்தி உழவுத் தொழிலில் 'அண்டைக்கழித்தல்' (வரப்புகளை வெட்டிச் சரிசெய்தல்) என்ற சொல்லும், நெசவுத் தொழிலில் அண்டைக்கட்டுதல்' (அச்சின் ஓரத்தை மாற்றி அமைத்தல்) என்ற சொல்லும் உண்டாக்கப்பட்டன என்று சொல்லலாம். அல்லது உழவுத் தொழிலில் பயன்படும் சொல்லைப் பழமையானதாகக் கொண்டு அதிலிருந்து பின்னர் அதை நெசவுத் தொழிலுக்குப் பயன்படுத்தியிருக்கலாம் என்றும் கருதலாம்.

3. பொருண்மை உறவுகள்

பொருண்மையை அடிப்படையாகக் கொண்டு மொழியில் காணப்படும் சொற்களிடையே உள்ள உறவுகளை மொழியில்லார் பலவாறு பிரிப்பர். அவற்றில் சில 'Synonymy', 'Homo-

nymy', 'Polysemy', 'Partonymy' எனப்படும். வேறு சில உறவு களும் மொழியியலார் குறிப்பிடுவர். கட்டுரைக்குத் தேவை யானது மட்டுமே இங்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

உருவத்தில் வேறுபட்ட இரண்டு சொற்கள் ஒரே பொருளைக் குறிக்குமாயின் அவற்றை 'Synonymy' என்கிறோம். இதுபோன்ற சொற்கள் சில நெசவுத் தொழிற்பெயர்களில் உள்ளன. எ.கா.

மேல்மரம்
ஆடுஞ்சட்டம்
கையாட்டி
குரங்குச்சட்டம்
பொம்மைச்சட்டம்
அளவு
பத்தை
சிம்பு.

இவற்றில் 'அளவு', 'பத்தை', 'சிம்பு' போன்ற சொற்கள் ஒரே பொருளைக் குறிக்கின்றன என்று சிலர் கூறுகின்றனர். ஆனால் 'அளவு' என்பபதைப் பொதுப்பெயராகவும், 'பத்தை' என்பது பெரிய அளவையும், 'சிம்பு' என்பது சிறிய அளவையும் குறிக்கும் என்று கூறுவாரும் உளர்.



இரண்டாவது கூறியப் பொருளை எடுத்துக் கொண்டால் இச்சொற்களிடையே உள்ள உறவை 'Hyponymy' என்று கொள்ளலாம்.

'அச்சு' என்ற் சொல்லும் 'அச்சடம்' என்ற சொல்லும் ஒரே பொருளைக் குறிப்பன. இதில் 'அச்சு' என்ற சொல்தான் இப் பகுதியில் பெருவழக்கில் உள்ளது. 'அச்சடம்' என்ற சொல்லை நெசவாளர்கள் தெரிந்து வைத்திருந்தாலும் பயன்படுத்துவ

தில்லை. 'அச்சடம்' என்ற சொல் வேறு கிளைமொழிப் பகுதியில் வழக்கில் இருப்பதாகத் தெரிய வருகின்றது.

நெசவுத்தொழிற் சொற்களில் சில சொற்களிடையே **Partonymy** உறவு அமைந்திருக்கிறது. எடுத்துக்காட்டாக,

பொந்து (2 லடிக் கொண்டது)
↑
லடி (10 சிலுப்பைக் கொண்டது)
↑
சிலுப்பை (7 புரு கொண்டது)
↑
புரு (குறிப்பிட்ட இழைச்சுற்றுகள் கொண்டது)
↑
இழை

இங்கே 'புரு' என்ற சொல்லை 'இழை' என்ற சொல்லின் மேம்பட்ட சொல்லாகவும் **(Super ordinate term)**, 'சிலுப்பை' என்ற சொல்லை 'புரு' என்ற சொல்லின் மேம்பட்டச் சொல்லாகவும் இவ்வாறே பிறவற்றையும் கூறலாம். ஒன்று மற்றொன்றின் பகுதியாகஇருப்பது கவனிக்கத்தக்கது. இவ்வகை உறவை 'Part-whole-relation' என்றும் கூறுவர்.

மேலே சொன்ன 'Part-whole-relation' -ஐ 'Hyponymy'-யுடன் கீழ்க்கண்டவாறு தொடர்களில் வேறுபடுத்திக் காட்டலாம்.

1) 'அந்த சிம்பைப் பாய்ச்சினான்' என்ற தொடரை

2) 'அந்த அளவைப் பாய்ச்சினான்' என்ற தொடராலும் கூறலாம். அது போலவே 'அந்த பத்தையை எடு' என்ற தொடரை 'அந்த அளவை எடு' என்ற தொடராலும் கூறலாம். இத்தகைய உறவை 'entailment' என்று கூறுவர். ஆனால் இழை-புரு-சிலுப்பை போன்ற சொற்களிடையே அவைகளை மேற்கண்டவாறு தொடர்களில் அமைந்துப் பொருள் கொள்ள

முடியாது. 'அது ஒரு இழை' என்பதை *அது ஒரு புரு' என்று கூறமுடியாது 'அது ஒரு புரு' என்பதை *அது ஒரு சிலுப்பை என்று கூற முடியாது. ஆனால் 'அது ஒரு பத்தை' என்பதை 'அது ஒரு அளவு' என்றும் கூறமுடியும்.

அடுத்தபடியாக சில கலைச் சொற்கள் மொழியில் பயன் படுத்துகின்ற வேறு சொற்களோடு Polysemy' உறவு உடையன போலத் தோன்றுகின்றன.

எ. கா.

பல்	வாயில் இருப்பது பல் சக்கரத்தில் இருப்பது
குதிரை	விலங்கு பாவைத் தாங்கும் சாதனம்
ஊக்கை	முள் எடுக்கப்பயன்படுவது நாடாவின் முனை.
கம்பம்	நெடிய மரம் திருவிழாக்களில் 'கம்பம் ஏறுதல்' நாடாவில் உள்ள கம்பம் கைலியில் உள்ள கம்பம்

4. பழமொழிகளும் நம்பிக்கைகளும்

சுமார் 150 ஆண்டுகளுக்கு மேலாக நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் இம்மக்கள் வாழ்க்கையில் தங்கள் தொழில் தொடர்பாகச் சில நம்பிக்கைகளும் பழமொழிகளும் இருப்பது இயல்பே. அவற்றைக் காட்டும் சில செய்திகள் கீழே தரப் பட்டுள்ளன.

அ) செய்யும் தொழிலில் நெய்யும் தொழிலே மேல்

ஆ) கஞ்சிக்கு சாண் கறிக்கு முழம். ஒரு சாண் நெய்தால் கஞ்சி சாப்பிடப் போதும், ஒரு முழம் நெய்தால் கறி சாப்பிடலாம் என்று பொருள்.

இ) பஞ்சி மாண்டு போயிற்று (அவனால் நெய்ய வேண்டிய நூல் தீர்ந்து விட்டது என்று பொருளி. இதையே அவன் இறந்து விட்டான் என்ன பொருளி லும்; அவன் தறித் தொழிலைக் கைவிட்டான் என்ற பொருளிலும் வழங்கப்படுகின்றது).

ஈ) எதிர்விட்டில் இழவு விழுந்தாலும் எதிர் குறியில் இறங்கக் கூடாது. (குறியைப் படவைக்க வேண்டும். குறிவரையிலும் நெய்ய வேண்டும் என்று பொருள், இப்போதும் எதிர் குறியிலும், எதிர்ப்பலகையிலும் தறியைவிட்டு வெளியேற மாட்டார்கள்).

5. சொல்லட்டவணை

இலக்கிய வழக்குச் சொற்களே கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் சில சொற்களுக்கு இலக்கியச் சொல் தெரியாத நிலையில் அவற்றை அவ்வாறே கொடுக்கப் பட்டுள்ளன.

எ. கா. மோப்புக்கழி, சோமாசிக்கல்லு போன்றன.

அச்சு,	(பெ.)	'சிறுசிறு பற்களால் ஆகிய சட்டம்; இதனுள் இழை செல்லும்'
அடிமனை அடிமரம் அடிபலகை	(பெ.)	'தறியின் அடிப் பகுதி'
அண்டைக் கட்டுதல்	(வி.)	'அச்சில் ஓரத்தை மாற்றி அமைத்தல்'
அளவு பத்தை சிம்பு	(பெ.)	'பாவு போடும் போது பயன் படுத்தப்படும் கழிகள்'
அளவுத் தட்டுதல்	(வி.)	பாவு போடும்போது சிம்பைப் பாய்ச்சி சிக்கல் நீக்க தட்டுதல்'
ஆலை	(பெ.)	'பாவு ஓட பயன்படுத்தப் படும் சாதனம்'
இரட்டு	(பெ.)	'இரண்டு இழைகள்'
இழை	(பெ.)	'ஒரு நூல்'

உண்டை }
ஊடை } (பெ.) 'நாடாவின் வழியாக நெய்யப் படும் நூல்'

உருளை (பெ.) 'பாவைச் சுற்றும் தண்டு'

உருளைக் கயிறு (பெ.) 'உருளையையும் கை உருளையையும் இணைக்கும் கயிறு'

உருளைக் கால் (பெ.) 'உருளையைத் தாங்கி நிற்கும் இரண்டு கால்கள்'

உருளைத் தண்டை (பெ.) 'உருளையில் பயன்படுத்தப் படும் கயிறுகள்'

ஊக்கை (பெ.) 'நாடாவின் முனைகள்'

ஊடுதை (பெ.) 'பாவு போடும் போது அதை மாட்டப் பயன் படுத்தப்படும் சாதனம்'

ஊடுதைக் கயிறு (பெ.) 'ஊடுதையைக் கடப் பாறையுடன் இணைக் கும் கயிறு'

ஊடுதைப் பூட்டு (பெ.) 'ஊடுதையைப் பாவுடன் இணைக்கும் கயிறு'

எதிர்குறி (பெ.) 'விழுதிற்கும் துணிக்கும் இடையில் குறியிறுத்தல்'

கட்டில்
(ஏணிப்படி) (பெ.) 'மிதிக்கட்டைகளைத் தாங்கி நிற்கும் கட்டைகள்'

கன்னி (பெ.) 'பாவின் குறித்த அளவைக் குறிக்கும் சொல்'

கண்ணாடி வில்லை (பெ.) 'கைலியின் இரண்டு பக்கங் களிலும் உள்ள கறுப்பு நிறத் தால் ஆன பகுதி'

கம்பத்துக்குறி	(பெ.)	'கம்பம்$_2$ நெய்யப்படும் இடத்தி லுள்ள குறி'
கம்பம்$_1$	(பெ.)	'நாடாவின் நடுவில் உள்ள தார்மாட்ட உதவும் கம்பி'
கம்பம்$_2$	(பெ.)	'கைலியின் நடுவில் கருப்பு வெள்ளை நிறத்தால் நெய்யப் படும் துணிப்பகுதி'
கரடு	(பெ.)	'இரண்டு, மூன்று இழைகள் ஒன்றாகப் பிடித்துக்கொண்ட சிக்கல்'
கால்குழி	(பெ.)	'மிதிக்கட்டைகள் இருக்கும் குழி'
குத்துக்கால்	(பெ.)	'பெட்டிப் பலகையிலிருந்து மேல் நோக்கிச் செல்லும் இரண்டு கால்கள்'
குதிரை	(பெ.)	'தெருவில் பாவு போடும் போது பாவை நடுவில் தாங்குவன'
குறுக்குச் சட்டம்	(பெ.)	'இரண்டு குத்துக்கால்களை யும் இணைக்கும் மரம்'
குழை	(பெ.)	'பாவில் பசையில்லாத இடம்'
குறி	(பெ.)	'பாவை அரைத்துண்டு, துண்டு, மடி, பீஸ் என் றெல்லாம் அறிய பயன் படுத்தும் குறிகள்'
கைக்குண்டு	(பெ.)	'தறியில் கைவைத்து இழுத்து அடிக்கும் மரம்'
கை உருளை	(பெ.)	'பல்சக்கரம் பொருத்தப்பட் டிருக்கும் உருளை'

கையாட்டி {பொம்மச்சட்டம் / குரங்குச் சட்டம்}	(பெ.)	'பெட்டிப் பலகையைத் தறியுடன் இணைக்கும் சட்டம்'
கொம்மைக்கட்டை	(பெ.)	'ஆலையைத் தாங்கி நிற்கும் கட்டை'
சமுடு	(பெ.)	'கையில் உள்ள இரண்டு விளிம்புகள்'
சிலுப்பை	(பெ.)	'நூல் அளவு, ஏழு புரு கொண்டது'
சீர்க்கயிறு	(பெ.)	'சீர் உருளையில் உள்ள கயிறு'
சீர்ப்பலகை	(பெ.)	'விழுதுகளை மேலாக இழுத்து இயக்கப் பயன்படும் உருளை'
சுங்கு	(பெ.)	'நாடாவை இயக்கப் பயன் படும் கைப்பிடி'
சுங்குக் கயிறு	(பெ.)	'சுங்கைத் தறியுடன் இணைக்கும் கயிறு'
சுழட்டி	(பெ.)	'படமரத்தைத் திருப்ப உதவும் கோல்'
சேட்டுக்கயிறு	(பெ.)	'சேட்டுக் கோலிலிருந்து வரும் கயிறு'
சேட்டுக்கோல்	(பெ.)	'சேட்டுக்கயிறுகள் இணைக் கப்பட்டுப் பாவின் அடியில் வில் போன்று வளைந்து இரண்டு புறமும் வெளியில் நீட்டி இருக்கும் கோல்கள்'
சேட்டுமுள் (விசைமுள்)	(பெ.)	'சேட்டுக் கயிற்றை இழுத்து கையின் விளிம்புகளில் குத்தப்படும் முள். கையின் இருபுறம் விகுவாக இருக்க.

சேடு பிதுங்குதல் (பெ.) 'சேட்டுமுள் குத்தும் போது ஓரம் கிழிந்து விடுதல்'

சேடு (பெ.) 'கைலியின் விளிம்புகள்'

சோடத்தாலை (பெ.) 'உண்டை நூலைச் சுற்றப் பயன்படும் சாதனம்'

சோடத்தாலை சொரை (பெ.) 'சோடத்தாலையை செருகும் சாதனம்'

சோமாசிக்கல் (பெ.) 'முன்தண்டிற்கு அருகில் இருக்கும் சிம்பு விழுதுப்பக்கம் வராமல் இருக்க இழுத்துப் பிடிக்கும் கல்'

தக்கைக்கட்டை (பெ.) 'நாடாவை இரு மருங்கிலும் தள்ளிவிடும் கட்டை'

தண்டைச்சிம்பு (பெ.) 'உருளையின் உள்ளே இருக்கும் கழி. இதில் பாவின் ஒரு முனை இருக்கும்'

தள்ளுக்கைலி (பெ.) 'இரண்டாம் தரமான கைலி'

தறி$_1$ (பெ.) 'தறியிலுள்ள எல்லா சாதனங்களையும் சேர்த்துக் குறிக்கும் சொல்'

தறி$_2$ (பெ.) 'கைக்குண்டு, பெட்டிப் பலகை, பிள்ளையார்க்கட்டை, குத்துக்கால் போன்றவற்றை மட்டும் குறிக்கும்'

தார் (பெ.) 'தார் குச்சியில் சுற்றிய நூல்'

தார் ஊசி (பெ.) 'தார்சுற்றும் போது தார்க் குச்சியைச் சொருகும் இரும்பு ஊசி'

தார்க்குச்சி (பெ.) 'உருண்டை நூலைத் தாராகச் சுற்றும் குச்சி'

துண்டு (பெ.) 'ஒரு கைலி'

துண்டுக்குறி (பெ.) 'ஒரு கைலி நிறைவு ஆவதைக் காட்டும் குறி'

தெத்தல் (பெ.) 'துணியாக ஆகாமல் நூலாகவே படர்ந்து வருதல்'

தொவிச்சல் (பெ.) 'பாவில் சில இடங்கள் விகுவாக இல்லாமல் தொய்வாக இருத்தல்'

நாடா (பெ.) 'நூல் உள்ள தாரை இரண்டு பக்கமும் எடுத்துச் செல்லும் சாதனம்'

நாடாமேடை (பெ.) 'நாடாக்கள் வைக்கப்படும் மேடை'

நெசவு (பெ.) 'துணியின் தன்மை'

பல்சக்கரக்கால் (பெ.) 'பல்சக்கத்தைத் தாங்கி நிற்கும் கால்'

படமரத்துக்கால் (பெ.) 'பட மரத்தைத் தாங்கிநிற்கும் கால்'

படமரம் (பெ.) 'நெய்ததுணி ஏற்றப்படும் மரம்'

பண்ணை (பெ.) 'அச்சையும் விழுதையும் சேர்த்துக் குறிப்பது'

பந்தக்கால் (பெ.) 'தறியைத் தாங்கி நிற்கும் கால்கள்'

பல்கொக்கி (பெ.) 'பல்சக்கரத்தில் உள்ள விளிம்புகள்'

பல்சக்கரம்	(பெ.)	'பாவை விகுவாக வைக்கப் பயன்படும் சாதனம்'
பாசக்கம்பி	(பெ.)	'பாவு மாட்டும் போதும் அறுக்கும் போதும் பாவுவுடன் பயன்படுத்தப்படும் இரும்புக் கம்பி'
பால்மணி	(பெ.)	'நூல் வெளியில் வர நாடாவில் உள்ள துவாரம்'
பாவு	(பெ.)	'உருளையிலிருந்து வரும் நூல்கள்'
பில்லூரு	(பெ.)	'பாவில் உள்ள சிக்கலை நீக்கும் சாதனம்'
பிள்ளையார்க்கட்டை	(பெ.)	'பெட்டிப்பலகையை மூடி இருக்கும் கட்டை'
பீஸ்	(பெ.)	'நான்கு கைலிகள்'
பீஸ்குறி	(பெ.)	'நான்கு கைலிகள் முடிவாகும் இடத்தைக் காட்டும் குறி'
புணி	(பெ.)	'நாடா செல்ல மேலும் கீழும் பாவு திறப்பது'
புணிக்கட்டுதல்	(பெ.)	'விழுதின் அருகில் புணி திறக்க விடாமல் நூல், கரடு ஏதேனும் சிக்கிக் கொள்ளுதல்'
புறா	(பெ.)	'உண்டை நூலின் ஒருஅளவு'
பிணையல்	(பெ.)	'இரண்டு அளவுகள்'
பெட்டிப்பலகை	(பெ.)	'தறியின் இரண்டு மருங்கிலும் நாடா வந்து தங்கும் பெட்டி'
பெந்து	(பெ.)	'பாவு போடும் போது இழைகளை சிறு பகுதிகளாகப் பிரிக்கும் சாதனம்'
பெந்துபோடுதல்	(பெ.)	'பெந்தை வைத்து பாவைச் சிறு சிறு பகுதிகளாகப் பிரித்தல்'
பெந்து	(பெ.)	'இரண்டு லடி கொண்ட நூல் அளவு'

மடி	(பெ.)	'இரண்டு கைலிகள்'
மாராப்புக் கயிறு	(பெ.)	'சுங்கிலிருந்து இரண்டு பக்கமும் நீண்டு செல்லும் கயிறுகள்,
மிதிக்கட்டை (மிதிப்பலகை)	(பெ.)	'காலால் மிதிக்கப்படும் இரண்டு கட்டைகள். கால் குழியில் இருக்கும். இதை மிதித்தால் புணி திறக்கும்'
மிதிக்கட்டை கம்பி	(பெ.)	'இரண்டு மிதிக்கட்டைகளை யும் இணைக்கும் கம்பி'
முடிச்சு போடுதல்	(வி.)	'பெந்தின் வழியாக வந்த நூல் பகுதியை முடித்தல்'
முப்பாங்கு	(பெ.)	'மூன்று இழைகளை ஒரே அச்சுப்பல்லில் சேர்த்து விடு வது'
முன் தண்டு	(பெ.)	'பாவை (தறியில்) தாங்கி நிற்கும் தண்டு'
மேல் மரம் (ஆடுஞ்சட்டம்)	(பெ.)	'தறி$_2$யின் மேல் பாகத்தில் உள்ள மரம்'
மோப்புக்குழி	(பெ.)	'பாவுபோடும்போது விகுவாக்க ஊடுதைக் கயிற்றில் சுற்றப் படும் கழி'
ராட்டணம்	(பெ.)	நூல் தார் இழைக்கப் பயன் படுத்தப்படும் சாதனம்'
லடி	(பெ.)	'நூல் அளவு, மத்து சிலுப்பைக் கொண்டது'
வத்தக்கரை	(பெ.)	'கைலி அறுத்தபின் பாவாக எஞ்சிய பகுதி'
வாட்டுப்போடுதல்	(பெ.)	'பாவு போடும் போதே நாடா வால் சிறிது நெய்து இழைகள் அறாமல் செய்வது'
வில்	(பெ.)	'நாடாவின் உட்புறத்தில் ஒரு பகுதி'

மொழியியல்; 9. 1&2 (1985)

வினையெச்சம் கொண்டு செய்யப்படும் கலப்பு வாக்கியங்களில் ஒரு விலக்கு

அரங்க. வாசு
அண்ணாமலைப்பல்கலைக்கழகம்

இரண்டு வாக்கியங்களின் எழுவாய் ஒன்றாக இருந்து இரண்டாவது வாக்கியத்தின் செயல் முதல் வாக்கியத்தின் செயலுக்குப் பின் நடந்ததேயாயின், இரண்டு வாக்கியங்களையும் முதல் வாக்கியத்தின் வினையின் வினையெச்சம் கொண்டு இணைக்கலாம் ((Asher 1982:40).

1. இராமன் கடிதம் வாங்கினான்.

2. இராமன் கடிதத்தில் எழுதினான்.

இவ்விரண்டு வாக்கிய்ங்களையும் பின்வருமாறு இணைக்கலாம்.

3. இராமன் கடிதம் வாங்கி எழுதினான்.

இரண்டாவது வாக்கியத்தில் உள்ள 'இராமன்' என்ற எழுவாயும் 'கடிதத்தில்' என்ற இடவேற்றுமைப்பெயரும் வெட்டப் பட்டு வாக்கியம் 3 வருவிக்கப்படுகிறது.

* இராமன் வாங்கி கடிதத்தில் எழுதினான்

என்றோ

* இராமன் கடிதத்தில் வாங்கி எழுதினான்

என்றோ கூறமுடியாது. அதாவது வினையெச்சம் கொண்டு இணைக்கப்படும் இவ்வகை வாக்கியங்களில் இரண்டாவது தொடரின் பெயர்களையே வெட்டமுடியும் என்பது தெரிகிறது.

ஆனால் இக்காலத்தமிழில் பின்வரும் வாக்கியங்கள் இதற்கு விலக்காக வருவதைக் காண்கிறோம்.

4. இராமன் வீட்டில் போய் படித்தான்.

5. இராமன் வீட்டைப் போய் பார்த்தான்.

வாக்கியங்கள் 4, 5 பின்வரும் வாக்கியங்களிலிருந்து வருவிக்கப் படுகிறது.

4. அ. இராமன் வீட்டுக்குப் போனான்.
   ஆ. இராமன் வீட்டில் படித்தான்.

5. அ. இராமன் வீட்டுக்குப் போனான்.
   ஆ. இராமன் வீட்டைப் பார்த்தான்.

வாக்கியங்கள் 4அ, 4ஆ ஆகியவற்றை பின்வரும் முறையில் இணைத்து வாக்கியம் 4ஐப் பெறலாம்.

இராமன் வீடு-க்கு போனான் இராமன் வீடு-இல் படித்தான்.

1. ஒருங்கிணைந்த பெயர்த்தொடர் விடுபடு விதி[1] ↓
   (Identical NP deletion)

   இராமன் வீடு-க்கு போனான் - வீடு-இல் படித்தான்

2. ஒருங்கிணைந்த பெயர்த்தொடர் விடுபடு விதி[2] ↓

இராமன் -க்கு போனான் வீடு-இல் படித்தான்

3. தொங்கும் உருபு (Dangling morph) விடுபடுவிதி ↓

இராமன் போனான வீடு-இல் படித்தான்

4. வினையெச்ச மாற்று விதி ↓

இராமன் போய் வீட்டில் படித்தான்

5. இடமாற்றுவிதி ↓

இராமன் வீட்டில் போய் படித்தான்

இங்கு முதல் வாக்கியத்தில் உள்ள 'வீட்டுக்கு' என்னும் பெயர்த் தொடர் வெட்டப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது.

இவ்வகையிலேயே வாக்கியம் 5முறையே 5அ, 5ஆ இலிருந்து வருவிக்கப்படுகிறது. இதனின்று மேற்கூறிய விதிக்கு பின்வரும விலக்கு அளித்தல் அவசியமாகிறது.

"இரண்டு வாக்கியங்களின் எழுவாயும் அதையடுத்து வரும் பெயர்த்தொடர்களும் ஒன்றாயிருந்து முதல் வாக்கியத்தின வினை 'போ', 'வா', 'செல்' முதலிய movement verbs ஆக இருந்தால், எழுவாயை அடுத்து வரும் வேற்றுமைப் பெயரை எந்த வாக்கியத்தில் வேண்டுமானலும் நீக்கலாம்."

வாக்கியம் 4அ வில் உள்ள 'வீட்டுக்கு' என்ற பெயர்த்தொடர் விடுபட்டு வாக்கியம் 4 கிடைக்கிறது. வாக்கியம் 4ஆ வில் உள்ள 'வீட்டில்' என்ற பெயரை விடுவித்து,

6. இராமன் வீட்டுக்குப்போய்படித்தான்

என்ற வாக்கியத்தைப் பெறலாம். ஆனால் வாக்கியம் 5ஆ வில்உள்ள 'வீட்டை' என்ற பெயரை விடுவித்தால்,

7. இராமன் வீட்டுக்குப்போய் பார்த்தான்

என்ற வாக்கியம் கிடைக்கும். இவ்வாக்கியம், வாக்கியம் 5ன் பொருளைத் தராதது குறிப்பிடத்தக்கது. ஆனால் வாக்கியம் 6ம், 4ம் ஒரே பொருளையே தரும் என்பது

நினைவுகூரத்தக்கது. இவ்வகையில் மேற்கண்ட விலக்குவிதியை பின்வருமாறு மாற்றுதல் அவசியமாகிறது.

> "இரண்டு வாக்கியங்களின் எழுவாயும் ஒன்றாயிருந்து அதை அடுத்து வரும் பெயர்த்தொடர்கள் இரண்டும் இடவேற்றுமையிலேயே இருந்து, முதல் வாக்கியம் 'போ', 'வா' முதலிய வினையைக் கொண்டிருப்பின், எழுவாயை அடுத்துவரும் பெயர்களை எந்த வாக்கியத்தில் வேண்டுமானாலும் நீக்கலாம். எழுவாயை அடுத்துவரும் பெயர்கள் ஒன்றாயிருந்து வேற்றுமை வெவ்வேறாக இருப்பின் இரண்டாவது ஒருங்கிணைந்த விடுபடுவிதி முதல் வாக்கியத்தில்தான், கட்டாயமாக, நிகழ்வுறவேண்டும்".

பொருள்செயல் நிலையில் வேறுபாடு

இராமன் வீட்டுக்குப்போய் படித்தான்

என்ற வாக்கியம் 'இராமன் எப்பொழுது படித்தான்?' என்ற வினாவுக்கு விடையாக அமைந்து, முதல் செயலுக்கும் இரண்டாவது செயலுக்கும் இடையே உள்ள நேரத்தொடர்பைக் காட்டுகிறது.

இராமன் வீட்டில்போய் படித்தான்

என்ற வாக்கியம் ' இராமன் எங்கு படித்தான்?' என்ற வினாவுக்கு விடையாக அமைந்து, இராமன் படித்த இடத்திற்கு முக்கியத்துவம் தருகிறது.

இதோ வீட்டுக்குப்போய் வயிறாரச் சாப்பிடப் போகிறேன்.

(கரித்துண்டு - மு. வ. ப. 21)

இவ்வாக்கியத்தில் உள்ள 'இதோ' என்னும் சொல் வீட்டுக்குச் சென்றதும் சாப்பிடப்போகிறேன் என்ற நேரத்தொடர்பைச் காட்டுகிறது.

நினைத்தால் லைப்ரரியில் போய் உட்காரமுடிகிறது.

(மலர்களிலே அவள் மல்லிகை-இந்துமதி ப. 99)

இந்த வழக்கு நிலை (habitual sentence) வாக்கியம் ஒரு குறிப் பிட்ட காலத்தைக் காட்டாதது குறிப்பிடத்தக்கது.

புதைநிலை அமைப்பு

வாக்கியங்கள் 4,6, 5 ஆகியவைகளுக்கு பின்வரும் புதை நிலை அமைப்பைத் தரலாம்.



துணை நூல்கள்

Asher R.E, 1982, "TAMIL" *Lingua* Descriptive Studies, Vol. 7 North-Holland-Amsterdam.

Rosenbaum S. Peter Jacobs A. Roderick, 1976, *English Transformational Grammar*, Wiley Eastern Limited, New Delhi.

நன்றியுரை

இந்த ஆய்வுக்கட்டுரை சிறப்பாக அமைவதற்கு பல்வகையிலும் உறுதுணையாயிருந்த எனது பேராசிரியப் பெருந்தகைகள் ச. அகத்தியலிங்கம், செ.வை. சண்முகம் ஆகியோருக்கும் முதுநிலை ஆய்வாளர் முனைவர் (திருமதி) எம். சுசீலா அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி.

மொழியியல் 9. 1 & 2 (1985)

தற்காலத் தமிழ் மொழியில் உளப்பாட்டு, வேறுபாட்டுத் தன்மைப் பன்மை வேறுபாடுகள் விகுதிகளிலும் காணப்படுகின்றனவா?

சி. மகேசுவரன்
அரசு அருங்காட்சியகம், சென்னை

0. முன்னுரை

"... மூவிடப் பெயர்களில் காணப்படும் உளப்பாட்டு, வேறுபாட்டு வேற்றுமை... விகுதிகளிலும் காணப்படுகின்றனவா என்பது ஆராய்ச்சிக்குரிய ஒரு செய்தியாகும்" என்று தனது "தன்மைப் பன்மை" ஆய்வுக் கட்டுரையின் (1978:26) தொடக்கத்தில் குறிப்பிடும் அகத்தியலிங்கம், தற்காலத் தமிழில் இவ் வேற்றுமை காணப்படவில்லை என அக்கட்டுரையின் முடிவுரையில் தனது முடிந்த முடியாக உரைக்கிறார். இந்த அடிப்படையிலேயே "...வினைச் சொல்லில் வினை விகுதியினைப் பொறுத்தமட்டில் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை, வேறு

பாட்டுத் தன்மைப் பன்மை வேறுபாடு உளது என்று கூறுவறு மிகப் பொருந்தாக் கூற்றாகும்.'' என்றும் அறுதியிட்டுக் கூறு கிறார். இதே கருத்தை, ''உளப்பாட்டுத் தன்மைப் பன்மைக் கென தனித்தவோர் விகுதி கோத்தா, தோடா, தெலுங்கு கோண்டி, கொண்டா, பெங்கோ, கூயி, கூவி, பர்ஜி, குருக், மால்தோ மொழிகளில் மட்டுமே காணப்படுகின்றது'' என்ற கூற்றின் வழி சுப்பிரமணியம் (1971:407) உள்ளுறையாக உறுதிப்படுத்தியுள்ளார். இதனாலேயே, ''மிகப்பழங்காலத்தில் ஒருவேளை இது (உளப்பாட்டு, வேறுபாட்டுத் தன்மைப் பன்மை வேறுபாடு) இருந்திருந்தாலும் பழந்தமிழில் இவ் வேற்றுமை காணப்படுவதில்லை'' (அகத்தியலிங்கம், 1976:41) என ஒரு படிமேலே சென்று உரைத்து விட்டனர்.

இந்நிலையில், தற்காலத் தமிழ் மொழியில் (கிளைமொழி அளவிலாவது) இவ் வேற்றுமை நிலவுவதைச் சுட்டிக் காட்டி, பழந்தமிழில் உளப்பாட்டு, வேறுபாட்டுத் தன்மைப் பன்மை களுக்கு உறுதியாகத் தனித்தனி விகுதிகள் இருந்திருக்க வேண்டும் என நிலைநாட்டுவதே இக் கட்டுரையின் குறிக்கோள்.

1. பச்சைமலைத் தமிழ்க் கிளைமொழி—ஓர் அறிமுகம்

திருச்சி மாவட்டத்தின் வட பகுதியிலுள்ள 'பச்சைமலை' யைத் தமது இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்துவரும் பழங் குடியினர் 'பச்சைமலை மலையாளிகள்' என்றழைக்கப்படு கின்றனர். இவர்கள் பேசும் தமிழ், 'பச்சைமலைத் தமிழ்க் கிளை மொழி' என்ற பெயரியது. இக்கிளைமொழிக்கண் பழந்தமிழ்க் கூறுகள் மிக்கிருப்பதுடன், பல்வேறு சிறப்பியல்புகள் காணக் கிடத்தல் வெளிப்படை. தன்மைப் பன்மையில், உளப்பாட்டுக் கும் வேறுபாட்டுக்கும் தனித்தனி விகுதிகள் கொண்டுள்ளமை அவற்றுள் ஒன்றாகும்.

2. பச்சைமலைத் தமிழ்க் கிளைமொழியில் உளப்பாட்டு, வேறு பாட்டுத் தன்மைப் பன்மை விகுதிகள்:-

இக் கிளைமொழியில், உளப்பாட்டுத் தன்மைப் பன்மை {-மு} ~-உமு; ~-மு என்ற விகுதியாலும், வேறுபாட்டுத்

தன்மைப் பன்மை {-ஒம்} என்ற விகுதியாலும் உணர்த்தப்படு கினறன.

காண்க:

உளப்பாட்டுத் தன்மைப் பன்மை

{-மு} ~ -உமு; ⌐-மு
⌐ - உமு

உயிரொலியீற்றைக் கொண்ட வினையடிகளுடன் -உமு விகுதி வரக் காணலாம்.

எ-டு. (நாம்பெ) ஓட்-உமு > (நாம்பெ) ஓடுமு "we (incl.) will run"

(,,) ஓட்ட்-உமு > (,,) ஓட்டுமு "we (incl.) will drive"

(,,) தின்-உமு > (,,) தின்னுமு ~ தினுமு "we (incl.) will eat"

(,,) சொல்-உமு > (,,) சொல்லுமு ~ சொலுமு "we (incl.) will tell"

(,,) பாக்க-உமு > (,,) பாக்குமு[1] "we (incl) will see"

(,,) கேக்க்-உமு > (,,) கேக்குமு "we (incl) will listen/ask/enquire"

~ - மு

மெய்யொலியீற்றைக் கொண்ட வினையடிகளுடன் -மு விகுதி வரும்.

எ-டு. (நாம்பெ) போ-மு "we (incl) will go"
(நாம்பெ) வரு-மு "we (incl) will come"

வேறுபாட்டுத் தன்மைப் பன்மை

{-ஒம்} ∞ -ஒம்

எ-டு. (நாங்கெ) ஒட்-ஒம் > (நாங்கெ) ஒடுவொம்
"we (excl.) will run"

(,,) ஒட்ட்-ஒம் > (,,) ஒட்டுவொம்
"we (excl.) will drive"

(,,) தின்-ஒம் > (,,) தின்னுவொம்
"we (excl.) will eat"

(,,) சொல்-ஒம் > (,,) சொல்லுவொம்
"we (excl.) will tell"

(,,) பாக்க்-ஒம்/ > (,,) பாக்குவொம்[2]
~ ~
பாப்ப்-ஒம் பாப்பொம்
"we (excl.) will see"

(,,) கேக்க்-ஒம் > (,,) கேக்குவொம்
~ ~
கேப்ப்-ஒம் கேப்பொம்
"we (excl.) will listen/ask/ enquire"

(,,) போ-ஒம் > (,,) போவொம்
"we (excl.) will go"

(,,) வரு-ஒம் > (,,) வருவொம்
"we (exc.) will come"

எனினும், எதிர்காலம் காட்டும் இடங்களில் மட்டுமே இவ் வேறுபாடு உணர்த்தப்படுகின்றது என்பதை மறுத்தற்கில்லை,

2. முடிவுரை

தற்காலத் தமிழில் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை, வேறு பாட்டுத் தன்மைப் பன்மை வேறுபாடு அறவே இல்லை என்று இது வரை மொழியியலாளர் கருதி வந்துள்ள நிலையில் பச்சை மலைத் தமிழ்க் கிளைமொழி காட்டும் இவ் வேறுபாடு மிகவும்

பயனுடையது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இருப்பினும், எதிர்கால வினைமுற்றுக்களில் மட்டுமே இது காணப் பெறுதல் இன்னும் ஆராய்ச்சி செய்தற்குரியது. எவ்வாறாயினும், உளப் பாட்டு, வேறுபாட்டுத் தன்மைப் பன்மை வேறுபாடு பழந் தமிழில் இருந்திருக்க வேண்டும் என்ற கருத்து இதன் வழி உறுதிப்படுகிறது.

அடிக்குறிப்புகள்

[1]-ப்ப்- எனும் எதிர்கால விகுதியின் உறழ்ச்சி வடிவமாக (free variant) -க்க்- எனும் விகுதி வருதல் சங்கத் தமிழில் காணும் நிலையாகும். எனினும், உளப்பாட்டுத் தன்மைப் பன்மையில் -ப்ப்- விகுதி கொண்ட வினைமுற்றுக்கள் பச்சைமலைத் தமிழ்க் கிளைமொழியில் காணப்படவில்லை.

[2]உளப்பாட்டுத் தன்மைப் பன்மை போலல்லாது, -க்க்- ~-ப்ப்- உறழ்ச்சியானது வேறுபாட்டுத் தன்மைப் பன்மையில் காணக் கிடக்கின்றது. இந்நிலை மேலும் ஆராய்தற்குரியது.

துணை நூல்கள்

அகத்தியலிங்கம், ச. 1976 (ஆ), "உளப்பாட்டுத் தன்மைப் பன்மையும், வேறுபாட்டுத்தன்மைப் பன்மையும்" **எட்டாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை**, பக். 497–501, அனைத்திந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், மைசூர்.

அகத்தியலிங்கம், ச. 1978, "தன்மைப் பன்மை", **மொழியியல்** 2:2 பக். 1–56, அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலைநகர்.

Israel, M. 1974, *The Treatment of Morphology in Tolkappiyam*, *Madurai University, Madurai*.

Maheswaran, C. 1979, *A Descriptive Study of Pachaimalai Tamil Dialect* [*Hill Tribs*], Unpublished M.A. Thesis. Annamalai University, Annamalainagar.

Subramanyam, P.S. 1971, *Dravidian Verb Morphology* (*A Comparative Study*). Dept. of Linguistics Pub. No. 24 Annamalai University, Annamalainagar.

நன்றியுரை

எனது ஆராய்ச்சிப் பணிகளில் பெரிதும் ஈடுபாடு கொண்டவரும், என் முன்னேற்றத்திற்குப் பல்லாற்றானும் உதவி வருபவருமான எங்கள் அருங்காட்சியக இயக்குநர் திரு.ந. ஹரி நாராயணா அவர்களுக்கு நெஞ்சுநிறை நன்றியை இங்கு காணிக்கையாக்குகிறேன்.

மொழியியல், 9. 1&2 (1985)

கணிப்பொறி மொழியியல்

அ. பிச்சை
கிராமியப் பல்கலைக் கழகம், காந்திகிராமம்

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற கண்டு பிடிப்புகளுள் ஒன்று கணிப்பொறி (computer) ஆகும். தற்கால மனிதனின் வாழ்க்கையிலும், அரசின் பல துறைகளிலும் நேரடியாகவும் மறைமுகமாகவும் பயன்பட்டு வருகின்றது கணிப்பொறி. தகவல் தொடர்பு, கணக்கியல், வானியல் போக்குவரத்து, வேளாண்மை, மருத்துவம், தொழிலியல், விண்வெளி ஆய்வு போன்ற பெரும்பாலான துறைகளையும் கணிப்பொறி பாதித்துள்ளது. மொழியியல் துறையும் இச் சாதனத்தைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறவில்லை; அதே போல கணிப்பொறியியலாரும் இதனை மொழியியல் ஆராய்ச்சிக்கு ஈடுபடுத்தத் தவறவில்லை. இதன் விளைவாகக் கணிப்பொறி மொழியியல் (Computational Linguistics) என்னும் துறை

உருவாகி வளர்ந்து வருகின்றது. கணிப்பொறி மொழியியல் என்பது மொழி மற்றும் இலக்கிய ஆராய்ச்சிக்குக் கணிப் பொறியைப் பயன்படுத்துவது பற்றியும் கணிப்புச் சம்பந்தமாக எழுகின்ற பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு மொழியியலைப் பயன்படுத்துவது பற்றியும் விளக்கும் ஒரு துறையாகும்.

கணிப்பொறி வரலாறு

ஆதி கால மனிதனிடத்தில் கூட்டல் போன்ற நான்கு கணித முறைகளைச் சுலபமாகச் செய்ய ஒரு கருவியைக் கண்டு பிடிக்க வேண்டும் என்ற உந்துதல் இருந்தது. இதனால் 'மணிச் சட்டம்' ABACUS) உருவாகியது. இதுவே கணிப்பொறியின் 'மூலவடிவம்' எனச் சிறப்பிக்கப் படுகின்றது. இதற்குப் பின் கணக்கினைத் துல்லியமாகவும் விரைவாகவும் போடச் சிறந்த சாதனத்தைத் தயாரிக்கவேண்டும் என்ற சிந்தனை பல நூற் றாண்டுகளாக வளர்ந்தது. இந்த ஆய்வு முனைப்பால் 1642-இல் பிரெஞ்சுக் காரராகிய பிளெஸ் பாஸ்கல் (Blaise Pascal) ஒரு கணக்கு எந்திரத்தை (Calculator) கண்டுபிடித்தார். இதனால் மட்டும் மனிதனின் உள்ளம் நிறைவும் திருப்தியும் அடைந்து விடவில்லை.

பல்லாண்டுகளாக மனிதனது ஆய்வுச் சிந்தனையோட்டம் தொடர்ந்தது. இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் மின்னியல் துறை (Electronics) வளரத் தொடங்கிய போது கணிப்பொறி யுகமும் மலரத் தொடங்கியது. 1944-இல் ஹார்வார்டு பல்கலைக் கழகக் கணிதப் பேராசிரியர் டாக்டர் ஹோவார்டு ஐக்கன் ஐ.பி.எம். பொறியியலார் உதவியுடன் 'ஹார்வார்டு மார்க்-1' என்னும் டிஜிட்டல் கணிப்பொறியை முதன்முதலில் உருவாக்கி னார். இதற்குப் பின்பு கணிப்பொறியின் அமைப்பும் வகை களும் பரந்துபட்டு வளர்ந்துள்ளன. தானாகச் சிந்தித்து அதி விரைவுடன் செயல்படக் கூடிய சூப்பர் கணிப்பொறிகளை உருவாக்குவதில் ஜப்பானும் அமெரிக்காவும் போட்டி போட்டுக் கொண்டு இருக்கின்றன. இதுவரை அமெரிக்கா மட்டும் 84 வகையான கணிப்பொறிகளை உருவாக்கியுள்ளது.

கணிப்பொறி ஓர் எந்திரம் ஆகும். கிறிஸ்டோஃபெர் ஸ்டிராசெய் (Christopher Strachey) என்பவர் குறியீடுகளைப் பரிசீலித்துத் தருகின்ற ஓர் எந்திரம்தான் கணிப்பொறி (Computer as a machine for processing symbols) என்று கூறுவார். அதாவது, குறியீடுகளின் தொடர்ச்சியை (String of symbols) அகத்தரவிற்குள் (input) செலுத்தினால், அது முன்னால் சேமித்து வைக்கப்பட்டிருக்கின்ற 'வழிமுறை'யின்படி (Programme செயல்பட்டுப் புறத்தரவின் (output) வழியாகத் தருகின்ற ஓர் எந்திரமே கணிப்பொறி ஆகும். ஆகவே, நமது ஆணைத் தொடர்களின்படி கட்டுப்பட்டு இயங்குகின்ற நம்பகமான களைப்படையாத - திரும்பத் திரும்பச் செய்யும், ஆனால் முழுவதும் சுயபுத்தியில்லாத படிக்காத மேதை என்னும் எந்திர மனிதன் தான் (a reliable tireless, but totally unintelligent robot) கணிப்பொறி என்று விளக்குவர்.

இதன் அமைப்பு சிக்கலானது. இது குறைந்தளவு ஐந்து பகுதிகளைக் கொண்டது. அவை அகத்தரவு, கட்டுப்பாட்டகம்(control unit), கணக்கீட்டகம் (arithmetic unit), ஞாபகப் பகுதி (memory) புறத்தரவு என்பனவாகும். அகத்தரவோடு தட்டச்சும், புறத்தரவோடு தட்டச்சு அல்லது கோட்டச்சு (லைன் பிரிண்டர்) பொருத்தப்பட்டிருக்கும். அகத் தரவிற்குத் தட்டச்சு அல்லது துளையுள்ள அட்டைகளின் வழியாகத் தகவல்களை அனுப்பலாம். அவ்வாறே புறத்தரவு தகவல்களைத் தட்டச்சு செய்து தரும். கட்டுப்பாட்டுப் பிரிவுதான் வழிமுறையின்படி பணிக்குத் தக்கவாறு கட்டளையிடுகின்றது; ஞாபகப் பகுதியில் நிகழும் சேமிப்பைக் கட்டுப்படுத்துகின்றது. ஞாபகப் பகுதியில் சேமிப்பான்கள் (bytes) உள்ளன. சேமிப்பான்கள் சிறிய கருவிகளில் 1000-க்குக் குறைவாக இருக்கும். இவைகள் சிலிக்கன் துண்டுகளால் ஆனவை. ஒவ்வொன்றும் 255 குறியீடுகளைச் (characters) சேமித்து ஒரு வினாடிக்கு இரண்டு மில்லியன் வேகத்தில் வெளிக்கொணரும் ஆற்றல் உடையது. துணைச் சேமிப்புப் பகுதியில் (auxiliary storage) காந்தத் தட்டுகள் இருக்கும். ஒரு காந்த டேப்பில் இருபது மில்லியன் குறியீடுகளைப் பதிவு செய்யலாம்.

கணிப் பொறிகளோடு தொடர்புகொண்டு அதனைப் பயன் படுத்த வேண்டுமானால், அது புரிந்து கொள்ளும் 'பரிபாஷை களை' நாம் தெரிந்து கொள்ள வேண்டும். எல்லாக் கணிப் பொறிகளும் *1,0* என்னும் இருநிலைக் குறியீடுகளை (binary symbols) தம் மொழிக்கு அடிப்படையாகக் கொண்டுள்ளன. கணிப்பொறிகளின் பாஷைகளைக் கீழ்மட்ட (low level) பாஷைகள் என்றும், மேல்மட்ட (high level) பாஷைகள் என்றும் பிரித்துக் கூறுவர்.



ஏ. கோலின் டே (A. COLIN DAY) தம் கட்டுரை ஒன்றில் ஃபோர்டிரான் பாஷை, மொழி-இலக்கிய ஆராய்ச்சிக்கு ஏற்றது என்கிறார். ஏனென்றால், இப்பாஷையில் எழுதப்பட்ட 'வழி முறைகள்' எந்த மாற்றமும் இல்லாமல் எல்லாக் கணிப்பொறி களிலும் பயன்படுத்தலாம். மேலும், ஃபோர்டிரான் பாஷைக்கு ஏற்றவாறு தொகுப்பான் (Compilers) பல கணிப்பொறிகளில் உள்ளன.

பல வகையான கணிப்பொறிகள் கையாளப்படுகின்றன. பொதுவாக, அவற்றை இரண்டாகப் பிரிக்கலாம். அவை: *(1)* அனலாக்குக் கணிப்பொறி (Analogue Computer) *(2)* டிஜிட்டல் கணிப்பொறி (Digital Computer) ஆகும். டிஜிட்டல் கணிப் பொறிதான் மொழியியல் சம்பந்தமான ஆய்வுக்குப் பயன் படுத்தப்படுகின்றது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், ஆல்கொள்-68 (ALGOL-68), பிஎல்/1 (PL/1) போன்றவை மொழி, இலக்கிய ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தப் படுகின்றன. இன்று கணிப்பொறிகள் மினி, மைக்ரோ, மேக்ரோ (Mini, MiCro and Macro Computers) அளவுகளில் தயாரிக்கப்படு கின்றன. இன்று,

மொழி பெயர்ப்பு

போக்குவரத்தினாலும் செய்தித் தொடர்பினாலும் உலகமே சுருங்கி விட்டது. உலகெங்கும் ஆராய்ச்சிகள் நிகழ்த்தப்பட்டு புதிய புதிய செய்திகளும் கருத்துக்களும் வெளிவந்து கொண் டிருக்கின்றன. ஒரு நாடு மற்றொரு நாட்டில் நடப்பவற்றைத் தெரிந்து கொண்டு செயல்படாவிட்டால் முன்னேற்றமோ வளர்ச்சியோ அடைய இயலாது. ஆகவே, தகவல் பரிவர்த் தனைக்கும் கருத்துப் பரவலுக்கும் துணைபுரிவது மொழிபெயர்ப் பாகும். இதனின் முக்கியத்துவத்தை அறிந்த தொல்காப்பியர் இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பே நூலை ஆக்கும் முறைகளில் ஒன்றாக மொழிபெயர்ப்பைக் கூறி யிருப்பது எண்ணி எண்ணி வியக்கத்தக்கது.

சிலர்தான் மொழிப்பெயர்ப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இது போதாது. மேலும், இப்பணி சோர்வையும் சலிப்புணர் வையும் உண்டாக்கக் கூடியது; காலமும் அதிகமாகத் தேவைப் படுகின்றது. செய்திகளின் பெருக்கத்துக்கு ஏற்ப மனிதனால் செய்யப்படும் மொழிபெயர்ப்பு ஈடுகொடுக்க முடியவில்லை. விரைவாகவும் மிகுதியாகவும் மொழிபெயர்க்கக் கூடிய எந்தி ரத்தைப் பயன்படுத்த வேண்டும் என்ற சூழ்நிலை ஏற்பட்டது. அப்போதுதான் கணிப்பொறியை மொழிபெயர்ப்புக்குப் பயன் படுத்த எண்ணினர். கணிப்பொறி மொழியியலில் மிகுதியான ஆராய்ச்சி மொழிபெயர்ப்பு பற்றியது ஆகும் என்பதில் ஐய மில்லை.

1949-இல் வாரன் வீவர் (Warren Weaver) என்பவர் மொழி பெயர்ப்புப் பிரச்சனையைச் சமாளிக்கக் கணிப்பொறியைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்னும் கருத்தை முன் வைத்தார். அப்போது ஓரளவு அமைப்பு மொழியியல் (Structural Linguistics) வளர்ந்து செல்வாக்குப் பெற்றிருந்தது. அமைப்பு மொழியியலாரும் கணிப்பொறியியலாரும் இப்புதிய முயற்சியில் தலைப்பட்டனர். 1954-இல் அமெரிக்க அறிவிய லார்கள் ஐ.பி.எம். (I.B.M) – 701 என்னும் கணிப்பொறி யைப் பயன்படுத்தி ரஷ்ய மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு

மொழிபெயர்த்தனர். இது போலவே, ரஷ்யாவில் பி.ஈ.எஸ்.எம் (BESM) கணிப்பொறியைப் பயன்படுத்தி ஆங்கிலத்திலிருந்து ரஷ்யமொழிக்கு மொழிபெயர்த்தனர். இவர்கள் மொழிபெயர்ப்பில் ஓரளவு வெற்றி பெற்றாலும் முழுமையான வெற்றி அடையவில்லை.

இருமொழி வல்லுநர்களே மொழிபெயர்ப்பில் ஈடுபட முடியும்; ஈடுபடுகின்றனர். இவர்கள் இரண்டு மொழிகளில் உள்ள சொற்களைத் தொடர்புப்படுத்தி ஆதாரமொழியில் (source language) உள்ள தொடரமைப்பை இலக்குமொழிக்கு (Target language) கருத்துச் சிதையா வண்ணம் மாற்றுகின்றனர். இதே பாணியில்தான் கணிப்பொறியையும் மொழிபெயர்ப்பில் ஈடுபடுத்தினர். ஆனால், இரண்டு பிரச்சனைகள் எழுந்தன. ஒன்று, பொருத்தமான, இணையான சொல்லைத் 'தேர்ந்தெடுத்தல்' ஆகும்; மற்றொன்று, அச்சொற்களை சரியான வரிசையில் இலக்கு மொழியில் 'ஒழுங்குபடுத்துதல்' ஆகும். இப்பிரச்சனைகளைத் தீர்ப்பதில் ஆராய்ச்சியாளர்கள் இரண்டு கோட்பாடுடையவர்களாகப் பிரிந்து செயல்பட்டனர்.

பார்-ஹில் (Bar-Hill) போன்றோர் முழுவதும் தானாக இயங்கித் தகுதியான, தரமான மொழிபெயர்ப்பைச் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தினர். மற்றொரு சாரார் மொழிபெயர்ப்புக்கு ஆகும் செலவு குறைவாக இருக்க வேண்டும் என்றும், இதற்கான மனிதசக்தியையும் எந்திரப்பணியோடு சேர்த்துக்கொள்ளலாம் என்றும் வாதிட்டனர். இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து ஆராய்ந்ததின் விளைவாகக் கணிப்பொறி மொழியியலில் ஒரு குறிப்பிடத்தக்க மாறுதல்கள் நடந்தன. 1950-இல் ரெய்ஃபிளெர் (Reifler) என்பவர் முன்பதிப்பான் (Pre-editor) பின் பதிப்பான் (Post-editor) என்னும் கருவிகளைக் கணிப்பொறியோடு இணைத்தார். முன்பதிப்பான் அகத்தரவு தகவல்களைப் பகுத்து, தேவையான நிறுத்தற் குறிகளையிட்டுத் தரும். இது போலவே, பின்பதிப்பான் இலக்கு மொழிக்கு ஏற்ப வாக்கிய அமைப்புகளைச் செப்பம் செய்து தரும். ஆனால், 1954-இல் அட்டின்ஜெர் (Oettinger)

என்பவர் முன்பதிப்பான் தேவையில்லை; பின்பதிப்பான் மட்டும் போதும் என்று கூறினார். இப்போது பெரும்பாலும் முன்பதிப்பான் இல்லாமல், பின்பதிப்பானை மட்டும் பயன் படுத்தி மொழிபெயர்ப்பை நிகழ்த்தி வருகின்றனர்.

நோம் சாம்ஸ்கி (Noam Chomsky) 1959-இலும் 1965-இலும் வெளியிட்ட மாற்றிலக்கணக் கொள்கை (Transformation Grammar) மொழியியல் துறையில் பெரும் புரட்சியை உண்டாக்கி, இளம் மொழியியலார்களிடத்திலே புத்துணர்ச் சியை ஊட்டியது. கணிப்பொறி மொழியியலிலும்-குறிப்பாக மொழிபெயர்ப்பிலும் உத்வேகத்தைத் தந்தது. கணிப்பொறி மொழியியலார் சாம்ஸ்கியின் இலக்கணக் கோட்பாடு கணிப் பொறி மொழிபெயர்ப்புக்கு ஏற்றது; பொருத்தமானது என்று உணர்ந்தனர். மொழியிலக்கணம் என்பது இலக்கண விதி களின் கோவை என்றும், அது புதைநிலை, புறநிலை என்னும் இரண்டு அமைப்புக்களை உடையது என்றும் புதைநிலையில் உலக இயற்கை மொழிகள் பலவும் பொதுத்தன்மைகளை (universals) உடையன என்றும் எடுத்துரைத்து மொழி பெயர்ப்புக் கோட்பாட்டை மாற்றியமைத்து திறம்படச் செய்ய தூண்டுதல்கள் அளித்தன. கணேச சுந்தரம் தமது பல கட்டுரை களின் வாயிலாக மொழிபெயர்ப்புக்குத் தொடரமைப்புக் கொள்கை (PCG Theory) பொருத்தமுடையதுதான் என்று நிறுவியுள்ளார். ஆகவே, சூழற் கட்டுப்பாடற்ற தொடர மைப்பு இலக்கணம் (Context - free PCG - Theory) சாத்தியப் பட்டால், கணிப் பொறியின் மூலம் மொழிபெயர்ப்பு எளிதாகச் செய்ய இயலும்.

மாற்றிலக்கணக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது பாபெல் (BABEL) மொழிபெயர்ப்புத் திட்டமாகும். இத்திட்டத்தைப் பற்றி டி.டி. கிராஃபோர்டு (T.D. Crawford) தம் கட்டுரை ஒன்றில் தெளிவாக விவரித்துள்ளார். இத்திட்டத் தின்படி, ரஷ்யன் போன்ற மொழிகளிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழிபெயர்க்க 'வழிமுறை' தயாரிக்கப்பட்டது. வழிமுறை ஃபோர்டிரான்-4-இல் தயாரிக்கப்பட்டது. இவ்வழிமுறையின்படி

வேர்ச்சொற்களும் ஒட்டுக்களும் தனித்தனியே சேமிக்கப் பட்டன. மாற்றிலக்கண விதிகள் முறை மாற்றி (reverse), அதாவது, NP+VP→S என்று கையாளப்பட்டன. இவ்விதிகள் எவ்வளவு நுட்பமாக கையாள முடியுமோ அவ்வளவு நுட்ப மாகப் பகுக்கப்பட்டன. சேமிக்கப்படும் சொற்களுக்குக் குறி எண், இலக்கணப்பிரிவு எண், இணையான ஆங்கிலச் சொல் கொடுக்கப்பட்டன. சிறப்புப்பெயர்கள், கணக்கு மற்றும் இரசாயன வாய்பாடுகள் மட்டுமே புறத்தரவிற்கு அப்படியே மாற்றம் இல்லாமல் வரும்.

அமைப்பு மொழியியல், மாற்றிலக்கண மொழியியல் ஆகிய இரண்டாலும் தீர்க்க முடியாத பிரச்சனைகள் சில உள்ளன. கணிப்பொறி வாக்கியப் பகுப்பு செய்ய இயலும். ஆனால், சொல்லைத் தேர்ந்தெடுத்து ஒழுங்கு படுத்துவதில்தான் மயக்கத் தை (Ambiguity) தந்து விடுகின்றது. மனிதன் இம்மயக்கத்தைச் சூழல் அடிப்படையில் தவிர்த்துக் கொள்கிறான். மேலும், மனிதனின் உலக அனுபவமும் மயக்கம் களைவதற்குத் துணை யாக அமைகின்றது. ஆனால், கணிப்பொறியில் மயக்கம் களை வது இன்னும் சிக்கலாக உள்ளது. குறிப்பாகச் சொல்லப் போனால் பலபொருள் குறித்த ஒரே வடிவச் சொற்கள் (homographs/ homonymies) மிகுந்த சிக்கலைத் தருகின்றன. இச்சொற்கள் அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் சார்ந்த நூல்களில் அரிதாகக் காணப்படுவதால் பிரச்சனை ஒன்றும் இல்லை. இலக்கியங்களில் 'பல பொருள் குறித்த ஒரு சொல்' அதிகமாக ஆளப்படுவதால் இலக்கிய நூல்களை மொழி பெயர்ப்பது சவாலாக இருக்கின்றது.

எடுத்துக்காட்டாக, "Mary had a little lamb" என்னும் ஆங்கிலப் பாடலின் தொடரை மற்றொரு மொழியில் மொழி பெயர்க்கும் போது 28 வகையான விளக்கங்களை (Mary owned the lamb, Mary ate the lamb, Mary gave birth to the lamb; etc.) கொடுக்க இயலும். தானாக அறிவைப் பெற்று / கற்றுச் சூழலுக்குத் தக்கவாறு பொருளை உணர்ந்து செயல்படக் கூடிய கணிப்பொறிகள் தயாரிக்கப்படாவிட்டால் "முழுவதும் தானாக

இயங்கித் தரமான-உயர்வான மொழி பெயர்ப்பு" என்னும் இலட்சியம் சாத்தியமாகாது என்பதை இப்போது கணிப் பொறி மொழியியலார் உணர்ந்து வருகின்றனர்.

ஆகவே, கணிப்பொறியின் மூலம் இலக்கியம் அல்லாத நூல்களை நன்முறையில் மொழிபெயர்க்கலாம். ஆனால், வியா பார நோக்கில் இம்மொழி பெயர்ப்பு இலாபகரமாக இல்லை; சிக்கனமாகவும் இல்லை. இதனால் மனிதர்களைக் கொண்டே செம்மையாக மொழிபெயர்ப்பைச் செய்யலாம் என்ற எண்ணம் தோன்றும். பெரிய அளவில் வியாபார ரீதியில் கணிப்பொறி மொழிபெயர்ப்பு வளராததற்குக் காரணம் கணிப்பொறியின் அதிகமான விலையே. கணிப்பொறியின் விலை குறையக் குறைய மொழி பெயர்ப்பு வளரக்கூடும்.

அகராதி தயாரிப்பு

மொழி கற்கும் மாணவர்களுக்கும், கற்பிக்கும் ஆசிரியர் களுக்கும் ஆய்வாளர்களுக்கும் மொழிபெயர்ப்பாளர்களுக்கும் மிகுந்த துணைபுரிவது அகராதிகளாகும். இவற்றை மனிதர்களே ஓயாது உழைத்துத் தயாரித்து வந்தனர்; வருகின்றனர். அகர நிரல்களையும் (Glossaries), அகராதிகளையும், சொல்தொகை களையும் (Concordances) தயாரிக்கக் கணிப்பொறியைப் பயன் படுத்த முனைந்தனர். அதில் சிறந்த பல வெற்றிகளையும் முன்னேற்றங்களையும் கண்டுள்ளனர்.

கணிப்பொறி ஒரு நூலில் உள்ள எல்லாச் சொற்களையும் பகுத்து, தொகுத்து அகரவரிசைப் படுத்தி ஒவ்வொரு சொல்லும் நூலில் எந்த இடத்தில் வருகின்றது என்னும் குறிப்பையும் தரு கின்றது. ஒவ்வொரு சொல்லுக்குப் பக்கத்திலும் அச்சொல் வரும் பக்க எண், வரி எண், அல்லது பத்தி எண் ஆகிய குறிப்புக்களையும் தருகின்றது. சொல் தொகையில் அச்சொல் வரும் சூழல் (அச்சொல் வருகின்ற அடி) தரப்படுகின்றது,

அட்டை (card) அல்லது தாளின் வழியாக நூலை (text) அகத்தரவிற்குள் செலுத்திக் காந்தத் தட்டில் பதியச் செய்து பலமுறை சரிபார்த்து தவறில்லாத பிரதியாக (error-free text)

நூலை மாற்ற வேண்டும். பின்பு கணிப்பொறி மேற்கொள்ள வேண்டிய ஆணைத் தொடர்களைத் (intructional set) தயாரிக்க வேண்டும். கையால் சொல் அட்டவணை தயாரிக்க என்னென்ன செயல் முறைகளைக் கடைப்பிடிப்போமோ, அதைப் போலவே கணிப்பொறி தர்க்க ரீதியாகச் செயல்பட ஆணைத் தொடர்களைத் தயாரிக்க வேண்டும். சிறுபணிகளுள் 20-30க்கு உட்பட்ட ஆணைத் தொடர்களே இடம்பெறும். கணிப்பொறியில் புறத்தரவு அளிக்கும் சொல்நிரலை ஒளிப்படம் அல்லது தட்டச்சு மூலம் பதிய வைத்துக் கொள்ளலாம்.

வரலாற்று அகராதியை (Historical Dictionary) உருவாக்குவதில் கணிப்பொறி மிகுதியாகப் பயன்படுகின்றது. சொற்களைப் (entries) படியெடுத்து தொகுத்து வகைப்படுத்தி வரிசைப்படுத்தி வழங்குவதில் கணிப்பொறிகள் விரைவாகவும் துல்லியமாகவும் செயல்படுகின்றன. ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி (OED) தயாரிப்பதற்கு 50 ஆண்டுகள் ஆயின; தமிழ்ப் பேரகராதி (Tamil Lexicon) தயாரிக்க 12 ஆண்டுகளுக்கு மேல் ஆயின. ஆனால், கணிப்பொறியின் மூலம் காலநீட்டிப்பைக் குறைக்க இயலும். இரண்டு ஆண்டுகளில் செய்ய வேண்டிய வேலையை 3 மாதங்களில் செய்து விடும். பொதுவாகச் சொல் தொகைகளை (concordances) தயாரிப்பதில்லை. காரணம் அதிகப் பணச் செலவே. காலத்தைப் பொன்போலக் கருதினால் பணச்செலவைக் கருத்திற் கொள்ளாமல் கணிப்பொறியின் மூலம் இலக்கிய, மொழியியல், வரலாற்று ஆராய்ச்சிக்குத் தேவைப்படும் சொல்தொகைகளை உருவாக்க இயலும். முன்பு சில புகழ்பெற்ற ஆசிரியர்களின் நூற்களுக்கு குறிப்பிட்ட இலக்கியங்களுக்கு மட்டும் அகரநிரல்கள் கிடைத்தன. கணிப்பொறிக் கண்டுபிடிப்பின் பயனாக பல நூற்களுக்குப் பல அகரநிரல்கள் கிடைத்துள்ளன.

மொழிகற்பித்தல்

வளர்ந்த நாடுகளில் கணிப்பொறி கல்வித்துறையில் தன் செல்வாக்கைப் பதித்துள்ளது. 1941-இல் கணிப்பொறியைக் கண்டுபிடித்தாலும் கூட, 1961 - இல்தான் இல்லினாய்ஸ்

பல்கலைக் கழகம் 'Programmed Logic Automatic Teaching Operations' என்னும் பயிற்சித் திட்டத்தைத் தயாரித்தது. இதன் பின் கல்வித்துறையில் கணிப்பொறியைப் பயன்படுத்துவது பற்றிக் கருத்து வேறுபாடு ஏற்பட்டது, இருப்பினும், 1966-இல் ஸ்டான்ஃபோர்டு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பாட்ரிக் ஸப்பஸ் கணிப்பொறி வழித் தனிப்படிப்பு (Computerised Tutorial) திட்டத்தைக் கணக்கிற்கும் வாசிப்புக்கும் (Reading) உருவாக்கினார். ஸ்பானிஷ் மொழிக்குத் தயாரிக்கப்பட்ட கார் லோஸ் பாடத்திட்டம் (Computer Aided Review Lessons on Syntax) மிகவும் நல்ல பலனைத் தந்தது. அன்றாட வாழ்க்கையில் பயன்படும் ஸ்பானிஷ் இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு வழிமுறைகள் தயாரிக்கப்பட்டன.

1968-இல் குழந்தைகளுக்கு வாசிக்கும் திறன் அளிக்கும் திட்டத்தை அட்கின்சன் (Attkinson) தயாரித்தார். எழுத்துக் களைக் கண்டுபிடித்துக் கற்கும் முறையை மூன்று நிலைகளில் உருவாக்கித் தந்தார் முதல் நிலையில் தனி எழுத்துக்களையும் இரண்டாம் நிலையில் இரண்டு அல்லது கூட்டு எழுத்துக்களை யும், மூன்றாம் நிலையில் இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துக்களை அல்லது சிறு சொற்களையும் அடையாளம் கண்டு கற்றுக் கொள்ள பாடங்களைத் தயாரித்தார்.

முதல் நிலை இரண்டாம் நிலை மூன்றாம் நிலை



1968-இல் ஹாடன் மற்றும் கேய் (Haden & Key) பேச்சு மொழி ரஷ்யனைக் கற்பிக்க வேண்டிய பாடங்களைத் தயாரிக்க கணிப்பொறியைப் பயன் படுத்தினார். சிம்மன்ஸ் (1968) போன்றோர் மாணவர்களின் கேள்விக்குப் பதில் கூறும்

வகையில் கணிப்பொறியை அமைத்தனர். இத்திட்டத்தின் கீழ் 15 பாடங்கள் தயாரிக்கப்பட்டன. இவை வகுப்பறைக்கும் வீட்டுப்படிப்புக்கும் உதவுபவை. இதனை ரொனால்டு டி. டர்னர் (Ronald T. Turner) தயாரித்தார். இது டர்மௌத் கல்லூரியில் அமுலாக்கப்பட்டது. மதிப்பீடு செய்யப்பட்ட போது, இது நல்ல முறையில் மாணவர்களால் வரவேற்கப் பட்டது எனத் தெரிகின்றது.

கணிப்பொறி உதவியோடு கற்பிக்கும் முறையை 'CAT' (Computer Assisted Instruction) என்றும், 'C A I' (Computer Managed Instruction) என்றும் இரண்டு வகையாகக் கூறுவர். மொழிப்பயிற்சிக்கு ஏற்றதாகப் பலரும் இதனைக் கருது கின்றனர். இது தனிநபர் கற்றலுக்கு (Individualized Instruction) பெரிதும் துணை புரிகின்றது. நன்றாகப் படிக்கும் மாணவர் களுக்கும், மோசமாகப் படிக்கும் மாணவர்களுக்கும், இடைப் பட்ட மாணவர்களுக்கும் தேவைக்கேற்ப துல்லியமாகவும் விரை வாகவும் கற்பிக்கிறது. கற்றதைச் சோதித்துத் திருத்துகின்றது. நிறையச் செய்திகளைச் சேகரித்து மாணவர்களுக்குச் சொல் கிறது. ஒரே சமயத்தில் 4,000 மாணவர்களுக்குக் கூட கற்பிக்க இயலும். இது பாடப்பகுதிகளை வரிசைப்படுத்தவும் (grading), மொழிப்பாடத்தில் வந்துள்ள சொல்லின் வழக்கை (frequency) கணக்கெடுக்கவும் பயன்படுகின்றது.

இலக்கிய ஆய்வும் ஆக்கமும்

இலக்கியத்தின் பல்வேறு பரிமாணங்களை ஆராயக் கணிப் பொறி பயன்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட காலத்தைச் சேர்ந்த இலக்கியங்களிலிருந்து எளிய அலங்கார உத்திகளைத் தொகுக்க உதவுகின்றது. ஒரு நூலின் கருத்துப்பகுப்பு (Thematic Analysis), மூலபாட ஆய்வு (Textual Criticism), நடை (Style), சொல்லாட்சி (Diction), யாப்பமைப்பு போன்றவற்றை ஆராயவும் கணிப் பொறி துணைபுரிகின்றது. ஒரு நூலை ஒருவர் எழுதினாரா பலர் எழுதினரா என்ற பிரச்சனை எழும்போது அறிவியல் பூர்வமான விடையளிக்கக் கணிப்பொறி காத்திருக்கின்றது. தொல்காப்பியம், கலித்தொகை ஆகியவற்றின் ஆசிரியர்கள்-

திருவள்ளுவர், கம்பர் ஆகியோரின் காலங்கள்-சீவகசிந்தாமணி போன்ற நூல்களில் இடைச்செருகல் போன்றவற்றைத் துல்லிய மாக ஆராய கணிப்பொறி உதவும். ஓர் ஆசிரியரின் மொழி நடையைக் கண்டு பிடிக்க கணிப்பொறி சிறப்பாகப் பயன் படுத்தப்படுகின்றது. ஸ்விப்ட் மற்றும் அவரது சமகாலத்து எழுத்தாளர்களின் நடையைக் கணிப்பொறியின் மூலம் கணித் துள்ளார்கள்.

கணிப்பொறியின் மூலம் தமிழ் யாப்பினை ஆராய முடியும் என்பதை முதன்முதலில் செய்து காட்டியவர் எஸ். நம் பெருமாள். 1978-ஆம் ஆண்டு மதுரையில் நடந்த திராவிட மொழியியற் கழகத்தின் கருத்தரங்கில் அவர் வாசித்தளித்த கட்டுரை இதனைத் தெரிவிக்கின்றது. யாப்பருங்கலத்தின் அடிப் படையில் 'வழி முறை' தயாரித்து, 'மலர்மிசை' எனத் தொடங் கும் திருக்குறளுக்கு யாப்பமைப்பைக் கணிப்பொறியின் மூலம் விளக்கியுள்ளார்.

இலக்கிய ஆசிரியர் ஒருவர் தம் வாழ்நாளில் பல்வேறு கால கட்டங்களில் இலக்கிய நூற்களைப் படைத்திருக்க வேண்டும். அவரது நூல்கள் காலக் கண்ணோட்டத்தில் (Chronological) தொகுத்திருக்காவிட்டால், வரலாற்று முறையில் தொகுத்து வரிசைப்படுத்த உதவும். இதனால் ஒருவரின் சிந்தனை வளர்ச்சியை ஆராய இயலும்.

கணிப்பொறியின் மூலம் கவிதையை ஆக்க முடியுமா என்னும் முயற்சி 1962-ஆம் ஆண்டுக்குப் பின் தோன்றியது. இது பற்றி பல சோதனைகளும் நடைபெற்று கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. கணிப்பொறிக்கு வாக்கிய அமைப்பையும், இலக்கணக் கூறுகளுக்கு ஏற்ப வார்த்தைகளையும் கொடுத்தால் நூற்றுக்கணக்கான வாக்கியங்களைத் தோற்றுவிக்கின்றன. வாக்கியங்கள் யாவும் இலக்கணம் பிறழாதவை. ஆனால், அவைகள் ஒரு குறிப்பிட்ட யாப்பு வடிவத்துடனும் எதுகை யுடனும் இல்லை. புதுக் கவிதைகள் போலவே இருந்தன. மேலும், வாக்கியங்களுக்கு இடையே தர்க்க ரீதியான பொருள் தொடர்ச்சி இல்லை. மிச்சிகன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த

ஜான் மோரிஸ் (John Morris) ஜப்பானியக் கவிதைத் தொகுதியிலிருந்து சொற்களை எடுத்து 'ஹைகு' வகைக் கவிதைகளை உருவாக்கினார். 17 அசைகள் மூன்று அடிகளும் வருமாறு செய்வது கடினமாக இருந்தது. பொருளமைப்பு தொடர்பான சிரமம் இல்லை. 4,000 பாடல்களைத் தந்தன. ஆனால், சிலவே தரமுள்ளவை. பல சோதனைகளுக்குப் பின் "பேனாவும் தாளும் வைத்துக் கவிதை எழுதுவதே கணிப்பொறியின் மூலம் கவிதை எழுதுவதைக் காட்டிலும் எளிது – சிறந்தது" என்ற முடிவுக்குப் பலரும் வந்துள்ளனர்.

மொழியியல் ஆய்வு

மொழி பெயர்ப்பு, அகராதி தயாரிப்பு, மொழி கற்பித்தல் தவிர விளக்க, வரலாற்று, ஒப்பீட்டு மொழியியல் ஆய்வுகளிலும் கணிப்பொறி பயன்படுகின்றது. களப்பணியின் மூலம் வட்டார வழக்குச் சொற்களைத் தொகுத்த மொழியியலாருக்கு அகரநிரல் தயாரித்துக் கொடுக்க கணிப்பொறி உதவும்; ஒலிகள் கண்டு பிடிக்கப்பட்ட மொழிகளுக்கு ஒலியன்கள் வரையறை செய்வதில் துணைபுரியும். அழுத்தம் (stress) மாத்திரை (length) குரலிசை (intonation) ஆகியவற்றைக் கணிக்கவும் பயன்படும். திக்குவாய் (stuttering), நினைவிழப்பு (Aphasia) ஆகியவற்றால் பாதிக்கப் பட்ட குழந்தைகளின் பேச்சை ஆராய்ந்து, எவ்வகையினைச் சார்ந்தது என்று உறுதி செய்யவும் இது தேவைப்படுகின்றது.

பல மொழிகளில் உள்ள இனச்சொற்களையும் (Cognate words) இலக்கண விதிகளையும் ஒப்பிட்டு ஆராயப் பயன் படுத்திக் கொள்ளலாம். துர்ஹம் மற்றும் ரோட்ஜர்ஸ் (Durham and Rodgers) என்பவர்கள் ரோமானியக் குடும்பத்திலுள்ள மொழிகளை மீட்டுருவாக்கம் செய்ய கணிப்பொறியை உப யோகப்படுத்தினர். ஸ்மித் (1969) என்பவரும் வரலாற்று அடிப் படையிலான ஒலிமாற்றல் விதிகளைக் கொண்டு 'வழிமுறை' தயாரித்தார். 21 விதிகளையும் 500 மீட்டுருவாக்கம் செய்யப் பட்ட 'தொல்-இந்தோ-ஐரோப்பிய' வடிவங்களைக் கொண்டு சில தற்கால ரஷ்ய சொல்வடிவங்களைப் பெற்றார். இவ்வகையான ஆய்வு தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டு வருகின்றது.

பேச்சுத் துணைவன்

கீவ் சைபர்னடிக்ஸ் நிறுவனம் (Kiev Institute of Cybernetics), மத்திய தகவல் தொடர்பு ஆய்வு நிறுவனம் (Central Communi cations Research Institute) ஆகியவற்றைச் சேர்ந்த ரஷ்ய நிபுணர்கள் மனிதனுடன் பேசக்கூடிய கணிப்பொறியை உருவாக்கியிருக்கின்றார்கள்.* அதற்கு ரெக் – 1 (RECH-1) என்று பெயர். 1983-ஆம் ஆண்டு இறுதியில் மாஸ்கோவில் நடந்த அனைத்து நாட்டு பொருட்காட்சியில் (Nauka - 83) அது வெற்றிகரமாக இயக்கிக் காட்டப்பட்டது.

ரெக்-1 என்னும் கருவி ஏறக்குறைய 200 கட்டளைச் சொற்களைப் புரிந்து கொள்ளும். இத்திறமை சிக்கலான (complex) இயக்கத்திற்குப் போதுமானது. இக்கருவி பேசப் படும் சொற்களில் 9ɔ சதவீத அளவைப் புரிந்து கொண்டு கீழ்ப் படிகிற அளவுக்கு நம்பகமானது. சராசரியாக இரண்டு மனி தர்கள் பேசிக்கொள்ளும் இதே அளவுதான் புரிந்து கொள் கின்றார்கள். உரையாடுபவர் பேசுகின்ற சொல் காதில் சரி யாக விழாவிட்டால் ''என்ன சொல்கிறீர்கள்'' என்று கேட்கி றோம் அல்லவா? அதே போல இந்தக் கருவியும் கட்டளை புரியாமல் போனால், 'புரியவில்லை, தயவு செய்து மறுபடியும் சொல்லுங்கள்' என்று கேட்கும்.

ரெக்-1 கருவி ரஷ்ய மொழியிலும் உக்ரேனிய மொழியிலும் பேசுகிற மாதிரி, அமைக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், வேறு மொழிகளில் பேசுமாறும் அதை மாற்றியமைக்க முடியும். எல்லா மொழிகளுக்கும் பொதுவாகச் சில ஒலியன்கள் (Phonemes) உள்ளன. இந்த ஒலியன்களைத் தொகுத்துத்தான் ரெக் பேச்சைப் புரிந்து கொள்கின்றது. எனவே, ரெக்கிற்கு எவ்வளவு சொற்களை வேண்டுமானாலும் புரிந்து கொள்ள ''கற்றுக் கொடுக்கலாம்''. அதன் சொல்லாட்சிக்கு எல்லையே இல்லை. தனிச் சொற்கள் மட்டுமின்றி கோவையான மனிதப் பேச்சையும் புரிந்து கொள்ளும்படி ரெக்கை விரைவில் அமைத்து விட முடியும் என்று வல்லுநர்கள் நம்புகிறார்கள். அப்போது ரெக்குடன் பொழுது போக்காக அரட்டை அடிப்பது கூடச் சாத்தியமாகிவிடும்.

பேச்சைப் புரிந்து கொண்டு உரையாடும் கணிப்பொறிகளை உருவாக்க ஆய்வு நிகழ்த்தும் இந்திய நிறுவனங்களில் ஒன்று 'டாடா அடிப்படை ஆய்வு நிறுவனம் (Tata Institute of Fundamental Research) ஆகும். இந்த நிறுவனத்தைச் சேர்ந்த பேச்சு மற்றும் டிஜிட்டல் அமைப்புக்குழு (Speech and Digital systems) இவ்வாய்வில் கவனம் செலுத்தி வருகின்றது. இக்குழு, கணிபபொறி புரிந்து கொண்டு பதிலளிப்பதற்கு அடிப்படையான ஒலிகளின் சேர்க்கைகளை எளிமைப்படுத்தும் விதிகளைக் கொண்ட ஒரு திட்டத்தையும் உருவாக்கியுள்ளனர்.

முடிவுரை

கணிப்பொறி மொழியியல் அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து, ஜப்பான் போன்ற நாடுகளில் சிறந்த வளர்ச்சி பெற்றுள்ளது. சமீப காலத்தில்தான் இந்திய அரசு கணிப்பொறியைப் பல நிலைகளில் பயன் படுத்துவதற்கு ஊக்கமும் உதவியும் அளித்துள்ளது. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் உள்ள பாடத்திட்டத்தில் கணிப்பொறி அறிவியல் (Computer Science) இடம் பெறத் தொடங்கியுள்ளது. கணிப்பொறித் தட்டச்சுக்களும் இந்தி, தமிழ், தெலுங்கு, ஒரியா மொழி எழுத்துக்களைத் தாங்கி வெளிவந்துள்ளன-தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் 'கணிப்பொறி மொழியியலில்' ஆய்வு நிகழ்த்தி வருகின்றது. எனவே, கணிப்பொறி மொழியியல் தமிழகத்தில் நல்லதொரு வளர்ச்சி பெறும் என்பது உறுதி.

துணை நூல்கள்

சுஜாதா, 1983 கம்யூட்டரின் கதை, அன்னம் வெளியீடு, சிவகங்கை.

Bott, M. F., 1972 "Computational Linguistics" *New Horizons in Linguistics* (ed : John Lyons) Penguin Books Ltd, Harmonds Worth, 1972.

Ganesh Sundaram, P. C., 1981 "The use of computer in the Study of Normal and Defective speech," *IJDL, Vol. X, No. 2.*

Hays, David G., 1971 "Applied Computational Linguistics" *Applications of Linguistics* (ed: G. E, Parren and J. L. M. Trim) Cambridge University Press.

Jones, Alan & R. F. Church House (ed) 1976 *Thc Computer in Literary and Linguistics Studies*, University of Wales Press.

Namperumal, S., 1978 "Automatic Metre Analysis," *Dravidian Linguistics Association's Conference* (Trivandrum, (unpublished), Madurai.

Wisbey, R. A. (ed)., 1971 *The Computer in Literary and Linguistic Research*, University Press, Cambridge.

[illegible] 1971 "[illegible] Computational Linguistics" [illegible] Patten and [illegible] University Press.

[illegible] 1976 [illegible] University of Wales [illegible]

[illegible] 1973 "Automatic [illegible] Analysis," Proceedings [illegible]

[illegible] 1981 [illegible] University Press, Cambridge.

மொழியியல் 9. 1 & 2 (1985)

மலாய் மொழியில் சில தமிழ்ச்சொற்கள்

கி. கருணாகரன்
மலேசியா

கீழ்க்காணும் தமிழ்ச்சொற்கள் மலாய் மொழியில் நிலை பெறாக்கம் பெற்று வழக்கில் இடம் பெற்றுள்ளன.

	தமிழ்ச் சொல்	மலாய் மொழி வழக்கு	
1.	அப்பம்	*apam*	(pp→p)
2.	வகை	*bagai*	(v→b ṭ>d,)
3.	வெடி	*bedil*	(ū > b, ϕ→l) →ϕ)
4.	செருப்பு	*cerpu*	u→ϕ (pp→p),
5.	செட்டி	*ceti*	(ṭṭ→ṭ)
6.	கப்பல்	*kapal*	(pp→p)
7.	கட்டில்	*katil*	(ṭṭ→t)
8.	காவல்	*kawal*	(v→w)

9.	கடை	*kedai*	(*a*→*e*, *ḍ*→*d*)
10.	கொத்தமல்லி	*ketumbar*	(*o*→ *e*, *tt*→*t*, etc)
11.	குளம்	*kolam*	(*u*→*o*, *ḷ*→*l*)
12.	கோடி	*kodi*	(*ḍ*→*d*),
13.	கோயில்	*kuil*	(*o:*→*u*, *y*→*φ*)
14.	மாளிகை	*maligai*	(*ḷ*→*l*)
15.	வேம்பு	*mambu*	(*v* *m*, *e:*→*a*)
16.	மந்தம்	*mandum*	(*a*→*u*)
17.	மாணிக்கம்	*manikam*	(*kk*→*k*)
18.	மாப்பிள்ளை	*mempelai*	(*pp*→*mp*, *a:*>*e*, *i*→*e*, *ḷḷ*→*l*)
19.	மாம்பழம்	*mempelam*	(*a:*→*e*, *a* > *e*, *ḻ*>*l*)
20.	மரைக்காயர்	*merikan*	(*a*→*e*, *ai*→*i*, *kk*→*k*, *yar*→*an*)
21.	முத்து	*mutu*	(*tt*→*t*)
22.	நீலம்	*nilam*	
23.	பெட்டி	*peti*	(*ṭṭ*→*t*)
24.	பொடி	*podi*	(*ṭ*→*d*)
25.	பூவாடை	*puadai*	(*v*→*φ*, *ḍ*→*d*)
26.	சதை	*sate*	(*ai*>*e*)
27.	சவுக்கு	*sauku*	(*v*→*φ*, *kk*→*k*
28.	தோழன்	*tualan*	(*o:*→*ua*, *ḻ*>*l*)

29.	திறை	*tirai*	(ṟ→r)
30.	தூக்கு	*tuku*	(*kk*→*k*)
31.	தண்டி (மூங்கில்)	*dandi*	(ṇṭ→*nd*)
32.	சாட்டை	*cemeti*	(*a:*>*e*, ṭ>*m* *ai*>*i*)

தமிழாக்கம் செய்யப்பட்டுள்ள சில வடமொழி மற்றும் பெர்சோ - அரோபிய மொழிச்சொற்கள் தமிழிலிருந்து மலாய் மொழியில் எடுத்தாளப்படுகின்றன.

	தமிழாக்கம் செய்யப்பட்டுள்ள சொல்	மலாய் மொழி வழக்கு	
1.	லிங்கம்	*linggam*	(*ng*→*ngg*)
2.	லோகம்	*logam*	
3.	லாடம்	*ladam*	(ḍ→*d*)
4.	செடிலிங்கம்	*sedelinggam*	(*e*→*i*, —ng>ngg)
5.	சகலமும்	*segala*	(*a*>e̱, *m*>ϕ)
6.	ராகம்	*ragam*	
7.	சாம்பிராணி	*semberani*	(*a:*>*e*, e̱>*e*, ṇ>n̲)

மேலே, எடுத்துக்காட்டப்பட்டுள்ள **39** சொற்களும் இன்றைய மலாய் வழக்கில் (எழுத்து & பேச்சு) இடம் பெற்றிருப்பவையாகும். இச்சொற்கள் அனைத்தும் மலாய் மொழி அகராதிகளில் இடம்பெற்றுள்ளன. இச்சொற்களனைத்தும் மலாய்-தமிழ் மொழித் தொடர்பால், குறிப்பாக, அன்றாட வழக்கு நிலைத் தொடர்பால் மலாய் மொழியின் வழக்கிற்கு வந்தவையே. இவற்றில் பெரும்பாலான தமிழ்ச்சொற்கள் பினாங்கு மாநில தமிழ்க்கிளைமொழியின் தாக்கத்தால் மலாய் மொழிக்கு வந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

துணை நூல்கள்

Macmillan's Malay- English English - Malay Dictionary (1976)

Study of Malay Dialects (1970)

மொழியியல், 9. 1&2 (1985)

இக்காலத் தமிழில் எடுத்துக்கூறுதல்[1] (Reported Speech)

முத்துச்சண்முகன் & தாமஸ் லெய்மன்
பாண்டிச்சேரி

ஆங்கிலத்தில் தன்கூற்று (Direct Speech) பிறர் கூற்று (Indirect Speech)என்று இருவகைக் கூற்றுக்கள் இருக்கின்றன. இரண்டும் தெளிவாக வேறுபட்டு வரக்காண்கிறோம். ஒரே இடத்தில், தன்கூற்றைப் பிறர் கூற்றாகவோ, பிறர் கூற்றைத் தன்கூற்றாகவோ மாற்றிக் கூறமுடியும். இவற்றிற்கு நேரான கூற்றுக்கள் தமிழில் இல்லை. ஆங்கிலத்தைப் போல ஒன்றை மற்றொன்றாக மாற்றவும் முடியாது. அந்த அந்த இடத்திற்கு உரியதைத்தான் பயன்படுத்தமுடியும். இந்தக் கருத்துக்களைத் தமிழில் கூறும் முறை வேறு. எனவேதான் **Direct Speech, Indirect Speech** என்பவற்றிற்கு நேரான சொற்களைப் பயன் படுத்தாது, எடுத்துரைத்தல் – Reported Speech என்ற வேறொரு தொடரைப் பயனபடுத்துகிறோம். இதற்குத் தமிழில் மூன்று வகையான முறைகள் காணப்படுகின்றன. (1) **என் / என்ற என்ற**

உருபுகளால் செயற்படும் முறை. (2) **ஆக** என்ற வினையடை உருபு தொழிற்பெயரோடு இணைத்து செயற்படும் முறை. (3 செய்ய என்ற வாய்பாட்டு வினையெச்சத்தொடர்; **படி** என்ற உருபு இணைந்த வினையடைத் தொடர் முதலியன.

முதல் வகை

பெரும்பாலும் தமிழில் **என்-** என்ற புகுத்தல் உருபின் வினைமுற்று வடிவாலோ, அல்லது **என்று** எனும் அதன் வினை எச்சத்தொடரை அடுத்துச் சொல், கேள் போன்ற பேச்சுத் தொடர்பான வினைகளைப் பயன்படுத்தியோ தன்கூற்று வாசகத்தைப் புகுத்துகிறோம். ஆங்கிலத்தோடு ஒப்பிட்டுக் கூறவேண்டுமானல், தன்கூற்றும் பிறர்கூற்றும் கலந்த ஒன்றே தமிழில் பயன்படுகிறது என்று கூறலாம். தன்கூற்றில் எத்தகைய வேறுபாடும் இல்லாமல், பிறர் கூற்றாக அதனைக் கூறமுடியும்.

1.1. முதலில், தன்கூற்றுவடிவில் வருகின்ற வாக்கியங்களைக் காண்போம்.

1. அவன் ஐந்து மணிக்கு வாருங்கள் என்றான் / என்று கூறினான்.

இங்கு, மேற்கோள் கூற்றுத் தெளிவாகத் தன்கூற்று முறையில் அமைந்திருக்கக் காண்கிறோம். ஐந்து மணிக்கு வாருங்கள் என்பது தன்கூற்று. இது A (1-இல் அவன்), B-இடம் கூறியது. அதனை வாங்கி இப்பொழுது B, அதையே C-இடம் கூறுகின்றான்.

$$A \xrightarrow{X_1} B \xrightarrow{X_1} C$$

X_1 என்பது கூறிய செய்தியைச் சுட்டும்.

இத்த வாக்கியத்தை ஆங்கிலத்தில் சொல்லுக்குச் சொல் மொழிபெயர்க்க வேண்டும் என்றால், He - to five O'clock - you (honorific / plural) come -he said என்று கூறவேண்டும். ஆங்கிலத்தில் இதற்குறிய மொழி பெயர்ப்பு He said "come at five O'clock". இங்கு வருகின்ற ஏவல் வினைத்தொடர் "ஐந்து

மணிக்கு வாருங்கள்" என்பது. தன்கூற்று வடிவில் எத்தகைய மாற்றமும் இல்லாது வந்திருக்கிறது. இதனை நாம் பிறர்கூற்று வடிவில் சொல்வதில்லை.

எனவே ஏவல் வினைத்தொடர் தன்கூற்றுவடிவில் வரும்.

1.2. இனிப் பிறர் கூற்றில் அமைந்த வாக்கியம் ஒன்றைக் காண்போம்.

2. அவன் நீங்கள் ஊருக்குப் போகிறீர்கள் என்றான்/என்று சொன்னான்.

இங்குப் பேசுபவர் **A.** அவர் இப்பொழுது **B** (2-இல் அவன்), **C** ஐப்பற்றித் தன்னிடம் கூறியதை (இங்கு **C** கேட்பவர்) **C** இடமே கூறுகிறார்.

A,B – இடம் கூறியது *3*-ஆவது வாக்கியம்.

3. அவன் (**C**) ஊருக்குப் போகிறான்.

A,C - இடம் கூறுவது 4-ஆவது வாக்கியம்.

4. அவன் (**B**) நீங்கள் (**C**) ஊருக்குப் போகிறீர்கள் என்று சொன்னான்

B ——— **C** ——— **A** —**C**— **C**

—**C**— → **C**- ஐப்பற்றி என்று பொருள் படுத்துக.

இதனை ஆங்கிலத்தில் சொல்லுக்குச் சொல்மொழிபெயர்க்க வேண்டும் என்றால் he - you (honorific) - to town- is going (honorific) - he said என்று கூறவேண்டும். ஆங்கில மொழி பெயர்ப்பு He said that you are going to the town. இது மேலே உள்ள 2,4 தமிழ் வாக்கியங்களைப் போல் இருக்கிறது. ஆங்கிலத்தில் இது தன்கூற்றாயின் He said "He (C) in going to the town" என வரும். இது *3*-ஆவது வாக்கியத்தைப் போல் இருக்கிறது. அது தன்கூற்று வடிவில் அமைந்திருக்கிறது ஆனால் 2-ம், 4-ம் இவ்வாறு வரமுடியாது.

ஆங்கில மரபைப் பின்பற்றிச் சிலர் இப்பொழுது, அவன் சொன்னான்: "நீங்கள் ஊருக்குப் போகிறீர்கள்." என்று எழுத முற்படுகின்றனர். இது தமிழ் மரபுக்கும் ஒவ்வாது; ஆங்கில மரபுக்கும் ஒவ்வாது.

1.3. பெரும்பான்மையான இடங்களில், எடுத்துக்கூறு வாக்கியங்களில் சில கூறுகள் தனகூற்று வடிவிலும், மற்ற கூறுகள் பிறர்கூற்று வடிவிலும் வரக்காணலாம். புகுத்தப்பட்ட வினைமுற்று எத்தகைய மாற்றமும் இல்லாத தன்கூற்று வடிவிலேயே வரும். மறைமுகச் செயப்படுபொருள் (Indirect object), உடைமைப் பெயர்கள், கால வினையடை இவைகள் எல்லாம் பிறர் கூற்றிற்கு உரியனபோல், அதாவது எடுத்துக் கூறுபவரை மையமாகக் கொண்டு அமைந்திருக்கும்.

1.3.1. முதலில் மாறாது தன்கூற்று வடிவில் வரும் வினைமுற்றைக் காண்போம். புகுத்தப்பட்ட மேற்கோள் வாசகத்தின் எழுவாயும், தலைவாசகத்தின் எழுவாயும் ஒன்றாக இருக்குமாயின், புகுத்தப்பட்ட மேற்கோள் வாசக வினைமுற்று தன்மை விகுதிகளையே பெற்றுவரும். எழுவாய்க்குத் தக்கவாறு அவ்விகுதி ஒருமையாகவும் பன்மையாகவும் இருக்கும்.

5.	நான் நீ அவன் அவள் முருகன்	வருகிறேன்	என்றேன் என்றாய் என்றான் என்றாள் என்றான்
		என்று	சொன்னேன் சொன்னாய் சொன்னான் சொன்னாள் சொன்னான்

தலைவாசகத்தில் வரும் எழுவாயைப் பொறுத்து வினைமுற்றில் திணை, பால், இட உருபுகள் மாறுகின்றன. ஆனால் புகுத்தப்படட வாசக வினைமுற்று தன்மை ஒருமையில், தன் கூற்று வடிவிலேயே வருகிறது.

இனி இதைப் போல் பன்மையைக் காண்போம்.

6.

நாங்கள்	வருகிறோம்	என்றோம்	என்று	சொன்னோம்
நீங்கள்		என்றீர்கள்		சொன்னீர்கள்
அவர்		என்றார்		சொன்னார்
அவர்கள்		என்றார்கள்		சொன்னார்கள்
மாணவர்கள்		என்றார்கள்		சொன்னார்கள்

இங்கும், முன்பு கூறியதுபோலவே, புகுத்தப்பட்ட வாசக வினைமுற்று திணை, பால், எண், இடம் இவற்றைப் பொறுத்து மாறுவதில்லை. தன்கூற்று வடிவில் தன்மைப் பன்மை வினை முற்றாகவே வருகிறது.

1. 3. 2. தலைவாசகத்தின் எழுவாய் உம்மைத்தொடரால் இணைந்த வாசகமாயினும், பரப்பு மாற்றுப்பெயராயினும் **(Distributive Pronoun)** வினைமுற்று, தன்மை ஒருமையாகவே வரும்.

7. { அவனும் அவள் தம்பியும் / அவரவர் } வருகிறேன் என்றனர்.

1. 3. 3. அடுத்து, புகுத்தப்பட்ட வாசகத்தின் எழுவாயும், தலைவாசகத்தின் எழுவாயும் வேறாக இருக்கும் தொடர்களைச் காண்போம். இங்கும் புகுத்தப்பட்ட வினைமுற்று மாறாமல் தன்கூற்று வடிவிலேயே வரும்.

8, சாந்தி அவர் வந்திருக்கிறார் என்று கூறினாள்.

தலை வாசகத்தின் எழுவாய் சாந்தி. புகுவாசகத்தின் எழுவாய் அவர். இரண்டும் வேறு. புகுவாசக வினைமுற்று தன்கூற்று வடிவிலேயே வந்திருக்கின்றது. சாந்தி கூறியது ''அவர் வந்திருக்கிறார்'' என்பது. அது நிகழ்காலத்தில்

இருக்கிறது. தலைவாசக வினைமுற்று இறந்த காலத்தில் வந்தாலும், இது மாறவில்லை. சாந்தி ஒரு மாதத்திற்கு முன்பே இதனைக் கூறி இருக்கலாம். புகுவாசக வினைமுற்று இறந்த காலமாயின் சாந்தி சொல்வதற்கு முன்பே அவ்வினை நிகழ்ந்து, சாந்தியும் அதனை இறந்த காலத்திலேயே கூறி இருக்கவேண்டும்.

9. சாந்தி அவர் வந்திருக்கிறார் என்று கூறினாள்.

மேற்கோள் வாக்கியத்தின் மறைமுகச் செயப்படுபொருள் உடைமைப் பெயர்த் தொடர், கால வினையடை, இவை, எடுத்துக் கூறுகின்றவனை மையமாகக்கொண்டு மாறி வரும்.

A, B- இடம் கூறுகிறான் - 10 - ஆவது வாக்கியம்.

10. நாளை நான் உங்களுக்கு உங்கள் பணத்தைத் தருகிறேன்.

இப்பொழுது B, இதனை, மறுநாள் மூன்றாமவன் C இடம் கூறுகிறான் என்றால்,

A → B → C - 11–ஆவது வாக்கியம்.

11. இன்றைக்கு எனக்கு என் பணத்தைத் தருகிறேன் என்றான்,

இங்கு மாற்றங்களைக் காண்க - பிறர் கூற்றிற்குரியவை போல் மாற்றங்கள் அமைந்திருக்கின்றன.

நாளைக்கு ——→ இன்றைக்கு (கால வினையடை)

உங்களுக்கு ——→ எனக்கு } உடைமைப் பெயர்.
உங்கள் → என்

ஆனால் வினைமுற்றில் எத்தகைய மாற்றமும் இல்லை.

இவ்வாக்கியம், மேற்கோள் கூற்றில் தன் கூற்றும் பிறர் கூற்றும் கலந்து வரும் இயலபைக் காட்டுகிறது.

இது வரையிலும் என்/என்று என்ற புகுத்தல்/மேற்கோள் வாக்கியங்களைக் கண்டோம். இவற்றைத் தவிர, வேறும் சில உத்திகளைத் தமிழ்மொழி பயன் படுத்துகிறது.

இரண்டாவது வகை

மேற்கோள் வாக்கியத்தில் வரும் வினைமுற்றைத் தொழிற் பெயராக்கி, அத்தொழிற் பெயரோடு **ஆக** என்னும் வினை யடை உருபை இணைத்து, பேச்சினை உணர்த்தும் வினை முற்றுக்களால் முடிக்கிறோம். இதனால், பெயர்ப் பயனிலை பெற்றுவரும் வாக்கியங்களை இவ்வாறு மாற்றிப் பயன்படுத்த முடியாது. ஏவல் வினையும், வினாவும் இவ்வாறு வருவதில்லை. வினைமுற்று இருப்பின் அதனையே இவ்வாறு மாற்ற முடியும்.

12. கோபால் வந்ததாகச் சொன்னார்கள்/சொல்கிறார்கள்/ சொல்வார்கள்.

13. அவன் வீட்டிற்குப் போனதாகச் சொன்னேன்.

14. முருகன் கடைக்குப் போகிறதாகச் சொன்னாய்.

15. நீ சாப்பிட்டுவிட்டதாகச் சொன்னாள்.

16. முருகன் (தன்/அவன்) பாடத்தைப் படித்து விட்டதாகச் சொன்னான்.

மேலே உள்ள வாக்கியங்களில் மாற்றுப்பெயர்கள், பேசுபவனை மையமாகக் கொண்டு மாறுகின்றன. இதனால் இவை பிறர்கூற்று வகையில் அமைந்திருக்கின்றன. அன்றியும் தலை வாசகத்திற்கும், புகு வாசகத்திற்கும் எழுவாய் ஒன்றாக இருக்குமாயின் (16), புகு வாசகத்தின் எழுவாயை விட்டுவிடலாம். அல்லது எதிரொலி மாற்றுப் பெயரால் **(reflexive pronoun)** குறிக்கலாம்.

ஆக என்பது, **ஆகு** என்ற வினையின் செயவென் எச்சம். செயவென் எச்ச வாசகங்கள் **(clause)** செயப்படுபொருள் வாசகமாகவும், வினையடை வாசகமாகவும் வரலாம். இங்கும் ஆக என்றும் உருபேற்றும் இவ்வாசகங்கள் இவ்விருவகையிலும்

செயற்படுகின்றன. 12-வது வாக்கியத்தை ஐ வேற்றுமை உரு பெற்ற இடப்பெயர்களாலோ **அப்படி** என்ற வினையடை யாலோ கூறமுடியும். அது, அத்தொடர் செயப்படுபொரு ளாகவும், வினையடையாகவும் செயற்படுவதைச் சுட்டும்.

17. முருகன் வந்ததாகச் சொன்னார்கள். நானும் அதை/ அப்படிச் சொன்னேன். அதை என்பது செயப்படுபொருள் தன்மையையும், **அப்படி** வினையடை தன்மையையும் சுட்டும்.

மூன்றாவது வகை

இறுதியாக, நேரடி ஏவல் பொருளில் வரும் மேற்கோள் வாசகம். செய்ய என்ற வாய்பாட்டுத் தொடரோ, அல்லது அஃறிணை எதிர்கால வினைமுற்று **படி** என்ற வினையடை உரு பேற்றோ வருதல் இவ்வகையில் அடங்கும். இவ்விரண்டற்கும் உரிய எழுவாய்ப்பெயர் ஐ வேற்றுமை உருபேற்றே வரும்.

18. நான் அவனை { வர(ச்) / வரும்படி(ச்) } சொன்னேன்.

19. நீங்கள் அவனிடம் என்னை { வர(ச்) / வரும்படி(ச்) } சொன் னீர்கள்.

மேலே செய்யவென் எச்ச வாசகம் செயப்படுபொரு ளாகவும **படி** என்பதால் முடியும் வாசகம் வினையடை வாசக மாகவும் செயற்படுகின்றன,

---

1. இதைப்பற்றி விரிவாக எந்த ஆராய்ச்சியும் வந்ததாகத் தெரியவில்லை. மு. சண்முகம் பிள்ளை, **Spoken Tamil-Part I** (1968 ப. 120-127) **A Tamil Reader for Beginners-Part II** (1968. ப. 179-189) ஆகிய இரு நூல்களிலும் இதற்கென ஒரு பாடத்தை இணைத்து விளக்க முயன்றார். அதுவும் அவ்வளவு விரிவாக இல்லை. வெளிநாட்டார் எழுதிய தமிழ் இலக்கண நூல் களிலும் இதைப்பற்றி விரிவாக எதுவும் கூறவில்லை. துணை நூற் பட்டியலைக் காண்க. இதைப் பற்றிப் பலரும் சிந்தித்துத் தெளிவு பெற இக்கட்டுரை உந்துதலாக இருக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

துணை நூல்கள்

Arden, A. H. 1976, *A Progressive Grammar of the Tamil Language*, The Christian Literature Society, Madras, (pp.25-26).

Jotimuttu, 1970, *A Guide to Tamil*, The Christian Literature Society, Madras (Lesson 65. pp. 152-153).

Pope, G.U. 1979, *A Handbook of the Tamil Language*, Asian Educational Service, New Delhi, (pp. 69-70).

Schiffman, Harold, 1979, *A Grammar of Spoken Tamil*, The Christian Literature Society, Madras (pp. 67-68).

Shanmugam Pillai, M. 1968, *Spoken Tamil–Part II*. Annamalai University, Annamalainagar, (Lesson 15 pp. 120-127).

——— 1968, *A Tamil Reader for Beginners - Part II*, Madurai (Lesson 6. pp. 179-189).

மொழியியல் 9. 1 & 2 (1985)

விவசாயத் தொழில் கலைச்சொற்கள் - ஓர் ஒப்பாய்வு*
(புதுவை - காரைக்கால் பகுதிகள்)

மு. முருகேசன்
அனைத்துலகத் திராவிட மொழியியல் கழகம்
புதுவை மையம்

புதுவை மாநிலம் பாண்டிச்சேரி, காரைக்கால், மாகை, யானம் என நான்கு பகுதிகளாக இடையிடிட்டுத் தனித்தனியாக வெவ்வேறிடங்களில் இருப்பினும் அனைத்தும் புதுவையின் ஆட்சிக்குட்பட்டு ஒரே அரசின்கீழ் இருந்து வருகின்றன. இவற்றில் பாண்டிச்சேரி, காரைக்கால் பகுதிகள் தமிழகத்தின் ஊடேயும், மாகை கேரளாவின் ஊடேயும், யானம் ஆந்திராவின் ஊடேயும் இருக்கின்றன.

---

* இக்கட்டுரையை உருவாக்க எனக்குப் பெரிதும் உதவிபுரிந்த மைய இயக்குநர் டாக்டர். முத்துசண்முகம் பிள்ளை அவர் களுக்கு நான் பெரிதும் நன்றியுடையேன்.

பாண்டிச்சேரியும் – காரைக்காலும் தமிழகத்தால் சூழப் பட்ட பகுதிகளாக இருப்பினும், இவ்விரண்டு பகுதிகளும் வேறு பட்ட சூழ்நிலைகளில் அமைந்துள்ளன. பாண்டிச்சேரி பகுதி தென்னாற்காடு மாவட்டத்தால் சூழப்பட்டும், காரைக்கால் பகுதி தஞ்சை மாவட்டத்தால் சூழப்பட்டும் இருக்கின்றன. இவ்விரு பகுதிகளும் ஏறத்தாழ 150கி. மீட்டர் தூரம் இடை யிட்டுப் பிரிந்திருக்கின்றன. இவ்விடையிட்ட பகுதி தமிழகம். இவ்விருபகுதிகளிலும் தமிழின் இருவேறு வட்டாரக் கிளை மொழிகள் பேசப்படுகின்றன.

தமிழ்மொழியினைத் தாய்மொழியாகக் கொண்ட இவ்விரு பகுதிகளிலும் முக்கியத் தொழில் விவசாயமாகும்.

இவ்விரு பகுதிகளிலும் வாழும் மக்கள் மேற்கொண் டிருக்கும் இத்தொழிலில் பல்வேறு விவசாயக் கலைச்சொற்கள் வழக்கிலிருக்கின்றன.

அவற்றில் பாண்டிச்சேரி பகுதியில் வழங்கும் சொற்களில் சில காரைப் பகுதியில் வழக்கில் இல்லை. இதுபோன்றே காரைப் பகுதியில் வழங்கும் சொற்களில் சில, பாண்டிச்சேரி பகுதியில் வழக்கில் இல்லை. இவ்விரு பகுதிகளில் வழங்கும் விவசாயத் தொழிற் கலைச்சொற்களை ஆய்வதின்மூலம் நாம் தமிழின் இருவட்டாரக் கிளைமொழிச் சொற்களின் வேறுபாட்டைக் கண்டுகொள்ளலாம்.

பாண்டிச்சேரியிலும், காரைக்காலிலும் 'வன்னியர்' இனத் தவர் அதிகமான அளவில் விவசாயத் தொழிலில் ஈடுபட்டு உள்ளனர். பண்டிச்சேரிபகுதியில் வாழ்பவர்கள் தங்களைக் கவுண்டர் எனறும், காரைப்பகுதியில் வாழ்பவர்கள் தங்களைப் படையாட்சி என்றும் அழைத்துக் கொள்கின்றனர்.

இக்கட்டுரைக்காக, பாண்டிச்சேரி பகுதியாகிய மண்ணாடிப் பட்டு கொம்மியூனைச் சேர்ந்த கலிதீர்த்தாள்குப்பம் என்னும் கிராமத்திலும் காரைக்கால் பகுதியில் நெடுங்காடு கொம்மி

யூனைச் சேர்ந்த பஞ்சாட்சரபுரம் கிராமத்திலும் களஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இங்கு இடம்பெற்றுள்ள சொற்கள் வழக்கில் உள்ளவைகளுள் ஒரு பகுதியே; இன்ன பிறவும் உள்ளன.

இவ்விரு பகுதிகளிலும் விவசாயத்தோடு தொடர்புடைய பல சொற்கள் திரட்டப்பட்டன. பின்பு, ஒவ்வொரு சொல்லுக்கும் இணையான மாற்றுச்சொல் மறுபகுதியில் திரட்டப்பட்டன. அவ்வாறு திரட்டப்பட்டதில் பல சொற்களுக்கு இணையான சொற்கள் கிடைக்கவில்லை. மாற்றுச்சொற்கள் இருப்பின் அவை திரட்டப்பட்டன. இம்முறையில் இவ்விரண்டுப் பகுதி விவசாயக் கலைச்சொற்கள் ஒப்பாய்வு மேற்கொள்ளப் பட்டது.

பாண்டிச்சேரி – காரைக்கால் பகுதிகளில் விவசாயத் தொடர்பாக வழங்கும் கலைச்சொற்களையும் அதன் தொடரியங்களையும்

1. பாண்டிச்சேரி – காரைக்கால் ஆகிய இருபகுதிகளுக்கும் பொதுவானவை
2. பாண்டிச்சேரி – காரைக்கால் இரு பகுதிகளுக்கும் வேறுபட்ட சொற்கள்
3. பாண்டிச்சேரி பகுதிக்கே சிறப்பாக உரியவை

என்ற பகுதிகளின் உள்ளே,

அ) இயற்கைத் தொடர்புடைய சொற்கள்

ஆ) விவசாயக் கருவிகள்

இ) நாற்று

ஈ) பயிர்

உ) அறுவடை

ஊ) விவசாய பழக்க வழக்கங்கள்

என்ற பிரிவுகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

ஒரு கருத்தை வெளியிட பாண்டிச்சேரி - காரைக்கால் இரு பகுதிகளிலும் ஒரே ஒரு சொல் வழக்கிலிருப்பின், அச்சொல் பாண்டிச்சேரி - காரைக்கால் ஆகிய இரு பகுதிகளுக்கும் பொது வானது என்ற முதற் பிரிவில் அடங்கும். ஒலி நிலையில் மாற்றங்கள் இருப்பின் அவை **2.1.** (அ) என்ற பிரிவில் அடங்கும்.

ஒரே கருத்தை வெளியிட பாண்டிச்சேரி பகுதியில் ஒரு சொல்லும், காரைக்கால் பகுதியில் மற்றொரு சொல்லும் வழங்குமாயின், அவை அவ்விரு பகுதிகளுகும் வேறானவை என்ற இரண்டாம் பிரிவில் அடங்கும்.

ஒரு கருத்தை வெளியிட ஒரு பகுதியில் மட்டும் ஒரு சொல் கிடைக்கப் பெற்று, மற்றொரு பகுதியில் அதற்கு இணையான சொல் கிடைக்கவில்லை எனில், அச்சொல் அப்பகுதிக்கே சிறப் பாக உரியதாகக் கொள்ளப்பட்டுள்ளது. மூன்று, நான்கு பிரிவுகள் இத்தகையன.

இங்கு கொடுக்கப்பட்டுள்ள சொற்கள் அகர வரிசையில் அந்த அந்தக் கிளைமொழி வடிவங்களிலேயே கொடுக்கப் பட்டுள்ளன. எழுதும் முறை அடைப்புக் கோட்டினுள் கொடுக்கப்படுகின்றது.

இயற்கைத் தொடர்புடைய சொற்கள் என்ற பிரிவில் நீர், நிலம் இவை குறித்த சொற்கள் கொடுக்கப்படுகின்றன.

விவசாயக் கருவிகள் என்ற பிரிவில் விவசாயத்திற்குப் பெரிதும் பயன்படும் வண்டியும், ஏற்றமும் மற்ற கருவிகளும் அடங்கும் (1) வண்டி - இதில் வண்டியின் பாகங்களும் வண்டி குறித்த தொடரியங்களும் கொடுக்கப்படுகின்றன. (2) ஏற்றம் இதில் ஏற்றத்தின் பாகங்களும், ஏற்றம் குறித்த தொடரி யங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. (3) மற்ற கருவிகள், இப் பிரிவில் விவசாயத்திற்குப் பயன்படும் வண்டி ஏற்றம் தவிர்த்த மற்ற கருவிகள் கொடுக்கப்பட்டுள்ளன.

நாற்று - இந்த பிரிவில் நாற்றங்காலைச் சீர் செய்து விதையை ஊற வைத்து விதைப்பதிலிருந்து நாற்றைப் பிடுங்கிக் கட்டாகக்கட்டி நடவேண்டிய வயலுக்கு கொண்டுசெல்வது வரை பயன்படும் சொற்கள் கொடுக்கப்படுகின்றன.

பயிர் - இந்தப் பிரிவில் நடவு தொடங்கிப் பயிர் வளர்ந்து, விளைந்து அறுவடைக்கு வரும்வரையில் பயன்படும் சொற்கள் கொடுக்கப்படுகின்றன.

அறுவடை - அறுவடை தொடங்கி நெல் (தானியம்) வைக்கோல், இவைகளைப் பிரித்து எடுத்துப் போரடித்தல். மற்ற பயிர்களாக இருப்பின் அறுவடை, பின் தானிய சேமிப்பு இவை பற்றிய சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

பழக்கவழக்கங்கள் - விவசாயத்தை ஒட்டி வழக்கில் இருக்கும் பழக்க வழக்கங்கள் பற்றிய சொற்கள் இங்கே கொடுக்கப் படுகின்றன.

இங்குக் காணப்படும் வேறுபாடுகளுக்குப் பல்வேறு காரணங்கள் அடிப்படையாக அமைகின்றன. அவற்றுள் (1) நில அமைப்பு முறை (2) விளைபொருட்கள் (3) மக்கள் பின் பற்றுகின்ற விவசாயத் தொடர்பான பழக்கவழக்கங்கள்.

இம் மூன்று வேறுபாடுகளும் பல்வேறு கலைச்சொற்கள் ஆக்கத்திற்குப் பெரிதும் காரணமாக அமைவனவாகக் கொள்ள லாம்.

1. பாண்டிச்சேரி - காரைக்கால் ஆகிய இரு பகுதி களுக்கும் பொதுவான சொற்கள்

1.1. இயற்கைத் தொடர்புடைய சொற்கள்

1.	ஆத்துப்பாசனம் (ஆற்றுப்பாசனம்)	விவசாயத்திற்குத் தேவையான நீரை ஆற்றிலிருந்து பெற்று விவசாயம் செய்தல்.
2.	ஆறு	பெரிய நீரோடை, ஆறு
3.	களம்	கதிர் கட்டுகளைக் குவித்தல், அடித்தல், நெல்லைப் பிரித்தெடுத் தல், போரடித்தல் போன்ற வேலைகள் நடைபெறும் இடம்.

4.	சூனு	வயலின் வளைவான பகுதி
5.	தளெ (தளை)	பிரிக்கப்பட்டிருக்கும் தனி வயல்
6.	துண்டு	பிரிக்கப்பட்டிருக்கும் தனி வயல்
7.	நாத்தாங்கா (நாற்றங்கால்)	விதை தெளிக்கும் இடம், இதில் வளர்ந்த நாற்றைப் பிடுங்கி வயல்களில் நடுவர்
8.	நஞ்செ (நன்செய்)	தண்ணீரை நிறுத்தி உழுது விவசாயம் செய்யும் நிலம். மிகுதியாகத் தொடர்ந்து நீர் வேண்டும் பயிர்களை இதில் விவசாயம் செய்வர்
9.	புஞ்செ (புன்செய்)	தொடர்ந்து அதிக நீர் இல்லாமல் ஈரத்திலேயே உழுது பயிரிடப்படும் நிலம். இதில் உள்ள பயிர்களுக்குத் தண்ணீர் கட்டி நிற்கத் தேவையில்லை
10.	போரு	குழாய்க்கிணறு என்ற ஆங்கிலச் சொல் இவ்வாறு வழங்குகிறது.
11.	மடெ (மடை)	வாய்க்காலிலிருந்து வயலுக்குத் தண்ணீர் பாயும் வழி
12.	மழெ (மழை)	மழை
13.	மோட்டெ (மோட்டை)	வயலில் தேக்கி வைத்திருக்கும் நீர் வரப்பின் வழியே வெளியேறும் சிறு ஓட்டை
14.	வரப்பு	வயலின் கரைப்பகுதி
15.	வாய்க்கா (வாய்க்கால்)	நீரோடை

1. 2. கருவிகள்

1. 2. 1. வண்டி

16.	அச்சி (அச்சு)	வண்டியின் இரு சக்கரங்களையும் இணைக்கும் இரும்பாலான கம்பி

17.	அச்சி கடெ திறெட்டு தல் (அச்சுகடை திரட்டுதல்)	அச்சினைக் காய்ச்சி உருட்டி சரி செய்தல்
18.	இருசு கட்டெ (இருசு கட்டை)	அச்சின் மீதுள்ள கட்டை. இதன் அடியில் அச்சு பொருத்தப்படும். இதன்மேல் வண்டியில் பாரம் ஏற்றும் பகுதி பொருத்தப் பட்டிருக்கும்.
19.	உள்ளாழி	சக்கரத்தின் நடுவில் குடத்தின் மையத்தில் உள்ள இரும்புக் குழாய். இதனுடே அச்சு செல்லும்
20.	கட்டு	சக்கரத்தின் வட்டாவின் மீதுள்ள இரும்புப்பட்டை
21.	கடெகுச்சி (கடைகுச்சி)	நுகத்தடியின் இரு முனைகளி லும் செருகப்படும் குச்சு. (இது மாடுகளை நுகத்தடியை விட்டு வெளியெ போகாதவாறு தடுக்கும்)
22.	கடெயாணி (கடை யாணி)	சக்கரம் சுழன்று வராதபடி பாது காக்கும் ஆணி. அச்சின் இரு முனைகளிலும் உள்ள துவா ரத்தில் செருகப்படும்
23.	காலு (கால்)	சக்கரத்தின் ஆரக்கால், குடத் தையும் வட்டாவையும் இணைக் கும் மரத்தாலான சட்டம்
24.	கொடம் (குடம்)	சக்கரத்தின் மையப்பகுதி; உருண்டு திரண்டு இருக்கும் காலின் ஒருமுனை இதில் பொருத்தப்பட்டிருக்கும். இதன் நடுவே உள்ள துவாரத்தில் உள்ளாழி பொருத்தப்பட்டு

	அதனுடே அச்சு செருகப்பட்டிருக்கும்
25. சக்கரம்	வண்டியின் சக்கரம்
26. டயர்வண்டி	டயராலான சக்கரம் உடைய வண்டி
27. தார்குச்சி	மாடுகளை ஓட்ட உதவும் முனையில் ஆணியுள்ள குச்சு
28. நெவத்தடி (நுகத்தடி)	வண்டியின் முன்னே குறுக்காக உள்ள தடி. இதன் இருமுனைகளிலும் மாடுகளைக் கட்டுவார்கள்
29. பாரம்	வண்டியில் ஏற்றப்படும் பொருளின் எடை
30. பாகு	வண்டியில் பொருள்கள் வைக்க உதவும் பலகையின் இரு ஓரங்களிலும் உள்ள தடித்த பலகை
31. பூட்டாங்கயிறு	நுகத்தடியில் மாடுகளைப் பூட்ட உதவும் கயிறு
32. பொட்டி வண்டி	மக்கள் பிரயாணம் செய்ய பயன்படும் வண்டி

1. 2. 2. ஏற்றம்

33. ஏத்தம்(ஏற்றம்)	நீர் நிலைகளிலிருந்து நீரை வெளியேற்ற உதவும் கருவி
34. ஏத்தக்கால் (ஏற்றக்கால்)	ஏற்றத்தில் சால் மாட்டப்பட்டிருக்கும் கோல் (மரம்) இதனைத் தண்ணீர் இறைப்பவர்கள் பிடித்துக் கீழே அழுத்தி சாலில் நீரை மொண்டு பின்னர் மேலே ஏற்றி ஊற்றுவர்

35.	சாலு (சால்)	ஏற்றத்தில் நீரை மொள்ள பயன் படும் கோள வடிவத்தில் அமைந்த உலோகத்தாலான பாத்திரம் (இது. ஏற்றக்கோல் நுனியில் மாட்டப்பட்டிருக்கும்)

1. 2. 3. மற்றவைகள்

36.	அருவா(அரிவாள்)	அரிவாள்
37.	எலெ(இலை)	மண்வெட்டியின் இரும்புத்தகடு
38.	ஏர் சங்கிலி	ஏர்பூட்ட உதவும் இரும்பு சங்கிலி
39.	ஏரு(ஏர்)	கலப்பை, நுகத்தடி, மாடு ஓட்டும் ஆள் இவை சேர்ந்த தொகுதி
40.	ஏருகா(ஏர்கால்)	கலப்பையில் நீண்டு உள்ள மரம். இதன் முனையில் நுகத்தடியை வைத்துக் கட்டுவார்கள்
41.	கலப்பெ(கலப்பை)	உழும் கருவி (கலப்பை)
42.	களெக்கொட்டு (களைக்கொட்டு)	களை வெட்டும் கருவி
43.	கைவிலா	மூட்டைகட்ட உதவும் வைக் கோலால் முறுக்கப்படும் சிறு கயிறு
44.	கொழு(வு)	கலப்பையில் உழும் நுனியி லுள்ள இரும்புப்பட்டை
45.	கொழு கலப்பை (கொழு கலப்பை	கொழு உள்ள கலப்பை
46.	சல்லெடெ(சல்லடை)	தானியங்களைச் சலிக்க உதவும் சாதனம்
47.	சாக்கு	தானியங்களை மூட்டையாகக் கட்ட உதவும் பை

48.	சாலு (சால்)	விதைகள் அல்லது தானியங்களைச் சேமித்துவைக்க உதவும் பெரிய மண்பானை; ஏற்றத்தின் சால்
49.	சேத்துக் கலெப்பெ (சேற்றுக்கலப்பை)	சேற்றில் உழப்பயன்படும் கலப்பை
50.	படி	ஓர் அளவு (ஒரு லிட்டர்) தானியத்தை முகந்து அளக்கப் பயன்படும் கருவி
51.	பறம்புப்பலெவெ (பறம்புப்பலகை)	நிலத்தை சமன் செய்ய உதவும் பலகை
52.	பாரெ(பாரை)	இரும்பாலான நீண்டு திரண்ட கம்பி
53.	புழுதி	காய்ந்த நிலத்தில் (நீர் இல்லாத) உழும் உழவு
54.	புழுதிக்கலப்பெ (புழுதிக்கலப்பை	காய்ந்த நிலத்தில் (ஈரத்தில்) தண்ணீர் இல்லாத உழப்பயன்படும் கலப்பை
55.	பூட்டாங்கயிறு	நுகத்தடியில் மாட்டைப் பூட்ட உதவும் கயிறு
56.	பூணு(பூண்)	மண்வெட்டிக் காம்பின் மீதுள்ள உலோகக் காப்பு
57.	மம்புட்டி(மண்வெட்டி)	நிலத்தைக்கொத்த உதவும் கருவி
58.	மோழி	உழும்போது கைப்பிடிக்கும் கலப்பையின் பகுதி

1.3. நாற்று

59.	ஒதம்பெ (ஒதம்பை)	நாற்றுப் பறிக்கும்போது நாற்றுடன் சேறு சேர்ந்து வருவது
60.	சேடெ வைக்கிறெது (சேடை வைத்தல்)	காய்ந்த தரிசு நிலத்திற்கு நீர் பாய்ச்சுதல்

61.	நாத்து (நாற்று)	இளஞ்செடி. இதனை நட வேண்டிய இடத்தில் நடுவர்
62.	நாத்துக்கட்டு (நாற்றுக்கட்டு)	சுமார் 150 நாற்று முடிகள் கொண்ட ஒரு பெரிய நாற்றுக் கட்டு
63.	நாத்துக்கரையேறெது (நாற்றுக்கரையேற்றுதல்)	பறித்த நாற்றுக்கட்டுகளை நாற்றங்காலிலிருந்து வரப்பு களில் ஏற்றிவைத்தல்
64.	நாத்துமுடி (நாற்றுமுடி)	ஒரு கைப்பிடி அளவுள்ள பறித்த நாற்றுமுடி
65.	நாத்து பறி (பருவம் கட்டுதல்)	நாற்றைப் பிடுங்குதல்
66.	பருவம் கட்டுறெது (பருவம் கட்டுதல்)	விதை முளைக்கத் தொடங்குதல்
67.	பரெம்பு வைக்கிறறெது (பரம்பு வைத்தல்)	விதை விடுவதற்கு முன்பு நாற்றங்காலைச் (சேற்றை) சமன் செய்தல்
68.	பாத்தி	விதைத் தெளிப்பதற்காக நிலத் தைப் பல பகுதிகளாக வைத்துப் பிரித்தல்
69.	பாத்தி வரெப்பு (பாத்தி வரப்பு)	பாத்தியின் ஓரத்தில் உள்ள வரப்பு
70.	முடி	நாற்றுமுடி
71.	மூனாங்கொம்பு (மூன்றாம் கொம்பு)	விதை தண்ணீரில் ஒருநாள் ஊறிய பிறகு இரண்டு நாட்கள் வெளியே எடுத்து வைக்க முளை விட்ட விதை
72.	மொள காணுறெது (முளை காணுதல்)	விதையிலிருந்து குருத்து வெளி வருதல்

73. இரண்டாங்கொம்பு	விதை தண்ணீரில் ஒருநாள் ஊறிய பிறகு ஒருநாள் வெளியே எடுத்துவைக்க முளைவிட்ட விதை
74. வெதெ / வெரெ	விதைப்பதற்குப் பயன்படும் தானிய விதை
75. வெதெத்தெளி (விதைத்தெளி)	விதை தெளித்தல்

1.4. பயிர்

76. அண்ட போடுறெது (அண்டெ போடுதல்)	வயலின் வரப்புகளை வெட்டி ஒழுங்கு செய்தல்
77. அண்டெ வெட்டுறெது (அண்டை வெட்டுதல்)	,, ,,
78. ஒரு போகம்	ஆண்டிற்கு ஒரே ஒருமுறை மட்டும் பயிரிடுதல்
79. ஒழவு(உழவு)	ஏர் உழுதல்
80. ஏர் ஓட்றெது(ஏர் ஓட்டுதல்)	உழுதல், ஏரினை ஓட்டுதல்
81. ஏர் கட்றெது (ஏர் கட்டுதல்)	கலப்பையில் நுகத்தடியை வைத்து கட்டியபின் நுகத்தடியில் மாட்டைப் பூட்டி உழ தயாராதல்
82. கதுரு (கதிர்)	தானியக் கதிர்
83. கலெப்புக்கதுரு (கலப்பு கதிர்)	வயலில் பயிரினூடே விளைந்திருக்கும் பல்வேறு வகையான நெற்கதிர்கள்
84. களெ(களை)	விளைந்திருக்கும் பயிர் அல்லாத புல்வகைகள்

85.	களெ மிதிக்கிறெது (களை மிதித்தல்)	பயிரினூடே வளர்ந்திருக்கும் சில வகை புல் வகை சேற்றில் மிதித்து அழுத்துதல் (சேற்றில் அக்களை வகைகள் அழிக்கப்பட்டுவிடும்)
86.	களெ யெடுக்கிறது (களை எடுத்தல்)	பயிரினூடே வளர்ந்துள்ள மற்ற புல் வகைகளைக் களைந்து எடுத்தல்
87.	கொத்தெறெது (கொத்துதல்)	வயலை மண்வெட்டிகொண்டு வெட்டுதல்
88.	சம்பா	அதிக நாட்களில் விளையும் பயிர் (தானியங்கள்) ஆடி மாதம் விதை தெளித்து தை மாதம் அறுவடை செய்வார்கள்
89.	சாவுடி (சாகுபடி)	விவசாய வேலை பயிர்த்தொழில் (காரைக்கால் பகுதியில் குத்தகை சாகுபடி என்பதையும் குறிக்கும்)
90.	சேத்து ஓழவு	சேற்றில் உழும் உழவு
91.	தொண்டெ கதுரு	தண்டில் சூல் கொள்ளுதல்
92.	நடவாளு(நடவு ஆள்)	வயலில் வேலை செய்யும் பெண் வேலையாள்
93.	நடவு	பக்குவப்படுத்தப்பட்ட உரிய நிலத்தில் நாற்றை நடுதல்
94.	நடறெது(நடுதல்)	நாற்றைப் பக்குவப்படுத்தப்பட்ட உரிய நிலத்தில் ஊன்றுதல்
95.	நெடுஞ்சாலு	நீளவாக்கில் உழும் உழவு
96.	பச்செ பிடிக்கிறெது (பச்சை பிடித்தல்)	நட்ட பயிர் பசுமைகொண்டு வளருதல்
97.	பதரு(பதர்)	உள்ளே மணியில்லாத தானியம்

98.	பயிர் களெ (பயிர் களை)	விளைந்த பயிரினூடே எடுக்கும் களை
99.	பயிச்செலு[1] (பயிச்சல்)	விவசாயம், பயிர்த்தொழில் செய்தல்
100.	பயிறு(பயிர்)	நட்ட நாற்றில் வளர்ந்த தொகுதி ஒருவகை தானியம்; பச்சைப் பயிறு; தானியமணி
101.	பதர்கட்டு	இளம் தானியம்
102.	பிஞ்சி(பிஞ்சு)	இளங்கால்
103.	பின்னேரு(பின் ஏர்)	பின்னால் வரும் ஏர் (இரண்டாவது அல்லது பின்னால் வரும் ஏர்)
104.	புழுதி	காய்ந்துள்ள நிலத்தில் உழும் உழவு
105.	பூச்சி உழுறெது (பூச்சு விழுதல்)	விளைந்த பயிரில் பூச்சு பிடித்தல்
106.	பூச்சி புடிக்கிறெது (பூச்சி பிடித்தல்)	,,
107.	மின்னேரு (முன்னேர்)	முன்னால் செல்லும் ஏர்
108.	மென	வயலின் ஓர் ஆள் நட்டுக் கொண்டு செல்லும் அளவு
109.	முப்போகம்	ஆண்டிற்கு மூன்று முறை பயிர் செய்வது
110.	விவசாயம் செய்யறெது (விவசாயம் செய்தல்)	பயிர்த்தொழில் செய்தல்

1. காரைப் பகுதியில் பயிச்சல் என்பதற்குக் குத்தகை சாகுபடி என்ற பொருளும் உண்டு.

111.	வெளச்செல் (விளைச்சல்)	பயிரின் விளைவு
1.5.	**அறுவடை**	
112.	அரி	அறுவடை செய்து கீழே போடப் பட்ட இரண்டு மூன்று கைப்பிடி யுள்ள தானியக்கதிர்
113.	அரிப்பட்டம்	ஒரு ஆள் அறுவடை செய்து கொண்டு செல்லும் பகுதி
114.	அறப்பு(அறுவடை)	அறுவடை
115.	கட்டு	அறுவடைச் செய்த அரிகளைக் கட்டாகக் கட்டப்படும் கட்டு. இக்கட்டுகளை களத்திற்குத் தூக்கி வருவர்
116.	கலம்	தானியங்களின் கழிவுப் பொருள்
117.	சலிக்கிறெது(சலித்தல்)	சல்லடையில் இட்டு மண், கல் இவைகளிலிருந்து தானியத்தைத் தனியே பிரித்து எடுத்தல்
118.	தாளு(தாள்)	பயிரின் தண்டுப்பகுதி (நெல்)
119.	தூத்தறெது (தூற்றுதல்)	காற்றில் தூற்றித் தானியத்தைத் தனியே பிரித்து எடுத்தல்
120.	நோம்புறெது (நோம்புதல்)	தானியத்தை முறத்தில் இட்டு மெதுவாக பிரித்து எடுத்தல்
121.	பட்டறெ(பட்டறை)	தானியங்களைக் களத்திலேயே அடையாளமிட்டு பின் வைக் கோலால் மூடி வைக்கப்படும் தானியக் குவியல்
122.	பட்டறெ போடுறெது (பட்டறை போடுதல்)	தானியங்களைக் கலத்திலேயே அடையாளமிட்டு பின் வைக் கோலால் மூடுதல்

123.	பொடைக்கிறெது (புடைத்தல்)	தானியங்களை முறத்தில் இட்டுப் புடைத்தல்
124.	போரு(போர்)	வைக்கோல், மற்ற தானியத்தாள் குவியல்
125.	போரு போடுறெது (போர் போடுதல்)	தாளிலிருந்து நெல்லை (அல்லது தானியங்களைப்) பிரித்து எடுத்த பின்பு வைக்கோலை ஒழுங்காகக் குவித்தல்
126.	போரு வாங்கிவுடுறெது (போர் வாங்கி விடுதல்	வைக்கோல் தாளியை மாடுகட்டி அடிப்பதற்காகக் களத்தில் பரப்பி வைத்தல்
127.	மறுதாம்புக்காய் (மறுதாலைக்காய்)	தானியங்கள் அல்லது காய்களின் அறுவடை முடிந்த பின்பும் அடியில் உள்ள பயிர் அல்லது செடியில் காய்க்கும் தானியம் அல்லது காய்
128.	மின்வா(முன்வாய்)	தானியங்களைத் தூற்றும் பொழுது முதலில் (முன்னாடி) வந்துவிழும் பதர்
129.	மூட்டெ(மூட்டை)	தானியங்களை சாக்குகளில் இட்டுக் கட்டப்படும் கட்டு
130.	வைக்கெ(வைக்கோள்)	நெல்லின் தாள். இதை போரடித்த பின்பு மாட்டிற்குத் தீவனமாக பயன்படுத்துவர்
131.	வைக்கெ கட்டு (வைக்கோல் கட்டு)	ஓர் ஆள் தூக்கக்கூடிய அளவிற்கு உள்ள வைக்கோல் கட்டு
132.	வைக்கப்பிரி (வைக்கோல் பிரி)	வைக்கோலால் முறுக்கப்படும் நீண்ட கயிறு (இது வைக்கோல் கட்ட பயன்படும்)

133.	வைக்கப்போரு (வைக்கோல் போர்)	குவித்து வைக்கப்பட்டிருக்கும் வைக்கோல் போர்

1.6. பழக்க வழக்கங்கள்

134.	கரையெறெது (கரையேறுதல்)	வயலில் வேலை செய்துவிட்டு வீட்டிற்குத் திரும்புதல்
135.	போக்கியம்	நில அடமானம்
136.	போக்கியம் பிடிக்கிறது (போக்கியம் பிடித்தல்)	நிலத்தை அடகுப் பிடித்தல்
137.	மராமத்து	நிலத்தில் பயிர் செய்யாத நாட்களில் செய்யப்படும் வேலை
138.	மராமத்து வேலை பாக்குறெது (மராமத்து வேலை செய்தல்)	நிலத்தில் பயிர் செய்யாத பொழுது நிலத்தை சமன் செய்தல் போன்ற வேலைகளைச் செய்தல்
139.	மூட்டெ புடிக்கிறெது (மூட்டை பிடிக்கிறது)	விளைந்த தானியத்தை மூட்டை மூட்டையாகக் கட்டுதல்

அட்டவணை-2

2. பாண்டிச்சேரி - காரைக்கால் இருபகுதிகளிலும் வேறுபட்ட சொற்கள்

2.1. (அ) ஒலி நிலை மாற்றங்கள்

	புதுவை	காரைக்கால்	
1.	கரிம்பு	கரும்பு	கரும்பு
2.	கொல்லி	கொல்லெ	கொல்லை
3.	நெல்லி	நெல்லு	நெல்
4.	பில்லி	பில்லு	புல்
5.	முருங்க்கா	முருங்கொகா	முருங்கைக்காய்
6.	மொள்க்கா	மொளகா	மிளகாய்

2.1. (ஆ) இயற்கைத் தொடர்புடைய சொற்கள்

1.	கறம்பு	தரிசு	விவசாயம் செய்யாத நிலம்
2.	கொல்லி (கொல்லை)	வயெலு (வயலு)	விவசாயத்திற்குப் பயன் படும் நிலம்
3.	தோட்டம்	கொல்லெ (கொல்லை)	வீட்டுச்சுற்றுப்புறம்

2.2. கருவிகள்

2.2.1. வண்டி

4.	ஏர்க்கா (ஏர்க்கால்)	மூக்கென (மூக்கனை)	வண்டியின் நடுப்பகுதியில் செல்லும் மரம் இதன் பின்பகுதியில் வண்டிப் பலகைகளைப் பொருத்து வர். முன் பகுதியில் நுகத்தடியைப் பொருத் துவர்
5.	கட்டவண்டி	பாரவண்டி	பொருள்களை ஏற்றிச் செல்ல உதவும் மாட்டு வண்டி
6.	கொடநாட்றெது (கொடைநாட்டு தல்	கொடெயடிக் கிறெது (கொடை யடித்தல்)	வண்டியில் இருக்கும் பொருள்களை இறக்கும் பொருட்டுவண்டியைப் பின்புறமாகச் சாய்த்தல்
7.	கொலுப்பலகை (கொலுப்பலகை)	இருப்பனாம் பலகெ (இருப் பனாம் பலகை)	வண்டியில் வண்டி யோட்டி அமரும் இடம்
8.	வட்டெ (வட்டா)	வட்டா	வண்டிச்சக்கரத்தின் வளைவாக உள்ள மரப் பகுதி இதன்மீது உலோகப்பட்டை பொருத்தப் பட்டிருக்கும்

2.2.2. மற்றவைகள்

9.	ஒழவுக்கவுறு[1] உழவுக்கயிறு	வடக்கயிறு (வடக்கயிறு)	ஏர்கட்ட உதவும் கயிறு
10.	தானியப்பெட்டி	பத்தாயம்	தானியங்களைச் சேர்த்து வைக்க உதவும் மரத்தாலான பெட்டி
11.	காரு (காறு)	கொழு(வு)	கலப்பையின் மீது உழும் பகுதியின் மீதுள்ள உலோகப்பட்டை
12.	கிட்டி	கவெனெ (கவனை)	மாடுகளைக் கொட்டகைகளில் கட்ட உதவும் மரத்தாலான தடுப்பு இந்தத் தடுப்பின் உள்ளே வைக்கோல், புல் முதலியன போடப் பட்டிருக்கும்
13.	டிரெம்மு[2] (டிரெம்)	பரை	ஆறு மரக்கால் அளவுள்ள ஓர் அளவை
14.	பைப்பு	கானு	தண்ணீர் பாய்ச்ச உதவும் சிமெண்ட் குழாய்
15.	பொனெய கவுறு (பிணையகயிறு)	பொனையகட்டி (புனையகட்டி)	போரடிக்க மாடுகளை இணைத்துக் கட்ட உதவும் கயிறு
16.	பேோட்டு	ஆக்கெ (ஆக்கை)	வைக்கோலால் ஆன கயிறு. இது போரடிக்காத வைக்கோலால் முறுக்கப்படுவது

1. இது கலப்பையையும் நுகத்தடியையும் சேர்த்துக் கட்டிப் பின்பு மொழியில் கட்ட உதவும் கயிறு தற்பொழுது இரும்புச்சங்கிலி பயன்படுத்தப்படுகிறது.
2. டிரெம்மு இரும்பாலானது, பறை மரத்தாலானது.

2.3. நாற்று

17.	கலசம்	கட்டு	நாற்று முடிகளின் கட்டு. 150 முடிகளைக் கொண்டது ஒருகலசம்/ கட்டு
18.	சலுப்புதண்ணி (சலுப்புதண்ணீர்)	மொளநீரு (முளைநீர்)	விதை தெளித்த மறு நாள் விதை நன்கு முளைப்பதற்காகப் பாய்ச்சப்படும் நீர்
19.	பருவம் எடுக்கிறெது (பருவம் எடுத்தல்)	பருவம் கட்டுறெது/ காணுறெது (பருவம் கட்டுதல்/ காணுதல்)	ஊறிய விதை முளைக்கத் தொடங்குதல்
20.	பாவு	வீச்சி	விதை தெளிக்கும்போது வீசப்படும் கையின் வீச்சு
21.	பயிர் ஏத்தெறது (பயிர் ஏற்றுதல்)	பயிச்செல் பண்ணுறெது (பயிச்சல் செய்தல்)	வயலில் பயிர் செய்தல்

2.4. பயிர்

22.	ஏணி	குழி	செடி மற்றும் விதைகளைப் போட உதவும் அடுத்தடுத்துள்ளச் சிறுகுழி
23.	ஏணிவெட்டுறெது (ஏணிவெட்டுதல்)	குழிவாங்குறெது (குழிவாங்குதல்)	செடி மற்றும் விதைகளைப் போடுவதற்காக தொடர்ந்து அடுத்தடுத்துச் சிறுகுழி வெட்டுதல்

24.	காரு (கார்)	மட்டெ (மட்டை)	அரிசி சிகப்பு நிறமாக இருக்கும் ஒருவகை நெல்
25.	கால்வெட்டுறெது (கால்வெட்டுதல்)	வாய்க்கால் போடுறெது (வாய்க்கால் போடுதல்)	தண்ணீர் சீராகப் பாயும் பொருட்டு வயலினூடே சிறு வாய்க்கால் அமைத்தல்
26.	கிளப்பு	சிங்கம் வெடிக்கி றெது (சிங்கம் வெடித்தல்)	பயிர் அல்லது (செடியின்) வேரி லிருந்து புதிதாக முளைத்து வளரும் பயிர்
27.	கீறிப்பிடிச்சி நடெ றெது (கீறிப் பிடித்து நடுதல்)	கிள்ளி நடெறெது (கிள்ளி நடுதல்)	இரண்டு அல்லது மூன்று நாற்றுகளை எடுத்து நடுதல்
28.	குந்து	மொதல் (முதல்)	நட்டதும் பின்பு சிங்கம் வெடித்து வளர்ந்த பயிரும் சேர்ந்த தொகுதி
29.	சந்துக்களெ (சந்துக்களை)	பயிர்க்களெ (பயிர்க்களை)	விளைந்த பயிரி னூடே எடுக்கப் படும் களை
30.	சாலநடவு	பட்ட நடவு	கயிற்றைப் பிடித்துக்கொண்டு அதன் மீது ஒழுங் காக நடப்படும் களை
31.	தீனி	மருந்து / உரம்	இரசாயன உரம்
32.	நோயு தாக்கு றெது (நோய் தாக்குதல்)	பூச்சி அடிக்கிறெது (பூச்சி அடித்தல்)	நட்ட பயிரில் பல வகையான பூச்சி பிடித்துப் பயிரை அழித்தல்

33.	பயிர் எறெங்கி போறது (பயிர் இறங்கிப் போதல்)	பயிர் அழிஞ்சி போறெது (பயிர்அழிந்து போதல்)	பயிர் வெள்ளம், பூச்சி இவற்றால் நாசமாதல்
34.	விளா	மடக்கு	ஏர் ஒரு இடத்தி லிருந்து உழ ஆரம் பித்து திரும்பும் அதே இடத்திற்கு நீளவட்ட வடிவமாக உழும் அளவு. பல விளாக்கள் சேர்ந் தது ஒரு மடக்கு. வயலை பல மடக்கு களாகப் பிரித்து உழுவர்.

2.5 அறுவடை

35.	அரிகெட (அரிகிடை)	அரிக்காய்ச்செ (அரிக்காய்ச்சல்)	அறுவடை செய்த அரியை வயலிலேயே காய வைத்தல்
36.	ஆடெ (ஆடை)	உமி	தானியத்தின் மேல் உள்ள உமி (நெல் நீங்கலாக)
37.	சூடு அடிக்கிறெது (சூடு அடிக்கிறது)	கட்டு அடிக் கிறெது (கட்டு அடித்தல்)	நெற்கதிரை அடித்து, நெல்லைப் பிரித்து எடுத்தல்
38.	சூடு பொருக்கு றெது (சூடு பொறுக்குதெல்)	நெல்லிஅடிக் குறெது (நெல்லு பொறுக்குதல்)	சிந்திய நெற் கதிரைப் பொறுக்குதல்

39.	பொதி	பொலி	அளக்காத நெல்லின் குவியல்
40.	பொணெ அடிக் கிறெது (பிணை அடித்தல்)	போரடிக் கிறெது (போரடித்தல்)	நெல்லை அடித்துப் பிரித்து எடுத்துப் பின்பு மீண்டும் நெல்லைப் பிரித்து எடுக்கும் பொருட்டும் வைக் கோல் தாள் மசியும் பொருட்டும் வைக் கோலில் மாட்டைக் கட்டி ஓட்டி, வைக் கோலை உதறி எடுத்தல்
41.	பொணை ஓட் றெது (பிணை ஓட்டுதல்)	கிடாவடி ஓட் றெது (கிடாவடி ஓட்டுதல்)	நெல்லைப் பிரித்து எடுத்த பின்பு வைக் கோலை மசிய வைக்கும் பொருட்டு வைக்கோலின் மீது பிணைக்கப்பட்டி ருக்கும் மாடுகளை ஓட்டுதல்

2. 6 பழக்க வழக்கங்கள்

42.	அணெ போடு றெது (அணை போடுதல்)	மடை கோலு றெது (மடை கோலுதல்)	வாய்க்காலிலிருந்து வயலுக்குத் தண் ணீர் பாயும் மடை யைக் கோலுதல்
43.	ஆராய்ச்சி	காரியக்காரு (காரியக்காரர்)	விவசாய வேலை களை மேற்பார்வை இடுவது
44.	கம்பத்தம்	பண்ணெ (பண்ணை)	மிக அதிக அளவில் நிலம் வைத்துள்ளவர்

45. கம்பத்துக்காரர்	பன்ணையார்	நிலக்கிழார்
46. (கன்னு உடுறெது) கன்று விடுதல்	(மாடு)பாலு கறெக்கிறது	மாடு (பால்) கறத்தல்
47. படியாள்	பண்ணெயாள் (பண்ணையாள்)	விவசாய வேலை களைச் செய்யும் ஆள்
48. மிட்டாதாரர்	மிராசுதாரு (மிராசுதார்)	அதிக நிலம் வைத் துள்ளவர்

(கட்டுரை தொடரும்)

மொழியியல், 9. 1&2 (1985)

கிளைமொழியும் பொதுப்பேச்சுத் தமிழும்

எஸ். ஆரோக்கியநாதன்
தமிழ்ப் பல்கலைக் கழகம்

ஒருவர் பேசுகின்ற மொழி அவர் சார்ந்துள்ள சமுதாயம் மற்றும் அவர் சார்ந்துள்ள ஊர் ஆகியவற்றின் பாதிப்புகளை உள்ளடக்கியே விளங்குகின்றது.[1] சமுதாய பாதிப்பு என்பது பேசுவோரின் வயது, சாதி சமயம், கல்வித்தகுதி, அரசியல் சார்பு, பொருளர்தாரநிலை ஆகியவைகளைச் சார்ந்து விளங்குகின்றது. வட்டாரபாதிப்பு அவர் வாழ்கின்ற ஊரினைச் சார்ந்து எழுகின்றது. சான்றாக சென்னையில் வாழும் அரிசன மக்களின் தமிழ்ப் பேச்சுவழக்கில் அரிசனமக்களின் பேச்சுவழக்கிற்கான சமுதாய (மொழியியல்) கூறுகளும் சென்னை நகருக்கான வட்டார (மொழியியல்) கூறுகளும் இருக்கும். சென்னை நகரில் வாழும் அரிசன மற்றும் பிராமண பேச்சு வழக்குகளை ஒப்பிட்டுப் பார்த்தால் அவைகள் வட்டாரக் கூறுகளால் ஒன்றுபட்டு பிராமண-அரிசன சாதி எனும் சமுதாயக் கூறுகளால் வேறுபட்டு விளங்கும். அவ்வாறே சென்னை நகர அரிசன மக்களின்

பேச்சுவழக்கினை திருச்சி நகர அரிசன மக்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அவைகள் சமுதாய வழக்கால் ஒன்றுபட்டு சென்னை–திருச்சிப் பகுதிக்கான வட்டார வழக்குகளால் வேறுபட்டு நிற்கும். இவ்வாறு சமுதாய வழக்கு மற்றும் வட்டாரவழக்கு ஆகிய இவ்விரண்டையும் உள்ளடக்கிய ஆய்வே கிளைமொழியியல் ஆய்வாகும். ஒருவரின் இயல்பான பேச்சுவழக்கில் சமுதாய மற்றும் வட்டாரபாதிப்புகள் தோன்றும் என்பது கிளைமொழியியலின் அடிப்படையான கோட்பாடாகும். சமுதாய மற்றும் வட்டார வழக்குகளின் பாதிப்புகளின்றியும் ஒருவர் பேசலாம். கல்வித்தகுதி, பொருளாதார நிலை, பேசும் சூழல் இவைகளால் ஒருவர் தனது பேச்சினை செம்மைப்படுத்தி பேச முடியும். இத்தகைய பேச்சினையே காலப்போக்கில் ஒருவர் தனது இயல்பான பேச்சுவழக்காக கைக்கொள்ளவும் முயலலாம். இவ்வகை பேச்சுவழக்கினைப் பொதுப் பேச்சு வழக்கு எனக் குறிப்பிடுவர்.[2] தமிழ்மொழியில் செந்தமிழ் வழக்கு என்றும் கொடுந்தமிழ் வழக்கு என்றும் இருவகை உண்டு. செந்தமிழ் வழக்கு என்பது புலனெறி சார்ந்த புலவோர் வழக்கு எனவும் கொடுந்தமிழ் என்பது கற்றறியா மாக்களின் வழக்கு எனவும் குறிப்பிடலாம். பெரும்பாலும் தூய தமிழ்ச் சொற்களைக் கொண்ட இலக்கிய வழக்கினை செந்தமிழ் வழக்கு[3] என்றும் திசைச்சொற்களையும்[4] பேச்சுவழக்கு பாதிப்பினைக் கொண்டும் திகழ்வது கொடுந்தமிழ் என்றும் கருதப்படுகின்றன. இன்றைக்கு வெளிவரும் சில இலக்கிய இதழ்களில் காணும் தமிழ் வழக்கு புலவர் கூறும் செந்தமிழ் வழக்கிலிருந்து வேறுபட்டது என்பதில் ஐயமில்லை. சான்றாக 'ஓரணி' 'ஓர் அணி' 'ஒரு அணி' என்பனவற்றுள் 'ஓரணி' என்பது செந்தமிழ் வழக்கிலும் ஏனைய இரண்டும் இன்றைய இலக்கிய வழக்கிலும் பெரும்பாலும் வருவதைக் காணலாம். இதே போன்று 'அவன் நோக்கா நின்றனன்', 'அவன் நோக்காது நின்றான்', அவன் பார்க்காமல் நின்றான்' என்பனவற்றுள்ளும் செந்தமிழ் வழக்கு, இலக்கிய வழக்கு என பிரித்துக்கூறுதல் எளிதாகும். இன்றைய இலக்கிய இதழ்களைத் தவிர தற்போதுள்ள நாளேடுகள், பல்சுவை இதழ்கள் அனைத்தும் பயன்படுத்தும் தமிழ்மொழி இலக்கிய வழக்கிலிருந்து பெரிதும் மாறுபட்டது என்பதில் ஐயமில்லை. சந்தி

விதிகள் பல்வேறு இடங்களில் தவிர்க்கப்பட்டும் (படித்து(ப்) படித்து, அந்த(க்)கடை, ப {ற் / ல்} பொடி); இலக்கணவிதிகள் சில மீறப்பட்டும் (இரண்டு மாடு (கள்), மாடுகள் **வந்தது,** அவர் **தன்னையே** நொந்து கொண்டார்); (வந்தன) தம்மையே

எழுத்துக்களை எழுதுகின்ற மரபுகளுக்கு விலக்காகவும் [(இ) லாட்டரி) (-) ரப்பர்] இன்றைய நாளேடுகள் மற்றும் பல்சுவை இதழ்கள் தமிழ்மொழியை பயன்படுத்தி வருகின்றன. ஆயினும் இத்தகைய மொழிவழக்கு பேச்சுவழக்கிலிருந்து வேறுபட்டுள்ளது என்பதில் ஐயமில்லை[5]. இன்றைக்கு தமிழ்மொழியின் உயர்வழக்காகக் கருதப்படுவது புலவர்கள் கூறும் செந்தமிழ் வழக்கிலிருந்து வேறுபட்டதுதான். இன்றைய உயர் வழக்கு என்பது வானொலியில் செய்தி வாசிப்பதிலும் இன்றைய நாளேடு மற்றும் பல்சுவை இதழ்களிலும் காணும் மொழி வழக்கினையே குறிக்கும். மொழியியல் அறிஞர்கள் பேச்சு வழக்கின் அடிப்படையில் காணும்போது செந்தமிழ் வழக்கு உயர்வழக்கு ஆகிய இவ்விரண்டையும் எழுத்துவழக்கு எனக் குறிப்பிடுகின்றனர். தமிழ் மொழியில் எழுத்துவழக்கு, பேச்சு வழக்கு எனும் இருமொழிநிலை (diglossia) பற்றி பல மொழியியல் அறிஞர்கள் எழுதியிருக்கின்றனர்[6]. எழுத்துவழக்கு என்பது புலவர் வழக்கு மற்றும் வானொலி செய்தி வாசிப்பதிலும் நாளேடுகளிலும் பல்சுவை இதழ்களிலும் காணும் வழக்காகும். பேச்சுவழக்கு என்பது ஒருவரின் இயல்பான பேசும் மொழியாகும். ஆனால் பேச்சுத்தமிழ் என்பது பேசப்படுகின்ற தமிழ் எனப் பொருள் கொள்ளுதல் சிறப்பாகாது. இலக்கியச் சொற்பொழிவுகளும் கட்டுரைகளை எழுதி வாசிப்பதும் பேசப்படுகின்ற தமிழாக இருப்பினும் எழுத்துத் தமிழின் பேச்சுவடிவமாகவே கருதவேண்டும். ஏனெனில் எழுத்துத் தமிழுக்கும் பேச்சுத் தமிழுக்கும் உள்ள பொது வேறுபாடுகளோடு பேசப்படுகின்ற பேச்சுத் தமிழுக்கும். வாசிக்கப்படுகின்ற எழுத்துத் தமிழுக்கும் (வாசிப்புத் தமிழ்) ஒலிப்பு முறையாலும் சில வேறுபாடுகள் உண்டு. வாசிப்புத் தமிழில்

சொற்களில் காணும் உயிரொலிகளுக்கு நடுவில் வரும் பகர, தகர, ககர ஒலிகளான குரலின் தடை ஒலிகள், குரல்தடை ஒலிகளாக உச்சரிக்கப்படுகின்றன. பேச்சுத் தமிழிலும் இவ்வாறே குரல் ஒலிகள் உச்சரிக்கப்படுகின்றன. சான்றாக, சொல் இறுதியில் வரும் நகரமும், லகரமும், ளகரமும் பேச்சுத் தமிழில் கெடுகின்றன. ஆனால் வாசிப்புத் தமிழில் அவைகள் கெடுவதில்லை [அவன் / அவெ (ன்); துவையல் / தொவய; அவள் / அவெ]. வாசிப்புத் தமிழில் சந்தி ஒற்றுகள் உச்சரிக்கப் படுகின்றன. சொல முதலில் வரும் மெய்யொலிக் கூட்டுகள் தவிர்க்கப்படுகின்றன. [அந்தச் சிறுபிராயத்தில்; அந்தயிடத்தில்] பேச்சுத் தமிழில் இவைகள் விடுபட்டு விளங்குகின்றன. [அந்த (ச்) சிறுப்ராயத்தில்; அந்த இடத்தில்] ரகர, றகர வேற்றுமைகள் வாசிப்புத் தமிழில் வலிந்து புகுத்தப்படுகின்றன. பேச்சுத்தமிழில் (கன்யாகுமரிப்பகுதித்தவிர) மற்ற இடங்களில் ரகர, றகர வேறுபாடுகளை காண்பதரிது. இவ்வாறு ஒலியியல் நிலையில் பெருமளவு வாசிப்புத் தமிழ் பேச்சுவடிவம் பெற்றிருந்தும் அது எழுத்து மொழியின் கூறாகவே விளங்குகிறது. இயல்பாக ஒருவர் பேசுவதுதான் மொழியியலாளர் பார்வையில் பேச்சு தமிழாகும். இயல்பான பேச்சுத் தமிழ் சிலசமயம் எழுத்து வடிவம் பெறுவதும் உண்டு. நாவல்கள், சிறுகதைகள் முதலியன இதற்கு சான்று பகரும். இவ்வாறு வாசிப்புத் தமிழில் உள்ள ஒலியனியல் கூறுகளையும் பொதுப் பேச்சுத் தமிழ் கூறுகளையும் பேச்சுத்தமிழ் தன்னகத்தே கொண்டு அத்துடன் தனக்கென மற்றும் சில ஒலியியல் கூறுகளைக் கொண்டும் விளங்குகின்றது.

கிளைமொழி வழக்கில் பேச்சுத் தமிழின் கூறுகள் அனைத்தும் அமைந்திருக்கும். அத்துடன் சமுதாய மற்றும் வட்டார வழக்குக்கூறுகளும் விரவிவருகின்றன. இவ்வாறு கிளைமொழி வழக்கு பொது பேச்சுத் தமிழ் வழக்குகளை உள்ளடக்கியும் பொதுப் பேச்சுத் தமிழ் வழக்கு வாசிப்புத் தமிழ் வழக்கினை உள்ளடக்கியும் (Implicational pattern) விளங்குகின்றன. எழுத்துத் தமிழிலிருந்து பேச்சுத் தமிழ் ஒலியனியல், உருபனியல் இவைகளால் பெரிதும் மாறுபட்டு விளங்குகின்றது. தொடரியல் கூறுகளால் எழுத்துத் தமிழுக்கும் பேச்சுத் தமிழுக்கும் பெரும்

வேறுபாடுகள் இல்லை.[7] மாறாக சில குறிப்பிட்ட தொடரியல் கூறுகள் பேச்சுத்தமிழில் மட்டுமே அதிகமாக (ஆனால் எழுத்துத் தமிழில் குறைவாக) வருகின்றன. அவ்வாறே வேறுசில தொடரியல் கூறுகள் எழுத்துத் தமிழில் மிக அதிகமாக (ஆனால் பேச்சுத்தமிழில் குறைவாக) வருகின்றன. பொதுவாகத் தமிழில் எதிர்கால வினையெச்சத்தினைக் கொண்டும் இறந்தகால வினையெச்சத்தினைக் கொண்டும் இடைச் சொல் பெற்ற வினை முற்றுத் தொடர்களும் பெயரெச்சத் தொடர்களும் அமைக்கப் படுகின்றன. ''படிக்கும் பையன் ... படிக்கிற பையன் ..., அங்கே படிக்கிறானே அந்தப்பையன்'' எனும் தொடர்கள் முறையே முன்கூறிய அமைப்பு முறைகளால் உருவானவை. இவைகளில் எழுத்துத் தமிழ் 'படிக்கும் பையன்' என்பது போன்ற எதிர்கால வினையெச்சத்தால் அமைந்த பெயரெச்சத் தொடரை அதிக மாகவும் ஏனையவைகளை குறைவாகவும் பயன்படுத்துகின்றது. அவ்வாறே பேச்சுத் தமிழில் 'அங்கே படிக்கிறானே அந்த பையன்' என்பது போன்ற இடைச்சொல் கொண்ட வினை முற்றால் அமைந்த பெயரெச்சத் தொடர்கள் அதிகமாகவும் (ஏனையவைகள்) குறைவாகவும் வருகின்றன. இவ்வாறு இன்னும் சில தொடரியல் கூறுகளையும் எழுத்து மற்றும் பேச்சுத் தமிழ் வேறுபாட்டிற்கு ஆதாரமாகக் காட்ட இயலும். எழுத்துத் தமிழுக்கும் பேச்சுத் தமிழுக்கும் உரியனவாக தனித் தனிச் சொற்கள் பல உள்ளன. 'சும்மா, ரொம்ப, செத்த, அக்கப் போறு' போன்றவைகள் பேச்சுத் தமிழுக்கும், 'அருந்து (குடி), நோக்கு (பார்), அமர் (உட்கார்), பாரதம், பொறுக்கு, விதை, மருத்துவர்' போன்றவைகள் எழுத்துத் தமிழுக்கும் உரியனவாக குறிப் பிடலாம். ஆனால் சில சொற்கள் எழுத்துத் தமிழில் ஒரு வித மாகவும் பேச்சுத் தமிழில் வேறுவிதமாகவும் திரிந்துவரும். [சான்று: பிள்ளை → (புள்ளெ) பிடித்துக் கொண்டான் → பிடிச்சிக்கிட்டா(ன்); பலாமரம் → பலாமரொ (ம்)]. இவ்வாறு திரிந்து வருகின்ற சொற்களைத் தனித்தனிச் சொற்க ளாகக் கருதாது ஒலியியல் விதிகளால் முதல் சொல்லையும் திரிந்த சொல்லையும் தொடர்புபடுத்தலாம். இவ்வாறு சொற்கள் ஒரு வழக்கிலிருந்து வேறு ஒரு வழக்கிற்கு மாறுவதை ஒலியியல்

மூலம் தொடர்படுத்திக் காட்ட பயனாகும் விதிகள் 'ஒலியியல் மாற்று விதிகள்' (Phonological conversion rules) எனக் குறிப்பிடுவர்.

பேச்சுத்தமிழ் எனும்போது இது சமுதாய மற்றும் வட்டார வழக்குகளை உள்ளடக்கிய கிளைமொழிகளையும் சமுதாயம் மற்றும் வட்டாரவழக்குகளை தவிர்த்த பொதுப் பேச்சுத் தமிழையும் குறிக்கும். தமிழ்மொழியை ஒரு தொடர்சங்கிலி என உருவகப்படுத்தினால் சமுதாய மற்றும் வட்டார வழக்குகளால் பிணைக்கப்பட்ட கிளைமொழிகள் ஒரு முனையாகவும் (துருவமாகவும்), புலவர்வழக்கு, இலக்கியவழக்கு, பத்திரிகை வழக்கு என பல்வேறு வழக்குகளைக் கொண்ட எழுத்து மொழியினை மறுமுனையாகவும் (துருவமாகவும்) கொண்டு தமிழ் மொழித் தொடர்ச்சங்கிலி (linguistic continuum) விளங்குகிறது. பொதுப் பேச்சுத் தமிழ் இச்சங்கிலித் தொடரின் இரு முனைகளுக்கும் ஓரளவு இடையில் அமைவதாகக் கருதலாம்.[9] எழுத்துத் தமிழைப் போன்று சமுதாயம் மற்றும் வட்டார பாதிப்புக்களைத் தவிர்த்தும் அதேசமயம் பேச்சுத் தமிழின் பொதுக் கூறுகளைக் கொண்டும் பொதுப்பேச்சுத் தமிழ் விளங்குகின்றது. எழுத்துத் தமிழிலும் பேச்சுத் தமிழிலும் காணும் பல்வேறு சொற்களை ஒலியியல் மாற்றுவிதிகள் மூலம் பெரும்பாலும் தொடர்புபடுத்தி விடலாம். எழுத்துத் தமிழிலிருந்து பேச்சுத் தமிழுக்கு இம்மாற்றம் நடந்ததாகக் கருதி ஒலியியல் மாற்றுவிதிகள் அமைக்கப்பட்டுள்ளன.[10] சில உருபனியல்களையும் இவ்வாறு ஒலியியல் விதிகளால் தொடர்புபடுத்திக் காட்ட இயலும். [சான்றாக: போல → ப்லே; கொண்டு → ண்டு]. இவ்வாறு எழுத்துத் தமிழுக்கும் பேச்சுத் தமிழுக்கும் உரிய பல சொற்களில் காணும் வேறுபாடுகளை ஒலியியல் மாற்றுவிதிகளால் தொடர்புபடுத்தி ஒன்றிலிருந்து ஒன்று பெறப்பட்டது என பலராலும் கருதப்படுகிறது.

எழுத்துவழக்கில் காணும் 'இ'கரம் உயிரொலி பேச்சு வழக்கில் 'உ'கரமாக மாறுவதும், அவ்வாறே 'எ' கரம் 'ஒ' கரமாக மாறுவதும் உண்டு [சான்றாக: பிடி → புடி; பிள்ளை → புள்ளெ; மெல்ல → மொல்ல]. இவைகள் ஒலியியல் விதிகளின்படி

இதழ்குவியா உயிரொலிகள் (unrounded vowels), இதழ் குவி உயிரொலிகள் (rounded vowels), ஆக மாறுகின்றன. அதாவது பேச்சுத் தமிழில் உயிரொலிகள் இதழ்குவியும் தன்மை பெறுகின்றன. அதுபோலவே உயிரொலிகள் உச்சரிக்கும்போது நாவின் உயரம் குறைக்கப்படுவதையும் காணலாம் [சான்று இடம் → எட(ம்); இலை → எலெ, உயரம் → ஒயரொ(ம்) உதவி → ஒதவி). பொதுப் பேச்சுத் தமிழில் உயிரொலிகள் இதழ் குவிப்பு தன்மை பெற்றும், நாவின் உயரம் குறைக்கப்பட்டும் வழங்கப் படுகின்றன.

கிளைமொழியில் 'மிளகாய்' எனும் சொல் 'மொளகாய்' எனத் திரிந்து வருவதும் 'பிறந்து' என்பது 'பொறந்து' என மாற்றம் பெறுவதும் 'இ'கரம் 'எ'கரமாக மாறி பின்னர் 'ஒ'கர மாக மாறுவதால் பெறப்படுகின்றன. கிளைமொழி பேச்சில் வரும் உயிரொலிகள் இத்தகைய ஒலியியல் மாற்றங்களைப் பெறுகின்றன. இதைத் தவிர உயிரொலிகள் சிற்சில சமயங் களில் மேற்கூறிய மாற்றங்களுக்கு எதிரிடையான மாற்றங் களைப் பெறுவதும் உண்டு. உயிரொலிகள் இதழ் குவிப்புப் பண்பு கெட்டும் வரும். (சான்று: புல் → பில்லு; சொல்லு → செல்லு). இத்தகைய ஒலியியல் மாற்றங்களை ('உ'கரம் இகர மாக மாறுவதும், ஒகரம் எகரமாக மாறுவதும்) பொதுப் பேச்சுத் தமிழில் காணமுடிவதில்லை. அவ்வாறு உயிரொலி உச்சரிப்பில் நாவின் நிலை உயர்வதும் கிளைமொழி வழக்கில் காணும் ஒலியியல் கூறாகும்.[11] (சான்று: என்னம்மா? → இன்னாம்மா?; கொடு → குடு). இவ்வாறு உயிரொலி மாற்றங் களில் காணும் வேறுபாடுகளால் இவ்வேறுபாடுகளுக்கு காரண மான ஒரு சில உயிரொலி மாற்று விதிகளால் கிளைமொழி களை பொதுப்பேச்சு வழக்கிலிருந்து வேறுபடுத்த இயலும். அவ்வாறே சில குறிப்பிட்ட மாற்று விதிகளின் தன்மைகளால் ஏற்படும் மெய்யொலி மாற்றங்களின் துணைகொண்டும் கிளை மொழிகளுக்கும் பொதுப் பேச்சுத் தமிழுக்கும் வேறுபாடு காண இயலும். சொல் இறுதியில் வரும் லகர, ளகரங்கள் கெடுவதும் (சான்று: அவள் → அவெ: விரல் → வெர) நகரம் திரிந்து உயிரொலி மூக்கொலியுடன் வருவதும் பொதுப்

பேச்சுத் தமிழில் காணும் சில கூறுகளாகும். அவ்வாறே றகர ஒற்று தகர ஒற்றாகவும் ஒலிக்கும் (ஆற்றுக்கு → ஆத்துக்கு; வற்றல் → வத்த/வத்தலு). சில சமயம் தகரம் சகரமாக ஒலிப்பதும் உண்டு. (மாதம் → மாசம்; முழுதும் → முழுசும்). சில சொற்க்ளில் தகரம் ரகரமாக ஒலிப்பதும் உண்டு. (போதும் → போறும்). இவ்வாறு சில குறிப்பிட்ட ஒலியன்கள் வேறு ஒலியன்களாக (phonemes) மாறி ஒலிப்பதை மாற்றவிதிகள் பொதுப் பேச்சுத் தமிழில் அனுமதிக்கின்றன. ஆனால் 'ல' கர ஒலியன் 'ள' கரமாக மாறுவதையும் 'ழ' கர ஒலியன் யகரமாகவோ (பழம் → பயம்; கழட்டு → கயட்டு)அன்றி லகரமாக மாறுவதையோ (பழம் → பலம்; மழை → மலெ) அன்றி ளகரமாக மாறுவதையோ (பழம் → பளம்: மழை → மளெ) பொதுப் பேச்சுத் தமிழில் காண முடியாது. இத்தகைய லகர, ளகர, ழகர வேறுபாடுகள் கிளைமொழி வழக்கில் மட்டும் காணப்படுகின்றன. இவ்வாறு கிளைமொழி வழக்கில் மட்டுமே காணப்படும் சில ஒலியியல் மாற்றுவிதிகள் தமிழில் உள்ளன. சொல் நடுவில் வகரம் கெடுவது பொதுப் பேச்சுத் தமிழில் உள்ள விதியாகும் (சான்று கொத்தவரங் காய் → கொத்தரங்கா; மணவறை மணறை). ஆனால் வகரம் சொல் முதலிலும் கெடுவது கிளைமொழியியல் கூறாக உள்ளது. (சான்று: வியாழன் → சாலே(ன்); விலாசம் → சாலோ(ம்) |லாசோ(ம்). ககரம வகரமாக திரிவது பொதுப் பேச்சுத் தமிழில் காணப்படுகின்ற கூறாகும (சான்று; மகன் → மவெ(ன்) அகத்திக் கீரை → அவுத்திக்கீரெ: பலகை → பலவெ). ஆனால் ககரம் யகரமாக மாறுவது கிளைமொழி வழக்கில்தான் பெரும்பாலும் காணப்படுகின்றது. (சான்று: மகன் → மயெ(ன்) புகையிலை → பொயிலெ; காகிதம் → காயிதொம்). வகரம் கெடுவதும் ககரம் வகரமாக மாறுவதும் பொதுப் பேச்சுத் தமிழில் காணும் இரு ஒலியியல் மாற்று விதிகளாகும். ஆனால் இவ்விரு விதிகளும் ஒரே சொல்லில் ஒன்றன் பின் ஒன்றாக நிகழும் போது அச்சொல் கிளைமொழியில் காணப்படும் சொல்லாக கருதப்படுகிறது (சிகப்பு → செவப்பு → சேப்பு). இவ்வாறு பலகாரம் எனும் சொல் மாற்று விதிகளுக்கு உட்பட்டு பலகாரம் →பலகார(ம்) — பலாரம் →

ப்லார(ம்) எனத் திரிந்து வழங்கப்படுகின்றன. இவற்றில் பலகார(ம்) எனும் சொல் மட்டும் பொதுப பேச்சுத் தமிழுக்கு உரியதாகவும் ஏனையவைகள் கிளைமொழிச் சொற்களாகவும் கருதப்படுகின்றன. ஆனால் இச்சொல்லின் ஒலி மாற்றங்களுக்கு பயன்பட்ட விதிகள் முறையே சொல் இறுதி நகரம் திரிவது (அவன் → அவெ(ன்); ககரம் வகரமாவது (மகன் → மவென்); வகரம் கெடுவது (கொத்தவரங்காய் கொத்தரங்கா); சொல் முதலில் ஒற்று பெறுவது (மிலார் → மிலாரு) ஆகிய அனைத்தும் தனித்தனியே பொதுப் பேச்சுத் தமிழில் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் பொதுப் பேச்சுத் தமிழில் இவ்விதிகள் ஒன்றிற்கு மேல் ஒரே இடத்தில் பயன்படுத்தப் படுவதில்லை. கிளைமொழியியலில்தான் இவ்வாறு விதிகள் தொடர்ந்து பயனாகின்றன. இவ்வாறு ஒரு சில குறிப்பிட்ட மாற்றுவிதிகளாலும் ஒன்றுக்கு மேற்பட்டவிதிகள் ஒரே சொல்லில் (உள்ள பல அசைகளின் மீதோ அன்றி ஒரே அசையின் மீதோ) தொடர்ந்து வந்து மாற்றம் விளைவிப்பதாலும் கிளைமொழி வழக்கு பொதுப் பேச்சுத் தமிழிலிருந்து மாறுபட்டு விளங்குகிறது. மாற்றுவிதிகள் பயனாகும் முறை, எண்ணிக்கை முதலியன இன்னும் துல்லியமாக ஆய்ந்திட வேண்டும்[13].

பேச்சுத்தமிழ் வழக்கில் கிளைமொழி வழக்கும் பொதுப் பேச்சுத் தமிழ் வழக்கும் அடங்கினாலும் கிளைமொழி வழக்கு ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திலோ அன்றி வட்டாரத்திலோ நிலவும் வழக்கினை மட்டும் குறிப்பதாக அமையும். பொதுப் பேச்சு வழக்கோ சமுதாய மற்றும் வட்டாரங்களிலும் பயன் படுத்துகிற அன்றி பயன்படுத்த ஏதுவாக அமைகிற பொது அமைப்பை (Common system) குறிப்பிடுகிறது. பொதுப் பேச்சுத் தமிழ் எல்லா கிளைமொழி வழக்கையும் இணைக்கும் பாலமாகவும் சமூக நன்மதிப்பு பெற்ற வழக்காகவும் பேச்சு வழக்கினை நிலைபெறச் செய்ய standardization) ஏதுவாகவும் அமைகிறது. சமூக மற்றும் வட்டார வழக்குகளைக் கொண்ட கிளைமொழிக்கு மேற்கூறிய பயன்கள் எதுவும் பொருந்தாது.

கிளைமொழிச் சொற்களானாலும் சரி, பொதுப் பேச்சுத் தமிழ்ச் சொற்களானாலும் சரி அவைகள் எல்லாம் சிற்சில

சமயம் பேசப்படுகிற சூழலுக்கு ஏற்ப ஒருசில ஒலியியல் மாற்றங் களைப் பெற்றும் பெறாமலும் வரலாம். பொதுப் பேச்சுத் தமிழில் பயனாகும் 'படிச்சிக்கிட்டிருக்கேன்' எனும் சொல் 'படசிக் கிட்டிருக்கேன் / படிச்சிட்டிருக்கேன்' என ஒருவரின் இயல்பான விரைவான பேச்சில் வரலாம். அவ்வாறே அதிகமாக கிளை மொழியில் மட்டும் பயனாகும் 'கத்தரிக்காய்' எனும் சொல்லின் திரிபுகளான 'கத்ரிக்கா (யி) / கத்தரிக்கா (யி)' என்பவைகள் பேசும் சூழலுக்கு ஏற்ப ஒருவராலேயே பயன்படுத்தப்படலாம். சொற்கள் ஒலியியல் விதிகளால் சற்று வேறுபடுத்தப்பட்டு பயன்படும் நிலையினைத்தவிர ஒன்றைக் குறிக்கும் இருவேறு சொற்களையும் கூட ஒருவரே தாம் பேசும் சூழலுக்கு ஏற்ப தனித்தனியே பயன்படுத்தலாம். 'சட்டே, லவுக்கே, சாக்கெட்டு' எனும் சொற்கள் பெண்கள் அணியும் 'ஜாக்கெட்' என்பதனைக் குறிக்க ஒருவராலேயே பேசும் சூழலுக்கு ஏற்ப பயன்படுத்தப் படுகின்றன. இம்மூன்று சொற்களும் பொதுவாக கிளை மொழிச் சொற்களாக கருதப்படுகின்றன. அவ்வாறே 'மனைவி' யைக் குறிக்க அரிசன பேச்சு வழக்கில் பல்வேறு சொற்கள் பல்வேறு சூழலில், சக ஊழியர்களிடம் பேசும்போது 'பெண்டாட்டி' என்றும், பொதுஇடத்தில் 'வூட்டுலெ' என்றும், பயிர்த்தொழில் தொடர்பாக முதலாளியிடம் பேசும்போது 'நடவாளு' என்றும், உயர் அதிகாரிகளிடமோ அல்லது அலுவலகங்களில் பதிவு செய்ய வேண்டிய சூழலிலோ 'மனைவி' என்றும். ஆங்கிலம் பேசும் மக்களிடம் 'வொய்ப்பு' என்றும் குறிக்கப்படுகின்றன.[14] இதனால் இயல்பான சூழலில் தமது வயது ஒத்தவர்களோடு (peer group) பேசுகின்ற பேச்சை அவருக்கு உரிய பேச்சு வழக்காக கொள்ளுதல் நலமாகும். இதில் விரைவாக பேசுவதால் ஏற்படும் மேலோட்டமான மாற்றொலி வேறுபாடுகளை பெரும் மாற்றங்களாகக் கருதாது தவிர்த்தல் வட்டாரவழக்கு ஆய்விற்கு அவசியமாகிறது. பொதுப் பேச்சுத் தமிழில் வாசிப்புத் தமிழின் கூறுகள் உள்ளடங்கி நிற்றல் போல் கிளைமொழிக் கூறுகளில் பொதுப் பேச்சுத்தமிழின் கூறுகள் உள்ளடங்கி (implicaional) விளங்குகின்றன. இதனால் கிளை மொழி ஆய்வாளர்கள் பொதுப்பேச்சுத் தமிழ் கூறுகளை கிளைமொழி கூறுகளாகக் கருதுவதைத் தவிர்த்தல் நலமாகும்.

மேலும் ஒரு குறிப்பிட்டசொல் அல்லது உச்சரிப்பு ஒரு குறிப்பிட்ட கிளைமொழிக்கோ அல்லது பொதுப் பேச்சுத் தமிழுக்கோ மட்டும் உரியது என அறுதியிட்டுக் கூறுதல் மிகையானது. மாறாக ஒரு குறிப்பிட்டசொல் அல்லது உச்சரிப்பு ஒரு குறிப்பிட்ட கிளைமொழியில் அல்லது பொதுப் பேச்சு தமிழில் அதிகமாக வருகின்றது என்றோ அல்லது இன்னும் துல்லியமாக கூறவேண்டுமானால் புள்ளியியல் (statistics) முறைகளைப் பயன்படுத்தி விழுக்காடு அளவிலோ குறிப்பிடுதல் சிறப்பானதாகும். ஒரு பேச்சு வழக்கிற்குள்ளேயே நடைபெறும் வேறுபாடுகளைப் பற்றிய ஆய்வில் இவ்விழுக்காடு முறை பயன்படுத்தப்படுகிறது. கிளைமொழி ஒரு முனையாகவும் (துருவமாகவும்) எழுத்துத் தமிழ் வழக்கு மறு முனையாகவும் (துருவமாகவும்) அமைந்த பேச்சுத் தொடர் சங்கிலியில் (linguistic continuum) ஒருவர் தனது சமூக வட்டார சூழல்களுக்கு ஏற்ப இத்தொடர் சங்கிலியில் முன்னும் பின்னும் நகர்ந்து தம் பேச்சுவழக்கினை அமைத்துக் கொள்ளுதல் சாத்தியமாகிறது. இத்தகைய அமைப்புமுறை இருப்பதால்தான் ஒருவரே தமது பேச்சில் பல்வேறு வேறுபாட்டுக் கூறுகளை (variables) கொண்டிருக்க முடிகிறது என்பதில் ஐயமில்லை.

குறிப்புகள்:

1. சமுதாயமும் மொழியும் ஒன்றையொன்று சார்ந்துள்ளன என்பதை ராஜாராம் (1973), கருணாகரன் (1975) ஆகியோர் விளக்கியுள்ளனர்.

2. பொதுப் பேச்சுத் தமிழ் வழக்கு தமிழ் மொழியில் இருக்கிறது என ஒரு சிலரும் அத்தகைய வழக்கு ஒரு அருவ நிலையில் (abstract level) உள்ளது என ஒரு சிலரும் குறிப்பிடுவர். சண்முகம்பிள்ளை (1968), வசந்தகுமாரி (1976) ஆகியோர் பொதுப் பேச்சுத் தமிழ் என்பது நடுத்தர மக்களின் பேச்சுவழக்கு என்றும், சில வானொலி நிகழ்ச்சிகளிலும் திரைப்படங்களிலும் இவ்வழக்கு பயனாகிறது என்றும் குறிப்பிடுகின்றனர். சுவலேபில் (1964) பொதுப் பேச்சுத் தமிழ்

என்பது திருச்சி, தஞ்சாவூர் பகுதிகளிலும், சென்னையிலும் படித்த பிராமணரல்லாத நடுத்தரமக்களிடை இயல்பாக பேசப்படுவது என்று குறிப்பிடுகிறார். தொல்காப்பியர் (398 ஆம் பாடல்) கூறும் செந்தமிழ் நிலத்தினை மனதில் கொண்டு சுவலேபில் திருச்சி – தஞ்சாவூர் பகுதிகளைக் குறிப்பிட்டிருக்கலாம் என கருத வாய்ப்புண்டு. இச்செந்தமிழ் நிலத்திற்கு அப்பால் பேசப்படும் அந்தந்த நிலத்து இயற்சொற்களும் செந்தமிழ் நிலத்தில் திசைச் சொல்லாகும் என கருதப் படுகிறது (பார்க்க: சேனாவரையர் உரை: கணேசய்யர் பதிப்பு) வி.அய். சுப்ரமணியம் (1975) பொதுப் பேச்சுத் தமிழ் என்ற ஒன்று இல்லையென்றும் வட்டாரவாரியாக பொதுப் பேச்சுத் தமிழ் உள்ளன என்றும் குறிப்பிடுகிறார். அண்ணாமலை (1976) எல்லா வட்டார மற்றும் சமுதாய வழக்குகளை நீக்கியபின் ஒருவர் இயல்பாக பேசுகின்ற பேச்சே பொதுப் பேச்சுத் தமிழாகும் என்கிறார். இப்பொதுப் பேச்சுத் தமிழ் இன்று வரை முழுதுமாக உருவாகி நிலைபேற்றம் (standard) பெற வில்லை என்று கருதுகிறார். ஞானசுந்தரம் (1980) இக்கருத்தினையொட்டியே பொதுப் பேச்சுத் தமிழ் என்பது ஒவ்வொருவரும் தமக்கேயுரிய முறையில் சமுதாய மற்றும் வட்டார வழக்குச் சொற்களை தெரிந்த மட்டும் நீக்கி பேசுவதே என கள ஆய்வு முறையால் கண்டறிந்து கூறுகிறார். இதனால், பொதுப் பேச்சுத் தமிழ் என்பது எல்லா வகையான சமுதாய மற்றும் வட்டார வழக்குகளை கலவாத பேச்சுத் தமிழ் என்றும் தமிழ் பேசுகின்ற எல்லோருக்கும் பொதுவானது என்றும் உறுதியாக கூறமுடியும். ஆனால் பொதுப் பேச்சுத் தமிழின் உருவாக்கம் ஒருபகுதியிலிருந்து எழுகிறது என்றும், அது நிலைபேற்றம் பெற்று விட்டது என்றும் கூறுதல் இயலாது.

3. செந்தமிழ் வழக்கு என்பது இன்றைய நிலையில் புலவர்கள் பயன்படுத்தும் இலக்கிய வழக்காகும். [பார்க்க திருமலை, 1978]

4. தொல்காப்பியர் காலத்திலேயே திசைச் சொல் பற்றிய குறிப்புள்ளது. திசைச் சொல் வட்டார வழக்குச் சொற்களை மட்டுமே குறித்தாலும் இன்றைய நிலையில் அது

சமுதாய மற்றும் வட்டார வழக்குச் சொற்களை ஒரு சேர பேச்சுவழக்கு சொற்கள் என குறிக்கின்றோம்.

5. அண்ணாமலை (1980) இலக்கிய வழக்கில் ஏற்பட்டுள்ள பேச்சுத் தமிழ் பாதிப்பினைச் சுட்டிக்காட்டி மரபு இலக்கணத்தின் வலுவான பிழையிலிருந்து உயர் வழக்கு சற்று நெகிழ்ந்துள்ளதைக் குறிப்பிடுகிறார்.

6. பார்க்க ரா.பி. சேதுப்பிள்ளை (1953), சண்முகம் பிள்ளை (1960), ஷிஃப்மன் (1978), ராமசாமி (1980), தெய்வசுந்தரம் (1980), ஆரோக்கியநாதன் (1982).

7. பேச்சுவழக்கும் எழுத்து வழக்கும் ஒலியனியல், உருபனியல், சொற்கள், தொடரியல் ஆகியவைகளால் வேறுபடுகின்றன. ஒலியனியலில் மிகவும் அதிகமாகவும் உருபனியலில் குறைந்தும் தொடரியலில் அருகியும் வேறுபாடுகள் உள்ளன.சொற்கள் இவ்விரு வழக்கிற்கும் தனித்தனியாகவும் ஒரு சொல்லே சற்று திரிந்தும் வேறொரு வழக்கிலும் வரலாம்.

8. தமிழ் மொழியில் இலக்கிய வழக்குக்கும் பேச்சுவழக்குக்கும் உள்ள தொடர்புகளை சில விதிகள் மூலம் ரா.பி. சேதுப்பிள்ளை (1953) நிறுவிக் காட்டியுள்ளார். பின்னர் சண்முகம் பிள்ளை (1960) அவர்களும் பின்னர் பல சமுதாய மொழியியல் அறிஞர்களும் இத்தொடர்புகளை எடுத்துக் காட்டி ஒலியியல் விதிகளை செம்மைப் படுத்திக்கொண்டே வருகின்றனர்.

9. பிக்கர்டன் (1975) கையானிஸ் கிரியோல் (Guyanese creole) மொழியியல் ஆய்வு நடத்தி அச் சமுதாயத்தில் விளங்கும் மொழிச் சூழலை தொடர்ச்சங்கிலியாக (linguistic continuum) விவரித்துள்ளார். கிரியோல் மொழி ஒரு முனையாகவும் ஆங்கில மொழி மறுமுனையாகவும் கொண்ட தொடர் சங்கிலியில் (basilect, mesolect, acrolect) எனும் சில அருவ நிலைகளை (abstrat

adhoc points) அமைத்துக் கொண்டு கிரியோல் பேசுவோ னின் மொழிவழக்கை ஆய்ந்துள்ளார். ஒருவன் தன் பேச்சில் முன்னும் பின்னும் நகர்ந்து சூழலுக்குத் தக்க வாறு மொழி அமைப்பை ஏற்படுத்திக் கொள்வான் என்கிறார். இருமொழிநிலை கொண்ட தமிழுக்கு இது பொருந்தும் என ஆரோக்கியநாதன் **(1982)** கருது கிறார். ஆனால் பிக்கர்டன் கிரியோல் பேசுவோரிடம் ஆங்கிலம் மற்றும் கிரியோல் ஆகிய இருமொழியின் இலக்கணங்கள் புதைநிலையில் உள்ளன என்று கூறுகிறார். ஆனால், தமிழில் புதைநிலையில் தமிழுக் குரிய இலக்கணமும் எழுத்து வழக்கு மற்றும் பேச்சு வழக்கு இவைகளை உருவாக்க தேவைப்படும் மாற்று விதிகளும் தமிழுக்குரிய இலக்கணக் கூறுகளாக **(components of a grammar)** அமைந்துள்ளன.

10. எழுத்து வழக்கினை அடிப்படையாகக் கொண்ட மைந்த மாற்றுவிதிகள் அதிக நிரலாக இருப்பதாகவும் விதிவிலக்கு நிறைய இல்லாமல் இருப்பதாகவும ஒருவரின் கற்கும் திறனை ஒத்து இவ்விதிகள் அமைந்திருப்ப தாகவும் ஷிஃப்மன் *(1978)* குறிப்பிடுகிறார்.

11. பார்க்க ஆரோக்கியநாதன் *(1982)*

12. ககரம் வகரமாக மாறுவது பொதுப் பேச்சுத் தமிழின் கூறு என்னும் இம் மாற்றம் சில சொற்களில் நிகழும் போது அச்சொற்கள் பொதுப் பேச்சுத் தமிழைச் சாராது கிளைமொழிக்கு உரியதாக விளங்குகின்றன. கீழ்வரும் சொற்களான 'நவுந்து (நகர்ந்து), அவுத்துக் கீரை) (அகத்திக்கீரை) சீரவம் (சீரகம்)' முதலியன வகர மாற்றம் பெற்ற பொதுப் பேச்சுத் தமிழினைச் சார்ந்த சொற்களாகும். அதேபோன்ற வகர மாற்றம் பெற்ற கீழ்கண்ட சொற்கள் பொதுப் பேச்சுக்கு உரியதாக பலராலும் கருதப்படாது கிளைமொழியைச் சார்ந்த தாக கருதப்படுகின்றன [நாடவ(ம்) (நாடகம்); குத்தவெ (குத்தகை); படவு (படகு).

13. தெய்வசுந்தரம் (1980) மாற்றுவிதிகளின் எண்ணிக்கையைக் கொண்டு எழுத்துத் தமிழ் பேச்சுத் தமிழிலிருந்து எவ்வளவு இடைவெளி பெற்று மாறுபடுகிறது என கணக்கிட முயன்றுள்ளார். ஆனால் வெறும் எண்ணிக்கையை விட மாற்றம் பெறும் ஒலிகள் ஒலியன்களின் தன்மையாலும் இந்த இடைவெளி கணக்கிடப்படவேண்டும் (பார்க்க:புலப்பாடு (1984) இதழ்: 147 தமிழ்ப் பல்கலைக்கழகம்).

14. அரிசன மக்களின் பேச்சுவழக்குத் தரவுகள், திரு. ரவிசங்கர் அவர்களும் நானும் தஞ்சாவூர் மாவட்டத்தில் நடத்திய வட்டாரவழக்கு கள ஆய்வுகளிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன.

துணைநூல்கள்

Annamalai, E, 1976 "Standard Spoken Tamil: Some observations", R. V. K. Thampuran ed.) *Studies in Dialectology. Vol:1,2.*

——— 1980 "Simplification as a process of Modernization" Karunakaran (ed.) *Socio-linguistics and Dialectology*, Annamalai University, Annamalainagar.

Arokianathan, S. 1980 "Radio Tamil" *Mozhiyiyal 4:1 & 2.*

——— 1982 '*Tamil Language used in Mass Media*" *Ph. D. thesis*, University of Washington.

Bickerton D. 1975 *Dynamics of a Creole ystem*, Cambridge University Press, Cambridge.

Deivasundaram, M 1980 *Tamil Diglossia*, Tamil Noolagam, Madras.

Ganesa Ayer (ed) 1938 *Tolkappiam*, Senavarayar Text Thirumagal Ackagam, Sunnagham.

Gnanasundaram, N 1980 "The Role of Diglossia in the emergence of Standard Spoken Tamil" *2nd International conference on South Asian Languages & Linguistics*, Mysore.

Karunakaran, K 1975 *Sociolinguistics* (in Tamil), Malar Pathippagam, Chidambaram.

Ramasamy, N 1980 "Formal and Informal Tamil" Ph. D. thesis. University, of Kerala.

Schiffman, Harold 1978 "Diglossia and Purity/Pollution in Tamil" *Contribution to Asian studies*, Vol XI. pp: 98-109.

——— 1979 *A Grammar of spoken Tamil*, Christian Literary Society, Madras.

Sethupillai, R. P. 1953 *Tamil Literary and Colloquial*, University of Madras, Madras.

Shanmugam Pillai 1960 "Tamil Literary and Colloquial" in Charles, A Ferguson (ed.) *Linguistic Diversity in South Asia* IJAC:7.

Subramaniom, V. I. 1975 "Remarks in the seminar on Language Teaching". *Seminar papers*, CIIL, Mysore.

Thirumalai, M. S. 1978 *Stylistics: A Linguistic approach*, University of Madras, Madras.

Zvelebil, K 1964 "Spoken Language of Tamilnadu" *Archiv Orientalini*, 32:2.

மொழியியல் 9. 1 & 2 (1985)

பழந்தமிழில் காலவெச்சங்கள்

ச. அகத்தியலிங்கம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

1. வினையெச்சம்

தமிழ் இலக்கண உலகில் வினைச் சொற்களின் பங்கு மிக முக்கியமானதாகும். பொதுவாகத் தமிழ் மொழியில் காணப் படும் வாக்கியங்களை எடுத்து ஆராயின் மிகப் பெரும் பாலானவை வினைச் சொற்களைக் கொண்டே காணப்படு கின்றன. இந்நிலையில்தான் வினைச் சொற்கள் முக்கியமான ஒரு சொல்வகையாகக் கருதப்படுகின்றன. இவ்வினைச்சொற் களும் பல வேறு உருவங்களில் வாக்கியங்களில் வரக் காணலாம். முற்றுவினையாகவும், எச்சவினையாகவும், தொழில் பெயரா கவும் இன்னும் பலவேறு உருவங்களிலும வருதல் உண்டு.

கண்ணன் வந்தான்

என்பதில் முற்றுவினையைக் காண்கிறோம். ஆனால்

கண்ணன் உண்டு வந்தான்
கண்ணன் உண்ண வந்தான்

போன்றவற்றில் எச்சவினையைக் காண்கிறோம். இதே போன்றுதான்

கண்ணன் வந்தால் நான் வருவேன்
கண்ணன் வந்தாலும் நான் வருவேன்

போன்ற வாக்கியங்களிலும் வேறு சில வினை உருவங்களைக் காணுகிறோம். இவை அனைத்தும் வினைச்சொற்களின் வெவ்வேறு உருவங்களே ஆகும்.

பொதுவாக மரபிலக்கண அறிஞர்கள் உண்டு, வந்தால் போன்றவற்றை வினையெச்சம் என்றே குறிப்பிட்டுச் செல்வர். தொல்காப்பியர்

"செய்து செய்யூச் செய்பு செய்தெனச்
செய்யியர் செய்யிய செயின்செயச் செயற்கென
அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி" சூத். 713

எனக் கூறுவதும், நன்னூலார்

"செய்து செய்பு செய்யாச் செய்யூச்
செய்தெனச் செயச்செயின் செய்யிய செய்யியர்
வான்பான் பாக்கின வினையெச் சம்பிற
ஐந்தொன் றாறுமுக் காலமு முறைதரும்" நன். 343

எனக் கூறுவதும் இங்குக் குறிப்பிடத்தக்கன.

வினையெச்சம், பெயரெச்சம் என நாம் இன்று குறிப்பிடுவன வற்றைக் குறிக்க வினையெஞ்சு கிளவி, பெயரெஞ்சு கிளவி என்ற சொற்களைத் தொல்காப்பியர் பல இடங்களில் பயன் படுத்திய போதிலும் எச்சம் என்ற சொல்லையும் ஆங்காங்கே பயன்படுத்தியுள்ளமை இங்கு நினைவுகூரத்தக்கது.

1.1 எச்சம் என்ற சொல்

வினையெச்சம் பற்றிக் கூறும் வினையியலிலேயே எச்சம் என்ற சொல் பயன்படுவது இங்கு உணரத்தக்கது. செய்து, செய்யூ, செய்பு ஆகிய மூன்று எச்சங்களும் எவ்வாறு முடியும் எனக் குறிப்பிட்டுவிட்டுத் தொடர்ந்து

> "ஏனை எச்சம் வினைமுத லானும்
> ஆன்வந் தியையும் வினைநிலை யானும்
> தாமியல் மருங்கின் முடியும் என்ப" சூத். 717

என்ற சூத்திரத்தில் இவற்றை எச்சம் எனக் குறிப்பிடுதல் காணலாம். இதே போன்று பின்னர் "தத்தம் எச்சம்" எனக் குறிப்பிடுவார் அவர்.

> "தத்தம் எச்சமொடு சிவணுங் குறிப்பின்
> எச்சொல் லாயினும் இடைநிலை வரையார்" சூத். 722

என்பது சூத்திரம்.

மேலும் செய்தென் எச்சம் எனக் குறிப்பாகக் கூறுதலும் காணத்தக்கது.

> "செய்தெ னெச்சத் திறந்த காலம்
> எய்திட னுடைத்தே வாராக் காலம்" சூத். 724

எனினும் இச் சூத்திரங்களுக்கு முன்னரும் பின்னரும் பல இடங்களில் பெயரெஞ்சு கிளவி, வினையெஞ்சு கிளவி என்ற சொற்களையே மிக அதிகமாகப் பயன்படுத்தியுள்ளார் தொல்காப்பியர்.

1.2 இருபொருள்

1. எச்சம் என்ற சொல்லையே இவர் இரு பொருள்களில் பயன்படுத்துதல் காணலாம். "ஒன்றை ஒழிபாக உள்ளது அல்லது கொண்டு முடிவது" என்ற பொருளில் இச்சொல் பல இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. வினையெச்சம், பெயரெச்சம் போன்றவற்றில் எச்சம் என்ற சொல் இப்பொருளிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. வினையெச்சம் வினைச்

சொற்களைக் கொண்டு முடிதலின் வினையெச்சம் எனவும் பெயரெச்சம் பெயர்ச்சொற்களைக் கொண்டு முடிதலின் பெய ரெச்சம் எனவும் இவற்றைப் போன்றே பிரிநிலை எச்சம் போன்றவை அவற்றை உணர்த்தும் சொற்களைக் கொண்டு முடிகின்ற நிலையில் எச்சங்கள் எனக் கருதப்பட்டன என்பதும் இங்கு நினைவுகூரத்தக்கன.

> ''வினையெஞ்சு கிளவிக்கு வினையுங் குறிப்பும்
> நினையத் தோன்றிய முடிபா கும்மே
> ஆவயிற் குறிப்பே ஆக்கமொடு வருமே'' சூத். 432

என்ற சூத்திரத்திற்குப் பொருள் எழுதப் போந்த சேனாவரையர்

''வினையெச்சத்திற்குத் தெரிநிலை வினையுங் குறிப்புவினை யும் ... ...'' (சேனா. 432) எனக் கூறுவது இதனை வலியுறுத்தும்.

இதைப் போன்றே பெயரெச்சம் பெயரைக் கொண்டு முடிவதும், 'தானே கொண்டான்' என்ற ஏகாரப் பிரிநிலை எச்சம் ''பிறர் கொண்டிலர்'' எனப் பிரிக்கப்பட்ட பொருளை உணர்த்தும் சொல்லால் முடிவதும் காண்க.

2. எச்சம் என்றே சொல்லே இன்னொரு பொருளிலும் பயன்பட்டிருக்கக் காணலாம். எச்சவியல் என்ற சொல்லிற்குப் பொருள் எழுதப்போந்த சேனாவரையர் ''கிளவியாக்கமுதலாக உயிரியலிறுதியாகக் கிடந்த ஓத்துக்களுள் உணர்த்துதற்கு இடமின்மையான் உணர்த்தப்படாது எஞ்சி நின்ற சொல்லி லக்கணமெல்லாந் தொகுத்துணர்த்திய வெடுத்துக்கொண்டார்'' (397) எனக் கூறும்போது ''எஞ்சியவை'' அல்லது ''மீதி உள்ளவை'' என்ற பொருளிலும் வந்துள்ளமை காணலாம்.

1.3 எது எச்சம்?

செய்து, செய்யூஉ போன்றவை வினையை ஒழிபாகக் கொண்டிருத்தலின் இவையே வினையெச்சமாகக் கொள்ளத் தக்கன என்பது விளங்கும். எனினும் சில நேரங்களில் மயக்க நிலையும் உரையாசிரியர்களிடையே இருப்பதைக் காணலாம்.

"தத்தம் எச்சமொடு சிவணுங் குறிப்பின்
எச்சொல் லாயினும் இடைநிலை வரையார்" சூத். 237

என்ற சூத்திரத்திற்கு உரை எழுதப் போந்த சேனாவரையர் ''தத்தமெச்சமாகிய வினையோடும் பெயரோடும் ...'' (237) எனக் கூறுவது ஊன்றி உணரத்தக்கது. வரும் வினையும் பெயரும் எச்சமாகக் குறிப்பிடப்படுகின்றன. இந்நிலையில் பெயரையும் வினையையும் ஓழிபாகக் கொண்ட வந்த, வந்து போன்றவை எச்சமாகக் கருதப்படுவது மட்டுமன்றி வரும் பெயரும் வினையும் கூட எச்சமாகக் கருதப்படுகின்றன. ஒன்றை எஞ்சி நிற்பதும் (வந்து, வந்த) முடிக்கும் சொல்லாக நிற்பதும் எச்சமாகக் கருதப்படுகின்றன.

இதே நிலையைத்தான் நச்சினார்க்கினியரிடமும் காண்கிறோம். சேனாவரையரை அப்படியே பின்பற்றி ''தத்தம் எச்சமாகிய வினையொடும் பெயரொடும். ...'' (239) எனக் கூறி நிற்பார். தெய்வச்சிலையார் எச்சம் என்பதற்கு முடிக்குஞ் சொல் எனப் பொருள் கூறிப் "பெயரெச்சமும் வினையெச்சமும் தம்மை முடிக்குஞ் சொல்லோடு" (230) எனக் கூறி நிற்பார். இங்கும் எச்சம் என்பது முடிக்குஞ் சொல்லாகிய பெயரையும் வினையையுமே குறித்து நிற்கிறது.

எனவே எச்சம் என்பது முடிவதற்காக எஞ்சி நிற்பதையும் முடிக்கும் சொல்லாக வருவதையும் சுட்டும் என எண்ணலாம். எனினும் முடிவதற்காக நிற்கும் வந்து, வந்த போன்றவை களே வினையெச்சங்களாகவும் பெயரெச்சங்களாகவும் கருதத் தக்கவை.

"செய்தெ னெச்சத் திறந்தகாலம்"

என்ற தொடர் இதனை வலியுறுத்தும். இதனால்தான் வினையெஞ்சு கிளவி, பெயரெஞ்சு கிளவி என்ற சொற்களைத் தொல்காப்பியர் கையாண்டார் போலும்.

1.4 இலக்கண உலகில்

எனினும் இலக்கண உலகில் எச்சம் என்ற சொல் கொண்டு முடிவது அல்லது ஓழிபாக உள்ளது என்ற பொருளிலேயே

வழங்கக் காணலாம். தொல்காப்பியர் காலத்தில் பெயரெஞ்சு கிளவி, வினையெஞ்சுகிளவி என்ற கலைச்சொற்களே பெரும் பாலும் பயன்பட்டாலும் எச்சம் என்ற சொல்லும் வழக்கில் இருந்துள்ளது என்பது முன்னர்க் கூறப்பட்டது. ஆனால் பிற்கால இலக்கண ஆசிரியர்கள் இவற்றை வினையெச்சம், பெய ரெச்சம் என்றே குறித்துச் செல்லுகின்றனர். இதே நிலையினைத் தான் தொல்காப்பிய உரையாசிரியர்களிடமும் காணுகிறோம். வினையெஞ்சு கிளவி என்பதற்கு வினையெச்சம் என்றும், பெய ரெஞ்சுகிளவி என்பதற்குப் பெயரெச்சம் என்றும் குறித்துச் செல்லுகின்றனர். "செய்தென்பது முதலாகச் சொல்லப்பட்ட ஒன்பதும் வினையெச்சமாம்" என்பது சேனாவரையம் *(228)*.

1.5 எஞ்சு பொருட் கிளவி

மேலும் "எஞ்சு பொருட் கிளவி" என்பதும் எச்சம் என்ற பொருளில் பயன்பட்டிருத்தல் காணலாம். எச்சவியலில் பலவேறு எச்சங்களைப் பற்றிக் கூறும்போது

"பிரிநிலை வினையே பெயரே ஒழியிசை
எதிர்மறை உம்மை எனவே சொல்லே
குறிப்பே இசையே ஆயீ ரைந்தும்
நெறிப்படத் தோன்றும் எஞ்சு பொருட் கிளவி" *(913)*

எனக் குறிப்பிடுவார் தொல்காப்பியர். இச்சூத்திரத்தில் சொல்லப்படும் பத்தும் எஞ்சுபொருட் கிளவிகளாகும். உரை எழுதும் சேனாவரையர் "எஞ்சு பொருட் கிளவி யெனினும் எச்சமெனினு மொக்கும்" *(430)* எனக் கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. நச்சினார்க்கினியர் இவற்றை "எச்சச் சொல்" என்பார். *(430)*.

இன்றைய வழக்கில் எச்சம் என்ற சொல்லே நிலைபெற் றிருத்தல் காணலாம். இந்நிலையில்தான் இங்கும் பெயரெச்சம், வினையெச்சம் என்ற சொற்கள் கையாளப்படுகின்றன.

2. தொல்காப்பியமும் வினையெச்சமும்

வினையெச்சம் பற்றிக் கூறப் போந்த தொல்காப்பியர் வினையியலின்கண் இதுபற்றிப் பரக்கப் பேசுதல் காணலாம். பல நூற்பாக்களில் (707, 710, 713 – 718, 722, 724) வினையெச்சம் பற்றிப் பேசும் தொல்காப்பியர் வினையெச்சம் விரவு வினைகளில் ஒன்று என்று கூறி நிற்பார்.

> "முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு கிளவி
> இன்மை செப்பல் வேறென் கிளவி
> செய்ம்மன செய்யுஞ் செய்த என்னும்
> அம்முறை நின்ற ஆயெண் கிளவியும்
> பிரிவுவேறு படூஉஞ் செய்திய வாகி
> இருதிணைச் சொற்குமோர் அன்ன உரிமைய"
> சூத். 707

என்னும் சூத்திரத்தில் இதனை விரவுவினை என்பார். பின்னர்

> "செய்து செய்யூச் செய்பு செய்தெனச்
> செய்யியர் செய்யிய செயின்செயச் செயற்கென
> அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி" சூத். 713

எனக் குறிப்பிட்டு வினையெச்ச வாய்ப்பாடுகளைத் தந்து நிற்பார்.

இதுபோன்றே

> "பின் முன் கால் கடை வழி இடத்து என்னும்
> அன்ன மரபின் காலங் கண்ணிய
> என்ன கிளவியும் அவற்றியல் பினவே" சூத். 714

என்ற சூத்திரத்திலும் வேறொரு வகையான வினையெச்சங்களைக் குறிப்பிடுவார் எனப் பலர் கருதுகின்றனர். இவை மட்டுமின்றி எழுத்தியலில் செய்யா எனும் வாய்பாட்டு வினையெச்சம் பற்றியும் இரு நூற்பாக்களைக் (223, 236) காணலாம். இன்னும் வினையெச்சம் பற்றிப் பேசும் நூற்பாக்கள் சில எச்சவியலின்

கண்ணும் உள்ளன (913, 915, 920). தெய்வச்சிலையார் இவற்றை வினையியலில் அடக்கி நிற்பார். இந்நிலையில் தொல்காப்பியர் பதினைந்துக்கும் அதிகமான நூற்பாக்களில் வினையெச்சங் களைப் பற்றிக் குறிப்பிடுவதாகக் கருதலாம்.

2.1 வினையெஞ்சு கிளவி

தொல்காப்பியர் இக்குறிப்பிட்ட இலக்கணக் கூறினைப் பொதுவாக வினையெஞ்சு கிளவி என்றே குறிப்பிடுகிறார் எனக் கருதலாம். எழுத்ததிகாரத்தில் ஆறு இடங்களிலும் (204, 210, 222, 236, 333, 265,) சொல்லதிகாரத்தில் ஆறு இடங் களிலும் (707, 713, 718, 721, 915, 940) இச்சொல் வரக் காணுகிறோம். இவ்விடங்கள் அனைத்திலும் வினையெச்சத் தையே இவர் வினையெஞ்சு கிளவி எனக் குறிப்பிட்டுச் செல்லு கிறார் எனக் கருத இடமுண்டு. இன்று நாம் வினையெச்சம் என்று குறிப்பிடுவதைத்தான் தொல்காப்பியர் வினையெஞ்சு கிளவி என்று குறிப்பிட்டுச் சென்றார்.

வினையெச்சம் என்ற சொல்லே இன்று இலக்கண உலகில் பயன்படுதலைக் காணலம். எனினும் தொல்காப்பியரே எச்சம என்ற சொல்லினைப் பயன்படுத்தியுள்ளார் என்பது முன்னரே தெளிவாகக் காட்டப் பட்டது. இந்நிலையில்தான் இங்கும் வினையெச்சம் என்ற சொல் கையாளப்படுகிறது.

2.2 விளக்கம்

வினையெச்சம் என்றால் என்ன என்பதை விளக்கும் இலக்கண ஆசிரியர்கள் வினையினைக் கொண்டு முடிவதே வினையெச்சம் எனக் குறிப்பிட்டுச் செல்லுவர்.

இளம்பூரணர் "வினையை ஒழிபாக நிற்றலின் வினை யெச்சம் எனப்பட்டது" (சூத். 224) என்று கூறுவார். சேனா வரையரும் வேறொரு சூத்திரத்தில் "வினையெஞ்சு கிளவி வினையை யொழிபாகவுடைய வினை" (சூ. 222) என்பார். இவரைப் பின்பற்றி நச்சினார்க்கினியரும் (224) "வினையை ஒழிபாக உடைய வினைச்சொல்" எனவும் கூறுவார். தெய்வச்

சிலையார் "வினையெச்சமாவது மற்றொரு வினைச்சொல்லோ டல்லது முற்றுப்பெறாது நிற்கும்" (221) எனத் தெளிவாகக் கூறி நிற்பார்.

தொல்காப்பியர் வினையெச்சத்தைப் பற்றிப் பல்வேறு நூற்பாக்களில் குறிப்பிட்டுச் சென்றாலும் பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்த்த பவணந்தியார் தம்முடைய நூலில்

> "தொழிலுங் காலமுந் தோன்றிப் பால்வினை
> ஒழிய நிற்பது வினையெச் சம்மே" சூத். 342

என்ற நூற்பாவில் வினையெச்சம் என்றால் என்ன என்பதற்கு இலக்கணம் கூறிப் போந்தது போன்று தொல்காப்பியர் திட்ட வட்டமாக வரையறை செய்யவில்லை என்று பலர் (Ilakkuvanar *1946:122; 1963:336*) கருதுவர்.

மேலும் வினையெஞ்சுகிளவி என்ற சொல்லாலேயே வினை யெச்சத்தின் விளக்கத்தைக் குறிப்பாகக் கூறியிருக்கிறார் என்பது அவ்வறிஞர்களின் முடிபாகும். வினையை எஞ்சி நிற்கும் அல்லது கொண்டு முடியும் சொல் என்ற பொருள் இதன்கண் அடங்கியிருப்பது உணரத்தக்கது. எனினும் தொல்காப்பியர் இக்குறியீட்டோடு அமையவில்லை என்பதும் நல்லதொரு விளக்கத்தைத் தந்துள்ளார் என்பதும் பின்னர் எடுத்துக் காட்டப்படும்.

2.3 வினைகொண்டு முடிவன எல்லாம் வினையெச்சமா?

வினைகொண்டு முடிகிற சொற்கள் அனைத்தும் வினை யெச்சம் அல்ல என்பதும் பெயர் கொண்டு முடிகிற சொற்கள் எல்லாம் பெயரெச்சம் அல்ல என்பதும் உணரத்தக்கன. முன்னர் வேறு கட்டுரைகளில் குறிப்பிட்டபடி (அகத்தியலிங்கம் *1968, 1972*) இனி, நன்கு, மேலும் போன்ற சொற்கள் வினையைக் கொண்டு முடிவனவே.

> இனிச் செய்வான்
> நன்கு உண்டான்
> மேலும் தந்தான்

போன்ற வாக்கியங்கள் இப் பண்பினைக் காட்டும். தெய்வச் சிலையார் இவற்றையெல்லாம் வினையெச்சம் என்று குறிப் பிடினும் (223) இவற்றை வினையெச்சங்களாகக் கருத முடியாது. வினையோடு முடிகின்ற ஒரே காரணத்திற்காக இவற்றை வினை யெச்சமாகக் கருதவேண்டிய ஒரு கட்டாய நிலைமை ஏற்படும். எனவே வினையெச்சத்தின் பண்பு வினையை மட்டும் கொண்டு முடிகின்ற ஒன்றாக இருக்க முடியாது.

2.4 வாய்பாடுகள்

இந்நிலையில் தொல்காப்பியர் வாய்பாடுகளாகக் கூறிய நிலையைப் பற்றி நன்குச் சிந்தித்தல் அவசியமாகும். இதைப் போன்றே நன்னூலார்

> ''தொழிலும் காலமுந் தோன்றிப் பால்வினை
> ஒழிய நிற்பது வினையெச் சம்மே'' சூத். 342

எனக் கூறிச் செல்லுவதையும் நன்கு ஆராய்தல் வேண்டும்.

தொல்காப்பியர் செய்து, செய்பு, செய்யூ போன்ற வாய் பாடுகளைத் தந்து வினையெச்சங்களின் அமைப்பினைக் கூறி அவற்றை வினையெச்சம் எனக் குறிப்பிடுகிறார். இந்த வாய் பாடுகளே வினையெச்சங்கள் எவை என்பதை நமக்குத் தெளி வாகக் காட்டுகின்றன. மேலும் எச்சவியலில் இவை வினை கொண்டு முடியுமென்றும் அவ்வினைகள் தெரிநிலை வினைக ளாகவோ அல்லது குறிப்புவினைகளாகவோ இருக்கலாமென்றும் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறார்.

> ''வினையெஞ்சு கிளவிக்கு வினையும் குறிப்பும்
> நினையத் தோன்றிய முடிபா கும்மே
> ஆவயிற் குறிப்பே ஆக்கமொடு வருமே'' சூத். 915

என எச்சவியலில் தொடரியல் அடிப்படையிலும், வாய்பாடுகள் தந்த நிலையில் சொல்லியல் அடிப்படையிலும் விளக்கம் தருகிறார் அவர். இந்நிலையில் நன்னூலார் இவர் கூறியதை விட மிகுதியாக எதையும் சொல்லியிருப்பதாகக் கருத இடமில்லை.

2.5 கூட்டு வினையெச்சம் (Compound Verbal Participle)

இத்தகைய வாய்ப்பாட்டுச் சொற்கள் மட்டுமின்றி 714-ஆவது நூற்பாவில் வேறு சிலவற்றையும் பற்றிக் குறிப்பிடுவார் தொல்காப்பியர்.

> "பின்முன் கால்கடை வழியிடத் தென்னும்
> அன்ன மரபிற் காலங் கண்ணிய
> என்ன கிளவியும் அவற்றியல் பினவே"

என்பது சூத்திரம். இதுபற்றி எழுதும் இளம்பூரணர் செய்து, செய்யூ என்று தொடங்கும் சூத்திரத்தினையும் இதனையும் இணைத்து "இச்சூத்திரம் என்நுதலிற்றோ வெனின், வினையெச்சங்களைப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று" எனக் குறிப்பிடுவார். இதே நிலையினைத்தான் சேனாவரையரிடமும் காண்கிறோம். இச்சூத்திரத்திற்கு உரை எழுதப் போந்த அவர் "பின்னும், முன்னும், காலும், கடையும், வழியும், என்னுமீற்றவாய் வருவனவும், அவைபோலக் காலங் கண்ணி வருவன பிறவும், வினையெச்சமாம்" *(சூத். 229)* என்று கூறிச் செல்லுவார். அவைபோலக் காலங் கண்ணி வருவன என்பதற்குக் காலம் கண்ணிய சொற்களை உதாரணமாகத் தராமல் உண்பான், வருவான், உண்பாக்கு போன்றவற்றைத் தருவது பொருத்தமாக இல்லை.

இதே நிலையைத்தான் இளம்பூரணரிடமும் காண்கிறோம். நச்சினார்க்கினியரும் இவரைப் பின்பற்றி இவை "வினையெச்சத்திற்கு வாய்பாடாம் இயல்புடைய" என்பார். கல்லாடனாரும் நச்சினார்க்கினியர் கூறியது போன்றே இவை "வினையெச்சத்திற்கு வாய்பாடாம் இயல்புடைய" *(231)* என்றே குறிப்பிடுவார். எனவே இவர்கள் அனைவரும் வநதபின் போன்ற தொடர்கள் செய்து போன்றவற்றைப் போன்று வினையெச்சங்களே என்று கருதுகின்றனர் என்று எண்ணலாம்.

2.6 வினையெச்ச இயல்பின

ஆனால் தெய்வச்சிலையாரோ "பின் முதலாக ஓதப்பட்டனவும், அத்தன்மையாகிய மரபினாற் காலங் குறித்து வரும்

எல்லாச் சொல்லும் வினையெச்ச இயல்பின" (சூத். 222) என்பார். எனவே தெய்வச்சிலையாருக்கும் பிற உரையாசிரியர் களுக்குமிடையே ஒரு வேறுபாட்டினைக் காண்கிறோம். பிற உரையாசிரியர்கள் எல்லாம் இவற்றை வினையெச்சமாகவே கருத, தெய்வச்சிலையார் இவை வினையெச்சத்தைப் போன்று வருவன எனக் கருதுகிறார் என எண்ணலாம். இதனால்தான் அவர் மீண்டும் தெளிவாக "எனவே, மேறசொல்லப்பட்டவற் றோடு ஒருநீர்மைய அல்ல என்பது பெறப்பட்டது" என்று கூறுவார்.

வினையெச்சம் பற்றி ஆராய்ந்த பல்வேறு ஆசிரியர்களும் இவற்றை வினையெச்சம் என்றே குறிப்பிட்டுச் செல்லுதல இங்கு உணரத்தக்கது. அகத்தியலிங்கம் (1972) இதுபற்றி குறிப்பிடும்போது "714 - ஆம் நூற்பாவும் வினையெச்சத்தைப் பற்றித்தான் பேசுகிறது" எனக் கூறுவது இங்குக் குறிப்பிடத் தக்கது. சண்முகம் இவற்றை "கூட்டுவினையெச்சங்கள் (Com ound verbal participles)" என்பார் (1972). இது பற்றி கூறும் அவர்

"Tolkappiyar, in the Sutra 229, has mentioned that th particles like piṉ, muṉ, kaal, kaṭai, vaḷi, iṭattu and suc other items indicating time are of the same nature (i.e verbal participle)"

எனக் கூறுவார்.

2.7 வேறுபாடுகள்

இந்நிலையில் பெரும்பான்மையான அறிஞர்கள் இவற்றை வினையெச்சமாகவே கொண்டுள்ளனர் எனக் கருதலாம். எனினும் இவற்றிற்கும் செய்து போன்ற வினையெச்சங்களுக்கும் இடையே வேற்றுமைகள் பல உண்டு. அமைப்பிலும், அவை தரும் பொருளிலும் வேறுபாடுகளைக் காணலாம். அமைப்பில் இவை இரண்டும் மாறுபட்டவை என்பது நன்குத் தெரியவரும்.

உரையாசிரியர்கள் அனைவரும் இதற்கு உதாரணம் தரும்போது

கூறிய பின்
கூறுகின்ற பின்
தின்னா முன்
விடுத்தக்கால்
நாடுங்கால்
வந்தக்கடை
உரைத்த வழி
உரைக்கும் வழி
உரைத்த விடத்து
உரைக்குமிடத்து

போன்றவற்றையே தந்து நிற்பர். இவை அனைத்தும் பெயரெச்சத்தொடர்களையே கொண்டுள்ளமை இங்கு நினைவு கூரத் தக்கது. எனவே பெயரெச்சங்களை அடுத்துப் பின், முன் போன்றவை வரும் நிலையிலேயே அவை வினையெச்சமாகக் கருதப்படவேண்டியவை என எண்ணினர். ஆனால் இதனைத் தெளிவாக உரையாசிரியர்கள் எவரும் விளக்கவில்லை. எனினும் இவ்வாறு அவர்கள் இவ்வுதாரணங்களைத் தந்திருப்பது பொருத்தமாகவே தோன்றுகிறது.

2.8 அமைப்பு

வினையைக் கொண்டு முடிவன எல்லாம் வினையெச்சம் அல்ல என்பது முன்னரே குறிப்பிடப்பட்டது. இந்நிலையில் காலத்தைக் காட்டக் கூடிய பின், முன் போன்றவையும் வினையெச்சம் அல்ல என்பதும் இங்கு நினைவுகூரத்தக்கது.

பின் வந்தான்
முன் வந்தான்

போன்றவற்றை யாரும் வினையெச்சமாகக் கருதுவதில்லை. ஆனால்

வந்த பின்
போன பின்

போன்றவற்றை வினையெச்சமாகக் கருதலாம் என்பது பலரது எண்ணம் என்பது முன்னர்க் குறிப்பிடப்பட்டது. எனவே எச்சங்களின் அமைப்பும் (Structure) மிக முக்கியமான இடத்தைப் பெறும் எனக் கருதலாம்.

வினையெச்சங்கள் எல்லாம் வினைச்சொல்லிலிருந்து உருவாவன. இதனால்தான் வினையெச்சங்களை வினையியலில் குறிப்பிட்டுச் செல்வார் தொல்காப்பியர். செய்து, செய்யூ போன்ற வினையெச்ச வாய்பாடுகள் அனைத்தும் வினைச் சொல்லிலிருந்து உருவானவை. ஆனால் பின், முன் போன்றவை இடைச்சொற்களே. அவை தனியாக நின்று வினைச் சொல்லை ஏற்று வருமானால் அவை வினையெச்சமாகக் கருதப் பட மாட்டா. ஆனால் காலத்தைக் காட்டக்கூடிய வினைகளோடு ஒரு சொல் நீர்மைத்தாய் நின்று வருமானால் அவற்றை வினையெச்சமாகக் கருதலாம். அவற்றைத்தான் தொல்காப் பியர் இச்சூத்திரத்தில் குறிப்பிட்டிருக்கிறார் என எண்ணலாம். இதனை வெளிப்படையாக உரையாசிரியர்கள் கூறாவிடினும் வினையெச்ச அமைப்பு எது எனத் தங்கள் நுண்மாண் நுழை புலத்தினால் நன்கு அறிந்திருந்த காரணத்தினால்தான் இத்தகைய உதாரணங்களைத் தந்து நின்றனர்.

2.9 'காலங்கண்ணிய'

இந்நிலையில் காலங்கண்ணிய என்பதற்கு "காலத்தைக் காட்டக்கூடிய வினையுடன் இறுகக் கட்டிய அல்லது பிணைத்த" என்று பொருள் கூறுதல் பொருந்தும். காலத்தைக் காட்டும் வினை என்பது எச்சவினையை, அதிலும் பெயரெச்சத் தையே எனக் கொண்டு பெயரெச்சத்தோடு இறுகப்பிணைந்து வரும் பின், முன் போன்றவை எனப் பொருள் கூறுதல் பொருத்தமாகும்.* முன்னர்க் குறிப்பிட்டபடி உரையாசிரியர்கள் சரியான உதார்ணங்களைத் தந்த போதிலும் பெயரெச்சங்க

வந்த நேரத்திற்குப் பின போன்று வருவனவற்றை வினை யெச்சங்களாகக் கருதுவதில்லை. ஆனால் வந்த பின போன்றவற்றையே இங்கு நாம் கொள்ளவேண்டும்.

ளோடு பின், முன் போன்றவற்றை இறுகப்பிணைக்கும் போதுதான் இத்தகைய வினையெச்சங்கள் உண்டாகின்றன எனத் தெளிவாகக் கூறவில்லை.

மேலும் காலங் கண்ணிய என்பதற்குப் பொருத்தமான பொருளையும் தந்ததாகத் தெரியவில்லை.

இதற்கு உரை எழுதிய சேனாவரையர் "காலங் கண்ணி வருவனவும்" என எவ்வித விளக்கமும் இன்றிக் கூறிச் சென்றிருப்பதும், நச்சினார்க்கினியர் "அம் முறைமை போல காலத்தைக் குறித்த எல்லாச் சொற்களும்" எனவும், தெய்வச்சிலையார் "அத்தன்மையாகிய மரபினால் காலங் குறித்துவரும் எல்லாச் சொல்லும்" எனவும் குறிப்பிடுதல் இங்கு உணரத் தக்கன. இந்நிலையில் பின், முன் போன்றவை மட்டுமின்றிப் பிறவற்றையும் வினையெச்சங்களாகக் கொள்ளுதல் தகும் என்று இவர்கள் கருதியுள்ளனர். இதனால்தான் தெய்வச்சிலையார் "அன்ன மரபிற் கொள்ளப்படுவன ஆல், பான், இனி என வருவனவும் பிறவும்" எனக் கூறுவதும் இங்கு உணரத்தக்கது. எனவே இவர் கருத்துப்படி இச்சூத்திரம் வந்தபின், போனபின் போன்றவற்றையும் காலங் கண்ணி நிற்கின்ற அல்லது காலத்தைக் காட்டும் இனி போன்றவற்றையும் குறிக்கும். இதனால்தான்

இனிக் கொண்டான்
நனி வந்தான்

போன்றவற்றைத் தெய்வச்சிலையார் உதாரணமாகத் தருவார். ஆனால் புதிய விளக்கத்தின்படி இச்சூத்திரம் பெயரெச்சத்தோடு ஒருசொல் நீர்மைத்தாய் நிற்கின்ற

வந்த பின்
போன பின்

போன்றவற்றையே குறிக்கும். இனி, நனி போன்றவை வினையெச்ங்கள் அல்ல என்பதும் இங்குக் குறிப்பிடத் தக்கது. காலங்

கண்ணிய என்பதற்குக் காலத்தைக் காட்டும் சொற்கள் எனப் பொருள் கொண்டமையால் இத்தகைய தவறுகள் நேர்ந்தன எனக் கருதலாம்.

காலங் கண்ணிய என்பதற்குக் சாலங் காட்டும் எனப் பொருள் கெண்டமையால்தான் சேனாவரையர்

நீர் பொய் கூறிய பின் மெய் கூறுவார் யார்
நீ யிவ்வாறு கூறுகின்ற பின் உரைப்ப துண்டோ

ஆகியவை இறப்பும் நிகழ்வும் பற்றி வந்தவை என்றும்

மருந்து தின்னாமுன் நோய் தீர்ந்தது

என்பது இறந்தகாலம் பற்றி வந்தது என்றும் இன்னோரன்ன எடுத்துக் காட்டுக்களையும் தந்து காலங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து இவை இன்னின்ன காலங்களைக் காட்டும் எனக் கூறிச் செல்லுகிறார். இவர் கருத்துப்படி காலங் கண்ணிய என்பது காலத்தைக் காட்டும், வந்தபின், போன பீன் போன்ற வையே வினையெச்சங்களாகக் கருதத் தக்கவை என்பதாகும்.

நின்றவிடத்து நின்றான்

போன்றவற்றில் வரும் இடத்து போன்றவை பெயர் என்பதும் இந்நிலையில் இவை பெயரெச்சம் + பெயர் எனக் கொள்ளப் படுமேயன்றி இடைச்சொற்களாகக் கொள்ளப்படா என்றும் இவை ஒரு சொல் நீர்மைத்தாய் இல்லை என்பதும் உணரத் தக்கன. இதுபற்றிப் பின்னர்க் காண்போம்

மேலும் இவர் கூதிர் போய பின் வந்தான் என்பது காலம் கண்ணாது எனக் கூறுவது பொருத்தமாக இல்லை.

பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனாரும் (1965 : 82) காலங் கண்ணிய கிளவி என்பது பின், முன் போன்றவற்றைக் குறிப்பது என்றே கொள்ளுகிறார்.

பின், முன் என்பவை இடத்தைக் குறிக்காமல் காலத்தைக் குறிக்கும்போது அவை வினையெச்சங்களாம் என உரை யாசிரியர்கள் விளக்கம் கூறிச் செல்கின்றனர்.

10 மணிக்குப் பின்
இரவுக்குப் பின்
10 மணிக்கு முன்

போன்றவற்றில் வரும் பின், முன் போன்றவை காலத்தைக் குறிப்பனவே. எனினும் இவற்றை யாரும் வினையெச்சமாகக் கொள்ளுவதில்லை. இவற்றைப் போன்றே

அவன் வந்ததற்குப் பின்
அவன் வருவதற்கு முன்

போன்றவையும் காலத்தைக் குறிப்பனவே. இவற்றையும் நாம் வினையெச்சமாகக் கொள்ளுவதில்லை. இந்நிலையில் பெய ரெச்சத்திற்குப் பின்னர் வரும் பின், முன், கால், கடை, வழி போன்றவை மட்டுமே வினையெச்சங்களாக வரத்தக்கன எனக் கொள்ளுவதில் தவறில்லை. பின், முன் போன்றவை காலத் தைக் காட்டுவனவே. எனினும் தொல்காப்பியர் இவற்றைக் குறிக்கும் பொருட்டு காலங் கண்ணிய என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லை என்பதும், பெயரெச்சத்தைக் குறிக்கவே இதனைப் பயன்படுத்தினார் என்பதும் தெளிவாகும்.

2.10 பெயரெச்சமும் இடப் பொருளும்

அடுத்துப் பெயரெச்சத்தின் பின் இக்கிளவிகள் வரும்போது இடத்தைக் குறிக்குமா என்றும் ஆராய்தல் நலம்.

வந்த வழி
வந்த இடம்

போன்றவை இடப்பொருளைத் தருவனவே. வழி, இடம் போன்றவை பெயர்ச்சொல்லாக வருவனவே தவிர பின, முன் போன்று வருவதில்லை. இந்நிலையில் இவற்றைப் பெயரெச்

சத்துடன் வரும் பெயராகக் கொள்ள வேண்டுமே அன்றி வினையெச்சமாகக் கொள்ளுதல் கூடாது. மேலும் இவற்றிற்கு வினையெச்சத்தில் காணப்படுவது போன்று ஒரு சொல் நீர்மைத்தாய் நிற்கும் தகுதியும் இல்லை. இவற்றை

வந்த அவ்வழி
வந்த பெருவழி

போன்று இடையே சொற்களை இட்டுக் கூறுதல் அத்தனை கடினமன்று. இந்நிலையில் இடப்பொருள் உணர்த்தும் இச் சொற்கள் வினையெச்சமாக ஆக முடியாது. எனவே காலங் கண்ணி நிற்றல் வினையெச்சத்திற்கு உரிய ஒரு பண்பாகும்.

2-11 வான், பான் ஈற்று எச்சங்கள்

தமிழ் இலக்கிய உலகில் தொல்காப்பியர் குறிப்பிட்டுச் சென்ற வாய்பாடுகள் மட்டுமின்றி உண்பான், செய்வான் போன்ற வாய்பாட்டு வினையெச்சங்களையும் காணலாம். இவ் வாய்பாட்டு வினையெச்சங்களைப் பற்றித் தொல்காப்பியர் குறிப்பிடவில்லையே என்ற எண்ணம் சேனாவரையர் போன்ற உரையாசிரியர்களுக்கு எழுந்த நிலையில்தான் அவற்றையும் இச்சூத்திரத்தில் அடக்க எண்ணினர்.

சேனாவரையர்

''அன்ன மரபிற் காலங் கண்ணிய என்ன கிளவியும் என்ற தனால் உண்பாக்கு, வேபாக்கு என வரும் பாக்கீறும், உண் பான், வருவான் என ஆனீறும் ......''

எனவரும் எனக் குறிப்பிடுவார். நச்சினார்க்கினியரும்

''அன்ன மரபின் என்றதனால் பான், பாக்கு, வான், வாக்கு என்பனவுங் கொள்க'' (231)

எனக் கூறுவார்.

சங்க இலக்கியங்களை ஆராயின் வான், பான் ஈற்று வினையெச்சங்கள் மிக மிகக் குறைவாகவே வருகின்றன.

நற்றிணை (1) கலித்தொகை (2), பரிபாடல் (2), சிலப்பதிகாரம் (1) ஆகிய நூல்களில் எல்லாம் மொத்தம் ஆறு இடங்களிலேயே இவை வருகின்றன. முன்பழந்தமிழ் நூல்கள் எனக் கருதப்படும் நூல்களில் ஒரே ஒரு இடத்தில்தான் வானீற்று எச்சம் காணப்படுகிறது. இந்நிலையில் தொல்காப்பியர் இது பற்றிக் குறிப்பிட்டிருக்க வேண்டும் என்று கருதுவது பொருந்தாத ஒன்றாகும். இதனால்தான் தொல்காப்பியர் இவை பற்றிக் குறிப்பிடவில்லை. எனினும் இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடர் ஆகிய உரையாசிரியர்கள் அனைவருமே இவ்வாறு என்ன கிளவியும் என்றதனால் இவையும் வரும் என்று குறிப்பிட்டுச் செல்லுதல் பொருந்தாது.

பானீற்று வினையெச்சத்திற்கு இளம்பூரணர்

உண்பான் வந்தான்

எனவும், சேனாவரையர்

உண்பான் வருவான்

எனவும், நச்சினார்க்கினியர்

"அலைப்பான் பிறிதுயிரை ஆக்கலும் குற்றம்"

என்பதையும், தெய்வச்சிலையார் நச்சினார்க்கினியர் தந்த உதாரணத்தையும், கல்லாடர்

உண்பான் வந்தான்

என்பதையும் உதாரணமாகத் தருவர்.

இளம்பூரணரும் தெய்வச்சிலையாரும் பானீற்று எச்சங்களை மட்டும் குறிப்பிட்டுச் செல்ல சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் கல்லாடனாரும் பான், வான் என இரு ஈற்று எச்சங்களையும் குறிப்பிடுவர். இவற்றிற்கு, உதாரணமாக சேனாவரையர்

வருவான்

என்பதையும், நச்சினார்க்கினியர்

'கொள்வான் கொடித்தானைக் கொண்டெழுந்தான்'

என்பதையும், கல்லாடர்

கொள்வான் வந்தான்

என்பதையும் தருவர்.

முன்னர்க் குறிப்பிட்டபடி சங்ககால இலக்கியங்களில் இவ்வெச்சம் மிகமிக்க் குறைவாகவே வந்துள்ளது.

"... ... ... தமியே
குழைவான் கண்ணிடத்து ஈண்டித் தண்ணென
வாடிய இளமழைப் பின்றை
வாடையுங் கண்டிரோ வந்துநின் றதுவே" நற் 229-9

"... ... ... ஓர் பொன்னங் கொம்பு
பரிந்தவளைக் கைப்பிணை நீக்குவான் பாய்வாள்"
பரி 7-57

"கன்னியர் தாரர் கமழ்நறுங் கோதையர்
பண்ணிய வீகைப் பயன்கொள்வா னாடலால்"
பரி 16-51

"ஏதமன் றெல்லை வருவான் விடு" கலி 113-13

துறைமேய் வலம்புரி மணல் உழுத
தோற்ற மாய்வான்
பொறைமலி பூம்புன்னைப் பூவுதிர்ந்து நுண்டாது
போர்க்குங் கானல்" சிலம்பு 7-8-1

"காண்பான் யான் தங்கினேன்" கலி 97-7

என ஆறு இடங்களில் இவ்வீற்று எச்சங்கள் வருதல் இங்குக் குறிப்பிடத்தக்கது.

2.12 ஆன் ஈறா?

இவ்வெச்சங்கள் பற்றிக் குறிப்பிடும்போது

சேனாவரையர்

"உண்பான், வருவான் என்னும் ஆனீறும்"

எனக் குறிப்பிடுவார். எனவே இவர் இவற்றைப் பான் ஈறு, வான் ஈறு என எண்ணாமல் ஆன் ஈறு எனவே எண்ணியுள்ளார் என்பது விளங்கும். ஆனால் நச்சினார்க்கினியரோ இவற்றைப் பான், வான் என்றே குறிப்பிடுவார். இதே நிலையைத்தான் கல்லாடனாரிடமும் காணுகிறோம்.

''என்ன கிளவியும் என்றதனால் பான், பாக்கு, வான் வாக்கு எனவும் பிறவானும் வருவன கொள்க'' (231) என்பது கல்லாடம்.

நன்னூ லாரும் இவற்றை வான், பான் என்றே குறிப்பிடு வார்.

> ''செய்து செய்பு செய்யாச் செய்யூச்
> செய்தெனச் செயச் செயின் செய்யிய செய்யியர்
> வான்பான் பாக்கின வினையெச் சம்பிற
> ஐந்தொன் றாறுமுக் காலமு முறைதரும்'' (சூத். 343

என்பது நன்னூல். இதேநிலையைத்தான் வீரசோழியம் (67), நேமிநாதம் (43), இலக்கணவிளக்கம் (246), தொன்னூல் விளக் கம் (120), முத்துவீரியம் (130) ஆகிய நூல்களிலும் காணு கிறோம். இலக்கணிகள் எவரும் இவற்றை ஆனீறாகக் கொள்ள வில்லை.

சேனாவரையர் கருத்துப்படி இவற்றை ஆன் ஈறாகக் கொண்டால் பகர, வகரத்தைக் கால இடைநிலைகளாகக் கொள்ள வேண்டிய நிலை வரும். இவ்வெச்சங்கள் செயவென் வாய்பாட்டு எச்சத்தைப் போன்றவை. செயவென் எச்சத்தில் கால இடைநிலைகளை நாம் காண்பதில்லை. இதே நிலை யைத்தான் செய்யிய, செய்யியர் ஆகிய வினையெச்சங்களிலும் காணுகிறோம். இந்நிலையில் இவற்றை ஆனீற்று எச்சம் என்று கொள்வது தவறாகும்.

மேலும் செய்ப, வருப போன்றவற்றை நாம் பகர இறுதியாகவே கொள்ளுகிறோம். இதைப் போன்றே மாரீற்று வினையெச்சத்தையும் மார் ஈறாகவே கொள்ளுகிறோம். (அகத்தியலிங்கம், ச. 1984, 1985). இந்நிலையில் காண்

பான், செய்வான் போன்றவற்றையும் ஆன் ஈறாகக் கொள்ளுதல் பொருந்தாது. இதனால்தான் சேனாவரையரைப் பெரும்பாலும் அடியொற்றிச் செல்லும் நச்சினார்க்கினியர் கூட இதனை வான், பான் ஈறாகவே கொண்டார்.

உண்பாக்கு, வேபாக்கு என்பவற்றைச் சேனாவரையர் பாக்கு ஈறாகவே கொண்டுள்ளாரே அன்றி "ஆக்கு" ஈறாக அவர் குறிப்பிடவில்லை. இந்நிலையில் உண்பான், வருவான் ஆகியவற்றைப் பான், வான் ஈறாகக் கொள்ளுவதே பொருத்தம்.

2. 13 வானீறும், பானீறும்

மரபு இலக்கண அறிஞர்கள இவற்றைக் தனித்தனி ஈறுகளாகக் கொண்டுள்ளனர். இவ்விரண்டு ஈறுகளும் துணை நிலை வழக்கில் வருவனவாகும். வல்வினை, இடைவினைகளில் (கொடு, அடி, எடு போன்றவை வல்வினைகள்; உண், காண் போன்றவை இடைவினைகள். அகத்தியலிங்கம் 1982 82) பானீறு வர, மெல்வினைகளில் (செய், வா, தாபோன்றவை) வானீறு வந்து நிற்கும். இந்நிலையில் இவற்றை மாற்றுருபுகளாகக் கருதலாம்.

2.14 பாக்கு

வினையெச்சத்தைப் பற்றிப் பேசும் உரையாசிரியர்கள் இவை மட்டுமின்றி பாக்கு, வாக்கு ஆகிய ஈற்று எச்சங்களையும் குறிப்பிடுவர்.

இளம்பூரணர்

உண்பாக்கு வந்தான்

என்பதை உதாரணமாகத் தந்து விளக்கம் எதுவும் கூறாமல் செல்லுவார்.

சேனாவரையர்

> "அன்ன மரபிற் காலங் கண்ணிய வென்ன கிளவியு மென்றதனான் உண்பாக்கு, வேபாக்கு என வரும் பாக்கீறும்..."

எனவும், நச்சினார்க்கினியர்

> "அன்ன மரபின் என்றதனால் பான், பாக்கு, வான், வாக்கு என்பனவுங் கொள்க"

எனவும் கூறுவர். கல்லாடனாரும் பாக்கு, வாக்கு என இரண்டு ஈறுகளைப் பற்றியும் குறிப்பிடுவார். இவற்றிற்கு உதாரணம் கூறப்போந்த சேனாவரையர்

> உண்பாக்கு, வேபாக்கு

என்பவற்றையும், நச்சினார்க்கினியர்

> புணர்தரு செல்வம் தருபாக்குச் சென்றார்
> கொள்வாக்கு வந்தான்

என்பவற்றையும், கல்லாடர்

> உண்பாக்கு வந்தான்
> கொள்வாக்கு வந்தான்

என்பவற்றையும் உதாரணமாகத் தருவர். உரையாசிரியர்கள் இத்தகைய உதாரணங்களைத் தரினும் பாக்கு, வாக்கு ஈற்று வினையெச்சங்கள் பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படுவதில்லை. இதனால்தான் தொல்காப்பியர் இவற்றைக் குறிப்பிட்டுச் செல்லவில்லை.

மேலும் பாக்கு ஈற்று எச்சமே பிற்கால நூல்களில் காணப்படுகிறது போலும். இதனால்தான் சேனாவரையர் பாக்கு ஈறு மட்டுமே குறிப்பிட்டுள்ளார். நச்சினார்க்கினியரும் பாக்கு ஈற்று எச்சத்திற்குக் கார் நாற்பதிலிருந்து உதாரணம் தர வாக்கு ஈற்று எச்சத்திற்குத் தாமாகவே உதாரணத்தை உண்டாக்கிக் கொள்கிறார் (கொள்வாக்கு வந்தான்). கல்லாடனாரும் தாமே சமைத்த உதாரணங்களையே தந்து செல்லுகிறார்.

வினையெச்ச வாய்பாடுகள் பற்றிப் பேசும் நன்னூலாரும் பாக்கீறு பற்றிப் பேசுவாரே ஒழிய வாக்கீறு பற்றிப் பேசுவதில்லை. நன்னூலைப் பின்பற்றி இலக்கண விளக்கமும், தொன்னூல் விளக்கமும் பாக்கு பற்றிப் பேசுமேயன்றி வாக்கு பற்றிப்

பேசுவதில்லை. தமிழ் இலக்கியப் பரப்பிலும் கொள்வாக்கு போன்ற சொற்கள் வருவதில்லை என எண்ணலாம். நச்சினார்க்கினியர் தரும் தருபாக்கு என்பது மெல்வினை என்பது இங்கு நினைவுகூரத்தக்

3. எதிர்மறை

வினையெச்சங்கள் உடன்பாட்டில் மட்டுமின்றி எதிர்மறையிலும் வருதல் இங்குக் குறிப்பிடத்தக்கது. இந்நிலையில்

செய்யாது, செய்யா, செய்யாமை, செய்யாமல் ஆகிய வாய்பாட்டுக் காலவெச்சங்களும் இவற்றோடு ஒப்பவைத்து எண்ணப்படற்பாலன. இதனால்தான் தொல்காப்பியர் வினையியலில்

"பெயரெஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியும்
எதிர்மறுத்து மொழியினும் பொருணிலை திரியா"

எனக் கூறிப் போந்தார்.

இதற்கு உதாரணம் கூறப் போந்த உரையாசிரியர்கள் பலரும் பலவேறு உதாரணங்களைத் தந்துள்ளனர்.

இளம்பூரணர் எதிர்மறை வினையெச்சங்களுக்கு

உண்ணாது வந்தான்

எனவும், சேனாவரையர்

உண்ணாது வந்தான்
உண்ணாமைக்குப் போயினான்

என்பவற்றையும், நச்சினார்க்கினியர்

உண்ணாது
பெய்யாது
பெய்யாமல்

போன்றவற்றையும், தெய்வச்சிலையார்

உண்ணாது வந்தான்
மழை பெய்யாமையின் மரம் இறந்தன

என்பவற்றையும், கல்லாடனார்

உண்ணாது வந்தான்
மழை பெய்யாமல் மரம் குழையாதாயிற்று
மழை பெய்யாவிடின் அறம் பெறாது
உண்ணாமல்
உண்ணாமை
உண்ணாமே
உண்ணாதபின்
உண்ணாதமுன்
உண்ணாக்கால்
உண்ணாக்கடை
உண்ணாதவழி
உண்ணாதவிடத்து

போன்றவற்றையும் தந்து செல்வர்.

சேனாவரையர் எதிர்மறை வினையெச்சங்களுக்கு உதாரணம் கூறும்போது

உண்ணாமைக்குப் போயினான்

என்பதைத் தந்துள்ளார். இதுபோன்றே தெய்வச்சிலையாரும்

மழை பெய்யாமையின் மரம் இறந்தன

என்பதைத் தந்துள்ளார். உண்ணாமைக்கு, பெய்யாமையின் என்ற இரு சொற்களும் வினையெச்சங்களா என்பது ஆராய்தற்குரியது. செய்யாமை என்ற சொல் வினையெச்சமாகவும் வரும்.

செய்யாமை வந்தான்
காணாமை போனான

போன்றவற்றில் வரும் செய்யாமை, காணாமை ஆகியவை வினையெச்சங்களே.

இவை முறையே

செய்யாமல் வந்தான்
காணாமல் போனான்

எனப் பொருள்படும். ஆனால் இவர்கள் காட்டும் உதாரணங் களோ இந்நிலையில் இல்லை. வேற்றுமை உருபுகளை ஏற்ற சொற் களாகவே இவை காணப்படுகின்றன. சேனாவரையர் தருவது குகர வேற்றுமை எடுத்த சொல்லாகவும், தெய்வச்சிலையார் தருவது இன் அல்லது ஐந்தாவது வேற்றுமை ஏற்ற சொல் லாகவும் காணப்படுகின்றன. இந்நிலையில் இவற்றை வினை யெச்சங்களாகக் கருதமுடியாது.

சங்ககால இலக்கியங்களை நோக்கின் செய்யா, செய்யாது, செய்யாமல், செய்யாமை ஆகிய வாய்ப்பாட்டு வினையெச்சங் கள் வருதல் காணலாம். இவற்றுள் செய்யாது வாய்பாட்டு வினையெச்சமே மிக அதிகமாகக் காணப்படுகிறது. மட்டு மின்றிப் பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்திலும் வந்து நிற்கும். இதனை அடுத்து செய்யாவாய்பாட்டு வினையெச்சம் வருவது குறிப்பிடத்தக்கது. எனினும் இது மிகமிகக் குறைவாகவே உள்ளது. புறநானூற்றில் இரண்டும், அகநானூற்றில் எட்டும், குறுந்தொகையில் மூன்றும், ஐங்குறுநூற்றில் ஒன்றும். நற்றி ணையில் இரண்டும், பரிபாடலில் ஒன்றும், கலித்தொகையில் இரண்டும், குறளில் பதினாறும், சிலம்பில் ஒன்றும் என்ற எண்ணிக்கையில் வந்துள்ளது. பதிற்றுப்பத்திலும், பத்துப் பாட்டிலும், மணிமேகலையிலும் இது காணப்படவில்லை.

இதைப் போன்றே மல் ஈற்று வாய்பாட்டுச் சொல்லும் மிகக் குறைவாகவே உள்ளது, முன்பழந்தமிழ் நூல்கள் பல வற்றில் இது காணப்படுவதில்லை. பத்துப்பாட்டில்தான் இது முதன்முதலாகக் காணப்படுகிறது.

–மை ஈற்றுச் சொல்லோ பழந்தமிழ் இலக்கியங்களில் ஐங்குறுநூறு, குறுந்தொகை ஒழிந்த நூல்களில் எல்லாம், ஆனால் மிகக் குறைவாகவே வந்துள்ளது.

எதிர்மறை வினையெச்சங்களை ''அன்ன மரபிற் காலங் கண்ணிய'' என்ற நிலையில் கொள்ளலாம் என்பது சேனா வரையர் கருத்து.

"எதிர்மறை பற்றிக் 'கூறாமற் குறித்ததன்மேற் செல்லும்' (கலி – க என வரும் மல்லீறும் 'கூறாமை நோக்கிக் குறிப்பறி வான்' (குறள் – எOக) என்னும் மகர வைகார வீறுங் கொள்க" என்பது சேனாவரையம். ஆனால் இளம்பூரணரோ, அல்லது நச்சினார்க்கினியரோ, தெய்வச்சிலையாரோ, கல்லாடனாரோ இவ்வாறு கொள்வதில்லை. இவர்கள் எதிர்மறை வினையெச்சங் களை "எதிர்மறுத்து மொழியினும்" என்னும் சூத்திரத்தின் கீழேயே கொண்டுவருவர்.

4. வினையெச்சப்பாகுபாடு

வினையெச்சங்களையும் காலவெச்சம் (Verbal participle), குறையெச்சம் (Infinitive) நிபந்தனை எச்சம் (Conditional) என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். முன்னர்க் குறிப்பிட்டபடி தொல்காப்பியர் இப் பிரிவு பற்றிக் குறிப்பிடவில்லை. வினை கொண்டு முடிகின்ற பண்பிலும், பிற பண்புகளிலும் ஒன்றாக வருகின்ற எல்லா வினையெச்சங்களையும் தொகுத்து வாய் பாடுகளாகக் குறிப்பிட்டுச் செல்லுகின்றாரேயன்றி இவற்றைப் பொருள் அடிப்படையிலோ, அல்லது பிற அடிப்படைகளிலோ பாகுபாடு செய்ததாகத் தெரியவில்லை.

தொல்காப்பியர் குறிப்பிடும் ஒன்பது வாய்பாடுகளில் செய்து, செய்பு, செய்யூ, செய்யியர், செய்யிய, செயின், செய ஆகிய ஏழு வாய்பாடுகளைப் பற்றி இவை வினையெச்சங்கள் தானா என்பதில் கருத்து வேறுபாடு இல்லை.

செய்தென என்பது செய்து + என என இரண்டாகப் பிரிக்கலாம் எனவும், எனவே இதனை ஒரு வினையெச்ச மாகக் கொள்ளுவது அவ்வளவு பொருத்தமில்லை எனவும் கருதலாம். இதுபோன்றே செயற்கு என்பதும் வினையெச்சம் அல்ல என்பது அறிஞர்களுடைய கருத்தாகும். தொல்காப்பிய உரையாசிரியர்கள் அனைவரும் இதனை வினையெச்சமாகவே கருதுவர். ஆனால் வினையெச்சம் அன்று என்பதே நம்முடைய கருத்தாகும் (சங்கத்தமிழ் IV).

இவை ஒழிந்த எஞ்சிய ஏழு வாய்பாட்டு எச்சங்களையும் பல பிரிவுகளாகப் பிரிக்கலாம். செய்து, செய்யூ ஆகியவற்றையும் எழுத்ததிகாரத்தில் கூறப்பட்ட செய்யா வாய்ப்பாட்டு வினை யெச்சத்தையும் தனி ஒரு பிரிவாகப் பிரிக்கலாம். இவை அனைத்தும் காலத்தைக் காட்டி நிற்பதால் இவை கால எச்சம் என அழைக்கப்படுகின்றன. இது பற்றிய விரிவான ஆராய்ச்சி பின்னர் மேற்கொள்ளப்படுகின்றது.

செயற்கு என்பது வினையெச்சமா என்பதில் அறிஞர்க ளிடையே வேறுபாடு உண்டு. உரையாசிரியர்களே இதுபற்றி தடைவிடைகளை எழுப்பிநிற்பர். இதுபற்றிப் பின்னர் விரிவாகக் காண்போம் (சங்கத் தமிழ் IV).

இவற்றைப் போன்றே செய, செய்யிய, செய்யியர் ஆகிய வாய்பாட்டு வினையெச்சங்களும், மாரீற்று எச்சமும் இன் னொரு பிரிவாகக் கருதப்படுகின்றன. காட்டும் பொருள்களிலும் அமைப்பிலும் இவை அனைத்தும் ஒரே மாதிரியாகக் கருதப் படுவதால் இவையும் தனி ஒரு பிரிவாகக் கொள்ளப்படுகின்றன. இந்நிலையில்தான் இவை குறையெச்சம் (Infinitive) என அழைக்கப்படுகின்றன. இது பற்றியும் பின்னர் விரிவாகக் காணலாம். வான், பான் ஈற்று எச்சங்களும் இதன்பாற்படும்.

இவற்றைப் போன்றே செயின் வாய்பாட்டு வினையெச்ச மும் தனிப் பிரிவாகக் கருதப்படவேண்டிய ஒன்றாகும். இது நிபந்தனைப் பொருளைக் காட்டுவது இங்குக் குறிப்பிடத் தக்கது. இதனால்தான் இது நிபந்தனை எச்சம் என அழைக்கப்படுகிறது. இவ் வாய்பாட்டு எச்சம் மட்டுமின்றி செய்தால் வாய்பாட்டு எச்சமும் பிற வாய்பாட்டு எச்சங்களும் இதனுள் அடங்கும். இவை பற்றியும் பின்னர் பரக்க ஆராயப் படுகிறது (சங்கத் தமிழ் IV).

5. கால எச்சம்

வினையெச்சங்களில் கால எச்சம் மிக முக்கியமானது. இவை கால இடைநிலைகளைக் கொண்டு காணப்படுவதால்தான் கால எச்சம் என இங்கு குறிப்பிடப்படுகின்றன. செய்து, செய்பு

செய்யூ, செய்யா ஆகிய உடன்பாட்டு வினையெச்சங்களும் அவற்றின் மறையாக வரும் எதிர்மறை எச்சங்களும் இங்குக் கால எச்சம் எனப்படுகின்றன. தொல்காப்பியம் போன்ற மரபிலக்கணங்கள் பலவேறு உருபுகளைக் கொண்ட இவ்வெச்சங் களை இணைத்து ஒரு தலைப்பின் கீழ் குறிப்பிடாமல் செய்து, செய்பு போன்ற வாய்பாடுகளின் அடிப்படையில் குறிப்பிட்டுச் செல்கின்றன. எனினும் செய்யூ, செய்து, செயயா ஆகிய வாய் பாட்டு வினையெச்சங்கள் ஒரே மாதிரியாகக் கருதப்படத்தக் கவை.

இவற்றின் அமைப்பு, காட்டும் காலம், பொருள் போன்ற வற்றில் இவை ஒரே மாதிரியாகவே உள்ளன. எனவே இவை மூன்றும் ஒரு உருபனாக உள்ளவை என்று முடிவு கட்டலாம்.

கண்டு வந்தான்
காணூ வந்தான்
காணா வந்தான்

போன்றவற்றில் இப்பண்பைக் காணலாம். இவை மூன்றும் ஒரே பொருளையே தந்துநிற்கின்றன. இந்நிலையில் இவற்றை ஒரே உருபனின் மாற்றுருபுகளாகக் கருதவேண்டும்.

தொல்காப்பியர் இவற்றை வேறுபடுத்திக் கூறியிருப்பினும் உரையாசிரியர்கள் ஒன்றாகக் கருதுவது போன்று தோன்று கின்றது. செய, செய்யிய, செய்யியர் போன்றவற்றை வேறு படுத்திக் காட்டுவது போன்று இவற்றை இவர்கள் காட்டுவ தில்லை. செய்து என்னும் வாய்பாட்டு எச்சமும் ஆடி, ஓடி போன்ற எச்சங்களும் ஒன்றே என்று கருதுவதும் மேலும் இவை இறந்தகாலம் காட்டும் என்று கூறுவதும் இவற்றைப் போன்றே செய்யூ வாய்பாட்டு எச்சமும் இறந்த காலம் காட்டும் என்று கூறுவதும் இந்நிலையை நன்கு விளக்கும்.

“ஊகாரம் உண்ணுஉ வந்தான், தின்னூஉ வந்தான், எனப் பின் வரும் தொழிற்கு இடையின்றி முன் வரும் தொழிலின்மேல் இறந்த காலம் பற்றிவரும்” எனக் கூறுவதும் மேலும் செய்யா என்னும் வாய்பாட்டு எச்சத்தை இணைத்து,

"அஃது உண்ணா என ஆகாரமாயும் வரும்" எனச் சேனா வரையர் (229) கூறுவதும் இங்கு நினைவு கூரத்தக்கன.

செய்யூ வாய்பாட்டு எச்சமும் செய்யா வாய்பாட்டு எச்சமும் ஒன்றே என்பதை வெளிப்படையாகக் குறிப்பிட்டுச் செல்லுவார் இவர். இவற்றைப் போன்றே எதிர்மறை வினையெச்சங்கள் எனக் கருதப்படும் செய்யாது, செய்யாமல், செய்யாமை ஆகிய வாய்பாட்டு வினையெச்சங்களும் இவற்றினுள் அடங்குவன வாகும். இந்நிலையில்தான் இவையனைத்தும் ஒரே மாதிரியாகக் கருதப்படவேண்டியவை என முடிவு கட்டலாம்.

இவற்றைப் போன்றே செய்பு வாய்பாட்டு வினையெச்சமும் காலவெச்சங்களில் ஒன்றாகக் கருதப்படத் தக்கது. பகரம் இறப்பில் காலத்தைக் காட்டுவது போலத் தோன்றும் காரணத்தால் இது கால எச்சமா என்ற ஐயம் எழுவது இயற்கையே. எனினும் இப்பகரம் காலம் எதையும் காட்டுவ தில்லை. இதனால்தான் இதனைப் புகர ஈற்று வினை எச்சமாகக் கொள்ளுகிறோம். எவ்வாறு காண்பான், வருவான் போன்ற வற்றில் எச்ச விகுதிகளாகப் பான், வான் ஆகியவற்றைக் கொள்ளுகிறோமோ அதேபோன்று இதுவும் புகரவீறாகக் கொள்ளப்படுகிறது. இந்நிலையில் இதனையும் கால வெச்சங் களில் ஒன்றாகக் கொள்ளுகிறோம். இதுபற்றிப் பின்னர் விரிவாகக் காணலாம்.

காலவெச்சம் பற்றிக் குறிப்பிட்டுச் சென்ற சில மேனாட்டு அறிஞர்களும் சில கீழைநாட்டு அறிஞர்களும் இவ்வினை யெச்சத்தின் தனித்தன்மையை நன்கு உணர்ந்திருந்தனர். மட்டு மன்றி இவற்றின் பல பண்புகளுக்கேற்பப் பலவேறு எதிர்மறைப் பெயர்களாலும் அழைத்துள்ளமை காணலாம். ஜான் லாசரஸ் (Lazarus 1878:128) சட்டர்ஜி (Chatterji 1926:863) போன்ற அறிஞர்கள் இதனை "adverbial participle" என அழைப்பர். போப் (G.U. Pope 1859:67), கால்டுவெல் (1857) போன்றோர் "verbal participle" எனக் கூறுவர். இன்னும் சிலர் (Linguistic Survey of India) இதனை "conjunctive participle" எனக் கூறுவர். இன்னும் சிலரோ (P. S. Subrahmanya Sastri 1934:187

இதனைப் பண்டைத் தமிழ் மரபிலக்கணப்படி "வினையெச்சம்" என்றே குறிப்பிடுவர். இதுபற்றிப் பேசும் சாஸ்திரி செய்து, செய்பு, செய்யூ, செய்யாது ஆகியவற்றை இப்பெயருள் அடக்கு வார். ஆனால் ஆங்கிலத்தில் எல்லா வினையெச்சங்களையும் இவர் "infinitive" என அழைப்பார் (1945 முதல் பதிப்பு. 1979 இரண்டாவது பதிப்பு.)

5.1 காலம்

இவ்வெச்சங்கள் அனைத்திலும் கால இடைநிலைகளைக் காணுகிறோம். செய்து, ஆடி போன்ற எச்சங்களில் வெளிப்ப டையாகக் கால இடைநிலைகள் உள்ளன. ஆனால் செய்யூ போன்றவற்றிலோ வெளிப்படையாகக் கால இடைநிலைகள் இல்லாவிடினும் பூஜிய(zero) இடைநிலை இருப்பதாகக் கொள்ள லாம். ஆனால் எதிர்மறை காட்டும் செய்யாமல், செய்யாது போன்றவற்றில் கால இடைநிலை இல்லையே என்ற எண்ணம் சிலருக்குத் தோன்றலாம். தமிழ்மொழியில் காணப்படும் வினைகள் காலம் காட்டும் உருபுகளையோ அல்லது எதிர்மறை காட்டும் உருபுகளையோ கொண்டிருக்குமேயன்றி இவ்விரண் டையும் கொண்டிருப்பதில்லை. இதனால்தான் மொழியியல் அறிஞர்கள் வினைச்சொல்லின் அமைப்பைக் குறிப்பிடும்போது

$$\text{வினை அடி} + \left\{ \begin{array}{c} \text{காலம்} \\ \text{எதிர்மறை} \end{array} \right\} + \text{விகுதி}$$

எனக் குறிப்பிடுகின்றனர். காலவெச்சங்களில் காலம் அல்லது எதிர்மறையைக் காண்கிறோம். இரண்டையும் ஒரு சேரக் காண முடிவதில்லை.

வந்திலன்
செய்திலன்

போன்ற சொற்களில் இரண்டும் வந்திருப்பினும் இதனை

வந்து + இலன்

எனப் பிரித்து (அகத்தியலிங்கம், 1982: 188) இரண்டு சொற் களாகவும் கருதலாம். எதிர்மறைச் சொற்கள் கால உருபை ஏற்காத நிலையில் குறிப்பிட்ட ஒரு காலத்தைக் காட்டும் பண்பு எதிர்மறைகளுக்கு இல்லை. இதனால்தான் ஒரே சொல் பல வேறு காலங்களைக் காட்டி நிற்கக் காண்கிறோம்.

வந்த, வருகிற, வரும் என்ற மூன்று காலப் பெயரெச்சங்களுக்கு இணையாக வராத என்ற எதிர்மறைச் சொல் ஒன்றே பயன்படக் காணுகிறோம்.

(1) நான் நேற்று வந்த பையனைக் கண்டேன்
நான் நேற்று வராத பையனைக் கண்டேன்

(2) இன்று வருகிற வண்டி
இன்று வராத வண்டி

(3) நாளை வரும் வண்டி
நாளை வராத வண்டி

வந்தவன்
வருகிறவன் } வராதவன்
வருபவன்

போன்றவற்றில் இப்பண்பைக் காணுகிறோம்.

5.2 கால எச்சங்களும் அவை காட்டும் காலங்களும்

கால எச்சங்கள் அனைத்தும் இறந்தகால இடைநிலைகளைக் கொண்டிருந்தாலும் அவை கொண்டு முடியும் வினைகள் காட்டும் காலங்களுக்கு ஏற்பவே இறந்தகாலத்தைக் காட்டுவனவாக அமைகின்றன.

கண்ணன் உண்டு வந்தான்

என்பதிலுள்ள உண்டு என்னும் வினையெச்சம் இறந்த காலத்தைக் காட்டுவது உண்மையே. ஆனால்

கண்ணன் உண்டு வருவான்

என்பதில் காணப்படும் உண்டு என்ற சொல் இனி நடக்கும் உண்ணல் தொழிலையே காட்டிநிற்கிறது. ஆனால் வரும் தொழிலுக்கு முன்னால் நடைபெறும் தொழிலை உணர்த்தி நிற்கும். இந்நிலையில் கொண்டு முடியும் வினை காட்டும் தொழிலுக்கு முன்னால் வரும் தொழிலைக் காட்டும் நிலையில் இதனை "ஒப்புமை" இறந்தகாலத்தைக் காட்டும் எனக் குறிப்பிடலாம். இக்கருத்தினை மரபிலக்கண ஆசிரியர்கள் பலரும் நன்கு விளக்கியுள்ளனர். இவை காட்டும் காலத்தை நாம் பேசுகின்ற நேரத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் (absolute tense) ஒப்புமைக் காலமாகவே (relative tense) கொள்ள வேண்டும்.

ஆனால் குறையெச்சங்களோ பெரும்பான்மையும் இறப்பில் காலத்திலே வருதல் இங்கு உணரத்தக்கது.

(கட்டுரை தொடரும்)

உறுப்பினர்களுக்கு

தமிழ் இலக்கணம், மொழியியல் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் மொழியியலில் வெளியிடுவதற்கு அனுப்ப வேண்டுகிறோம். கட்டுரையாளர்களுக்கு இருபத்தைந்து படிகள் (reprints) இலவசமாக வழங்கப்பெறும். கட்டுரைகளைத் தெளிவாகத் தட்டச்சு (type) செய்து இரண்டு படிகள் அனுப்புதல் வேண்டும் தங்கள் நண்பர்களையும் மொழியியல் கழக உறுப்பினர்களாக்கி மொழியியல் வளர்ச்சிக்கு உதவ வேண்டுகிறோம். கட்டுரைகள் மொழியியல் இதழில் இருபத்தைந்து பக்கங்களுக்கு மிகாமலிருக்கும்படி அனுப்பக் கேட்டுக்கொள்கிறோம்.

மொழியியல் இதழ் வெளியீடு பற்றிய குறிப்பு

1.	வெளியீட்டாளர் & ஆசிரியர்	டாக்டர் **ச. அகத்தியலிங்கம்** செயலாளர், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற்கழகம், அண்ணாமலைநகர் 608002
2.	அச்சிட்டோர்	சிவகாமி அச்சகம், அண்ணாமலைநகர் 608002

மொழியியல்

தொகுதி 9 1985 எண் 1&2

ஜூலை – டிசம்பர்

உள்ளுறை

பக்கம்

சொல்லும் பொருளும்
தங்க. மணியன் 1 – 18

தமிழ்த் தொடரனில் உள்வினைகள்
இரா. கோதண்டராமன் 19 – 45

திராவிட மொழிகளில் நிகண்டுகள்
மா. சற்குணம் 47 – 56

எவை பதினெண்கீழ்க்கணக்கு நூற்கள்?
ஏ. ஆதித்தன் 57 – 70

உயர்நிலைப்பள்ளி / கல்லூரியில் இலக்கணம் கற்பித்தல்
கோ. சுப்பையா 71 – 78

நெசவுத் தொழிற் சொற்கள்: மொழியியல் ஆய்வு
ஆ. கார்த்திகேயன் 79 – 96

வினையெச்சம் கொண்டு செய்யப்படும் கலப்பு வாக்கியங்களில் ஒரு விலக்கு
அரங்க. வாசு 97 – 102

தற்காலத் தமிழில் உளப்பாட்டு, வேறுபாட்டுத் தன்மைப் பன்மை வேறுபாடுகள் விகுதிகளிலும் காணப்படுகின்றனவா?
சி. மகேசுவரன் 103 – 108

கணிப்பொறி மொழியியல்
அ. பிச்சை 109 – 125

மலாய் மொழியில் சில தமிழ்ச்சொற்கள்
கி. கருணாகரன் 127 –

இக்காலத் தமிழில் எடுத்துக் கூறுதல்
முத்துச் சண்முகன் & தாமஸ் லெய்மன் 131 –

விவசாயத் தொழில் கலைச் சொற்கள் – ஓர் ஒப்பாய்வு (புதுவை – காரைக்கால் பகுதிகள்)
மு. முருகேசன் 141 – 164

கிளைமொழியும் பொதுப்பேச்சுத் தமிழும்
எஸ். ஆரோக்கியநாதன் 165 – 180

பழந்தமிழில் காலவெச்சங்கள்
ச. அகத்தியலிங்கம் 181 – 212